Sangathamil

# சங்கத்தமிழ்

குரல் – 82 | சர்வதேச மின் செய்தித்தாள் | 01 அக்டோபர் 2024


## இந்திய – சிறீலங்கா அரசுகளின் கூட்டுச்சதியினை முறியடிக்க புறப்பட்ட தளபதிகளை சிறீலங்கா சிங்கள கடற்படை கைது செய்து யாழ். பலாலி படைத்தளத்தில் தடுத்து வைக்கப்பட்டபோது 05.10.1987 அன்று சயனைட் உட்கொண்டு வீரச்சாவை தழுவிக் கொண்ட லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட்ட பன்னிரு வேங்கைகளுக்கும் எமது 37ஆம் ஆண்டு வீரவணக்கம்




கப்டன் கரன்

கப்டன் பழனி

கப்டன் நளன்

கப்டன் ரகு

மேஜர் அப்துல்லா

கப்டன் மிரேஸ்

லெப். தவக்குமார்

லெப். அன்பழகன்

2ஆம் லெப். றெஜினோல்ட்

2ஆம் லெப். ஆனந்தகுமார்

விடுதலைப்போர் வரலாற்றில்
விதையான முத்துக்களே!
எதிரிக்கு புதிரான
எம்தமிழ்ப் புலிகளே!
ஆண்டுகள் பல கடந்தும்
மீண்டெழும் எம் இலட்சிய தீயில் – தமிழ்
ஆள்கின்ற செய்தியினை – உமக்கு
அணிவிப்போம் மாலையாக.

சங்கத்தமிழ்

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**





























## விளம்பரத் தொடர்புக்கு அழையுங்கள்: 437.345.4203

# Sangathamil சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

சர்வதேச மின் செய்தித்தாள்

## www.sangathamil.ca




# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

எமது விடுதலைப் போராட்டத்தின்
பழுவை அடுத்த பரம்பரை
மீது சுமத்த நாம் விரும்பவில்லை;
எமது கடின உழைப்பின் பயனை
அவர்கள் அனுபவிக்கவேண்டும்.
சுதந்திரத்தை வென்றெடுக்காது
போனால் நாம் அடிமைகளாக
வாழவேண்டும்;
தன்மானம் இழந்து தலைகுனிந்து
வாழவேண்டும்; பயந்து பயந்து
பதற்றத்துடன் வாழவேண்டும்;
படிப்படியாக அழிந்து போகவேண்டும்.
ஆகவே சுதந்திரத்திற்காகப்
போராடுவதைத் தவிர
எமக்கு வேறு வழி
எதுவுமில்லை.






## சங்கத்தமிழ்

### தொடர்புகளுக்கு

தொலைபோசி
437 345 4203

மின்னஞ்சல் (Email)
sangathamilcanada@gmail.com

இணையத்தளம் (Website)
www.sangathamil.ca


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# அவன் ஒரு புதுமையான மனிதன்

## லெப். கேணல் பிறையாளன் / சுட்டா

'லெப். கேணல் நவம் அறிவுக்கூட நிர்வாகப் பொறுப்பாளர்'
லெப். கேணல் பிறையாளன் [ சுட்டா]

24.09.2005 அன்றைய நாளின் காலைப்பொழுது. லெப்.கேணல் நவம் அறிவுக் கூடத்தில் தேசியக்கொடி அரைக் கம்பத்தில் பறந்துகொண்டிருந்தது. மனதில் தயக்கம் யாருக்கு என்ன நடந்தது? போராளிகளின் முகங்கள் இருண்டு கிடந்தன. சுட்டா அப்பா வீரச்சாவாம். அந்த வார்த்தைகள் உள்நுழையும் முன்னரே அடுத்து எதுவும் செய்யத் தோன்றவில்லை. அப்பாவைப் பிரிந்த பிள்ளைகளைப்போல எல்லோரும் தவித்துப் போனோம். ஏனென்றால் எங்களுக் கெல்லாம் அப்பாவாகவே அவன் இருந்தான். அந்த நினைவுகளைத்தான் இந்தக் குறிப்பு சொல்ல முனைகின்றது.

சுட்டாவின் தொடக்ககால வாழ்க்கையே துயரமானது. திருகோணமலை சாம்பல்தீவிலே அவனது குடும்பம் வாழ்ந்து வந்தது. அது சிங்களம் எங்கள் ஊர்களை வல்வளைத்த காலம். சிறீலங்கா படைகளால் தமிழ் உயிர்கள் காரணமில்லாமல் சித்திரவதை செய்து பறிக்கப்பட்ட காலம். இந்த கொடூரத்திற்குள் சுட்டாவின் மூத்த சகோதரனும் பலியாக நேர்ந்தது. சுட்டாவிற்கு மூன்று பெண் சகோதரிகளும் ஒரு தம்பியும் இருந்தனர். தந்தையின் உழைப்பில் இயங்கியது குடும்பம். கொஞ்ச நாளில் தந்தையும் ஊர்தி விபத்தொன்றில் காயமடைந்து வேலைசெய்ய முடியாமற்போக குடும்பத்தைத் தாங்கும் பொறுப்பு சுட்டாவிற்கு. சின்ன வயதிலேயே தச்சுத்தொழில் பழகி குடும்பத்தை பராமரித்தான் சுட்டா.

இந்த நாட்களில்தான் சுட்டா திருகோணமலையிலிருந்து வேலையின் காரணமாக யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தான். அவனுக்கு தையல் வேலையிலும் நாட்டமிருந்தது. இதனால் இம்ரான் பாண்டியன் படையணியின் தையல் பகுதியில் அவனுக்கு வேலை செய்ய வாய்ப்பு கிடைக்க அதை ஏற்றுக் கொண்டு ஒரு தையலாளனாகச் செயற்பட்டான். இந்த வேலையின் போது சுட்டாவிற்கு பல போராளிகளின் அறிமுகம் கிடைத்தது. நாளடைவில் இந்தத் தேசவிடுதலைப் போராட்டத்தில் தானும் ஒரு போராளியாக வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டு 1992இல் இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டான் சுட்டா.

சரத்பாபு-7 என்ற பயிற்சி அணியில் பயிற்சி பெற்ற சுட்டா ஒரு விடுதலைப்போராளி ஆகியபோது தையல் பணியில் அவனிற்கிருந்த திறமையின் நிமிர்த்தம் இம்ரான் பாண்டியன் தையல் கூடப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். இயக்கத்தின் கட்டளையை ஏற்றுச் செயற்பட்ட சுட்டா, பயிற்சிபெற்ற பின்பும் ஏனைய போராளிகளைப்போல் சண்டைக்களம் காண வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டு படையணியில் சிறப்புத் தளபதியின் அனுமதியுடன் சண்டைக் களங்களுக்கு புறப்பட்டான்.

1993இல் தவளை நடவடிக்கை, 1995இல் புலிப்பாய்ச்சல், 1996இல் ஓயாத அலைகள் - 01 நடவடிக்கை, அளம்பிலில் தரையிறங்கிய படையினருக்கெதிரான நடவடிக்கை, சத்ஜெய நடவடிக்கைக்கெதிரான தாக்குதல் என படிப்படியாக பல களங்களையும் கண்டு சண்டைகளிலும் ஒரு தேர்ச்சியாளனாக சுட்டா மாறியிருந்தான். இதற்குச் சாட்சிகளாக பல விழுப்புண்களை தன் உடலில் தாங்கியிருந்தான். அதன் தளும்புகள் அவன் உடலெங் கும் இருந்தன.

இந்த காலகட்டத்தில்தான் சிங்களதேசம் எங்கள் பகுதிகள் மீது பாரிய படை நகர்வுக்கு தயார்ப்படுத்திக் கொண்டிருந்தது. இந்தப் படைநகர்விற்கு கவசப் படைக்கலங்களையே பெரிதும் நம்பி திட்டம் வகுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. சம காலத்தில் சிங்களத்தின் இந்த சூழ்ச்சிகரமான திட்டங்களை முறியடிக்க எமது தலைவரும் போராளிகளைத் தயார்ப்படுத்தினார். சிங்களம் பெரிதும் நம்பிய கவசங்களை தகர்த்தழிக்கவென புதிய படையணி ஒன்றை உருவாக்கி அதற்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டன. பயிற்சிகள் மிகக் கடுமையானவையாக இருந்தன. ஆயுதங்களுடன் நீண்டதூர ஓட்டம், தடை தாண்டும் பயிற்சிகள், மதியவேளையில் கொழுத்தும் வெயிலில் உடற்பயிற்சி என எல்லா கடின பயிற்சிகளையும் சுட்டா மேற்கொண்டான். ஏற்கனவே சண்டைக் களங்களில் விழுப்புண் தாங்கிய உடல். இதனால் பயிற்சிகளைச் செய்ய சிரமமாக இருந்த போதும் இனிவரும் சமர்களில் தானும் ஆயுதமேந்தி சமர்புரியவேண்டும் என்ற உந்துதல் அவன் இந்தப் பயிற்சிகளில் சித்தியடையக் காரணமாய் இருந்தது.

எல்லாப் பயிற்சிகளும் முடிந்து லெப். கேணல் விக்ரர் சிறப்புக் கவச எதிர்ப்பு அணி என்ற பெயரில் எதிரியின் கவசப்படையை எதிர் கொள்ளும் அணி தயாராகவிருந்தது. வவுனியா, ஓமந்தைப் பகுதிகளில் அமைந்திருந்த எங்களின் தடுப்பரண் பகுதிகளுக்குச் சென்று அணிகள் நிலை கொண்டன. இவற்றில் ஒரு அணிக்குப் பொறுப்பாக சுட்டாவும் களமிறங்கினான். எதிரியின் வருகைக்காகக் காத்திருந்ததோடு எதிரியின் முன்னரங்க




நிலைகள் அவதானிக்கப்பட்டு எதிரியின் காவலரண் ஒன்றை R.P.G எறிகணை மூலம் தாக்கி அழிப்பதென முடிவு செய்யப்பட்டது.

08.03.1997 அன்றைய நாளின் பகற் பொழுதில், சுட்டாவின் தலைமையிலான அணி வேவு வீரரின் வழிகாட்டலுடன் எதிரியின் காவலரணை அண்மித்து நிலைகொள்கிறது. R.P.G எறிகணைகள் அனலைக் கக்கியபடி எதிரியின் காப்பரணை நோக்கிச்சென்று மோதி வெடிக்கிறது. அடுத்தடுத்த இரு எறிகணைகள் வெடித்துச்சிதறி அடங்க, அந்தக் காப்பரண் முற்றாக அழிந்துபோய்க் கிடந்தது. போராளிகள் அவ்விடத்திலிருந்து பின்வாங்கினர். ஏழு படையினர் பலியாகியும் சில படையினர் காயமடைந்ததுமான இத்தாக்குதலில் எமது தரப்பில் இழப்பு எதுவுமிருக்கவில்லை. புதிய அணியின் உருவாக்கத்தின் முதலாவது தாக்குதல் சுட்டாவின் தலைமையில் வெற்றிகரமாக நடந்தேறியது.

13.05.1997 அன்று எதிர்பார்த்தபடி "ஜெயசிக்குறு" என்ற பெயரில் பாரிய படைநகர்வை தொடங்கியது சிங்கள படை. பெரும் மோதல் வெடித்தது. அந்த ஊரெங்கும் போர்ச்சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. சிறீலங்கா படைகள் முன்னேற முன்னேற போராளிகள் புதிய புதிய வியூகங்களில் எதிரியை எதிர்கொண்டு சண்டையிட்டனர். முன்னேறிவந்த கவச ஊர்திகள் சிறப்பு அணியால் தாக்கி அழிக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டும் இருந்தன. சண்டை நீண்ட நாட்களாகத் தொடர்ந்தது. ஓமந்தை, தாண்டிக்குளம், இறம்பைக்குளம், பெரியமடு, புளியங்குளம் என சமர்க்களம் விரிந்துகொண்டு சென்றது. இந்த நீண்ட சமர்களுக்குள் போராளிகளுக்கு ஓய்வு கிடைப்பதென்பது மிகக் குறைவாகவே இருந்தது. கிடைக்கும் ஓய்விலும் எதைச் செய்வது? சுட்டா வைப் பொறுத்தவரை போராளிகள் எப்போதும் மகழ்ச்சியாகவே இருக்கவேண்டும். அவர்களின் மகிழ்ச்சிக்காக எதைச் செய்யவும் அவன் தயாராகவே இருப்பான். கிடைக்கும் நேரங்களில் தனது அணியிலுள்ள போராளிகளுக்குக் கதை சொல்லுவான். பழைய சண்டைகளை எடுத்துச்சொல்லி போராளிகளுக்கு அறிவூட்டுவான். போராளிகளுக்கு கிடைப்பவற்றைக் கொண்டு ஏதாவது உண்பதற்கு செய்து கொடுக்க முடியுமானால் அதையும் தானே நின்று செய்துகொடுப்பான். அவன் எதைக் கதைத்தாலும் அதில் நகைச்சுவை இருக்கும், நல்ல அறிவுரையிருக்கும். அதுமட்டுமல்ல போராளிகளுக்கு எதையாவது பெற்றுக்கொடுக்க வேண்டியிருந்தால் யாருடனாவது கதைத்து அவற்றை பெற்றுக் கொடுப்பான். சுட்டாவுடன் இருந்தால் தாங்கள் சண்டைக்களத்தில் நிற்கிறோம் என்ற உணர்வு கொஞ்சநேரம் மறந்துபோகும். அவன் வார்த்தைகள் உடலுக்கும் மனதுக்கும் உற்சாக மூட்டுபவையாக இருக்கும். இதனால் சுட்டா இருக்கும் காப்பரண் தேடி போராளிகள் ஒன்றுகூடுவார்கள்.

அவன் முகாமில் நிற்கும் நாட்களில்கூட அப்படித்தான். சுட்டாவின் விடுதி எப்போதும் கலகலப் பாகவே இருக்கும். பக்கத்து விடுதியில் உள்ள போராளிகள்கூட அவனுடன் இருப்பார்கள். சுட்டாவின் இந்தத் திறமையை யாராலும் மிஞ்சிவிட முடியாது. அது அவனுக்கே உரியது. இனி போராளிகளுக்கு சுவையான உணவு செய்து கொடுப்பதில் சுட்டா முன்னணியில் நிற்பான். இவற்றோடு மற்றப் போராளிகள் எடுக்கும் அத்தனை பயிற்சிக்கும் தானும் செல்வான். இரவு பயிற்சிகள் முடிந்து போராளிகள் படுக்கைக்குப் போவார்கள். சுட்டாவின் விடுதியில் மட்டும் வெளிச்சம் தெரியும். சுட்டாவிற்கு நன்றாக தைக்கத் தெரியும் என்பதால் போராளிகள் சுட்டாவை சூழ்ந்துகொள்வார்கள். அந்த வேளையில் அவர்கள் சுட்டாவை பொறுப்பாளனாகப்




பார்ப்பதில்லை. சுட்டாவும் அப்படித்தான். தனக்கேன் இந்த வேலை என ஒதுங்கிக்கொள்வதுமில்லை. முழு மனதோடு ஆசையாக கண் தூங்கத்தூங்க விழித்திருந்து ஆயுதங்களுக்கான 'கோல்சர்கள்' தைத்துக் கொடுப்பான். போராளிகளுக்கு இதற்கென தனியிடமிருந்தாலும் சுட்டாவின் தையலில் அவர்களுக்கு விருப்பம்.

சண்டைக் களத்திலிருந்து சுட்டா முகாம் திரும்பிவிட்டால் அங்கு நிற்கும் பொறுப்பாளரை போராளிகள் கரைச்சல் படுத்துவார்கள். சுட்டா அண்ணை எப்ப வருவார்? சுட்டாண்ண வந்திட்டாராம் என்றால் போராளிகள் மீண்டும் கூடிவிடுவார்கள்.

சுட்டாவின் இந்த அற்புதமான இயல்பு தான் சமர்க்களத்தில் நின்ற அவனை தொடக்க பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்ப வழி வகுத்தது. அது புதிதாக போராட்டத்தில் தங்களை இணைத்தவர்கள் பயிற்சிபெறும் இடம். அவர்கள் இந்தத் தேசத்தின் தேவையை உணர்ந்து போராளியானாலும் நீண்டகாலம் குடும்பச் சூழலுக்குள் வாழ்ந்ததால் அந்தப் பிரிவும் புதிய வாழ்க்கை முறையும் தொடக்கத்தில் மனச் சஞ்சலத்தை ஏற்படுத்தும். இது தவிர்க்க முடியாத ஒன்று. இந்த நாட்களில் இவர்களை வழிநடத்தும் போராளிகள்தான் இதை சரிவரப் புரிந்து செயற்படவேண்டும். சுட்டா இதற்கு மிகவும் பொருத்தமானவன். அவனிற்கு இதைப்பற்றி சொல்லிக் கொடுக்க வேண்டிய தேவையில்லை. அவன் இயல்பே அப்படித்தான். போராளிகளுக்குத் தாய் தந்தையரைப் பிரிந்திருந்த இடைவெளி சுட்டாவினால் இல்லாமல் போனது. சுட்டா போராளிகள் தங்கும் ஒவ்வொரு விடுதியாகச் சென்று போராளிகளுடன் கதைத்து அவர்களின் தேவையைக் கேட்டறிந்து நிறைவு செய்வான். புதிய போராளிகளுக்கு இயக்கம் பற்றிய பழைய வரலாற்றுச் சம்பவங்களை சொல்லிக் கொடுப்பான். எங்காவது ஒரு விடுதியில் கலகலப்புச் சத்தம் கேட்டால் சுட்டா அங்கேதான் நிற்கிறான் என்பது எல்லோருக்கும் தெரியும்.

இந்த நாட்களில்தான் சுட்டாவிற்கு திருமணம் நடந்தது. ஆனால் சுட்டா வீட்டில் நிற்பது குறைவு. சுட்டாவிடம் குடும்பம் என்ற அன்பு உணர்வு நிறையவே இருந்தபோதும், அவன் தன் குடம்பமான போராளிகளுடனேயே அதிக நேரத்தை செலவிடுவான். எப்போதும் தனக்குக் கீழ் இருக்கும் போராளிகளுக்காக, இந்தத் தேசத்திற்காக எதையாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் தான் அவனிடம் மேலோங்கியிருந்தது. இதனால் சுட்டாவிற்கும் போராளிகளிற்குமான உறவு மிக நெருக்கமானதாக இருந்தது.

தொடக்கத்தில் ஒரு பயிற்சி முகாமின் பொறுப்பாளனாக இருந்து செயற்பட்ட சுட்டா பின்னர் தொடக்க படைய பயிற்சி முகாம்கள் அனைத்திற்கும் நிர்வாகப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான்.

இந்தக்காலம் வன்னியின் சமர்களமெங்கும் சண்டை நடந்துகொண்டிருந்த காலம். சுட்டாவிற்கு ஊர்திகூட இருக்கவில்லை. அவன் எதையும் எதிர்பார்க்கவுமில்லை. அப்போது அவனிற்கு கொடுக்கக்கூடியவாறு இயக்கத்திடம் ஒரு பச்சைநிற துவிச்சக்கர வண்டியே இருந்தது. அவன் மகிழ்ச்சியாகவே அந்த துவிச்சக்கர வண்டியில் வன்னியில் வெவ்வேறு இடங்களில் இருந்த முகாம்களுக் கெல்லாம் சென்றுவருவான். சிலவேளை துவிச்சக்கர வண்டி பழுதென்றால் நடையில் கூட போய்விடுவான். எப்போதும் இயல்பாகவே இருக்க விரும்புபவன். இயக்கத்திடம் இருந்து தனக்காக எதிர்பார்ப்பதை விட எங்கள் தலைவர் எதிர்பார்ப்பதைச் செய்ய வேண்டும் என்பதே அவனது கொள்கையாக இருந்தது. அதனால் மிகுந்த ஆர்வத்தோடு சண்டைக் களங்களில் நின்று ஈடுபட்ட அவன் இயக்கத்தின் வேண்டுதலை ஏற்று மனப்பூர்வமாகவே இந்தப் பணியை மேற்கொண்டான்.

சுட்டாவின் இந்த அரவணைப்பான வளர்ப்பில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகள் உருவாகினார்கள். சுட்டா நின்ற பயிற்சி முகாம்களில் போராளிகள் விலகுவதென்பது மிகவும் குறைவாகவே இருந்தது. ஏனென்றால் போராளிகள் அவனுடன் ஒன்றித்துப் போனார்கள்.

இப்போது சண்டை நிறுத்தப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியிருந்தது. இந்த நாட்களில்தான் சுட்டாவிற்கு புதிய பணிக்கான அழைப்பு வந்தது. அது லெப்.கேணல் நவம் அறிவுக் கூடம். சமராடி விழுப்புண்பட்ட போராளிகளுக்கான கல்விக்கூடம். அவர்களிற்கு முக்கியம் தேவையானது அன்பும் அரவணைப்பும்தான். சுட்டா இதில் நன்கு கைதேர்ந்தவன். ஏற்கனவே சமர்க்களத்தில் விழுப்புண் பட்டவன். அதைவிட தனக்கு மிச்சமாயிருந்த ஒரு ஆண் சகோதரனையும் சண்டைக் களத்திலே பிரிந்தவன். தன் சகோதரனான கப்டன் இனியவனின் நினைவுகளும், அந்த இழப்பின் வேதனையும் அவனிடம் இருந்தது. அவனால் இவர்களின் மனதை இலகுவாகப் புரிந்துகொள்ள முடிந்தது. அவனுக்கும் இந்தப் பணி விருப்பமானதாக இருந்தது.

லெப்.கேணல் நவம் அறிவுக்கூடத்தின் நிர்வாகப் பொறுப்பாளனாக சுட்டா நியமிக்கப்பட்டான். இங்கு சுட்டாவிற்கு நிறையப்பணிகள் இருந்தன. ஒவ்வொரு விழுப்புண்பட்ட போராளியும் ஒவ்வொரு விதமான தாக்கங்களுக்கு உள்ளானவர்கள். அவர்களுக்கான அடிப்படை வசதிகள், மருத்துவம், உணவு என எந்த விடயத்திலும் கண்ணும் கருத்துமாகச் செயற்படவேண்டும். சுட்டாவிற்கு இது புதுமையான விடயமல்ல. தன் நீண்டகால பட்டறிவு வாழ்வினை வைத்துக் கொண்டு இந்த விழுப்புண் பட்ட போராளிகளுக்காக கடினப்பட்டு உழைத்தான். எல்லா வேலைகளிலும் அவனும் ஒருவனாகவே நின்று செயற்படுவான். போராளிகளின் தேவைகளை நிறைவு செய்வதிலிருந்து அவர்களுக்கு நல்ல உணவு வழங்குவது, அவர்களுடன் சென்றிருந்து கதைப்பது என அவன் எந்த நேரமும் இயங்கிக் கொண்டிருப்பான். முகாமில் சுட்டாவிற்கென்று ஒரு இடமே இருக்காது. ஒன்றில் சமயற்கூடத்தில் நிற்பான் அல்லது போராளிகளுடன் நிற்பான் அல்லது போராளிகளின் உணவுத் தேவைக்காக போடப்பட்டிருந்த பண்ணையில் நிற்பான். இப்படி எப்போதும் இயங்கிக் கொண்டிருப்பான்.

அவனது முகம் எப்போதும் கலகலப் பாகவே இருக்கும். அவனது முகத்தில் கடுமையைக் காணமுடியாது. அதனால் போராளிகள் அவனுடன் ஒன்றித்துப் போனார்கள். ஆண், பெண் என்ற பேதமின்றி எல்லோரும் அவனை செல்லமாக 'சுட்டா அப்பா' என்றே அழைப்பார்கள். சுட்டா போராளிகள் யாராவது



லெப்.கேணல் பிறையாளன் / சுட்டா

www.sangathamil.ca



தமிழீழத் தேசியத் தலைவருடன் லெப்.கேணல் பிறையாளன்/சுட்டா

தவறிழைத்து பேசினால்கூட அவனது பேச்சைக்கேட்டு திருந்து வார்களே தவிர, அவனில் யாருக்குமே கோபம் வராது. அவனது அன்பான அரவணைப்பில் அவனது தண்டிப்பு மறந்து போகும். எந்தப் போராளிகளும் மனம் தயங்காது சுட்டாவிடம் எதுவானாலும் கேட்பார்கள். ஏனென்றால் அவர்களுக்கு அவன் நிலை வந்ததும் மீண்டும் நவம் அறிவுக்கூடம் வந்துவிட்டான். போராளிகள் எல்லோருடைய மனதிலும் மகிழ்ச்சி. ஆனால் சுட்டா முன்புபோல் இயங்கமுடியாது. அவன் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். அவனை கடினவேலைகள் செய்ய வேண்டாமென பொறுப்பாளர் சொல்லியிருந்தார். நின்று தன்னை மறந்து வேலைகள் செய்தவன், அவனால் ஏனைய விழுப்புண்பட்ட போராளிகள் வேலை செய்யும்போது பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. போராளிகள் அவனைத் தடுப்பார்கள். ஆனால் “எனக்குப் பிரச்சினையில்லை என்னால செய்யமுடியும்” என்ற வார்த்தைதான் அவன் வாயி

**அவன் முகாமில் நிற்கும் நாட்களில்கூட அப்படித்தான். சுட்டாவின் விடுதி எப்போதும் கலகலப்பாகவே இருக்கும். பக்கத்து விடுதியில் உள்ள போராளிகள் கூட அவனுடன் இருப்பார்கள்.**

**சுட்டாவின் இந்தத் திறமையை யாராலும் மிஞ்சிவிட முடியாது. அது அவனுக்கே உரியது. இனி போராளிகளுக்கு சுவையான சாப்பாடு செய்து கொடுப்பதில் சுட்டா முன்னணியில் நிற்பான். இவற்றோடு மற்றப் போராளிகள் எடுக்கும் அத்தனை பயிற்சிக்கும் தானும் செல்வான். இரவு பயிற்சிகள் முடிந்து போராளிகள் படுக்கைக்குப் போவார்கள். சுட்டாவின் விடுதியில் மட்டும் வெளிச்சம் தெரியும்.**

அப்பாதானே.

இப்படி எதையும் பார்க்காது செயற்படும் அவன், கொஞ்ச நாளாய் சுகயீனமுற்றிருந்தான். மருத்துவமனையில் அவனை உடலை ஆய்வு செய்ததில் அவனது சிறு நீரகங்கள் செயலற்றுக்கொண்டிருந்தன. எல்லோர் மனதிலும் ஏக்கம். சுட்டா அண்ணை எப்ப சுகப்பட்டு வருவார்? அவரின் சிறுநீரகங்கள் மாற்றப்பட வேண்டும். அவரின் மூத்த சகோதரி முன்வந்தார். தன் ஒரு சிறு நீரகத்தை தன் சகோதரனுக்கு கொடுத்தார். சத்திரசிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது.

சுட்டாவிற்கு ஓய்வு தேவைப்பட்டது. சுட்டா இனி முன்னர்போல் வேலைசெய்ய முடியாது. அவன் ஓய்வாக இருக்கவேண்டும். அவனுக்கென்று குடும்பம் இருந்தது. பிள்ளை இருந்தது. அவன் முன்னர்கூட வீட்டில் நிற்பது மிகவும் அரிது. அப்படி அரிதாக அங்கு நிற்கும் நாட்களில்கூட சும்மா இருந்ததில்லை. தனது வீட்டுவளவைப் பண்படுத்தி பயன்தரும் கன்றுகள் வைப்பான், நிலத்திற்கு சீமெந்து போடுவான், கதிரை பின்னுவான். எஞ்சிய நேரத்தில் பிள்ளையையும் பார்த்துக்கொள்வான். சுட்டா வீட்டில் நிற்கும் நாட்களில் குழந்தைக்கு உணவு ஊட்டுவது சுட்டாதான். ஏனென்றால் அவனுக்கு அவ்வளவு பொறுமையிருந்தது.

அயலவர்களுக்கு ஏதாவது பிரச்சினை என்றால்கூட நிற்கும் நேரங்களில் தன்னால் தீர்க்கக் கூடியவற்றை தீர்த்து வைப்பான். தனது வீட்டிற்கு அயலில் இருந்த சிறுவர் பள்ளியின் நிலம் சீமெந்து போடப்படாமல் உள்ளதை அறிந்து அங்கு கற்கும் சிறுவர்களுக்காக, ஒருநாள் அந்த சிறுவர்களின் பெற்றோரை அழைத்து அவர்களுக்கு அதைப்பற்றி எடுத்துச்சொல்லி அவர்களை நிதி சேர்க்கவைத்து தன்னால் இயன்ற உதவிகளையும் செய்து அந்த சிறுவர் பள்ளியின் நிலத்திற்கு சீமெந்து போட்டுக் கொடுக்கவும் சுட்டா காரணமாய் இருந்தான்.

கொஞ்சநாள் ஓய்வில் இருந்த சுட்டா தன்னால் இயங்கக்கூடிய ஆனால் கொஞ்சம் கொஞ்ச மாகவே சுட்டா முன்புபோல இயங்கத் தொடங்கினான். எப்போதுமே போராளிகளுள் ஒருவனாக



லிருந்து வரும். அவன் மீண்டும் பழைய சுட்டா வாகவே மாறியிருந்தான். அவன் எப்போதுமே தன் உடலின் வேதனையை மற்றவர்களுக்குக் காட்டியதில்லை. தான் இந்தத் தேசத்திற்காக நிறையச் செய்யவேண்டும் என்றே சொல்லிக்கொண்டிருப்பான்.

24.09.2005 அன்றய நாளின் காலைப்பொழுதில் லெப். கேணல் நவம் அறிவுக்கூடத்தின் அப்பா எங்களை விட்டுப் பிரிந்த நாள். எல்லோரும் துடி துடித்துப் போனோம். சுட்டா அப்பா இனி வரமாட்டாரா என்று எல்லாப் போராளிகளும் அழுதார்கள். அவனது வித்துடல் நவம் அறிவுக்கூடத்தில் வைக்கப்பட்டது. சுட்டா அப்பா, சுட்டா அப்பா என்று எல்லோர் வாய்களும் அவன் பெயரை உச்சரித்தபடி அழுதது. அவன் இல்லாதபோதுதான் அவனின் பெருமை புரிந்தது.

அதனால்தான் அவன் பத்து ஆண்டு காலமாகப் பணிபுரிந்த இம்ரான் பாண்டியன் படையணியின் அன்றைய நாள் சிறப்புத் தளபதியாக இருந்த பிரிகேடியர் ஆதவன் அவரது நினைவுகளைச் சொல்லும்போது “இக்கட்டான சூழ்நிலைகளில் கடும் கஸ்ரங்களை எதிர்நோக்கி திறமையாக உழைத்த நல்லதொரு அணித்தலைவன்” என்று குறிப்பிட்டார்.

உண்மையும் அதுவே. அவன் நல்லதொரு வழிநடத்துனன், போராளிகளை மகிழ்விக்கும் திறன் வாய்ந்த கலைஞன், வீரம் மிக்க போர்வீரன், நல்ல தையலாளன், சிறந்த சமையலாளன், அன்பு செலுத்துவதில் வல்லவன். நிச்சயமாக அவன் ஒரு புதுமையான மனிதன். சாவு அவனது உயிரைப்பறித்தது உண்மைதான். ஆனால் எங்கள் நெஞ்சங்களில் அவன் உணர்வாய் என்றைக்குமே வாழ்ந்துகொண்டிருப்பான்.

நினைவுப்பகிர்வு: ச.புரட்சிமாறன்.
நன்றி – விடுதலைப்புலிகள் இதழ் (புரட்டாதி, ஐப்பசி 2005).




# நல்லூரில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவேந்தல் ஆரம்பம்!

15.09, 2024

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா நோன்பு இருந்து உயிர்நீத்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 37வது நினைவு நாள், இன்றையநாள் ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் ஆரம்பமானது.

ஈகைச்சுடர் லெப். கேணல் தீலிபன் உண்ணாநோன்பை ஆரம்பித்த 9.45 மணிக்கு நினைவேந்தல் ஆரம்பித்ததுடன், மாவீரர் றொஷானின் தாயார் இரத்தினசிங்கம் பொற்கொடியால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, திலீபனின் உருவப்படத்திற்கு முன்னாள் போராளி ஒருவர் மலர் மாலை அணிவித்து மலர் தூவி அகவணக்கம் செலுத்தியதுடன் பலரும் உணர்வு பூர்வமாக கலந்துகொண்டனர்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும், சிறைகளிலும், முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், அவசர காலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என ஐந்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து, ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன்



15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரையான 12 நாட்கள் அகிம்சை வழியில் யாழ் நல்லூரில் நீராகாரம் அருந்தாமல் உண்ணாநோன்புப் போராட்டம் நடாத்தி ஈகைச் சாவைத் தழுவிக் கொண்டார்.







# "அமைதியும் அகிம்சையும், உரிமைக்கு வழிவகுக்கப் போவதில்லை"

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு

17.09, 2024

"நமக்காக நாமே" என்று வேற்றுமையில் ஒற்றுமை கண்டு இன மாக ஓரணி நின்று, தனிவிரல் எழுச்சிக்கு தமிழர்கள் அடம்பன் கொடியாய் திரண்டிட வேண்டும் என குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் இன்றைய தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தனர்.

மேலும் தெரிவிக்கையில்,

பல தசாப்தங்களாக தமது இருப்புக்கும் உரிமைக்கும் போராடிக் கொண்டிருக்கும் முதுபெரும் இனமான தமிழினம், இத்தனை ஆண்டு காலமாக இலங்கை தேசத்தின் அரியாசன அதிகாரத் திற்கு அயலவரை தெரிவுசெய்து எதனையுமே அடைந்திடாத ஏமாற்றத்தினால் அழுத்துப் போய் இருக்கிறது.

இவ்வேளை, பல்லின கலாச்சார பண்பாட்டினை கொண்ட மக்கள் வாழ்கின்ற இலங்கைத் தீவில், யார் யாரை ஆழ்வது என்கின்ற அரசியல் அதிகார போட்டிக்கு நாடு தயாராகிக் கொண்டிருக்கிறது. இத்தருணத்தில், "குரலற்றவர்களின் குரல்" அமைப்பினராகிய நாம், காலத் தேவை உணர்ந்து சமூக அக்கறையுடன் இந்த அறிக்கையினை பொதுக் களப்படுத்த கடமைப் படுகிறோம்.

ஒரு பூர்வீக வரலாற்றை கொண்ட மக்கள் இனம் என்ற வகையில், "ஒற்றுமையாக வாழ்வோம்" என்கின்ற அதிகார வர்க்கத்தின் ஒற்றை வாக்குறுதியை நம்பி சுதந்திர வாழ்வுரிமைக்காக பல்வேறுபட்ட விட்டுக்கொடுப்புகளுடன் படியிறங்கி அமைதிப் பேச்சுக்களில் ஈடுபட்டது தமிழினம்.

ஆனாலும், கிடைத்தவை வெற்று வாக்குறுதிகள் மட்டுமே. இலங்கை ஒரு ஜனநாயகப் பெயர் கொண்ட நாடென்ற வகையில், அடுத்து வந்த தமிழ்ச் சந்ததிகள் அகிம்சைப் போராட்டங்களின் ஊடாக அதிகாரத்தின் கதவுகளை தட்டின. அவைகளும் கூட இரும்பு கரம் கொண்டு அடக்கப்பட்டது.

இதன் மூலம், "அமைதியும் அகிம்சையும், உரிமைக்கு வழி வகுக்கப் போவதில்லை " என்றுணர்ந்த இளைய தலைமுறையின் கைகளில் ஆயுதங்களை வலிந்து திணித்தது இலங்கையின் பேரினவாதம். அதன் விளைவுகளும் கூட, பன்னாட்டு பலத்தின் ஊடே நிர்மூலமாக்கப்பட்டதுதான் தமிழினத்தின் இதுநாள் வரலாறு.

இப்போது, சற்று நின்று நிதானித்து சிந்தித்து செயலாறும் முக்கிய தருணம் என்பதை கவனப்படுத்தியாக வேண்டும்.

அதாவது, வடக்கு கிழக்குத் தமிழர் தாயகத்தின் சுமார் 18,888 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பில் வாழ்கின்ற 35 இலட்சம் மக்களின் தன்னாட்சி அதிகாரத்தின் அவசியத்தை மக்கள் பலத்துடன் உலகறிய செய்ய வேண்டும். அதற்கு, உலக வாழ் தமிழினம் அடம்பன் கொடியாய் திரளும் தருணமொன்றை காலம் இப்போது எமக்களித்துள்ளது.




இதற்கு மேலும் அடிமைப்படுத்தும் அதிகாரத்தின் வரம்புக்குள், இரண்டாம் தர குடிமக்களாக தருவதை ஏற்றுக்கொண்டு தங்கி வாழும் இனமாகத் தமிழர்கள் இருந்துவிட முடியாது என்பதை, மாபெரும் சேனையாக திரண்டெழுந்து சர்வதேசத்தின் செவிகளுக்கு இடித்துரைக்க வேண்டும்.

தமிழினம் இதுநாள் வரை சந்தித்து வந்த பேரிழப்புகளுக்கெல்லாம் பரிகார நீதி வேண்டுமென்றால், "நமக்காக நாமே" என்று வேற்றுமையில் ஒற்றுமை கண்டு இனமாக ஓரணி நின்று, தனிவிரல் எழுச்சிக்கு தமிழர்கள் அடம்பன் கொடியாய் திரண்டிட வேண்டும் என்பதை அவசியப்படுத்துகின்றோம் என தெரிவித்தனர்.

# முல்லைத்தீவு மந்துவில் படுகொலையின் 25ஆம் ஆண்டு நினைவேந்தல்!

16.09, 2024

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு, மந்துவில் படுகொலையின் 25 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (15) உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.






குறிப்பாக கடந்த 1999ஆம் ஆண்டு செப்டெம்பர் 15ஆம் திகதி யன்று மந்துவில் சந்திப் பகுதியில் சிறீலங்கா வான்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் 24 அப்பாவி தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களின் 25ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தாய்த் தமிழ் பேரவை அமைப்பின், தாய்த்தமிழ் நினைவேந்தல் குழுவால் மேற்கொள் ளப்பட்டது.

குறித்த படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற மந்துவில் சந்தி வளாகத்தில் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப் பட்டிருந்தன.

அந்தவகையில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு இந்த நினைவேந்தல் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. இந்த படுகொலைச் சம்பவத்தின் போது உயிரிழந்தவர்களின் உறவுகள் பொதுச்சுடரை ஏற்றி, நிகழ்வேந்தல் நிகழ்வை ஆரம்பித்துவைத்தனர்.

தொடர்ந்து குறித்த படுகொலைச் சம்பவத்தின்போது உயிர்நீத் தவர்களின் திருவுருவப் படங்களுக்கு, உயிர்நீத்தவர்களின் உறவுகள் மலர்மாலை அணிவித்து, ஈகைச்சடேரேற்றி, மலர் தூவி, கண்ணீர் சொரிந்து உணர்வெழுச்சியுடன் தமது நினைவு வணக்கம் செலுத்தியிருந்தனர்.

மேலும் இந்த நனைவு வணக்க நிகழ்வுகளில் தாய்த்தமிழ் பேரவை அமைப்பின் ஸ்தாபகர் எஸ்.சத்தியரூபன், தாய்த் தமிழ் பேரவை அமைப்பு நிர்வாகிகள், படுகொலைச் சம்பவத்தின் போது உயிர்நீத்தவர்களின் உறவுகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.













# ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவேந்தலுக்கு இனி தடையில்லை!

19.09, 2024

நல்லூரில் அமைந்துள்ள ஈகைச்சுடர் திலீபனின் நினை விடத்தில் வணக்க நிகழ்வை நடத்த தடை விதிக்க நீதிமன்றம் மறுத்துள்ள நிலையில் இன்றைய நாள் உணர்வுபூர்வமாக நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நினைவேந்தலிற்கு தடை விதிக்க கோரிய காவல்துறையின் வழக்கு நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே நீதிபதி தடை விதிக்க மறுதலித்துள்ளார்.

எனினும் ஒலிபெருக்கிகளை பயன்படுத்த அனுமதி வழங்கும் அதிகாரம் காவல்துறையினரிடம் இருப்பதால் இது தொடர்பில் அவர்களே இறுதி முடிவை எடுக்கலாம் எனவும் நீதிபதி அறி வுறுத்தியுள்னார்.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவிடத்திற்கு உணர்வுபூர்வமாக வணக்கம் செலுத்த நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் நினைவேந்தல்களுக்கு தடை விதிக்கக் கோரி காவல்துறையினர் நீதிமன்றத்தை அணுகியிருந்தனர்.

வழக்கு நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்ட போது சட்டத் தரணி மணிவண்ணன் நீதிமன்றத்தில் முன்னிலையாகி யிருந்தார். எதிராளிகள் தரப்பில் மூத்த சட்டத்தரணி சிறீகாந்தா தலைமையில் சட்டத்தரணிகள் நீதிமன்றில் முன்னிலை யானார்கள்.

வழக்கில் இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதியரசர் ஏ. ஆனந்தராஜா, 2011ஆம் ஆண்டு சின்னங்களைப் பயன் படுத்த தடை விதித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

எனினும் இறந்தவர்களின் நினைவேந்தல் நடத்த தடை இல்லை. இதன் பின்னர் 13 வருடங்களாக மக்கள் நினை வேந்தலை முன்னெடுத்து வருகின்றனர்.

அவற்றைத் தடுப்பதற்கு ஜனாதிபதியோ, பாதுகாப்பு அமைச்சோ, நாடாளுமன்றமோ எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்க வில்லை.




இந்நிலையில், நினைவு வணக்க நிகழ்வுகளை நடத்த தடை விதிக்க வேண்டும் என காவல்துறையினர் கோரிக்கை விடுத்து வருவதை ஏற்க முடியாது என தெரிவித்து வழக்கை நீதிவான் முடிவுறுத்தியுள்ளார்.

# கேணல் கிட்டு சிறுவர் பூங்காவில் தமிழ் பொது வேட்பாளரின் பிரச்சாரக் கூட்டம்!

05.09.2024, 2024

தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனை ஆதரித்து யாழ்ப் பாணம் நல்லூரில் இறுதி தேர்தல் பிரசார கூட்டம் இன்றைய நாள் புதன்கிழமை நடைபெற்றது.





கேணல் கிட்டு சிறுவர் பூங்காவில் நடைபெற்ற கூட்டத்தில், தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன், பாராளுமன்ற உறுப் பினர் த.சித்தார்த்தன், தமிழ் தேசிய கட்சியின் தலைவர் என்.ஸ்ரீகாந்தா, ஈ.பி.ஆர். எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச் சந்திரன், தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங் கரநேசன், தமிழ் மக்கள் கூட்டணியின் வி.மணிவண்ணன், ரெலோவின் நிறோஸ், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், அரசியல் ஆய்வாளர்களான நிலாந்தன், சி.அ.ஜோதி லிங்கம் உள்ளிட்ட சிவில் சமூக தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினரின் சங்க பிரதிநிதிகள் பன்னாட்டு தூதுவர்களுடன் சந்திப்பு!

19.09, 2024

நாம் பன்னாட்டு தூதுவர்களை சந்தித்து எமது நியாயங்களை எடுத்துரைத்தோம் என வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினரின் சங்கச் செயலாளர் திருமதி லீலாதேவி ஆனந்த நடராஜா தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவினரின் சங்க பிரதிநிதிகள் கடந்தவாரம் ஜெனீவாவுக்கு சென்று அங்கு நடைபெறும் அமர்வுகளில் பங் கேற்று வருவதுடன், பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடி வருகின்றனர்.

அந்தவகையில் நேற்று முன்தினம் பன்னாட்டு தூதுவர்களுடன் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே லீலாதேவி ஆனந்த நடராஜா இவ்வாறு தெரிவித்தார்.

அதன்படி நாம் போராட்டம் ஆரம்பித்த காலத்தில் இருந்து இலங்கை ஜனாதிபதி எம்மை ஏமாற்றியமையும் உள்நாட்டு பொறிமுறையை ஏன் நாங்கள் நிராகரிக்கின்றோம் என் பதையும் எடுத்துக் கூறினோம்.

அதே போல ஒ.எம்.பி எவ்வாறு உருவாக்கப்பட்டது.அது எமது விருப்பத்திற்கு மாறாக எவ்வாறு இயங்க தொடங்கியது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்தமை, விண்ணப்பங்கள் கொடுத்தும் இன் னும் பதில் கூறாமல் இருப்பது, அதை விட ஒ.எம்.பி க்குள் வஞ் சகத்தனமாக மக்களை உள் வாங்கிக் கொண்டிருப்பது தொடர் பாகவும் சகல நாட்டு பிரதிநிதிகளுக்கும் விளக்கிக் கொண் டிருக்கின்றோம்.



மேலும் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான பொறிமுறை தொடர்பாகவும் அதை ஏன் நாங்கள் மறுதலிக்கின்றோம்? என் பதையும் ஏற்கனவே எமக்கு எதிராக நடைபெறும் வன் முறைகள், காணி அபகரிப்புகலாசார புரள்வுகளுக்குரிய படை யினரின் ஊக்குவிப்பு மற்றும் சைவ கோயில்களை அழித்து பௌத்த விகாரைகளை அமைப்பதால் எமக்குரிய வழிபாட்டு சுதந்திரம் மறுக்கப்படுவது தொடர்பாகவும் குறித்த பிரதிநிதிக ளிடம் சுட்டிக்காட்டி வருகின்றோம்.

நேற்றையதினம் அவுஸ்ரேலிய நாட்டின் பிரதியுடன் உரையாடி யிருந்தோம்.

அத்துடன் 29 காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளின் கையேடுகள் கொடுத்து அதற்குரிய விளக்கங்களை அளித்து அவர்களை கண்டுபிடிப்பதற்கு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளோம் என்றார்.


## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**www.sangathamil.ca**

# “பார்த்திபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!

20.09. 2024

ஈகைச்சுடர் லெப் கேணல் திலீபனின் வரலாற்றினை எதிர்கால சந்ததியினருக்கு கடத்தும் முகமாக அவரின் வரலாற்றினை எடுத்தியம்பும் “பார்த்திபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!” எனும் தொனிப்பொருளுடன் கூடிய ஆவணக் காட்சியகம் இன்றைய நாள் திறந்து வைக்கப்பட்டது.








நல்லூரிலுள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் நினைவாலயம் முன்றலில் இன்று வெள்ளிக்கிழமை (20) மாலை 6.30 மணியளவில் மாவீரர் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்பட்டது.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் பிரதான தூபி முன்றலில் மலர்வணக்கம் செலுத்தி ஆரம்பமாகியதுடன் பின் வரலாற்று ஆவணக் காட்சியகத்தை மாவீரர்களின் பெற்றோரால் சுடரேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் வரலாற்று புகைப் படங்கள் என்பன தொகுக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டது.

இதன்போது மாவீரர்களின் பெற்றோர், அரசியல் தலைவர்கள், சிவில் சமூகத்தினர், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





















# யாழ். வடமராட்சி நாகர்கோயில் மத்திய மகா வித்தியாலயப் படுகொலையின் 29ஆம் ஆண்டு நினைவேந்தல்!

22.09, 2024

யாழ்ப்பாணம் - வடமராட்சி, நாகர்கோவில் மத்திய மகா வித்தியாலயம் மீதான சிங்கள் பேரினவாத அரச படைகளின் விமானக் குண்டுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்கள் 21 பேரின் 29ம் ஆண்டு நினைவேந்தல் இன்றாகும்.

கிராமத்தில் 15.02.1956 இல் திரு.வி.நாகநாதன் அவர்களின்



முயற்சியினால் நாகர்கோயில் வடக்கில்: யாழ் நாகர்கோயில் நாகேஸ்வரா வித்தியாலயம்: அரசாங்கத்தினால் அமைக்கப் பட்டது.

பின்னர் 1967 இல் யாழ்.நாகர்கோயில் மகாவித்தியாலமாகத் தரம் உயர்த்தப்பட்டது. 1990ஆம் ஆண்டு சிறீலங்கா இராணுவ நடவடிக்கை காரணமாக மயிலிட்டிக் கிராமத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்களில்; அறுநூறு குடும்பங்கள் நாகர்கோயிலிற்கு இடம்பெயர்ந்தன.

நாநூறு மாணவர்களைக் கொண்டிருந்த பாடசாலையின் மாணவர் தொகை எழுநூறாக உயர்ந்தது. 1991ஆம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் நடைபெற்ற சண்டையினால் வெற்றிலைக்கேணி, ஆழியவளை, கட்டைக்காடு போன்ற கிராம மக்களும் நாகர்கோயிலிலேயே தஞ்சமடைந்தனர்.

1993ஆம் ஆண்டுக்குப் பின்பு மாணவர்களின் எண்ணிக்கை எண்ணூற்றுமுப்பதாக அதிகரித்தது. ஆசிரியர்களின் எண்ணிக்கை முப்பதாக அதிகரித்துக் காணப்பட்டது.

1995ஆம் ஆண்டு செப்டம்பர் இருபத்தோராம் திகதி வடமராட்சியின் பல பாகங்களுக்கும் பலாலியிலிருந்து சிங்கள இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர்.

மறுநாள் இருபத்திரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை 6:30 மணிக்கு வடமராட்சி கிழக்குப் பகுதியில் விமானப்படையின் "புக்காரா" குண்டுவீச்சு விமானம் மணற்காடு கிறிஸ்தவ தேவாலயத்துக்கு அருகில் குண்டுத்தாக்குதலை மேற்கொண்டதில் தேவாலயம் சேதமடைந்ததுடன், மணற்காட்டைச் சேர்ந்த இரத்தினம் அன்ரனிதாஸ் (எட்டு வயது), மனோகரதாஸ் மரியஜித் (பத்து வயது), ஜோன்பொஸ்கோ கார்மிளா (ஐந்து வயது) ஆகிய மூவரும் உயிரிழந்ததுடன், பலர் படுகாயமடைந்தனர்.

அன்றைய நாள் (22.09.1995) வடமராட்சி கிழக்கில் காலை பதற்றமாக இருந்தபோதும் நாகர்கோயில் மகா வித்தியாலயத்துக்கு வழமைபோல மாணவர்கள் வந்தனர்.

அன்றையதினம் எண்ணூற்றுமுப்பது மாணவரில் எண்ணூற்றுபத்து மாணவர்கள் வந்திருந்தனர். வெள்ளிக்கிழமை என்பதால் காலையில் இறைவழிபாடு ஆரம்பித்தது.

இறைவழிபாட்டினைத் தொடர்ந்து நற்சிந்தனை இடம்பெற்றது. அன்றைய நற்சிந்தனையினை ஏழாம் ஆண்டில் கல்விகற்கும் "நவரத்தினசாமி உமாதேவி" எல்லோரையும் கவரக்கூடிய விதத்தில் இனிய குரலில் இருபத்தைந்து நிமிடம் உரையாற்றினார். இதனைத் தொடர்ந்து மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள்.

மதியம் 12:45 மணியளவில் வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது நாகர்கோயில் வான்பரப்பிற்குள் பிரவேசித்த சிறீலங்கா விமானப்படையின் இரண்டு "புக்காரா" விமானங்களிலிருந்தும் மாறி, மாறி எட்டு றொக்கட் குண்டுகள் பாடசாலையையும், கிராமத்தையும் நோக்கி வீசப்பட்டதினால் அப்பிரதேசம் புகைமண்டலமானது.

இத்தாக்குதலில் காலைப் பிரார்த்தனையில் எல்லோராலும் பாராட்டப்பட்ட "நவரத்தினசாமி உமாதேவி" உட்பட எழு மாணவர்கள் பாடசாலையினுள் உயிரிழந்தார்கள். படுகாயத்துடன் உயிருக்காகப் போராடிய பதின்மூன்று மாணவர்கள் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லும் வழியிலும், வைத்தியசாலையிலும் இறந்தனர்.

மேலும் நாற்பத்திரண்டு மாணவர்கள் படுகாயமடைந்தனர். இன்னும் சில மாணவர்கள் தமது உடல் உறுப்புக்களை இழந்தனர். அன்று நடந்த புக்காராக் குண்டுவீச்சில் பாடசாலை மாணவர்களுடன் நாகர்கோவில் கிராமத்தைச்சேர்ந்த இருபதிற்கும் மேற்பட்ட பொதுமக்களும் உயிரிழந்ததுடன், எண்பத்தைந்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தார்கள்.

அன்றைய தாக்குதலில் இருபது மாணவர்கள் உட்பட நாற்பது பேர் உயிரிழந்தனர். நாற்பத்திரண்டு மாணவர்கள் உட்பட நூறு பேர் காயமடைந்தனர். இச்சம்பவத்தில் வலது காலை இழந்த ச.சிறிவித்தியா கூறுகையில்...



"அன்று புக்காரா விமானம் பாடசாலை அருகில் முதல் குண்டை போட்டவுடன் எல்லோரும் சிதறி ஓடினோம். அப்போது மீண்டும் விமான இரைச்சல் சத்தம் பெரிதாகக் கேட்ட போது நான் பாடசாலையிலுள்ள அத்திமரத்தின் கீழே விழுந்து படுத்துவிட்டேன்.

குண்டு பாடசாலை வளாகத்திற்குள் விழுந்து வெடித்தது பாடசாலை முழுக்க புகை மண்டலமாக இருந்தது, எங்கும் ஓரே அழுகுரல்கள் கேட்டது. நானிருந்த இடத்தில் இருந்து தலையைத் துக்கிப் பார்த்த போது எங்கும் இரத்தமாக இருந்தது."

எனது உடம்பிலும் காலிலும் காயமடைந்திருந்தேன் அப்போது நான் அத்திமரத்தை விட்டு எனக்கருகிலிருந்த எனது ஒன்று விட்ட சகோதரியையும் கூட்டிகொண்டு ஓடும் நோக்குடன் எழும்ப முயன்ற போது என்னால் ஓடமுடியாமற் போய்விட்டது.

அந்தநேரம் எனது அண்ணாதான் வந்து என்னைத் தூக்கிக் கொண்டுபோய் மந்திகை வைத்தியசாலையிற் சேர்த்தார்.

அங்கு எனது வலது காலினைக் கழற்றினார்கள். அத்துடன் எனது வலது கையையும் கழற்ற வேண்டுமென்று கூறினார்கள். பின்னர் யாழ் போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சை பெற்று குணமடைந்தேன்."

## யாழ். நாகர்கோவில் மகாவித்தியாலயத்தின் மீது 22.09.1995 அன்று நடாத்தப்பட்ட சிறீலங்கா விமானப்படையின் தாக்குதலில் பலியான 21 மாணவர்களின் 29ஆம் ஆண்டு நினைவாக...



# 226,343 வாக்குகளைப் பெற்றார் தமிழ் பொதுவேட்பாளர் திரு. பா. அரியநேத்திரன்!

22.09. 2024

வட, கிழக்கின் 05 தேர்தல் மாவட்டங்களில் யாழில் இரண்டாம் இடம். ஏனைய மாவட்டங்களில் மூன்றாம், நான்காம் இடங்கள் ஒப்பீட்டளவில் திகாமடுல்லை தேர்தல் மாவட்டத்தில் குறைந் தளவு வாக்குகள்.

சிறீலங்கா நாட்டிற்கான ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுக்கட்டமைப்பினரால் வட, கிழக்கு தமிழ் மக்களின் சார்பில் தமிழ் பொதுவேட்பாளராகக் களமிறக்கப்பட்ட பாக்கியச் செல்வம் அரியநேத்திரன் மொத்தமாக 226,343 வாக் குகளைப் பெற்றுள்ளார்.

இது செல்லுபடியான வாக்குகளில் 1.70 சதவீதமாகும். மிகக்காத் திரமானதாகக் கருதப்பட்ட இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் வட, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குறித்த சில தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் இணைந்து இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனை தமிழ் பொதுவேட்பாளராகக் களமிறக்கியிருந்தன.

தமிழ் மக்களின் ஒற்றுமையைப் பறைசாற்றும் அதேவேளை, தமிழர்களின் பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை என்பதை சர்வதேச சமூகத்துக்குக் கூறும் நோக்கில் களமிறக்கப் பட்டதாகக் கூறப்பட்ட இப்பொதுவேட்பாளர் வட, கிழக்கு மாகா ணங்களில் செலுத்தப்பட்ட வாக்குகளில் 50 சதவீதத்துக்கு மேல், அதாவது சுமார் 700,000 வாக்குகளைப் பெறவேண் டும் என்பதை இலக்காகக்கொண்டு பிரசாரங்கள் முன்னெடுக் கப்பட்டன.

இருப்பினும் போட்டித்தன்மை மிக அதிகமான இத்தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் அரியநேத்திரன் மொத்தமாக 226,343 வாக்குகளைப் பெற்றிருக்கிறார். அதன்படி அவர் வட மாகாணத்தின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 116,688 வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்திலும், வன்னி தேர்தல் மாவட்டத்தில் 36,377 வாக்குகளைப் பெற்று மூன்றாம் இடத் திலும் இருக்கிறார்.

அவரால் பெறப்பட்ட இவ்வாக்குகள் செல்லுபடியான வாக் குகளில் முறையே 31.39, 16.74 சதவீதம் ஆகும். அதே போன்று அரியநேத்திரன் கிழக்கு மாகாணத்தின் திருகோண மலை தேர்தல் மாவட்டத்தில் 18,524 வாக்குகளைப் பெற்று நான்காம் இடத்திலும், மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் 36,905 வாக்குகளைப் பெற்று நான்காம் இடத்திலும், திகா மடுல்லை தேர்தல் மாவட்டத்தில் 9.985 வாக்குகளைப் பெற்று நான்காம் இடத்திலும் இருக்கிறார்.

அவரால் பெறப்பட்ட இவ்வாக்குகள் செல்லுபடியான வாக் குகளில் முறையே 7.74, 11.58, 2.36 சதவீதம் ஆகும். மேலும் அரியநேத்திரன் வட, கிழக்கு மாகாணங்களில் தொகுதி வாரியாகப் பெற்ற வாக்குகளை நோக்குகையில் வடக்கில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் வட்டுக்கோட்டையில் 11,170 வாக்குகளையும், காங்கேசன்துறையில் 5,726 வாக் குகளையும், மானிப்பாயில் 11,587 வாக்குகளையும், கோப்




பாயில் 11,410 வாக்குகளையும், உடுப்பிட்டியில் 8,467 வாக் குகளையும், பருத்தித்துறையில் 8,658 வாக்குகளையும், சாவகச்சேரியில் 9,159 வாக்குகளையும் பெற்றிருக்கிறார்.

அடுத்ததாக வன்னி தேர்தல் மாவட்டத்தில் மன்னாரில் 10,757 வாக்குகளையும், வவுனியாவில் 11,650 வாக்குகளையும், முல்லைத்தீவில் 12,810 வாக்குகளையும் பெற்றிருக்கிறார்.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் சேருவிலில் 2,412 வாக்குகளையும், திருகோணமலையில் 11,300 வாக்குகளையும், மூதூரில் 4,381 வாக்குகளையும் பெற்றிருக்கும் அரியநேத்திரன், மட்டக்களப்பு தேர்தல் மாவட் டத்தில் கல்குடாவில் 10,890 வாக்குகளையும், மட்டக்களப்பில் 12,758 வாக்குகளையும், பட்டிருப்பில் 12,356 வாக்குகளையும் பெற்றிருக்கிறார். மேலும் திகாமடுல்லை தேர்தல் மாவட்டததில் அம்பாறையில் 28 வாக்குகளையும், சம்மாந்துறையில் 2,299 வாக்குகளையும், கல்முனையில் 2,623 வாக்குகளையும், பொத்துவிலில் 4,802 வாக்குகளையும் அரியநேத்திரன் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்களின் 37வது ஆண்டையொட்டி வவுனியாவில் இருந்து யாழ். நல்லூர் வரை ஊர்திப் பவனி ஆரம்பம்!

24.09. 2024

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்களின் 37வது ஆண்டையொட்டி ஊர்தி பவனி இன்று செவ்வாய்க்கிழமை வவுனியா பொங்குதமிழ் நினைவுத்தூபியில் ஆரம்பமாகி A9 வீதிவழியாக நகர்ந்து செல்கிறது.



குறித்த ஊர்தி தரித்து நிற்கும் இடங்களில் மக்கள் அணிவகுத்து மலர்தூவித் தமது நினைவேந்தலைச் செய்துவருகின்றனர்.

இந்த ஊர்தியானது தமிழர்தாயகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று பின்னர் நல்லூரில் உள்ள ஈகைச்சுடர் நினைவுத்தூபிப் பகுதியைச் சென்றடைந்து அங்கு வணக்க நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.





அத்துடன் நல்லூரில் குறித்த பகுதியில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்களின் நினைவுசுமந்து இரத்த தானம், ஓவியப் போட்டி, அடையாள உணவு தவிர்ப்பு போன்றவையும் இடம்பெற்றுவருகின்றன.





www.sangathamil.ca


## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# உங்கள் கனவு நிறைவேற வேண்டும் என்றால் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்!

## பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்

24.09, 2024

நீங்கள் கனவு காணும் நாட்டை கட்டி எழுப்ப வேண்டுமாக இருந்தால் இந்த நாட்டினுடைய இனப்பிரச்சனை தீர்க்கப் படவேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் இன்று செவ்வாய்க்கிழமை (24) இடம்பெற்ற திலீபன் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு விட்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

அநுரகுமாரவும் ஒடுக்குமுறைக்கு எதிராக போராடிய ஒருவராக இருக்கின்றார். அவர்கள் சோசலிசவாதிகளாக தங்களைக் காட்டிக்கொண்டிருந்தாலும் துரதிஸ்டவசமாக அவர்களது அமைப்பு தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பிற்கு கடந்த காலங்களில் முழுமையாக துணைநின்றது.

ஒன்றரை இலட்சம் அப்பாவி தமிழ்மக்கள் இறுதிப்போரில் மடிவதற்கு இந்த அமைப்பு உதவி புரிந்தது. தற்போது நாட்டின் ஆட்சி அதிகாரத்தினை அவர்கள் பிடித்துள்ளனர்.

நாங்கள் அனைவரையும் அரவணைத்துச்செல்வோம் என்று அவர்கள் சொல்வது கேட்பதற்கு இனிமையாக இருக்கலாம்.

நாம் அவரிடம் கேட்பது என்னவென்றால் ஒரு மாற்றத்திற்காக சிங்கள மக்கள் அதிகாரத்தை உங்களுக்கு வழங்கியிருக் கின்றார்கள்.

நீங்கள் கனவுகாண்கின்ற நாட்டை கட்டி எழுப்ப வேண்டுமாக இருந்தால் இந்த நாட்டினுடைய இனப்பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும்.

அது எவ்வாறு தீர்க்கப்படவேண்டும் என்று நீங்கள் முடிவெடுக்க முடியாது உங்களுக்கு அந்த அருகதை கிடையாது.

தமிழர்களின் விருப்பங்களை ஏற்றுக்கொண்டு அந்த விருப் பங்களை அங்கிகரிக்கும் மூலமாக தமிழர்களை இந்தநாட்டின் ஆட்சியிலே பங்காளிகள் ஆக்குவதற்கு துணியவேண்டும்.

அந்த துணிச்சல் உங்களுக்கு இருக்கவேண்டும் என்று புத்த பிரானையும் எமது கடவுளர்களையும் நாங்கள் பிரார்த்திக் கின்றோம்.

வடகிழக்கு தமிழர் தாயகத்தை அங்கீகரித்து எமது தேசம் இறைமை என்ற வகையில் எமது சுயநிர்ணய உரிமையை அங்கிகரித்து அதனடிப்படையில் ஒரு சமஸ்டி அரசியலமைப் பினை கொண்டுவருவதனூடாக இந்த நாட்டினுடைய எதிர் காலத்தை முன்னோக்கி நகர்த்துவதற்கு தமிழர்களின்



பங்களிப்பை பெறுவதற்கான அத்திவாரத்தை நீங்கள் இட வேண்டும்.

அதற்குரிய அணுகுமுறைகளையும் நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு நீங்கள் உடனடியாக இறங்கவேண்டும் என்ற கோரிக்கையினை நாங்கள் அவரை நோக்கி முன்வைக் கின்றோம் என்றார்.

# தமிழ்த் தேசிய உயர்வுத் தளத்தை மீளக் கட்டமைப்பதில் பொதுவேட்பாளர் காத்திரமாக பங்காற்றியுள்ளார்!

## தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன்

24.09, 2024

முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் முடிவுவரை தேசமாகத் திரண் டிருந்த தமிழ் மக்கள் அதன் பின்னர் சாதிகளாகவும், சமயங் களாகவும், பிரதேசங்களாகவும், கட்சிகளாகவும் சிதறடிக்கப் பட்டுள்ளனர்.

தென்னிலங்கை அரசியல்வாதிகளோடு தமிழ் அரசியல் வாதிகள் சிலரும் கைகோர்த்து திட்டமிட்டு இதனை நிறை வேற்றி வந்துள்ளனர்.

“இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் சார்பில் தமிழ்ப் பொதுவேட்பாளராகப் போட்டி யிட்ட பா.அரியநேத்திரன் சிதறிக்கிடக்கும் தமிழ்த் தேசிய உணர்வுத் தளத்தை மீளக்கட்டமைப்பதில் காத்திரமான பங்காற்றியுள்ளார்.” என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத் தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்யுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட தமிழ்ப் பொதுவேட்பாளர் குறித்து பொ.ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை யிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஒரு இனத்தைத் தேசமாகக் கட்டியமைப்பதில் அந்த இனம் பேசுகின்ற மொழி, தாயகமாகக் கொண்டிருக்கும் நிலப்பரப்பு, பண்பாடு ஆகியன வகிக்கும் பங்களிப்புகளுக்கு நிகராக தேசம் என்ற உணர்வு நிலையும் இன்றியமையாதது.

யுத்தத்தின் பின்னரான தமிழர் அரசியலில் தேசம் என்கின்ற உணர்வு நிலை தமிழ்ச் சூழலில் ஊடுருவியுள்ள பெரும் பான்மைக் கட்சிகளாலும் அவர்களின் எடுபிடிகளாலும் மழுங் கடிக்கப்பட்டு வந்துள்ளது.

இந்நிலையிலேயே தமிழ் மக்களைத் தேசமாக மீளவும் ஒருங் கிணைக்கும் நோக்கோடு நிறுத்தப்பட்ட தமிழ்ப் பொதுவேட் பாளர் தான் பெற்ற கணிசமான வாக்குகளின் மூலம் தமிழ்த் தேசியத்தின் எதிர்காலம் குறித்த நம்பிக்கையை ஊட்டியுள்ளார்.

நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தென்னிலங்கை கட்சிகளின் பிரதான வேட்பாளர்கள் வடக்கு, கிழக்கில் கோடான கோடி பணத்தைச் செலவழித்து தமிழ் வாக்குகளை வியாபாரப் பண்டமாக்கிக் கொள்வனவு செய்ய முயன்றனர்.

இதற்குத் தமிழ் அரசியல்வாதிகள் சிலரும் துணைபோயினர்.

ஆனால், விலை போகாத தமிழர்களாக இரண்டேகால் இலட்சத்




துக்கும் அதிகமான தமிழ் மக்கள் தமிழ்ப் பொதுவேட்பாளரின் சங்குச் சின்னத்துக்குத் தங்கள் வாக்குகளை வழங்கியுள்ளனர்.

தமிழ்த் தேசிய அரசியலை சீர்செய்து நேர்செய்யும் பயணத்தில் பொதுவேட்பாளர் பெற்றிருக்கும் வாக்குகள் பலமான அடித் தளத்தை உருவாக்கி இருக்கிறது” என்று அவர் தனது அறிக் கையில் தெரிவித்துள்ளார்.

# யாழ். ஊரெழுவில் ஆரம்பித்த ஈகைச்சுடர் திலீபனின் நினைவு ஊர்தி நடைபயணம்!

26.09, 2024

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்களின் 37ஆவது ஆண்டின் இறுதி வணக்க நிகழ்வுகள் இன்றையநாள் 26.09.2024 (வியாழக்கிழமை) நல்லூர் நினைவிடத்தில் ஆரப்பம் ஆகியது. முன்னதாக ஊரெழுவில் ஈகைச்சுடர் லெப. கேணல் திலீபன் அவருடைய வீட்டு முற்றத்திலிருந்து இன்று காலை 7.00மணிக்கு நடைபயணம் ஈகைச்சுடல் லெப். கேணல் திலீபன் அவர்களின் நினைவு ஊர்தி பவனியுடன்







ஆரம்பமாகியது.

தொடர்ந்து பல்வேறு பகுதிகளின் ஊடாக சங்கிலியன் சந்தியை அடைந்து நல்லூரான் முன்றிலில் தேங்காய் உடைத்து ஈகைச்சுடர் ஏற்றியபின் நல்லூர் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவிடத்தைச் சென்றடைந்து அங்கு வணக்க நிகழ்வுகள் இடம்பெற்றது.

# தமிழ் மக்களின் தேசியப்பிரச்சினை தீர்கப்படவேண்டும்!

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமசந்திரன்

25.09, 2024

நாட்டின் பொருளாதார பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்றால் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். தமிழ் பொதுவேட்பாளருக்கு வாக்களித்ததன் மூலம் தமிழ் மக்களின் எண்ணக்கிடக்கை ஜனாதிபதிக்கும் வெளியுலகிற்கும் புரிந்துகொள்ளக்கூடியது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தமிழ் பொதுவேட்பாளர் அலுவலகத்தில் நடாத்திய ஊடக சந்திப்பிலே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதார பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்றால் இந்த நாட்டில் இருக்கக் கூடிய தமிழ் மக்களுடைய ஒத்துழைப்பு, புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் ஒத்துழைப்பு போன்றவை மிக மிக அவசியமானவை அவர்களுடைய ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் இந்த நாட்டின் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

இந்த நாட்டில் பாரிய யுத்தம் இடம்பெற்றுள்ளது இந்த யுத்தம் ஏன் நடைபெற்றது எதற்காக நடைபெற்றது என்பதை இவர்கள் அறிந்திருக்கிறார்கள். இந்த நாட்டில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாகக் காணிகளைப் பறிமுதல் செய்தல், காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை,வடக்கு கிழக்கில் இனம் பரம்பலை மாற்றக்கூடிய வகையிலான செயற்பாடுகளை முன்னெடுத்தல் தொடர்பான செயற்பாடுகள் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது.

ஆகவே சமத்துவத்தை பேணக்கூடிய, சகல இனங்களையும் கலாச்சாரம், பண்பாடுகளைப் பேணக்கூடியவர்கள் என்ற வகையில் இவ்வாறான விடயங்கள் நடக்காத வகையில் கட்டுப்படுத்துவார்கள் என்பதை தமிழ்மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

எனவே இளம் ஜனாதிபதியாக அனுரகுமார திசாநாயக்க ஜனாதி பதியாகப் பதவியேற்றுள்ளார். எனவே ஒட்டுமொத்த நாட்டின் நன்மை கருதி நாட்டில் இருக்கக்கூடிய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இருப்பதாக நாங்கள் கருது கின்றோம். பாதிக்கப்பட்ட மக்கள், இன அடக்குமுறைக்குள் பாதிக்கப்பட்ட மக்கள் விரும்பக்கூடிய வகையில் இனமத பேத மின்றியே சமுகத்தை உருவாக்க வேண்டுமானால் அதற்கேற்ப தமிழ் மக்களின் ஆதரவு கிடைக்கும் என்பதை நம்புகின்றோம்.

இதேவேளை தமிழ்பொதுவேட்பாளர் விடயத்தில் பல்வேறுபட்ட நெருக்கு வாரத்தின் மத்தியில் குறிப்பாகப் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், சாணக்கியன் இது கோமாளித்தனமான வேலை இதனை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை இதற்கு எதிராகப் பிரச்சாரம் செய்வோம் எனக் கூறி எதிராக பிரச்சாரம் செய்யப்பட்டபோதிலும் இவர்கள் மட்டுமன்றி மட்டுமன்றி ஜனாதிபதி வேட்பாளர்கள் வடக்கிலும் கிழக்கிலும் பல நாட்களாக முகாமிட்டிருந்து தமக்கான பிரச்சாரங்கள், எமக்கு எதிரான பிரச்சாரங்களிலும் ஈடுபட்டாலும் கூட வடக்கு ,கிழக்கு மாகாணங்களில் இரண்டு இலட்சத்திற்கு மேலான வாக்குகளை பெற்றுக்கொண்டுள்ளோம்.

இது எமக்கு பெரிய வெற்றியாக கருதுகிறோம் மக்கள் ஒன்றிணைந்து செல்லவேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்கள் நாங்கள் கூட்டாகச் செயற்படவேண்டும் என்பதையும் இதனுள் பார்க்கக்கூடியதாகவுள்ளது.

சுமந்திரன் தேர்தலுக்குப் பிற்பாடும் இது விசமத்தனமான விடயத்தில் ஈடுபடக்கூடாது என்று கூறிய அவரது முட்டாள் தனமான கூற்றுத் தமிழ் மக்கள் திரண்டு வந்து பொதுவேட்பாளருக்கு வாக்களித்திருக்கிறார்கள் பல எதிர்ப்புக்களைத் தெரி



வித்தாலும் மக்கள் தெளிவாக தமது வாக்குகளை அளித்து கணிசமான வெற்றிகளை பெற்றுள்ளார்கள் என்பது உண்மை ஆகவே நாங்கள் எடுத்துள்ள முயற்சி என்பது தற்போது வந்துள்ள ஜனாதிபதி தொடக்கம் இராஜதந்திரிகள் மட்டத்திலும் கூட கவனத்தைத் திருப்பியிருக்கிறது.

என்பது மட்டுமல்லாமல் சில இடங்களில் முதலாவதாக, சில இடங்களில் இரண்டாவதாக, மூன்றாவதாக வந்திருக்கிறார் ஆகவே தொகுதி ரீதியாக பார்க்கும் போது அவர் வெற்றி பெற்றிருக்கிறார் ஒட்டுமொத்த இலங்கையின் தேர்தலில் கூட நாங்கள் வென்றிருக்கிறோம் என்பதைக் காத்திரமாக வெளியுலகிற்குச் சொல்லக்கூடியதாகும்.

இது சாதாரண விடயமல்ல நாங்கள் எடுத்த முடிவின் காரணமாகத் தமிழ் மக்களின் எண்ணக்கிடக்கையைச் செல்லியிருக்கிறது. ஆகவே இதற்காக உழைத்த அத்தனை உள்ளங்களுக்கும் நிறுவனங்களுக்கும் நன்றிகள் தெரிவித்துக் கொள்கிறோம் என மேலும் தெரிவித்தார்.

# யாழ். பல்கலைக்கழகத்தில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 37ஆம் ஆண்டு நினைவேந்தல்!

26.09, 2024

தமிழர் தாயகத்தில் வலிந்து போரைத் திணித்துக் கொண்டிருந்த இந்திய இராணுவத்திற்கு, சிறீலங்கா அரசுக்கும் எதிராக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா நோன்பிருந்து தன்னுயிர் நீத்த மருத்துவ மாணவனும் போராளியுமான ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 37ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வியாழக்கிழமை (26.09.2024) முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் இவ்வாண்டும் மாணவர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் உள்ளிட்ட பல்கலைக்கழகச் சமூகத்தினரால் உணர்வெழுச்சியுடன் காந்தி தேசத்திற்கே அகிம்சையைப் போதித்த ஈகைச்சுடல் லெப். கேணல் திலீபனின் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது.















# திருகோணமலை சிவன்கோயில் முன்றலில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனுக்கு நினைவேந்தல்!

26.09, 2024

ஈகத்தின் மறு உருவம் லெப். கேணல் திலீபன் அவர்களின 37 ஆம் ஆண்டு நினைவேந்தல் திருகோணமலை சிவன்கோவில் முன்றலில் நேற்று இரவு இடம்பெற்றது.

கடந்த ஆண்டு ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவு ஊர்திமீது திருகோணமலை யில் வைத்து சிங்களக் காடையர்கள் வெறித்தனமான தாக்குதல் நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# யாழ். உரும்பிராயில் ஈகையர் பொன். சிவகுமாரன் அவர்களின் நினைவுத்தூபி முன்பான ஈகைச்சுடர் மலர் வணக்கம்!

26.09, 2024

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்களின 37 ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு யாழ். உரும்பிரா யில் அமைந்துள்ள ஈசையர் பொன்.சிவகுமாரன் நினைவுத் தூபி முன்பாக ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் நினைவு ஊர்திக்கு இன்று காலை பொதுச்சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தப் பட்டது.









# ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 37ஆம் ஆண்டு நினைவேந்தல் – முல்லை. புதுக்குடியிருப்பில்!

26.09, 2024

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 37ஆம் ஆண்டு நினைவுவேந்தல் நிகழ்வு இன்றையநாள் புதுக்குடியிருப்பில் இடம்பெற்றிருந்தது.





முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தினரின் ஏற்பாட்டில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 37 ஆம் ஆண்டு நினைவு நாளானது இன்றையநாள் (26.09.2024) புதுக்குடியிருப்பு சந்தை பகுதியில் இடம்பெற்றிருந்தது.

புதுக்குடியிருப்பு வர்த்த சங்க தலைவர் நீதன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த நினைவு வணக்க திகழ்வில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திரு உருவ படத்திற்கு புதுக்குடியிருப்பு வர்த்தகர்கள், பொதுமக்களால் மலர் வணக்கம் செலுத்தப்பட்டு தொடர்ந்து உரையுடன் நினைவு வணக்க நிகழ்வு நிறைவடைந்திருந்தது..

www.sangathamil.ca



“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது.“

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நல்லூரில் உணர்வெழுச்சியுடன் நினைவு கூரப்பட்டது!

26.09, 2024






இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்துப் பன்னிரண்டு நாட்கள் நீராகாரம் கூட இன்றி உண்ணா நோன் பிருந்து உயிர்துறந்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் நாளின் பிரதான நிகழ்வு இன்று வியாழக்கிழமை (26.09.2024) நல்லூரில் தியாகதீபம் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் உணர்வெழுச் சியுடன் நினைவு கூறப்பட்டது.

இன்று காலை-07.15 மணிக்கு ஊரெழுவிலுள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் பிறந்த இல்லக் காணியில் மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து காலை-07.30 மணியளவில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் நினைவு சுமந்த ஊர்திகள் சகிதம் நடைபவனி ஆரம்பமாகியது. நடைபவனி உரும்பிராயைச் சென்றடைந்ததைத் தொடர்ந்து ஈழத் தமிழின விடுதலைப் போராட்டத்தின் முதற் தற்கொடை யாளர் தியாகி பொன்.சிவகுமாரனின் உருவச் சிலைக்கு மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து கோண்டாவில், திருநெல்வேலிச் சந்தி, கல்வியங்காடு, நல்லூர் சங்கிலியன் பூங்கா ஊடாக ஊர்திகள் சகிதம் நடைபவனி நல்லூர் ஈகைச் சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவுத் தூபியடியைச் சென்றடைந்தது.

தொடர்ந்து ஈகைச் சுடர் லெப். கேணல் திலீபன் உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்த நேர மான முற்பகல்-10.48 மணி யளவில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் மாவீரர் கதிர்மதியின் தந்தையார் துரைராசா சுடரேற்றி மலர்வணக்கம் செலுத் தினார். சமநேரத்தில் நல்லூரிலுள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவுத் தூபியடியில் இரண்டு மாவீரர்களின் சகோதரியும், முன்னாள் போராளியு மான மலர்விழி பொதுச் சுடர் ஏற்றி மலர்வணக்கம் செலுத் தினார். இரண்டு நிமிடங்கள் அகவணக்கம் செலுத்தப்பட்டு மலர்மாலைகள் அணிவிக்கப் பட்டதைத் தொடர்ந்து மலர் வணக்ம் ஆரம்பமானது. முன்னாள் போராளிகள், மாவீரர் களின் பெற்றோர்கள், காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவுகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாண வர்கள், யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகள், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரு மான செல்வராசா கஜேந்திரன், கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ், கட்சியின் பிரச்சாரச் செயலாளரும், சட்டத்தரணியு மான ந.காண்டீபன், மூத்த போராளியும், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான பொன் மாஸ்டர், கட்சியின் மகளிர் அணித் தலைவி திருமதி.வாசுகி சுதாகரன், கட்சியின் மகளிர் அணிச் செயலாளர் திருமதி.கிருபா கிரிதரன், கட்சியின் செயற்பாட்டாளர்கள், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயற்பாட்டாளர்கள், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், யாழ்.மாநகரசபையின் முன்னாள் பிரதி முதல்வர் து.ஈசன், தமிழ்த்தேசியப் பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சு.நிஷாந்தன், பொன்.சிவகுமாரனின் சகோதரி பொன்.சிவகுமாரி, குரலற்றவர் களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன், அரசியல் விமர்சகர் மு.ஈழத்தமிழ்மணி, இளம் சமூகச் செயற் பாட்டாளர் ந.விஜயதரன், தமிழ்த்தேசியப் பற்றாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டு ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனுக்கு உணர்வுபூர்வ மலர் வணக்கம் செலுத்தினார்கள்.

இதேவேளை, தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நாளை முன்னிட்டு வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 22 வயதான இளைஞரொருவர் திலீபன் பிறந்த இடமான ஊரெழுவிலிருந் தும், கைதடியைச் சேர்ந்த 40 வயதான குடும்பஸ்தரொருவர் கைதடியிலிருந்தும் நல்லூரிலுள்ள திலீபனின் நினைவுத் தூபியடியை நோக்கிப் பறவைக் காவடிகள் எடுத்து வந்து உயர்வான வகையில் திலீபனுக்கு மரியாதை செலுத் தினார்கள்.

### ஐந்து அம்சக் கோரிக்கைகள்:

1). மீளக்குடியமர்தல் என்ற பெயரில் இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் குடியேற்றங் களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

2). சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம் களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

3). அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

4). ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற் றாகக் களையப்படவேண்டும்.

5). தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத் தப்பட வேண்டும்.























"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# மன்னாரில் காற்றாலை மின்சார திட்டம்: தடுக்குமாறு கோரிக்கை!

## மன்னார் பொதுமக்கள்

27.09, 2024

மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்துக்கான கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு செயற்பாடுகளை நிறுத்தக் கோரி, ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அழுத்தத்தை கொடுக்கும் வகையில் தபாலட்டை மூலம் கோரிக்கைகள் முன்வைக்கும் நடவடிக்கை இன்றைய தினம் வெள்ளிக்கிழமை (27) மன்னாரில் பொதுமக்களால் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் மன்னார் பேருந்து தரிப்பிடத்தில் இன்று இந்த தபாலட்டைகளை அனுப்பும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நூற்றுக்கணக்கான மக்கள், மத தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து சிறீலங்கா ஜனாதிபதி, பிரதமருக்கான தபாலட்டைகளை அனுப்பி வைத்தனர்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த பல வருடங்களாக காற்றாலை மின் உற்பத்தி நிலையத்துக்கான கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பை முன்னெடுத்து வந்தனர்.

அதன் பின்னர், மன்னாரில் காற்றாலை மின் கோபுரம் அமைத்தல், மணல் அகழ்வில் ஈடுபட வேண்டாம் என்ற கோரிக்கையை முன்வைத்து மக்கள் தொடர்ந்து எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்தனர்.

இவை தொடர்பில் கடந்த காலங்களில் சிறீலங்கா ஜனாதிபதி, பிரதமர் உட்பட உரிய அதிகாரிகளிடம் கோரிக்கைகளை முன்வைத்தபோதும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில், தற்போதைய சிறீலங்கா ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு இந்த திட்டம் அப்பகுதி மக்களுக்கு ஏற்படுத்தக்கூடிய பாதகமான விளைவுகளை எடுத்துக்காட்டி, கொழும்பில் உள்ள அலுவலகங்களுக்கு மக்களின் கோரிக்கைகள் அடங்கிய தபால் அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



புதிய சிறீலங்கா ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, தனது தேர்தல் பிரச்சாரங்களின்போது, தான் ஜனாதிபதியாக வந்தால், மன்னார் தீவில் அமைக்கப்படும் காற்றாலை மின்சார திட்டத்துக்கான ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தடை: இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டுக்கு ஆதரவளித்த தமிழக அரசு! வேதனையில் ஈழத்தமிழர்கள்! - நா.க.த.அ.

27.09, 2024

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை தொடர்பிலான இந்திய தீர்ப்பாயத்தின் சட்ட நடவடிக்கைகளில், தமிழக அரசும் தனது ஆவணங்களை சமர்ப்பித்திருப்பதோடு, 1991ம் ஆண்டு முதல் தடைக்கு ஆதரவாகவும் இந்திய மத்திய அரசிற்கு ஒத்த நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றது.

இவ்விடயத்தில் தமிழக அரசு தனது நிலைப்பாட்டை மாற்றக் கோரி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்கள், இரண்டாவது கடிதமொன்றினை அனுப்பியுள்ளார்.

ஈழத்தமிழர்களின் நீதிக்கும் அரசியல் இறைமைக்குமான போராட்டத்திற்கு தனது தார்மீக, அரசியல் மற்றும் சட்டபூர்வ ஆதரவை தமிழக அரசிடம் கோருகின்றோம் என அக்கடிதத்தில் கோரியுள்ள பிரதமர்வி. உருத்திரகுமாரன் அவர்கள், தெற்காசியப் பகுதியில் உள்ள தமிழர்களின் இறையாண்மையைப் பாதுகாக்கும் உரிமையும், கடமையும், பொறுப்பும் தமிழக அரசுக்கு உண்டு என நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசு வெளியிட்டுள்ள பொது அறிவிப்பின்படி, செப்டம்பர் 27-28 ஆகிய நாட்களில், விடுதலைப் புலிகள்மீதான இந்தியாவின் தடை குறித்தான தீர்ப்பாய விசாரணைகள் இடம்பெற இருக்கின்றன.

இவ்விவகாரம் தொடர்பில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பிரதமர் வி.உருத்திரகுமாரன்அவர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

"மலையகத் தமிழர்களின் 200 ஆண்டுகாலப் பேரவலம் குறித்து தமிழகத்தில் மாநாடு நடத்துவதற்கான அனுமதியினை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரியபோது, அதற்கான அனுமதியினை மறுத்து சென்னைகாவல் கண்காணிப்பாளர் அவர்கள், சென்னை உயர் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்திருந்தார். நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் என்பது தமிழீழத்தை நிறுவுவதை நோக்கமாகக் கொண்ட புலம்பெயர் ஈழத்தமிழர்களின் ஒர் அரசியல் அமைப்பெனவும், இந்த அமைப்புக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன்தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கப்படுவதோடு, நா.தமிழீழ அரசாங்கத்தின் பிரதிநிதிகள், விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்றும்,அவர்கள் இந்தியாவில் நடத்தப்படும் நிகழ்வுகளின் போதுவிடுதலைப் புலிகளுடனான கருத்தியல் உறவை வெளிப்படுத்துவதற்கான எல்லா வாய்ப்புகளும் உள்ளன எனசென்னை காவல் கண்காணிப்பாளர் தாக்கல் செய்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது."

"தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை தொடர்பிலான தீர்ப்பாயத்தின் சட்ட நடவடிக்கைகளில், தமிழக அரசும் ஆவணங்களை சமர்ப்பித்து, இந்திய மத்திய அரசிற்கு ஒத்த நிலைப்பாட்டை எடுத்துள்ளது பெரும்வேதனையை ஏற்படுத்தியுள்ளது. தமிழக அரசானது ஈழத்தமிழர்களின் நீதிக்கும் அரசியல் இறைமைக்குமானபோராட்டத்திற்கு தனது தார்மீக, அரசியல், சட்டப்பூர்வமான ஆதரவை வழங்கி இனப்படுகொலைக்கான நீதியை நிலைநாட்ட வேண்டும் என்பதே உலகத் தமிழர்களின் கோரிக்கையாகும். மேலும், 1991ம் ஆண்டு முதல் தமிழீழ




விடுதலைப் புலிகள் தொடர்பில் இத்தகைய நிலைப்பாட்டை கடைப்பிடித்து வரும் தமிழக அரசு, 2009க்குப்பிறகு மாறிய அரசியல் சூழலுக்கு ஏற்ப தங்கள் நிலைப்பாட்டை மேம்படுத்த வேண்டக் கோருகின்றோம்" எனபிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்களது கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை விவகாரத்தில் தமிழக அரசு தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளும் என்றும், தெற்காசியப் பகுதியில் உள்ள தமிழர்களின் இறையாண்மையைப் பாதுகாக்கும் உரிமையும், கடமையும், பொறுப்பும் தமிழக அரசுக்கு உண்டு என நம்புவதாகவும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பிரதமர் வி.உருத்திரகுமாரன் எழுதிய கடிதத்தில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைக்குழி வழக்கு: இறுதி அறிக்கை சமர்ப்பிப்பு!

28.09, 2024

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வில் ஈடுபட்டிருந்த தொல்லியல் திணைக்களத்தின் பேராசிரியர் ராஜ் சோம தேவவின் இறுதி அறிக்கை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு வழக்கு மீண்டும் டிசம்பர் 12 திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு கடந்த 26ம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி த.பிரதீபன் முன்னிலையில் இடம்பெற்ற வழக்கு விசாரணையில் காணாமல் போனோர் அலுவலகம் (ஓ.எம்.பி) சார்பில் அந்த அலுவலகத்தின் சட்டத்தரணிகளும் , சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி ஏ.ளு.நிரஞ்சன் ஆகியோரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

வழக்கின் பின்னர் சட்ட வைத்திய நிபுணர் கனகசபாபதி வாசுதேவா ஊடகங்களுக்கு தகவல் தெரிவிக்கையில்,

"முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் கொக்குதொடுவாய் மனித புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதுவரை காலமும் மனித புதைகளில் இருந்தும் எடுக்கப்பட்ட மற்றும் மனித எலும்பு கூட்டு தொகுதிகளிலிருந்து எடுக்கப்பட்ட இலக்க தகடு சம்பந்தமான முழு விபரங்களும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அகழ்வில் ஈடுபட்டிருந்த தொல்லியல் திணைக்களத்தின் பேராசிரியர் ராஜ் சோமதேவவின் இறுதி அறிக்கை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

மேலும் இதுவரை காலமும் எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் 20 வரையான எலும்புக்கூடுகள் முற்றாக பகுப்பாய்வுக்கு உட்பட்ட நிலையில் மிகுதி எலும்புக்கூடுகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்



தப்பட்டு வருகின்றன.

மேலும் இந்த வழக்கு மீண்டும் டிசம்பர் 12 ஆம் திகதி தவணையிடப்படுள்ளது." எனக் கூறியுள்ளார்.

சங்கத்தமிழ்

# எந்த ஜனாதிபதி வந்தாலும் எமக்கான தீர்வு கிடைக்கப் பெறவேண்டும் என்பதே கோரிக்கை!

## வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி சி. ஜெனிற்றா

28.09, 2024

எந்த ஜனாதிபதி வந்தாலும் எமக்கான தீர்வு கிடைக்கப் பெற வேண்டும் என்பதையே சர்வதேசத்திடம் கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவித்த வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி சி.ஜெனிற்றா, புதிய ஜனாதிபதி, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக ஒரு சமிக்கையை காட்டினால் மட்டுமே உண்மையான மாற்றத்தை கொண்டுவந்தார் என எங்களால் கூற முடியும் என்று தெரிவித்தார்.

இன்று (28) தனது இல்லத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ளது. இறுதி யுத்தத்தின்போது சிறுவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் செல்வீச்சுக்களினாலும் விமான குண்டு தாக்குதலாலும் உடல் சிதறி படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதற்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை.

மேலும், இறுதி யுத்தம் முடிவடைந்த நிலையில் குடும்பம் குடும்பமாக இடம்பெயரும்போது தங்களது பிள்ளைகளை கையிலே ஒப்படைத்தனர். இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட பள்ளி மாணவர்களும் பச்சிளங்குழந்தைகளும் ஆயுதம் ஏந்தி போராடியவர்களா? இவர்களுக்கு என்ன நடந்தது?

கடந்த எட்டு தசாப்த காலமாக பதவி வகித்த எட்டு ஜனாதிபதிகளுக்கே யுத்தத்தை நடாத்திய பொறுப்பு இருக்கிறது. இந்நிலையிலே கையில் ஒப்படைக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நிகழ்ந்தது என்று தெரியாமல் வீதியிலே போராடிக் கொண்டிருக்கிறோம். ஆட்சியாளர்கள் மாறுகின்றார்கள், ஆட்சியும் மாறுகின்றது. தற்போது மாற்றம் ஒன்று நிகழ்ந்துள்ளது என்றாலும் கூட அது எந்த வகையில் எமக்கான மாற்றத்தை தரும் என்பது தெரியாது.

சர்வதேச நீதி நெறிமுறைமையை மட்டுமே நாம் இன்று வரை நம்பியிருக்கின்றோம். குறிப்பாக உள்ளக முறையில் எந்தவித நம்பிக்கையும் இல்லாத காரணத்தினால் நாங்கள் சர்வதேச நீதிப் நெறிமுறைக்காகவே இதுவரை போராடிக்கொண்டிருக்கின்றோம்.

300க்கு மேற்பட்ட தங்களது பிள்ளைகள் எங்கே என்று தெரியாமல் போராடிக்கொண்டிருந்த தாய், தந்தையரை இழந்த நிலையிலும் அவர்களின் ஏக்கத்துக்காகவும் நாம் தொடர்ச்சியாக போராடிக் கொண்டிருக்கின்றோம்.

இலங்கையில் சர்வதேச சிறுவர் தினத்தை கொண்டாடுபவர்களுக்கு ஒரு வேண்டுகோளினை விடுக்கின்றோம். எமது உறவுகள் எத்தனை பச்சிளம் குழந்தைகளையும், பாடசாலை மாணவர்களையும் இழந்து அவர்கள் மீண்டும் வருவார்களா என்ற ஏக்கத்துடனும் தவிப்புடனும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களை உங்கள் பிள்ளைகளாக நேசியுங்கள்.

எனவே, சர்வதேச சிறுவர் தினமான ஒக்டோபர் முதலாம் திகதியன்று வடக்கு, கிழக்கு தழுவிய கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுக்க உள்ளோம்.

அந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக காலை 10 மணிக்கு இந்த போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளோம். எனவே இப்போராட்டத்துக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.



இலங்கை அரசானது 75 வருடகாலமாக தமிழ் மக்களை ஏமாற்றி இருந்தது. பரம்பரை பரம்பரையாக 08 ஜனாதிபதிகள் மாறி மாறி ஆட்சி செய்திருந்த நிலையிலே எங்களுக்கு எந்தவித மாற்றங்களும் நிகழவில்லை. எனவே, எந்த நிலையிலும் எந்த ஒரு அரசையும் நம்பவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக ஜனாதிபதியாக பதவியேற்க முன்னர் குறிப்பிட்டிருந்தார்.

குறிப்பாக, சர்வதேச பொறிமுறையின் ஊடாக உண்மைகளை கண்டறிந்து, குற்றவாளிகளுக்கு தண்டனையை பெற்றுக் கொடுத்து மீள் நிகழாமையை உறுதிப்படுத்தும் நிலையில் புதிய ஜனாதிபதியை பற்றி யோசிக்க முடியும்.

எந்த ஜனாதிபதி வந்தாலும் எமக்கான தீர்வு கிடைக்கப் பெற வேண்டும் என்பதையே சர்வதேசத்திடம் கேட்டுக்கொள்கிறோம். எனவே, புதிய ஜனாதிபதி ஏதாவது ஒரு சமிக்கையை காட்டினால் மட்டுமே உண்மையான மாற்றத்தை கொண்டு வந்தார் என எங்களால் கூற முடியும் என தெரிவித்தார்.

# சிறுவர் தினமான ஒக்டோபர் முதலாம் நாள் கிளிநொச்சியில் கவனயீர்ப்பு போராட்டம்!

## கிளி. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத் தலைவி க. கோகிலவாணி

28.09, 2024

சிறுவர் தினமான ஒக்டோபர் முதலாம் திகதி கிளிநொச்சியில் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத் தலைவி க.கோகிலவாணி தெரிவித்துள்ளார்.







காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் கையளிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதி வேண்டி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சியில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# அஸ்வின் மற்றும் விராஜ் மெண்டிஸ் ஆகியோருக்கு நினைவு வணக்க நிகழ்வு யாழ். ஊடக அமையத்தில்!

29.09, 2024

மறைந்த ஊடகவியலாளரும், கேலிச்சித்திர கலைஞருமான அஸ்வின் சுதர்சனின் நினைவேந்தல் நிகழ்வும், தேசிய பற்றாளர் விராஜ் மென்டிஸின் நினைவு வணக்க நிகழ்வும் இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.




யாழ். ஊடக அமையத்தில், அமையத்தின் தலைவர் கு.செல்வக்குமாரின் தலைமையில், மாலை 4 மணியளவில் நடைபெற்றது.

அஸ்வினின் திருவுருவ படத்திற்கு அஸ்வினின் பெற்றோர் மலர் மாலை அணிவித்தனர். தொடர்ந்து தேசிய பற்றாளர் விராஜ் மென்டீஸின் திருவுருவ படத்திற்கு, யாழ் பல்கலைகழ கலைப் பீடாதிபதி கலாநிதி ரகுராமும், ஊடக கற்கைகள் துறை தலைவர் பூங்குழலி ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து அஸ்வின் மற்றும் தேசிய பற்றாளர் விராஜ் மென்டிஸ் ஆகியோரின் நினைவுரைகள் இடம்பெற்றதுடன், அஸ்வினின் குடும்பத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஊடக கற்கை நெறியை தொடரும் மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட தேவையுடைய மாணவருக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.



# சிறீலங்கா ஜனாதிபதியிடம் 08 கோரிக்கைகளை முன் வைத்துள்ள குரலற்றவர்களின் குரல் அமைப்பினர்!

29.09, 2024

சிறீலங்கா ஜனாதிபதியிடம் 08 கோரிக்கைகளை கடிதம் மூலம் குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் முன் வைத்துள்ளனர்.

ஜனாதிபதிக்கு அவர்கள் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கைத் தீவில் நடைபெற்று முடிந்துள்ள ஒன்பதாவது ஜனாதிபதி தேர்தல் முடிவானது, மரபு கடந்த ஒரு ஆட்சிக்கு வித்திட்டுள்ளது. இது ஒட்டுமொத்த இலங்கை வாழ் மக்களினதும் துணிகரமான தீர்மானம் ஆகும்.

அந்த வகையில், ஊழலற்ற ஒரு தேசத்தை உலகிற்கு அறிமுகப்படுத்துகின்ற முகவரியோடு நாட்டின் ஆட்சிப் பொறுப்பை கையேற்றிருகின்ற கௌரவ ஜனாதிபதியாகிய தங்களுக்கு எமது வாழ்த்துக்களை தெரிவித்து வரவேற்றுக் கொள்கின்றோம்!

மக்களதிகாரத்தின் ஊடாக ஆணைபெற்று அரச தலைவராக பதவியேற்றிருக்கின்ற தங்களுக்கு, சமூக பொருளாதார ரீதியில் சிதைவடைந்துள்ள இந்நாட்டை துரிதமாக சீரமைக்கும் தலையாய கடமைப் பொறுப்பு இருப்பதை தாங்கள் நன்கறிவீர்கள்.

இந்த நாடு இந்நிலையை சந்திப்பதற்கு அடிப்படை காரணமாக அமைவது, நாட்டில் புரையோடிப் போயிருக்கின்ற இனப்பிரச்சினையும் அதனுடான யுத்தமும்தான். இவற்றுக்கான, காரண காரியங்களை கண்டறிந்து நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பட்சத்தில், இந்நாட்டின் மீதான இதர தலையீடுகளை இல்லாது செய்து தேசத்தை அபிவிருத்தி நோக்கி கட்டியெழுப்ப முடியும். அதுவே காலத்தின் தேவையும் கூட.

அந்த வகையில், பல்லின கலாச்சார பண்பாடுகளைக் கொண்ட மக்கள் வாழ்கின்ற இந்நாட்டில்,

ஒரு பூர்வீக இனமான தமிழ் மக்கள் தமது தாய் நிலத்தில் சம உரிமையுடனும் சமூக அந்தஸ்துடனும் வாழ்வதற்காக தசாப்தங்கள் பல கடந்தும் இன்றுவரை போராடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பது தாங்கள் அறிந்த விடயமே.

ஆண்டாண்டு காலங்களாக அதிகாரக் கதிரையேறும் எந்த ஒரு அரச தலைவரும், தமிழ் மக்கள் தமது நியாயமான வாழ்வுரிமைகளை முழுமையாக அனுபவிப்பதற்கு வழிவகுத்ததில்லை. மாறாக, எமது கோரிக்கைகளை பிரிவினை வாதமாகவும் பயங்கரவாதமாகவும் சித்தரித்து சகோதர சிங்கள மக்கள் மத்தியில் இனவெறுப்பினை தோற்றுவித்ததுடன், அதிகார பலம் கொண்டு தமிழர்களை அடக்கி ஒடுக்கி ஆட்சி புரிந்து தத்தமது சுயலாபத்தை அனுபவித்துக் கொண்டதே இதுநாள் வரலாறாக இருந்து வருகிறது.

இதனால்தான் ஒட்டுமொத்த நாடும் அழிவுப் பாதைக்குள் அமிழ்ந்து போனது. எனினும், தமிழ் மக்கள் மீள் நிரப்ப முடியாத பல்வேறு பேரழிவுகளுக்கு ஆளானவர்களாக இன்று வரை அடையாளப்பட்டு நிற்கிறார்கள்.

எனவே, மாற்றத்தின் ஊடாக நாட்டை முன்னேற்றும் ஒரு கதாநாயகனாக ஆட்சிப் பொறுப்பேற்றிருருக்கும் ஜனாதிபதியாகிய தாங்கள், தமிழ் மக்களது ஆராய்ந்து நிரந்தரமானதொரு அரசியல் தீர்வுக்கு வழி வகுப்பீர்கள் என நம்பிக்கை கொள்கின்றோம். அதன் அடிப்படையில்

1. தமக்கென நிலம், மொழி, கலாச்சாரம், பண்பாடு எனும் தனித்துவ அடையாளங்களுடன் கூடிய ஒரு பூர்வீக இன மக்கள் என்ற வகையில், தமிழ் மக்கள் தமது தாயக பிரதேசங்களில் தன்னடையாளங்களுடன் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் வாழக்கூடிய ஏதுச் சூழலை உறுதிப்படுத்த வேண்டும்.

2 . தனிமனித உரிமைகளை தடுத்தாழ்கின்ற வகையில் செரிவூட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற கொடூரமான பயங்கரவாத தடைச் சட்டம் முழுமையாக அகற்றப்பட வேண்டும்.

3 . தமிழ் சமூகத்தின் பெயரில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறை வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள், ஏதேனுமொரு பொறிமுறையூடாக காலதாமதமின்றி விடுதலை செய்யப்பட வேண்டும்.

4 . தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட போரின் பங்காளிகளாக இருந்து புனர்வாழ்வு என்ற பெயரில் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் உட்பட, சிறைகளிலிருந்து விடுதலையான தமிழ் அரசியல் கைதிகளின் வாழ்வாதாரம் அவர்களின் உடல் உள மேம்பாடுகள் தொடர்பில் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

5 . போரின் பெயரில் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் கதி அறியாது பல வருடங்களாக தெருப்போராட்டம் நடாத்திக் கொண்டிருக்கின்ற தாய்மார்களின் கண்ணீருக்கு காலம் தாழ்த்தாது நியாயமான நிரந்தர தீர்வை தர வேண்டும்.




6 . போரின் பெயரில் உயிர்நீத்த உறவுகளை நினைவேந்துகின்ற அடிப்படை மனிதநேய உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதன் ஊடாக, மனக்காயங்களுக்கு ஆளாகியிருக்கின்ற மக்களை உள ரீதியாக ஆற்றுப்படுத்த முடியும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

7 . தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் தமிழர் வாழ் பிரதேசங்களில் மாத்திரம் அளவுக்கதிகமாக குவிக்கப்பட்டுள்ள இராணுவப் படைகளின் எண்ணிக்கை தொடரில் மக்களுக்கு எழுந்துள்ள அச்ச நிலையை போக்குவது அவசியமாகிறது.

8 . தொல்பொருள் திணைக்களத்தின் ஊடாகவும் ஏனைய அரச திணைக்களங்கள் ஊடாகவும் தமிழ் மக்களின் இனச் செரிவை குன்றச் செய்கின்ற வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற காணி அபகரிப்புகள் மற்றும் தமிழர் பிரதேசங்களின் பெயர்களை சிங்களப் பெயர்களில் மாற்றுகின்ற சூட்சும செயற்பாடுகள் கைவிடப்பட வேண்டும்.

இதுபோன்ற நிஜ மாற்றங்களால் மாத்திரமே இலங்கையில் இன ஒற்றுமையை ஏற்படுத்த முடியும் என்பதையும், அதுவே இந்நாட்டை மதிக்கத்தக முன்னேற்றத்திற்கு இட்டுச்செல்லும் என்பதையும் ஒரு சிவில் சமூக அமைப்பாக நினைவுபடுத்த கடமைப்படுகிறோம் என அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.






# கனடாவில் வீடு கொள்வனவு செய்வோருக்கான சலுகை!

17.09, 2024

கனடாவில் அடகு கடன் தொடர்பான சட்டங்களில் சில திருத்தங்கள் செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடாவில் மத்திய அரசாங்கம் இது தொடர்பான சட்ட திருத்தத்தை முன்னெடுக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வீடு கொள்வனவு செய்வதனை இலகுவாக்கும் வகையில் இந்த புதிய சட்ட திருத்தம் மேற்கொள்ளப்பட உள்ளது.

எனவே எதிர்வரும் காலங்களில் புதிய சட்டத்தின் பிரகாரம் வீடு ஒன்றை கொள்வனவு செய்வதற்கு அடிப்படை கட்டணமாக மொத்த பெறுமதியில் 20 வீதத்தை செலுத்த தேவையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஒன்று முதல் ஒன்று தசம் ஐந்து மில்லியன் டாலர்கள் பெறுமதியான வீடு ஒன்றை கொள்வனவு செய்யும் போது இவ்வாறு 20 வீதமான அடிப்படைத் தொகையை செலுத்த தேவையில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாற்றமானது வீடுகளை கொள்வனவு செய்வோரை ஊக்குவிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முதல் தடவையாக வீடு கொள்வனவு செய்பவருக்கு 30 ஆண்டுகள் வரையில் அடகு கடன் தவணை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய சட்டங்கள் எதிர்வரும் டிசம்பர் மாதம் நடுப்பகுதி முதல் அமுல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய சட்ட திருத்தங்கள் வீடு கொள்வனவு செய்பவருக்கு பெரும் வசதியாக அமையும் என பிரதி பிரதமர் கிறிஸ்டியா ஃப்ரீலாண்ட் தெரிவித்துள்ளார்.



குறிப்பாக மில்லியன் கணக்கான மக்களுக்கு இந்த புதிய சட்ட திருத்தம் உதவியாக அமையும் என அவர் தெரிவித்துள்ளார்.

# புதிய முதலீடுகள் மற்றும் வேலை வாய்ப்புப் பெருக்கங்களுக்கு ஒன்ராரியோ வழியேற்படுத்துகிறது!

18.09, 2024

புதிய வணிகங்களை ஈர்ப்பதற்கும், நல்ல ஊதியம் தரும் வேலைகளை உருவாக்குவதற்குமான களத்தினைத் தயார்ப்படுத்தும் பொருளாதார உயர்வுத் திட்டங்களுக்கென 75 மில்லியன் டொலர்களை ஒன்ராரியோ முதலீடு செய்துள்ளது. பெரும் முதலீட்டாளர்களை ஒன்ராரியோவை நோக்கி வர வைக்கும் இம்முன்முயற்சியானது தொழில் வளர்ச்சிக்கான களத்தைத் அமைத்துக்கொடுக்கும் திட்டமாக அமையும்.

வளர்ச்சிக்கான செயல்முறையைத் துரிதப்படுத்துவதில் கவனம் செலுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியில் ஒன்ராரியோவை அனைத்துலக மட்டத்தில் முன்னணியில் நிறுத்த உதவும். இது பற்றி அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் கருத்துத் தெரிவிக்கும்போது, "ஆயிரக்கணக்கான வேலை வாய்ப் புகளை உருவாக்கி, வலுவான சமுகத்துக்கான புதிய முதலீடுகளுக்கு அடித்தளமிடுவதில் எமது அரசு உறுதிபூண்டுள்ளது" என்றார். இம்முயற்சிகள் வணிக நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர்களுக்கான வாய்ப்புகளை மேம்படுத்துவதில் ஒன்ராரியோ கரிசனை செலுத்துவதை எடுத்துக் காட்டுகிறது.




# உலகின் தலைசிறந்த நாடுகள் பட்டியலில் கனடாவுக்கு நான்காவது இடம்!

20.09, 2024

உலகின் தலைசிறந்த நாடுகள் பட்டியலில் இரண்டாவது இடத்திலிருந்து சறுக்கிய கனடா, இந்த ஆண்டு, நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது.

US News & World Report என்னும் அமைப்பு ஆண்டுதோறும் உலகின் தலைசிறந்த நாடுகள் பட்டியலை வெளியிட்டு வருகிறது. பட்டியலில் கனடா நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது.

பட்டியலில் சுவிட்சர்லாந்து முதலிடத்தைப் பிடித்துள்ளது. இரண்டாவது இடத்தை ஜப்பானும், மூன்றாவது இடத்தை அமெரிக்காவும் பிடித்துள்ளன.

விடயம் என்னவென்றால், கனடா இதற்கு முன் உலகின் தலைசிறந்த நாடுகள் பட்டியலில் இரண்டாவது இடத்தில் இருந்தது, தற்போது நான்காவது இடத்துக்கு கீழிறங்கியுள்ளது.

கனடா இரண்டாவது இடத்திலிருந்து நான்காவது இடத்துக்கு இறங்கியதற்கு முக்கிய காரணம், அது, வர்த்தகம் செய்வதற்கான அனுமதி வழங்குதல், பாரம்பரியம் மற்றும் தொழில் முனைவு போன்ற விடயங்களில் குறைவான புள்ளிகளைப் பெற்றதுதான்.

அதே நேரத்தில், ஆய்வுகளில் கிடைக்கும் முடிவுகளின் அடிப்படையில் மற்ற நாடுகளால் ஒரு நாடு எப்படிப்பட்டது என பார்க்கப்படுகிறது, மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், சுற்றுலாவுக்கு உகந்த இடம் ஆகிய விடயங்களில் அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளது கனடா.

ஆகவேதான், உலகின் தலைசிறந்த நாடுகள் பட்டியலில் முதல் ஐந்து இடங்களுக்குள் இடம் பிடிக்க கனடாவால் முடிந்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

| Countries | 2024 Ranking | Indexed score |
|---|---|---|
| Switzerland | 1 | 100.00 |
| Japan | 2 | 96.6 |
| The United States of America | 3 | 94.2 |
| Canada | 4 | 94.1 |
| Australia | 5 | 92.9 |
| Sweden | 6 | 91.7 |
| Germany | 7 | 90.6 |
| The United Kingdom | 8 | 87.9 |
| New Zealand | 9 | 86.0 |
| Denmark | 10 | 85.2 |

# ஒன்ராரியோ அரசு Finch West LRT யின் தொடர் நிலையங்களின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்துள்ளது!

25.09,, 2024

ஃபின்ச் மேற்கு சிறுதொடரி (Light Rail Transit - LRT) நிலையங்களினதும், அவற்றின் நிறுத்தங்களுக்குமான கட்டுமானப் பணிகளை ஒன்ராரியோ அரசு நிறைவு செய்துள்ளது, ரெக்ஸ்டேல், ஜேன்-ஃபின்ச் மற்றும் ரிவர்-பிளாக் கிறீக் போன்ற பகுதிகளுக்கான சிறந்த மாற்றமாகக் கொள்ளப்படுகின்றது. 18 நிறுத்தங்களைக் கொண்ட இப்புதிய 11 கிலோமீட்டர்கள் நீளமான சிறுதொடரி வழித்தடம், போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதுடன், மேற்படி பிரந்திய மக்களின் பொதுப் போக்குவரத்து மீதான நம்பகத் தன்மையையும் அதிகரிக்கும். அதிக பயன்பாட்டு நேரங்களில் ஐந்து முதல் ஏழு நிமிடங்களுக்கொரு முறை இயக்கப்படவுள்ள இச்சிறுதொடரிகள், அவற்றின் பயணிகளை ரி.ரி.சி., கோ போக்குவரத்து மற்றும் ஏனைய போக்குவரத்துச் சேவைகளுடன் தடையின்றி இணைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் இது பற்றித் தெரிவிக்கும்போது, "எமது அரசாங்கம் மக்கள் தமது வதிவிடங்களிலிருந்து வேலைகளுக்கு இலகுவில் சென்றுவரக்கூடிய திட்டங்களை ஏற்படுத்திக் கொடுப்பது ஒன்ராரியோவின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த உதவும். ஸ்காபரோ நிலக்கீழ் தொடரிவழித்தடத்துக்கான கட்டுமானப் பணிகள் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ள நிலையிலுள்ளதும், நாம் முன்னெப்போதும் இல்லாத வகையில் வேகமாக முன்னேறி வருகிறோம் என்பதையே காட்டுகிறது" எனத் தெரிவித்தார். பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றும் வலுவான போக்குவரத்து வலையமைப்பை உருவாக்குவதற்கான ஒன்ராரியோ அரசின் உறுதியான நிலைப்பாட்டை இவ்விரிவாக்கம் எடுத்துக் காட்டுகிறது.



# கனடியப் பிரதமர் ஜஸ்டின் ரூடோ அரசு மீது நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி!

25.09, 2024

கனடாவில், ஆளும் ரூடோ அரசு மீது நேற்று மதியம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

என்றாலும், இரண்டு முக்கிய கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவளிக்காததால் ரூடோவின் தலை தப்பியுள்ளது.

கனடாவில், பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு மக்கள் ஆதரவு குறைந்துவருகிறது. ரூடோவின் லிபரல் கட்சிக்குள்ளேயே அவருக்கு எதிர்ப்பு உருவாகிவருகிறது.

ரூடோவின் கட்சியைச் சேர்ந்தவர்களே அவர் தலைமைப் பதவியை ராஜினாமா செய்யவேண்டும் என குரல் கொடுத்து வருகிறார்கள்.

இந்நிலையில், கனடாவின் எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சி, நேற்று ரூடோ அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தது.

நேற்று மதியம், ட்ரூடோ அரசு மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

ஆனால், New Democratic Party (NDP) மற்றும் The Bloc Québécois என்னும் இரண்டு கட்சிகளும், கன்சர்வேட்டிவ் கட்சி கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவளிக்கவில்லை.

ஆகவே, ரூடோ அரசு மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்துள்ளது.

ரூடோவின் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 153 பேரும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

கன்சர்வேட்டிவ் கட்சி வசமோ 119 நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் உள்ளனர்.

New Democratic Party (NDP) மற்றும் The Bloc Québécois என்னும் இரண்டு கட்சிகளும் ரூடோவுக்கு ஆதரவாகவே வாக்களிக்க, நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக 211 வாக்குகள் கிடைத்ததால், தீர்மானம் தோல்வியடைந்தது.



விடயம் என்னவென்றால், ரூடோவுக்கு இது தற்காலிக வெற்றிதான். காரணம், மீண்டும் ரூடோ அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர கன்சர்வேட்டிவ் கட்சி திட்டமிட்டுள்ளது.

# வீடு கொள்வனவு செய்பவருக்கு சாதக நிலை!

27.09, 2024

கனடாவில் வீடுகளை கொள்வனவு செய்வோருக்கு சாதகமான அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

வீடுகளின் விலை குறைவு மற்றும் அடகு கடன் வட்டி விகித மாற்றம் போன்ற நிலைமைகள் வீடுகளை கொள்வனவு செய்வதற்கான சாத்தியத்தை அதிகரித்துள்ளது.

ரேட்ஹப்.சீஏ (Ratehub.ca) என்ற இணைய தளம் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் வீடுகளை கொள்வனவு செய்வதற்கான இயலுமை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வீடு ஒன்றை கொள்வனவு செய்வதற்கான குறைந்தபட்ச வருமான அளவு சராசரி தொகை குறைவடைந்துள்ளது.

12 நகரங்களில் இவ்வாறு வீடுகளின் விலைகள் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கனடாவில் விலை உயர்ந்த வீட்டுச் சந்தைகளைக் கொண்ட நகரங்களான ரொரான்ரோ, விக்டோரியா, வாங்கூவார் போன்ற பகுதிகளிலும் இந்த மாற்றத்தை அவதானிக்க முடிவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக இரண்டாவது மாதமாகவும் வீடுகளை கொள்வனவு செய்வதற்கான இயலுமை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



# ஒரு வகை கண் சொட்டு மருந்து தொடர்பில் எச்சரிக்கை!

27.09, 2024

கனடாவில் பயன்படுத்தப்பட்டுவரும் ஒருவகை கண் சொட்டு மருந்து தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த கண் சொட்டு மருந்து ஊடாக பாதிப்புகள் ஏற்படக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய மருந்து பொருள் நிறுவனம் இது தொடர்பில் வாடிக்கையாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மொன்றியாலை மையமாகக் கொண்டு இயங்கி வரும் பென்டூஃபார்ம் என்ற மருந்து பொருள் நிறுவனம் இந்த கண் சொட்டு மருந்துகளை சந்தையில் இருந்து மீளப் பெற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளது.

சொட்டு மருந்து வகைகளை பயன்படுத்துவதன் ஊடாக கண்ணில் நுண்ணுயிர் தாக்கம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், வயோதிபர்கள் மற்றும் பலவீனமான நோய் எதிர்ப்பு சக்தி கட்டமைப்பை கொண்டவர்கள் இந்த மருந்து வகைகளை பயன்படுத்துவதனை தவிர்க்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஆரோக்கியமானவர்கள் பயன்படுத்தினாலும் சில உபாதைகள் ஏற்படக்கூடிய சாத்தியம் உண்டு என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

க்ரோமொலைன் கண் சொட்டு மருந்து (Cromolyn Eye Drops) வகைகளே இவ்வாறு சந்தையிலிருந்து மீளப் பெற்றுக் கொள்ளப்பட உள்ளது.

இந்த மருந்து பொருட்களை விற்பனை செய்ய வேண்டாம் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.




# லெபனானுக்கு கனடா உதவிக்கரம்!

29.09, 2024

லெபனானுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிகள் வழங்கப்படும் என கனடா அறிவித்துள்ளது.

இதன்படி மனிதாபிமான அடிப்படையில் 10 மில்லியன் டாலர்களை கனடா லெபனானுக்கு வழங்க உள்ளது.

இஸ்ரேல் படையினருக்கும் ஹிஸ்புல்லா இயக்கத்திற்கும் இடையில் இடம்பெற்று வரும் மோதல்கள் காரணமாக லெபனான் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப்படும் என கனடா அறிவித்துள்ளது.

கனடிய சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் அஹமட் ஹுசெய்ன் இது தொடர்பில் அறிவித்துள்ளார்.

உணவு, குடிநீர் மற்றும் அவசர சுகாதார உதவிகள் உள்ளிட்ட தேவைகளுக்காக இந்த நிதி பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஊடாகவும் கனடா லெபனானுக்கு நன்கொடைகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# தமிழக செய்திகள்



## சிறீலங்கா கடற்படையினரால் மொட்டை அடித்து இந்தியாவுக்கு அனுப்பிவைப்பு!

15.09.2024

இலங்கையிலிருந்து விடுவிக்கப்பட்ட மீனவர்களுக்கு மொட்டை அடித்து இந்தியாவுக்கு அனுப்பியதாக சிறீலங்கா அரசு மீது குற்றச்சாட்டு வைத்து, தமிழக மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து கடந்த மாதம் 26 ஆம் தேதி மீன்பிடிப்பதற்கான அனுமதி சீட்டு பெற்று மீன வர்கள் கடலுக்கு சென்றனர். தலைமன்னார் - தனுஷ்கோடி இடையே மீன்பிடித்துக் கொண்டு இருந்த போது அங்கு வந்த சிறீலங்கா கடற்படை, ஒரு விசைப்படகையும் அதில் இருந்த 8 மீனவர்களை சிறை பிடித்தது.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட எட்டு மீனவர்களுக்கும் தலா 50,000 ரூபாய் அபதாரம் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. அதில் 3 மீனவர்கள் 2ஆவது முறையாக சிறைபிடிக்கப்பட் டதால், அவர்களுக்கு 6 மாத சிறை தண்டனையும் விதித்தது. இதையடுத்து அபராத தொகையை கட்டிய மீனவர்களை சிறீலங்கா சிங்கள அரசு விடுவித்தது.




## இந்திய மீனவர்களை மொட்டையடித்து அனுப்பிய சிறீலங்கா அரசை கண்டித்து தமிழ்நாட்டு மீனவர்கள் ஆர்ப்பாட்டம்!

15.09.2024

சிறீலங்கா அரசையும், மத்திய அரசையும் கண்டித்து தங்கச் சிமடத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள்.

விடுதலை செய்யப்பட்ட மீனவர்களை மொட்டையடித்து அனுப் பியதால், சிறீங்கா அரசைக் கண்டித்து தங்கச்சிமடத்தில் மீன வர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இராமேசுவரத்தில் இருந்து கடந்த மாதம் 27-ம் தேதி மீன்பிடிக் கச் சென்ற ஒரு விசைப்படகையும், அதிலிருந்த 8 மீனவர் களையும் சிறீலங்கா கடற்படையினர் எல்லை தாண்டியதாக கைது செய்து, யாழ்ப்பாணம் சிறையில் அடைத்தனர். சிறை தண்டனைக்குப்பின் இவர்களின் வழக்கு கடந்த 5-ம் தேதி மன்னார் நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு வந்தபோது வழக்கை விசாரித்த நீதிபதி ரஃபீக் இன்னாசி, ராஜா, சசிக்குமார், மாரி கிங்ஸ்டன், மெக்கான்ஷ் ஆகிய 5 மீனவர்களை விடு தலை செய்ததுடன், தலா ரூ.50 ஆயிரம் அபதாரம் செலுத்தவும் உத்தரவிட்டார். மேலும் கணேசன, சேசு, அடைக்கலம் ஆகிய 3 மீனவர்கள் இரண்டாவது முறையாக எல்லைதாண்டி வந்த தாக கூறி ஆறு மாதங்கள் கடுங்காவல் தண்டனையும், அவர் களுக்கும் தலா ரூ.50 ஆயிரம் அபதாரமும் கட்ட உத்தர விட்டார்.



இதனையடுத்து 3 மீனவர்களும் மீண்டும் சிறையில் அடைக் கப்பட்டனர். விடுவிக்கப்பட்ட 5 மீனவர்களுக்கு உறவினர்கள் கடன் வாங்கி 7-ம் தேதி பணத்தை செலுத்தியுள்ளனர். ஆனால் 6-ம் தேதி அபதாரத் தொகை செலுத்த வில்லை என சிறைத் துறையினர் அவர்களை கைவிலங்கிட்டு மொட்டை அடித்தும், இலங்கை கைதிகள் அடைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை கழி வறைகளை சுத்தம் செய்ய வைத்து, வளாகத்திலுள்ள கழிவுநீர் கால்வாய்களையும் சுத்தம் செய்ய வைத்து கொடுமைப் படுத்திய தாகவும், சொந்த ஊர் திரும்பிய மீனவர்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.



பின்னர் 5 மீனவர்களும் நேற்று (செப்.13) காலை மெர்ஹானா முகாமில் இருந்து விமான மூலம் இரவு சென்னை வந்தடைந் ததாக கூறினர். மீனவர்கள் இன்று (செப்.14) பகல் 1 மணியள வில் சொந்த ஊரான தங்கச்சிமடத்துக்கு வந்து சேர்ந்தனர். மீனவர்கள் மொட்டை அடிக்கப்பட்டு வந்ததை கண்ட அவர் களின் குடும்பத்தினர் கதறி அழுதனர். இதற்கு மீனவர்கள் தரப்பில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து சிறீலங்கா அரசாங்கத்தின் தொடர் அத்துமீறல் மற்றும் மனித நேயமற்ற செயலை கண்டித்தும், இந்திய மத்திய அரசு மீனவர்கள் பிரச்சனையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் மவுனம் காப்பதற்கு கண்டனம் தெரிவித்தும், இராமேசுவரம் - மதுரை தேசிய நெடுஞ்சாலையில் தங்கச்சி மடம் பேருந்து நிறுத்தம் அருகே மீனவர்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் மீனவ சங்க நிர்வாகிகள் ஜேசுராஜா, எமரிட் மற்றும் மீனவர்கள், அவர்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

மீனவர் சங்க தலைவர் எமரிட் கூறும்போது, “மொட்டை அடிக்கப்பட்டவர்கள் தமிழக மீனவர்கள் தான் என எண்ண வேண்டாம், எங்களுடைய வரிப்பணத்தில் வாழும் சிறீலங்கா அரசு எங்கள் மீனவர்களை மொட்டை அடித்து மனித நேயமற்ற அரக்கர்களாக கொடுமைப்படுத்தி உள்ளனர். மத்திய அரசு இதையும் வேடிக்கை பார்ப்பது நல்லதல்ல. இது இந்தியாவை அவமானப்படுத்தியதாகத் தான் நாங்கள் கருதுகிறோம்.

ஆகவே, இதுவரை சிறீலங்கா கடற்படை எங்களை அடித்து கொடுமைப்படுத்தியது, படகுகளை சிறை பிடித்தது, அதை யெல்லாம் பொறுத்துக் கொண்டிருந்தோம். ஆனால் இனி மேலும் இவ்வாறான மனிதநேயமற்ற செயலை பொறுத்துக் கொள்ள மாட்டோம். ஆகவே மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் தமிழகம் தழுவிய மாபெரும் போராட்டங்களை தொடர்ச்சியாக மத்திய அரசுக்கு எதிராகவும், இலங்கை அரசுக்கும் எதிராகவும் நடத்துவோம்” என்றார்.

# இலங்கை அதிபர் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் போட்டியிடுவதன் பன்னாட்டு முக்கியத்துவம் என்ன?

## தோழர் தியாகு

20.09, 2024

தெற்காசியப் புவிசார் அரசியலில் அனைவருக்கும் இந்தியா சட்டாம் பிள்ளையாக நடந்து கொள்ள முடியும் என்ற எண்ணத்தில் மண் விழுந்துள்ளது. தமிழினவழிப்பு நடந்துள்ளது என்ற உண்மையைக் கூட அறிந்தேற்காமலும், ஐநா மன்றத்தில் தமிழர்களுக்கு ஆதரவாக நிலையெடுக்காமலும் தமிழ்த் தலைமைகளை ஆட்டிப் படைத்து தமிழ் மக்களைப் பகடைகளாக உருட்டும் இந்திய வல்லரசின் கூடாப் போக்குக்குத் தமிழீழ மக்கள் அமைதியாகவும் சிறீலங்காவின் சட்டத்துக்கு உட்பட்டும் அளித்துள்ள விடைதான் தமிழ்ப் பொது வேட்பாளர். தமிழ்மக்களுக்கு இந்தியாவின் ஆதரவும் உதவியும் தேவை என்ற கூற்று இந்தியாவுக்குத் தமிழ்மக்களின் பரிவு தேவை என்பதை மறுப்பதாகி விடக்கூடாது. தமிழ்மக்கள் தமக்கான நீதியும் உரிமையும் கருதித் தாமே முடிவெடுத்துக் கொள்வார்கள் என்பதை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும். இந்திய வல்லரசு என்ன சொன்னாலும் தமிழர்கள் கேட்டு நடப்பார்கள் என்ற எண்ணத்தை இந்தியா கைவிட வேண்டும். தமிழர்களிடம் தனக்கு செல்வாக்கு வேண்டும் என்று இந்தியா கருதினால் அது அவர்களின் கோரிக்கைகளுக்குத் தெளிவான ஆதரவு தெரிவிக்க வேண்டும். அவர்கள் மறுதலித்து விட்ட உதவாக்கரைத் தீர்வுகளை அவர்கள் மீது திணிக்க முயல்வதைக் கைவிட வேண்டும்.

அனுரகுமாரோடு இந்தியா ஒரு கட்டத்தில் பேசிப் பார்த்தது. அது பலிக்கவில்லை. இரணில் சீனத்தின் பக்கம் என்று பார்க்கப்படுவதால் அவரையும் ஆதரிக்க முடியாது. ‘அறகலயா’ போராட்டத்துக்குப் பின் இராசபட்சே குடும்பம் மீண்டெழ வழி இல்லை. சஜித் பிரேமதாசாதான் மிச்சம். அவருக்குத் தமிழர் வாக்குகளைப் பெற்றுத்தர சுமந்திரன் வகையறாவைக் கைக்கருவியாக்கிக் கொள்வது இந்திய வல்லரசின் முயற்சி. தமிழ்ப் பொது வேட்பாளர் பெருமளவில் தமிழர் வாக்குகளைப் பெற்றுக் கொண்டால் இந்தியா இரு தரப்பிலும் தனிமைப்படும். மாலத்தீவு, வங்காள தேசம், நேபாளம் என்ற வரிசையில் இலங்கைத் தீவிலும் இந்தியாவுக்கு இது போதாத காலம்.

தமிழினவழிப்பில் சிங்களப் பேரினவாதத்துக்குத் துணை போன இந்திய வல்லரசு அம்மக்களின் ஈடுசெய் நீதிக்கான போராட்டத்திலும் எதிர்நிலை எடுத்து விட்டுத் தமிழர்கள் இந்தியாவின் சொல்படிக் கேட்க வேண்டும் என எதிர்பார்ப்பது எப்படி நியாயமாகும்?

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி, சிறையில் அடைபட்டிருக்கும் போர்க் கைதிகள் மற்றும் அரசியல் கைதிகளுக்கு விடுதலை, தமிழர் தாயகத்திலிருந்து சிங்களப் படை நீக்கம், வன்பறிப்பு நீக்கி நிலவுரிமை மீட்பு, குடியாட்சிய அரசியல் தீர்வு… இந்தக் கோரிக்கைகளை எல்லாம் கண்டுகொள்ளாமல் வரலாற்றின் புதைகுழியிலிருந்து 13ஆம் திருத்தச் சட்டத்தைத் தூக்கி வந்து ‘மோடி’ வித்தை காட்ட முற்பட்டால் தமிழ்மக்கள் ஏமாற மாட்டார்கள் என்று ‘சம்பந்த’ப்பட்ட சகலருக்கும் அறிவித்துக் கொள்வதுதான் தமிழ்ப் பொதுவேட்பாளர் களங் கண்டிருப்பதாகும்.

இருதுருவ உலகம் ஒருதுருவ உலகமாகி மீண்டும் பலதுருவ உலகமாகி விட்டது என்று பன்னாட்டுச் சூழலுக்கு விளக்கம் தரப்படுகிறது. இந்தப் பலதுருவம் என்பது அமெரிக்கா, சீனம், உருசியம், ஐரோப்பா, (தெற்காசியாவைப் பொறுத்த வரை) இந்தியா என்றுதான் விளக்கப்படுகிறது. ஆனால் பன்னாட்டு அரசியலில் உலகெங்கும் நடைபெறும் தேசிய விடுதலைக்கும் குடியாட்சியத்துக்கும் குமுக முன்னேற்றத்துக்குமான இயக்கங்களும் அரசுகளற்ற தேசங்களும் கொண்டுள்ள வகிபாகத்தைத் தமிழ்ப் பொதுவேட்பாளர் உணர்த்தி நிற்கின்றார். வல்லரசுகளின் படை வலிமை, பொருள் வலிமை, சூழ்ச்சி வலிமை… இதற்கெல்லாம் முகங்கொடுக்கும் அறவலிமை அரசுகளற்ற தேசங்களுக்கு உண்டு. தாயக மீட்புக்கான பாலத்தீன மக்களின் வீரப் போர் உலக அரசியலில் ஒரு தீர்மானிக்கும் அற ஆற்றலாக வளர்ந்து வருகிறது. இவ்வகை அறம்சார் அரசியல் ஆற்றலின் பெயராளர்தாம் தமிழ்ப் பொது வேட்பாளர்.



இனவழிப்பினால் தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கி விட முடியவில்லை. எழுக தமிழ், பொத்துவில் பொலிகண்டி, அதன் தொடர்ச்சியாகத்தான் இப்போது தமிழ்ப்பொது வேட்பாளர் களம் கண்டுள்ளார்… உலகத்தின் முன்னோடிப் போராட்டக் களங்களில் பாலத்தீனம், குர்திஸ்தானம், காசுமீரம் போல் தமிழீழத்துக்கும் இடம் உண்டு என்ற திசையில் ஒரு புதுமையான நகர்வுதான் தமிழ்ப் பொதுவேட்பாளரும், அவருக்கான தேர்தல் அறிக்கையும்!

# தமிழ்நாட்டுப் பாடசாலைகளை மாதந்தோறும் ஆய்வு செய்ய 30 கண்காணிப்பு அதிகாரிகள் நியமனம்!

## பள்ளிக் கல்வித்துறை செயலாளர் மதுமதி

22.09, 2024

திருவள்ளூர் பம்மதுகுளம் ஊராட்சி ஒன்றிய பள்ளியில் கல்வித்துறை அதிகாரிகள் மேற்கொண்ட ஆய்வில், மாணவர்கள் வருகை பதிவேட்டில் முறைகேடு நடந்தது கண்டறியப்பட்டு பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் வட்டார கல்வி அலுவலர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டனர். இப்படி, மற்ற பள்ளிகளில் நடந்த ஆய்வுகள் அடிப்படையில் கடந்த ஒரு மாதத்தில் 4 பேர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்த நிலையில், பள்ளிகள் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்தும் வகையில், தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களிலும் பள்ளிகளில் ஆய்வுகளை மேற்கொள்ள பள்ளிக்கல்வித்துறையில் ஐ.ஏ.எஸ் அதிகாரிகள், இயக்குனர்கள் மற்றும் இணை இயக்குனர் அந்தஸ்தில் உள்ள அதிகாரிகள் 30 பேர் கண்காணிப்பு அதிகாரிகளாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதுதொடர்பாக, பள்ளிக்கல்வித்துறை செயலாளர் மதுமதி பிறப்பித்துள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது:-

பள்ளிக்கல்வித்துறையின் கீழ் பணியாற்றும் அதிகாரிகள், பள்ளிகளில் ஆய்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும். அந்த வகையில், தமிழ்நாடு பாடநூல் கழக மேலாண்மை இயக்குனர் சங்கர் புதுக்கோட்டை மாவட்டத்திலும், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குனர் ஆர்த்தி செங்கல்பட்டு மாவட்டத்திலும், பள்ளிக்கல்வித்துறை இயக்குனர் கண்ணப்பன் மதுரை மாவட்டத்திலும், தொடக்கக்கல்வி இயக்குனர் நரேஷ் திருவள்ளூர் மாவட்டத்திலும் ஆய்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இவர்கள் உள்பட 30 அதிகாரிகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மாவட்டத்தில் ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும். மாதத்தில் ஒருமுறையாவது பள்ளிகளில் ஆய்வு செய்து, அதற்கான அறிக்கையை மாதத் தொடக்கத்தில் 5-ந் தேதிக்குள் தவறாமல் அரசுக்கு சமர்பிக்க வேண்டும்.

ஆய்வின்போது கண்காணிப்பு அதிகாரிகள் ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத பணியாளர்களிடம் சனிக்கிழமை நாட்களில் குறைகளை கேட்டறியலாம். முதல்-அமைச்சரின் காலை உணவு திட்டம், மதிய உணவு திட்டம், அனைத்து மாணவர்களின் நலவாழ்வு திட்டங்கள் நடைமுறைப்படுத்துதல், மாணவர்கள் இடைநிற்றல் தொடர்பாக அதிகாரிகள் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். மாணவர்களின் வருகை பதிவேடு விவரங்கள் முறையாக கண்காணிக்கப்படுகிறா? என்பது குறித்தும், பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களின் கல்வி செயல்பாடுகள், ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத பணியாளர்களின் காலிப்பணியிட விவரங்கள் குறித்தும் ஆய்வு செய்ய வேண்டும்.

மாணவர்களின் விளையாட்டு திறன்கள் குறித்தும், கல்வி உதவித்தொகைகள் குறித்தும் ஆய்வுகள் செய்யப்பட வேண்டும். பள்ளிகளில் என்.எஸ்.எஸ்., எஸ்.ஜி.சி., ஜெ.ஆர்.சி குறித்து ஆய்வுகள் செய்ய வேண்டும்.




மாணவர்களுக்கான 14417, 1098 ஆகிய உதவி எண்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மாவட்ட முதன்மை கல்வி அலுவலகங்கள், மாவட்ட கல்வி அலுவலகங்களிலும் ஆய்வுகள் நடத்த வேண்டும். அங்கு, அரசு உதவிப் பெறும் பள்ளிகளின் அங்கீகாரம் குறித்த விவரங்களை சோதனை செய்ய வேண்டும். தணிக்கை விவரங்களையும் ஆராயவேண்டும். வட்டார கல்வி அலுவலகங்களில் மாணவர்கள், ஆசிரியர்களின் வருகை விவரங்களை பரிசோதிக்க வேண்டும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


**www.sangathamil.ca**

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# தமிழ்நாட்டு மீனவர்களின் உரிமைகளை நிலைநாட்ட புதியதாக பொறுப்பு ஏற்றுள்ள இலங்கை அரசுக்கு அறிவுறுத்த வேண்டும்!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் கைகோ

24.09, 2024

தமிழ்நாட்டு மீனவர்கள் இந்தியக் கடல் எல்லையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகிறபோது, இலங்கைக் கடற்படையினரால் தாக்குதலுக்கு உள்ளாவதும், படகு உள்ளிட்ட மீன்பிடிக் கருவி களைப் பறிமுதல் செய்வதும் தொடர் நிகழ்வுகளாகி விட்டன.

கடந்த செப்டம்பர் 21 ஆம் தேதி, மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகாரைச் சேர்ந்த 37 மீனவர்களை கைது செய்துள்ள இலங்கைக் கடற்படை, அவர்களது மீன்பிடி படகுகளையும் பறிமுதல் செய்து இலங்கைச் சிறையில் அடைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாடு மீனவர்கள் மீது இலங்கை அரசால் 2018 ஜனவரி 24 இல் நிறைவேற்றப்பட்ட இலங்கை அரசின் வெளிநாட்டு மீன்பிடி தடைச் சட்டத்தின் கீழ் மிக அதிக அளவில் அபராதம் விதிக்கப்படுகின்றன.

இலங்கை ரூபாய் மதிப்பில் 50 இலட்சம் முதல் 17.5 கோடி வரையில் அந்நாட்டுச் சட்டப்படி அபராதம் விதிக்க முடியும். இதன் அடிப்படையில், இலங்கை எல்லைக்குள் மீன் பிடித்ததாக வழக்குப் புனையப்பட்டு, தமிழ்நாட்டு மீனவர்கள் மீது மீன்பிடித் தடைச் சட்டத்தின் கீழ் குற்றப் பத்திரிக்கை இலங்கை நீதிமன் றங்களில் தாக்கல் செய்யப்படுகிறது. இதனால் தமிழ்நாட்டு மீன வர்கள் மிகக் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

கடந்த ஆகஸ்ட் மாதம் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற 22 மீனவர்களை கைது செய்த இலங்கைக் கடற்படை காங்கேசன் துறைமுகத்திற்கு விசாரணைக்காக அழைத்துச் சென்று நீதிமன்றக் காவலில் வைத்தது. அதோடு, மீனவர்கள் மீது அதிகக் குதிரைத் திறன் கொண்ட இயந் திரத்தைப் பயன்படுத்தி மீன் பிடித்ததாகவும் கூடுதலாக வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

தூத்துக்குடி மீனவர்கள் 22 பேரும், கடந்த செப்டம்பர் 3 ஆம் தேதி இலங்கை நீதிமன்றத்தில் நேர்நிறுத்தப்பட்டனர். இதில் 12 பேருக்கு இலங்கை ரூபாய் மதிப்பில் தலா 1.5 கோடி அபராதம் விதிக்கப்பட்டது. இது இந்திய ரூபாய் மதிப்பில் 42 இலட்சம் ஆகும். இந்த அபராதத்தைக் கட்டத் தவறினால் ஆறு மாதம் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதைப்போல, தூத்துக்குடி - தருவைக்குளத்தைச் சேர்ந்த மீனவர்கள் 10 பேருக்கு ரூ.3.50 கோடி அபராதமும், ஆறு மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 8ம் தேதி இராமேஸ்வரம் அருகே பாம்பன் மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற 35 மீனவர்களை கைது செய்து அவர்களது 4 படகுகளையும் வலைகளையும் கைப்பற்றினர். இதனையடுத்து 35 மீனவர்கள் புத்தளம் மாவட்டம் வாரியாபொல சிறையில் அடைக்கப்பட்டனர்.

புத்தளம் நீதிமன்றத்தில் தமிழக மீனவர்களின் வழக்கை விசாரித்த நீதிபதி 35 மீனவர்களில் 12 பேருக்கு தலா ரூ35 இலட்சம், மற்றவர்களுக்கு தலா ரூ10 இலட்சம் அபராதம் விதித்தார். இந்த அபராதத் தொகையைக் கட்டத் தவறினால் 3 மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன்பின்னர் ஒரு 10 தமிழக மீனவர்கள் கைது செய்யப் பட்டனர். இந்த 10 மீனவர்களுக்கும் தலா ரூ35 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இந்த அபராதத்தைக் கட்டத் தவறினால் மேலும் 6 மாதம் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டது புத்தளம் நீதிமன்றம். அதாவது 45 தமிழக மீனவர்களுக்கு ஒரே நாளில் ரூ.10 கோடி அபராதம் விதித்து இலங்கை புத்தளம் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.



இந்த உத்தரவு மீனவர்கள் உறவினர்கள் மத்தியில் பேரதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது. 10 கோடி என்பது இந்திய மதிப்பில் 2.76 கோடி என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு மற்றும் புதுவையைச் சேர்ந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி இலங்கைக் கடற்படை கைது செய்வதும், மீனவர்களின் படகுகளை பறிமுதல் செய்து அரசுடமை ஆக்குவதும், இலங்கை மீன்பிடி தடை சட்டத்தின் படி கடுமையாக அபராதம் விதிப்பதும் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

இந்திய அரசு, இலங்கையில் புதிதாக பொறுப்பேற்று உள்ள அனுரா குமார திசநாயக அரசுடன் தமிழ்நாட்டு மீனவர்களின் உரிமைகளை நிலைநாட்டவும், கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களை மீட்கவும், இலங்கை நீதிமன்றம் தமிழக மீனவர்கள் மீது விதித்துள்ள அபராதம், சிறை தண்டனை போன்றவற்றை ரத்து செய்யவும் அறிவுறுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

# ஈகைப் பேரொளி லெப். கேணல் திலீபன் அவர்களின் 37 ஆம் ஆண்டு நினைவேந்தல்!

## நாம் தமிழர்

26.09, 2024

ஈழத்தாயக விடுதலைப் போராட்டக்களத்தில் 12 நாட்கள் பட்டினி கிடந்து அறவழியில் போராடி உயிரைக்கொடுத்து உலகத்தாரின் மனசாட்சியை உலுக்கியவன்!

உறங்கிக்கிடந்த விடுதலைப் போராட்டத்தின் ஆன்மாவைத் தன் உயிரைத் தந்து தட்டியெழுப்பிய புரட்சியாளன்!

தன்னுயிரைவிடத் தான் பிறந்த பெருமைமிக்க இனத்தின் உரிமையே மேலானது என்று உணர்த்தியவன்!

அண்ணன் திலீபன் அவர்களின் நினைவுநாள் இன்று (26-09-2024)

எந்த உயரிய நோக்கத்திற்காக, எந்தப் புனிதக் கனவிற்காகத் தன்னுயிரைத் தந்தாரோ அந்தக் கனவை நனவாக்குவோம் என்கிற உறுதியை நாம் ஏற்போம்!

ஈகைப் பேரொளி அண்ணன் திலீபனுக்கு நம் புரட்சிகரமான வீரவணக்கத்தினைப் பெருமிதத்தோடு செலுத்துவோம்!

நாம் தமிழர்!

- செந்தமிழன் சீமான்
தலைமை ஒருங்கிணைப்பாளர்
நாம் தமிழர் கட்சி












# உலக செய்திகள்

## ஈழத் தமிழின அழிப்பிற்கு நீதி கோரி ஜெனிவாவில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம்!

16.09, 2024

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத் தொடர் நடைபெற்றுவரும் நிலையில், ஈழத் தமிழின அழிப்பினை மேற்கொண்ட சிங்களப் பேரினவாத அரசினை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றப் பொறிமுறையூடான நீதியினையும் தமிழர்களுக்கு தமிழீழமே இறுதியான தீர்வு என்பதனையும் வலியுறுத்தி 16.09.2024 இன்று பி.ப 2:15 மணியளவில், சுவிஸ் ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபை முன்றலில் (ஈகைப்பேரொளி முருகதாசன் திடலில்) உணர்வெழுச்சியுடன் கவனயீர்ப்பு போராட்டம் ஆரம்பமாகி நடைபெற்றுது.





தமிழர்களுக்கெதிரான தாங்கொணா அடக்குமுறைகள், இன்னல்களினால் பிறப்பெடுத்த தமிழீழப் விடுதலைப் போராட்டம் பல்லாயிரம் மாவீரர்களினதும் தமிழ் மக்களினதும் தியாகத்தினால் உயர்நிலைக்குச் சென்று, 2009 இல் நடந்த திட்டமிட்ட இனவழிப்புப் போருக்குப் பின்னும் அறவழிப்போராட்டமாக தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடரினை முன்னிட்டு, ஈழத் தமிழின அழிப்பிற்கு எதிராக, உணர்வெழுச்சியுடன் அனைத்துல நீதி வேண்டி விடுதலை நோக்கி வீறுகொண்டு அறவழியில் இப்போராட்டம் இடம் பெற்றது.

தமிழர்கள் இவ்வாறான தொடர்ச்சியான அறவழிப்போராட்டங்களை முன்னெடுப்பதனூடாக, எமது விடுதலையை தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் வழிகாட்டலில், எமது தமிழீழ மண்ணை மீட்டு, சுதந்திரமாக வாழ முடியும். இச்சூழமைவில் காலத்தின் தேவை அறிந்து நாம் செயலாற்ற வேண்டும்.

## ஹிஸ்புல்லா போராளிகள் மீது வெடிக்க வைக்கப்பட்ட பேஜர்கள் ஹங்கேரியில் தயாரிக்கப்பட்டவை!

18.09, 2024

AR-924 பேஜர்கள் ஹங்கேரியின் தலைநகரில் உள்ள BAC கன்சல்டிங் KFT ஆல் தயாரிக்கப்பட்டதாக கோல்ட் அப்பல்லோ புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின்படி, நியமிக்கப்பட்ட பிராந்தியங்களில் தயாரிப்பு விற்பனைக்கு எங்கள் பிராண்ட் வர்த்தக முத்திரையைப் பயன்படுத்த நாங்கள் BAC க்கு அங்கீகாரம் வழங்குகிறோம். ஆனால் தயாரிப்புகளின் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி BAC இன் பொறுப்பாகும் என்று தைவானின் நியூ தைபே நகரில் உள்ள தலைமையகத்தில் தைவான் நிறுவனத்தின் தகவல் தொடர்புத் தயாரிப்புகளைப் பற்றி அப்போலோ கோல்டின் தலைவர் ஹ்சு சிங்-குவாங் புதன்கிழமை செய்தியாளர்களிடம் கூறினார். தனது நிறுவனம் கடந்த மூன்று ஆண்டுகளாக BAC உடன் உரிம ஒப்பந்தத்தை கொண்டுள்ளது. ஒப்பந்தத்திற்கு ஆதாரத்தை அவர் வெளியிடவில்லை.



தைவானின் பொருளாதார விவகார அமைச்சகம் 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து ஆகஸ்ட் 2024 வரை, கோல்ட் அப்பல்லோ இந்த ஆண்டின் ஜனவரி மற்றும் ஆகஸ்ட் இடையே 40,000 க்கும் மேற்பட்ட செட்கள் உட்பட 260,000 பேஜர்களை ஏற்றுமதி செய்துள்ளது. பேஜர்கள் முக்கியமாக ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும், லெபனானுக்கு தங்க அப்பல்லோ பேஜர்களை நேரடியாக ஏற்றுமதி செய்ததற்கான பதிவுகள் எதுவும் இல்லை என்றும் அமைச்சகம் கூறியது.

நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3:30 மணியளவில் ஏமன் ஹிஸ்புல்லாப் போராளிகள் வைத்திருந்து பேஜர்கள் பல்பொருள் அங்காடியில் பொருட்களை வாங்கும்போது, உணவத்தில் அமர்ந்து இருந்த போதும் அல்லது வாகனங்கள் ஓட்டுப் போதும் மற்றும் மோட்டார் சைக்கிள்களை ஓட்டும்போது, அவர்களின் கைகளில் அல்லது சட்டைப் பைகளில் உள்ள பேஜர்கள் வெப்பமடைந்து வெடிக்கத் தொடங்கின.

8 ஹிஸ்புல்லாப் போராளிகளும் ஒரு சிறுமியுமாக 9 பேர் உயிரிழந்தனர். மேலும் 2750 போராளிகள் காயமடைந்தனர். அவர்களில் 200 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

முக்கியமாக தெற்கு பெய்ரூட் புறநகர் மற்றும் கிழக்கு லெபனானின் பெக்கா பகுதியிலும், சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸிலும் குழு வலுவான இருப்பு உள்ள பகுதிகளில் பேஜர் வெடிப்புகள் நடந்தன.

லெபனானுக்கான ஈரான் தூதுவரும் சிறிய காயம் ஏற்பட்டது.

இதனால் லெபனானின் மருத்துவமனைகள் காயமடைந்தவர்களால் நிறைந்து வழிந்தன. நோயாளர் காவு வண்டி தட்டுப்பாடு ஏற்பட்டது.

இத்தாக்குதலுக்கான பழியை இசுரவேல் மீது ஹிஸ்புல்லா சுமத்தியது. இதற்கு பதிலடி வழங்கப்படும் என அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

காயமடைந்தவர்களில் பலருக்கு கண்களில் பலத்த காயங்கள் இருந்தன, மற்றவர்களுக்கு கைகள் துண்டிக்கப்பட்டன என லெபனான் சுகாதார அமைச்சர் ஃபிராஸ் அபியாட் புதன்கிழமை காலை மருத்துவமனைகளில் ஒரு சுற்றுப்பயணத்தின் போது பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

துருக்கி, ஈராக், ஈரான், சிரியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதில் உதவ முன்வந்ததாகவும் சுகாதார அமைச்சர் மேலும் கூறினார்.

மருத்துவ உபகரணங்களுடன் ஈராக் இராணுவ விமானம் பெய்ரூட்டில் தரையிறங்கியதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். விமானத்தில் 15 டன் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்கள் இருந்ததாக அபியாட் கூறினார்.



ஒரு அதிநவீன சப்ளை செயின் ஊடுருவலில் வெடிக்கும் பொருட்கள் டெலிவரி செய்வதற்கு முன்பு பேஜர்களில் வைக்கப்பட்டதாக நிபுணர்கள் நம்புகின்றனர்.

AR-924 பேஜர், "கரடுமுரடானது" என்று விளம்பரப்படுத்தப்பட்டது. ரீசார்ஜ் செய்யக்கூடிய லித்தியம் பேட்டரியைக் கொண்டுள்ளது. இது நாசவேலை தாக்குதலுக்குப் பிறகு செவ்வாய்கிழமை அகற்றப்படுவதற்கு முன்பு கோல்ட் அப்பல்லோவின் இணையதளத்தில் ஒருமுறை விளம்பரப்படுத்தப்பட்ட விவரக்குறிப்புகளின்படி. இது 100 எழுத்துகள் வரையிலான உரையாற்றக் கூடியது.

இது 85 நாட்கள் வரை பேட்டரி ஆயுளைக் கொண்டிருப்பதாகவும் கூறியுள்ளது. பேஜர்கள் மொபைல் ஃபோன்களை விட வேறுபட்ட வயர்லெஸ் நெட்வொர்க்கில் இயங்குகின்றன. உலகெங்கிலும் உள்ள பல மருத்துவமனைகள் இன்னும் அவற்றை நம்பியிருப்பதற்கான காரணங்களில் ஒன்றாகும்.



# பாலஸ்தீனத்தின் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து இசுரவேல் வெளியேற வேண்டும்!

## தீர்மானம் நிறைவேற்றியது ஐ.நா.

19.09, 2024




ஆக்கிரமிக்கப்பட்டபாலஸ்தீன பகுதிகளில் இருந்து இசுரவேல் வெளியேறவேண்டும் என கோரும் தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் பொதுச்சபை நிறைவேற்றியுள்ளது.

ஒருவருடத்திற்குள் இசுரவேல் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து வெளியேறவேண்டும் என கோரும் தீர்மானத்திற்கு ஆதரவாக ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் உறுப்பு நாடுகள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.

124 நாடுகள் இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளன, 14 நாடுகள் எதிராக வாக்களித்துள்ளன, 43 நாடுகள் வாக்களிப்பை புறக்கணித்துள்ளன.

பிரிட்டனும் அவுஸ்திரேலியாவும் வாக்கெடுப்பை தவிர்த்துள்ள அதேவேளை அமெரிக்கா எதிர்த்து வாக்களித்துள்ளது.

இசுரவேல் பாலஸ்தீனத்தின் ஆக்கிரமிக்கப்பட்டபகுதிகளில் தனது சட்டவிரோத பிரசன்னத்தை விரைவில் முடிவிற்கு கொண்டுவரவேண்டும் குடியேற்றங்களை நிறுத்தவேண்டும் என சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள சில மாதங்களின் பின்னர் ஐநா இந்த தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

# "துயரம் தோய்ந்த நவாலிப்படுகொலைகள்" நூல் வெளியீடு!

19.09, 2024




இலங்கையில் கடந்த 1995 யூலை 09 ம் திகதி சிறீலங்கா விமானப்படையின் குண்டுவீச்சில் 153 தமிழ் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இந்த படுகொலை குறித்து ஈழத்தின் எழுத்தாளர்களில் ஒருவரான வல்வை ஆனந்தராஜினால் எழுதப்பட்ட "துயரம் தோய்ந்த நவாலிப்படுகொலைகள்" எனும் வரலாற்று ஆவண நூல் லண்டன் குறைடன் பகுதியில் உள்ள கேட்போர் கூடத்தில் வெளியிடப்பட்டுள்ளது.



ஊடகவியலாளர் தம்பையா தயாபரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நூலின் அறிமுக உரையை ஆசிரியர் கந்தையா பாலகிருஸ்ணனும் வெளியீட்டு உரையை திருமகாலிங்கம் சுதாகரனும் நிகழ்த்தினர் .

தொடர்ந்து கருத்துரைகளை அருட்தந்தை ஜெபநேசன், சிவ சிறிராம் வாகீசக்குருக்கள், போரியல் ஆய்வாளர் கலாநிதி அரூஸ், வைத்திய கலாநிதி திருமதி இந்துமதி ஆகியோர் வழங்கினார்கள் .

இறுதியாக நூலின் ஏற்புரையை ஒய்வுபெற்ற கல்விப்பணிப் பணிப்பாளரும் நூலாசிரியருமான வல்வை ஆனந்தராஜ் வழங்கினார். இந்த நிகழ்வில் பொதுமக்கள் தமிழ்த்தேசிய ஆர்வலர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர் ..

# இசுரவேலின் தாக்குதலில் லெபனானில் 492 பேர் பலி! 1645 போர் காயம்!

23.09, 2024

லெபனானின் தெற்குப் பகுதிகளில் இசுரவேல் கண்மூடித்தனமாக தாக்குதல்களை இன்று திங்கட்கிழமை காலை முதல் நடத்தியுள்ளது.



காலை முதல் தெற்கு லெபனான், பெக்கா மற்றும் பால்பெக்கில் உள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களில் இசுரவேலிய தாக்குதல்களின் விளைவாக 492 பேர் கொல்லப்பட்டதாக லெபனானின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்டவர்களில் 34 குழந்தைகளும் 42 பெண்களும் அடங்குவதாகவும், 1645 பேர் காயமடைந்துள்ளதாகவும் கூறுகிறது.

ஹிஸ்புல்லாவுக்கு எதிரான தாக்குதல்களை விரிவு படுத்துவதாக இசுரவேல் கூறியுள்ளது.

லெபனானின் பிரதம மந்திரி இசுரவேலின் நடவடிக்கைகள் "அழிப்புப் போர்" என்று கூறுகிறார்.

இசுரவேலின் வடக்குப் பகுதியில் உள்ள இசுரவேலிய மக்கள் மீண்டும் அவர்களின் வீடுகளுக்குச் செல்லும்வரை தாக்குதல்கள் தொடரும் என இசுரவேலின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.



ஹிஸ்புல்லாவின் தாக்குதல்களால் இசுரவேலின் வடக்குப் பகுதிகளிலிருந்து 60 ஆயிரம் இசுரவேலியர்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர்.

கடந்தவாரம் ஹிஸ்புல்லா போராளிகள் மீது பேஜர் மற்றும் வோக்கி டோக்கி தாக்குதல்கள் மூலம் தாக்குதல்களை நடத்திய இசுரவேல் தற்போது நாடுகளுக்கான எல்லை தாண்டிய தாக்குதல்களை அதிகரித்துள்ளது.

# உலகெங்கும் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்களின் 37ஆம் ஆண்டு நினைவேந்தல்!

26.09.2024




































# ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா இசுரவேலின் தாக்குதலில் பலி!

## இசுரவேலின் பாதுகாப்பு அமைச்சு

28.09, 2024

லெபனானில் இயங்கி வரும் உலகின் சக்கிவாய்ந்த ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லாவும் அவருடன் இருந்த ஏனைய தளபதிகளும் கொல்லப்பட்டனர் என இசுரவேல் அறிவித்தது.



நேற்று வெள்ளிக்கிழமை இரவு லெபனானின் தலைநகர் பெய்ரூட்டில் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள ஹிஸ்புல்லா தலைமையகத்தின் மீது இசுரவேல் வான் வழித்தாக்குதல்களை எவ்-35 ரகப் போர் விமானங்கள் மூலம் நடத்தியது.

4 ஆயிரம் பவுண்ட் எடை கொண்ட நிலக்கீழ் தாக்குதல் குண்டுகள் எட்டு வீசப்பட்டதாகக் கூறப்படுகிறது. இத்தாக்குதலிலேயே ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டார் என இசுரவேலின் பாதுகாப்பு அமைச்சு கூறியது.

ஹெஸ்பொல்லாவின் தெற்கு முன்னணியின் தளபதி அலி கராக்கி உட்பட லெபனானை தளமாகக் கொண்ட குழுவின் மற்ற மூத்த உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர் என இசுரவேல் தெரிவித்தது.

ஹசன் நஸ்ரல்லா இனி உலகத்தை பயமுறுத்த முடியாது என்று இசுரவேலிய பாதுகாப்பு அமைச்சு தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டது.

ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டது தொடர்பில் ஹிஸ்புல்லா அமைப்பின் சார்பாக இதுவரை எந்தவொரு மறுப்போ அல்லது



அறிக்கையும் வரவில்லை.

ஹிஸ்புல்லாஹ் தனது தலைவரான ஹசன் நஸ்ரல்லாவை இழந்த போதிலும் இசுரவேல் மீதான தாக்குதல்களை தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாக இசுரவேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.


AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643


AR
GROUP
ARASAN
RAJADURAI
Real Estate & Developments
Realtor
C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
hello@argroup.ca
argroup.ca
RE/MAX
HALLMARK FIRST GROUP REALTY
RAISING THE BAR
1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA


Build Your Dream Home
SABESAN
உங்கள்
அனைத்து வீட்டு
வேலைகளிற்கும்
அழையுங்கள்
We build 10,000 Sq.Ft (Minimum)
warehouse from $139.00 Per Sq.Ft.
400 Kilometre per hour
Wind resistance
Termite Proof
Compare Traditional Building
Energy Savings
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
உங்கள் வீட்டுடன்
இணைந்தபடி
மேலதிக இருப்பிட
வசதியை ஏற்படுத்த
விரும்புகிறீர்களா?
அழையுங்கள்
Sabesan
விருது பெற்ற தொழிற்துறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com

# தமிழீழம் கிட்டும்வரை போராட்டம் தொடரும்...

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



எமது விடுதலைப் போராட்டத்தில் நாம் அளப்பரிய தியாகங்களைச் செய்திருக்கின்றோம். தாங்கமுடியாத துன்ப, துயரங்களை அனுபவித்திருக்கிறோம். ஆயிரமாயிரம் அப்பாவி மக்களின் உயிர்களைப் பறிகொடுத்திருக்கிறோம். எமது வீடுகள், சொத்துக்கள், செல்வங்கைள இழந்திருக்கிறோம். பெருந்தொகையான இளம் போராளிகளை களத்தில் பலி கொடுத்திருக் கிறோம். சகிக்க முடியாத அளவிற்கு நாம் அவமானப்பட்டிருக்கிறோம். இழிமைப்படுத்தப்பட்டிருக் கிறோம். சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

இத்தனை கொடுமைகளுக்குப் பின்னர் இத்தனை உயிரழிவுகள், பொருளழிவுகளுக்குப் பின்னர், இத்தனை மகத்தான தியாகங்களுக்குப் பின்னர், இத்தனை வீரசாதனைகளுக்குப் பின்னர், நாம் சிங்கள அரசிடம் மண்டியிட்டு சலுகைகளுக்காக கைநீட்டப்போவதில்லை.

நாம் சுதந்திரமாக, கௌரவமாக நிம்மதியாக சமாதானமாக வாழ்வதாயின் அது சுதந்திர தமிழிழத்தில்தான் சாத்தியமாகும். அந்த சுதந்திர தமிழீழம் கிட்டும்வரை எமது போராட்டம் தொடரும் என்பதை தெட்டத் தெளிவாக எடுத்துக்கூற விரும்புகிறேன்.

தர்மமும் உண்மையும் இறுதியில் வெற்றியளித்து தமிழ்த்தாயில் கருக்கொண்டுள்ள வரலாற்றுக் குழந்தையான தமிழீழம் என்றோ ஒரு நாள் பிரசவமெடுக்கும் என்பது எனது நம்பிக்கை.

எம்மிடம் ஆத்மபலமும் ஆயுதபலமும் இருக்கிறது. மக்கள் பலமும் எமது கரங்களைப் பலப்படுத்துமானால் எமது இலட்சியம் வெற்றியடைவதை யாராலும், எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதை உறுதியுடன் கூற விரும்புகிறேன்.

('எனது மக்களின் விடுதலைக்காக' என்ற நூலில் இருந்து)


மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லஷ்சுமி
பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE
ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu

# பொங்கி எழுந்தினிப் போராடுவோம்! எம்மூரில் வந்த பகை விரட்டி வரலாற்றை வெல்வோம்!

பெரிய வாழ்வொன்றுக்கு அதிபதிகளாக
இருந்தோம் ஒருகாலம்.
பனிநீரில் குளித்தெழும் அதிகாலையாக
அழகாய் இருந்ததெம் ஊர்.
ஊரெல்லாம் திருவிழா
உறவெல்லாம் வீதியுலா என்று
ஆயிரம் பேதங்கள் எமக்குள் இருந்தாலும்
அதற்குள் இருந்தது ஆனந்தம்.
இன்று எங்கே போனது அந்த இனிய வாழ்வு?
எவர் பறித்தார் எம் எழிலை?
தமிழா! கிடந்தது போதும் எழுந்து கேள்விகேள்.
எவர் பறித்தார் எம் வாழ்வையென்று
எட்டுத் திக்கும் எதிரொலிக்க
உரத்துக் கேள். உனக்கொரு பதில் வேண்டும்.
நாம் பிறந்த மண்ணில் நடக்க முடியாது,
நிமிர முடியாது,
பூக்க முடியாது,
புன்னகைக்க முடியாது.
யாரோ ஒருவரின் கட்டளைக்கு நடுங்கி
நகரத்தில் கிடந்துழலும் வாழ்வினி
என்று தொலையும்?
காற்றுக் கொதுங்கிய போர்த்துக்கீசனின்
கண்ணிலெம் தாயகம் தெரியும்வரை
தலையில் கட்டிய தலைப்பாகையை
முகில் தொட்டுப் போவதென
உயர்ந்த வாழ்வுக்குரியவராய் இருந்தோம் நாம்.
எம்மை நாமே எழுதினோம்.
வெடிமருந்துடன் வந்தவனை
வேலும், வாளும் வெல்லமுடியவில்லை.
வேற்றொருவனின் காலில் விழுந்தோம்.
கிணற்றில் விழுந்த குங்குமச் சாரையாய்.
கொஞ்சம் கொஞ்சமாய்க் கரைந்தோம்.
யானைகள் மிதிக்கும் சேனைப்புலவாய்
மாறி மாறிப் பலரின் மகுடந்தின் கீழ்
நாறிக்கிடந்தது நாம் வாழ்வு.
வெள்ளைக்காரன் வெளியேறிய போது
சேனநாயக்காவுக்கு சிம்மாசனம் கிடைத்தது.
அன்று தொடங்கிய அவலம்
இன்றுவரை தொடர்கிறது.
ஆள்பதிகள் மாறினர்
எங்களுக்கு எந்த மாற்றமும் எட்டவில்லை.
தமிழரின் வாழ்வைத் தணலிலிடுவதிலேயே
அவர்களின் அதிகாரப் போட்டி,
இப்போது சந்திரிகாவின் முறை
படைகளே ஆட்சி செய்யும் அடக்குமுறை உச்சம்.
தமிழனே! அழுவதை நிறுத்து
உன்னை உள்ளுக்குள்ளேயே இழுத்திழுந்து
ஆமையாய்க் கிடந்தது போதும்.
மிதித்த இடத்துப் புல்லுச் சாகுமெனக்
குதிக்காதிருந்தாய். என்ன நடந்தது?
"நீளுமுன் ஊரினில் ஊரடங்கும் – உன்
நாய்களும் ஊமையாய் வாயடங்கும்
வாழுமுன் உரிமையும் போயடங்கும் – தமிழ்
வாசல்கள் யாவிலும் பேயுறங்கும்."
கண்ணீர் விட்டு வளர்த்த விடுதலைப்பயிரை
கருகவிடலாமா?
குருதி சொரிந்து ஏற்றிய சுதந்திரக் கொடியை
எரியவிடலாமா?
பல்லாயிரம் பிள்ளைகளின் கல்லறைகள்
வெறும் புதைகுழியல்லவே.
கருத்தரிக்கும் கருவறை என்றெல்லவா எழுதினோம்.
பொய்யாய், புனைகதையாய் மெல்ல, மெல்ல இருண்டு
இல்லாமற் போகுமா எம்வாழ்வு?
கலங்காதிரு மனமே!
என்ன நடந்துவிட்டது இப்போழுது?



நாளைக்கே உலகம் அழியுமென யார் தேதி குறித்தது.
காற்றினி வீசாதென யார் சொன்னது.
நெஞ்சின் உறுதியும், நிமிரும் சக்தியும்
தொலைந்து போகாதிருக்கக் கடவது.
பல்லைக்கடித்துக் துயரைத்தாங்கு
பகற்பொழுது இனிமேற்தான் வரப்போகிறது.
துப்பாக்கிகளும், பீரங்கிகளும்
[illegible]
உலகம் ஒரே நாடாகவல்லவா இருந்திருக்கும்.
அமெரிக்காவின் ஆயுத பலத்திற்குப் பணிந்திருந்தால்
வியட்னாம்நாடு விழிதிறந்திருக்க முடியாதே.
சுதந்திரத் தீயைச் சுட்டெரிக்க இன்னொரு
நெருப்பில்லை
விடுதலை என்பது அடிவற்றிப்போகும்
ஆற்றுநீரில்லை.
பீறிட்டுக் கிளம்பும் பூகம்பம்.
தெருவிற் கிடந்தெடுப்பது சமரசம்;
உயிர் கொடுத்து வாங்குவதே உரிமை.
போராட்டமே வாழ்வான பூமியில்
வாரோட்டம் எதற்கு?
விடுதலைப் போரென்பது தலைமுறைக்கான
விலைகொடுப்பு
அடிமை வாழ்வை அறுத்து
நெடிய பனை போன்ற நிமிர்ந்த வாழ்வுக்காக
உயிரைக் கொடுக்கும் ஒரு வேள்வி.

நித்திரைக்கு இதுவல்ல நேரம்.
போராடும் தேசத்தில்
சாய்மனைக் கதிரைகளைத் தடைசெய்யவேண்டும்.
பாயையும், தலையணையையும்
கொளுத்தலாம்... குற்றமல்ல
தாயாள் பசித்திருக்க
எமக்கு தங்கத்தில் நகை எதற்கு?
ஆடாத காலும், அசையாத உடற்சதையும்
கூடாது தமிழனுக்கு.
குருதியிலே தமிழ் வீரர்
ஓடாததாய்க்குப் பிறக்காத தமிழ்மறவா!
பொங்கியெழுந்தங்கு புலியாகு
எம்மூரில்...
வந்தபகை துரத்தி வரலாற்றை வென்றெடுப்போம்.
"விழிகள் திறந்து வெளியிற் பறக்க
வருக புலிகள் சேனையில்.
விடியும் அழகை விரைவிற் பருக
எழுக புலிகள் சேனையில்
தலைகாட்டும் வழியில் எழுந்து
வருக புலிகள் சேனையில்
தமிழர் தேசம் நிமிரும் நேரம்
எழுக புலிகள் சேனையில்!"

- உலைக்களம் (ஒக்டோபர் 1996 – எரிமலை)




# ‘ஜரிஸ் மோனா’ 29.08.1995 முல்லைத்தீவு கடல்சமர்

“ஜரிஸ் மோனா” என்ற பயணிகள் கப்பலை, சிறீலங்காவின் கப்பல்துறை அமைச்சு, வாடகைக்குப் பிடித்து, தீருகோண மலைக்கும் யாழ். குடாநாட்டில், இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள காரைதீவுக்கும் இடையில் கப்பல் போக்கு வரத்தை நடத்தி வந்தது அரச ஆக்கிரமிப்பிலுள்ள தீவுப்பகுதி மக்கள் திருகோணமலைக்கும், பின்னர் கொழும்புக்கும் செல்ல இக் கப்பல் போக்குவரத்தைப் பயன்படுத்திக் கொண்டனர். இரா ணுவத்திற்குத் துணையாகச் செயற்பட்டும் ஈ.பி.டி.பி. அடிவருடிக் குழுவினர் இத்தீவுப் பகுதிகளினல் நடமாட அனுமதிக்கப் பட்டனர். இக்குழுவிடமிருந்தே போக்குவரத்துக்கான பயணச் சீட்டுக்களை பொதுமக்கள் பெற்றுக் கொண்டனர். ஈ.பி.டி.பி.க்கு கூலி கொடுத்துப் பராமரிப்பதற்கான செலவினை அரசாங்கம், இதனூடாக வழங்கி வந்திருக்கவேண்டும். ஈ.பி.டி.பி.யும் எஜ மானிக்கு விசுவாசமாக நடந்து இக்கப்பல் போக்குவரத்தில் நீண்டகாலமாக ஈடுபட்டு வந்தது.

ஒகஸ்ட் மாதம் 29ம் திகதி, “ஜரிஸ் மோனா” கப்பல் விடுதலைப் புலிகளுடன் நேரடியாகத் தொடர்பு பட்டு உலகப் பிரசித்தி அடைய நேர்ந்தது. அந்நாள் அதிகாலை 2:30 மணிக்கு திருகோண மலையிலிருந்து வடக்கு நோக்கிச் சென்ற அக்கப்பல், முல்லைத் தீவுக் கடலில் வைத்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இச் சம்பவம் குறித்து அக்கப்பல் பயணி ஒருவர் கூறுவதையே கேட்போம்:

“அதிகாலை 2:30 மணி அளவில் கப்பலில் நான் தூங்கி கொண்டிருந்தேன். அப்போது' திடும், திடும்” என்று சத்தங்கள் கேட்டு விழித்தேன். அப்போது பல பெண் போராளிகள் கப்பலுக் குள் நுழைந்து கொண்டு, “பயப்படாதீர்கள், நாங்கள் கடற் புலிகளின் மகளிர் அணியினர். தற்போது கப்பல் எங்கள் கட்டுப் பாட்டில் உள்ளது.” என்று கூறினார்கள். பின்னர், எங்கள் அனைவரையும் தங்கள் படககுகளில் ஏறுமாறு கூறினார்கள். நாம் எங்களுடைய பொருள் பண்டங்களைத் தூக்கினோம். “அவற்றை விட்டுவிட்டுச் செல்லுங்கள், நாங்கள் கொண்டு வந்து தருவோம்” என்று கூறினர். பின்னர் பயணிகள் அனைவரும் படகுகளில் ஏற்றப்பட்டு முல்லைத்தீவுக் கரைக்குக் கொண்டு வரப்பட்டோம். அப்போது காலை 5 மணி. பின்னர் எமது சகல பொருட்களும், பவுத்திரமாக எம்மிடம் கொண்டுவந்து தரப் பட்டது.”

கடற்புலிகள் மகளிர் படையணியின் விசேட தளபதி கல்யாணி, 15 மைல் தொலைவில் சென்றுகொண்டிருந்த “ஜரிஸ் மோனா” கப்பலை தாங்களே கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து கரையை நோக்கிச் செலுத்தி வந்ததாகத் தெரிவித்தார். சிறீலங்கா கடற் படையின் “டோரா”ப் பீரங்கிப் படகுகளை கடல் போர் ஒன்றுக்கு அழைப்பதற்காகவே, “ஜரிஸ் மோனா” தம்வசம் கொண்டு வரப் பட்டது என்றும் அவர் தெரிவித்தார். “ஜரிஸ் மோனா” கைப்பற்றப் பட்ட சம்பவத்தை நினைத்துப் பார்க்கும்போது, இசுரவேலிய, விசேட கொமாண்டோப் படையினரால், “என்ரபே” விமான நிலையம் கைப்பற்றப்பட்ட சம்பவமே மனதுக்குள் படமாக ஓடுகிறது.

இசுரவேலிய விமானப் பயணிகள், உகண்டாவில் “என்ரபே” விமானத்தளத்தில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த போது, அவர்களை மீட்பதற்காக இத் தாக்குதல் இடம் பெற்றது. இசுரவேலிய கொமாண்டோக்கள், பயணக் கைதிகள் வைக்கப் பட்டிருந்த விமான கூடத்திற்குள் அதிரடியாக நுழைந்தபோது,



ஒகஸ்ட் 29, 1995 அன்று “ஜரிஸ் மோனா” பொறியில் சிக்கி புலிகளின் தகரிச் சூட்டில் தீப்பிடித்த டோறாவை அன்று காலையில் கைப்பற்றி கரைக்கு கட்டியிழுத்துவரும் கடற்புலிகளின் வோட்டர் ஜெட் படகு

“பயப்படாதீர்கள், நாங்கள் இசுரவேலிய கொமாண்டோக்கள். அப்படியே அசையாது இருங்கள்.” என்ற வார்த்தைகளையே கீப்ரூ மொழியில் பலமாகச் கூறினார்கள்.


கல்யாணியும் அவரது பெண் போராளிகளும் எதிர்பார்த்தது போலவே, இசுரவேலியத் தயாரிப்பான “சுப்பர் டோரா”ப் படகு “ஜரிஸ் மோனா” வை நோக்கி வந்தது. “டோரா” என்பது கீப்ரூ மொழியில் ஆண்குழவி என்ற அர்த்தமாகும். ஆண்குழவி ஆட்களைக் கொட்டுவது போல், எதிரிப் படகுகளைத் தாக்கி அழிக்கும் என்பதே கருத்தாகும். சாதாரண “டோரா”ப் படகுகளை விட “சுப்பர் டோரா”க்கள், அதிகப்படியான பீரங் கிகளைக் கொண்டதாகவும், கடற்போரில் சிறப்பான நகர் திற னையும் கொண்டது. ஆயினும், பெண் புலிகளின் தாக்குத லுக்கு இலக்காகிய “சுப்பர் டோரா”ப் படகு, சிதறுண்டு, நெருப்புச் சுவாலையுடன் நீருள் மூழ்கியது. கப்பல் பயணி ஒருவர், கரையில் இருந்தவாறு, டோராப் படகு தீப்பற்றி எரிவதைப் பார்த்தாகத் தெரிவித்துள்ளார்.



பின்னர், போன கப்பலைக் காணவில்லை என்று திருமலைக் கடற்படைத் தளத்தில் கடற்படை உயர் அதிகாரிகள் குழப்பத் தொடங்கினர். எனவே, கட்டளைக் கப்பலான “ஜயசேகரா”வும், இன்னொரு “டோரா”ப் படகும் அன்று மாலை புறப்பட்டு வந்தன. கட்டளைக் கப்பல் பாதுகாப்புக்காகத் தூரத்திலேயே நின்று கொண்டது. இக் கட்டளைக் கப்பல் கற்பிட்டிக் கடலில் மூழ்கடிக் கப்பட்ட “சாகரவர்த்தனா” போன்று, ராடார் (Radar) , ஸோனார் (Sonar) ஆகிய கண்காணிப்புக் கருவிகளையும், கட்டளை மையத்தையும் கொண்ட சிறீலங்காப் படையிடம் உள்ள மிகப் பெரிய கப்பல். “ஜரிஸ் மோனா” வை நெருங்கி வந்த “டோரா”ப் படகு, பெரும் சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. அதுவும் முல் லைத்தீவுக் கடலின் அடியில் அடைக்கலம் தேடிக்கொண்டது. கட்டளைக் கப்பலில் இருந்து கடற்படை அதிகாரிகளின் கண் முன்னாலேயே “டோரா”ப் படகு மூழ்கடிக்கப்பட்டது. அக் கப்பலி லிருந்து கடற்படை அதிகாரி ஒருவர், “டோரா”ப் படகு தாக்கப்பட்ட போது, விடுதலைப் புலிகளின் படகுகள் எதுவும் அங்கு காணப் படவில்லை எனவும் “டோரா” வை என்ன தாக்கியது என்று தங்களால் தீர்மானிக்க முடியாதுள்ளதாகவும் தெரிவித்தார். இந்த நிகழ்தரவுகளைக் கொண்டு, கடற்படையின் இரண்டு “டோரா”ப் படகுகளும் எவ்வாறு மூழ்கின என்று இராணுவ ஆய் வாளர்கள் ஊகங்கள் எழுப்பத் தொடங்கினர். தரையிலிருந்து தரையை நோக்கி ஏவப்படும் ஏவுகணைகளால் தாக்கப்பட்டிருக் கலாம் என்பது ஒரு ஊகம். கடற்புலி அணியின் சிறிய ரக நீர்மூழ்கிக் கப்பல்களினால் “டோரா”ப் படகுகள் தாக்கப் பட்டிருக்கலாம் என்பது இன்னொரு ஊகம்.

இவ் ஊகங்கள், விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தினால், உறுதிப்படுத்தப்படும் வரை வெறும் ஊகங்களாகவே தொடர்ந்து இருக்கும். ஆயினும், விடுதலைப் புலிகள், போர் நடவடிக்கை களில் (Hi Tech) உயர் தொழில்நுட்ப உத்திகளைக் கையாண்டு வருகின்றனர என்பது மறுக்க முடியாத உண்மை. பெரிய அள விலான கடற் சண்டையோ, விடுதலைப் புலிகள் தரப்பில் எவ் வித உயிர் இழப்போ ஏற்படாமையே இத்தகைய அனுமானங் களுக்கு வழிவகுத்துள்ளது.

இவ் மூழ்கடிப்பின்போது, கடற்புலிகளின் பல படகுகள் மூழ்கடிக் கப்பட்டு, பல கடற்புலிகள் கொல்லப்பட்டதாக, இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க, சர்வதேச செய்தி நிறுவனங்களுக்கு கூறிய பிரச்சாரச் செய்திகளில், உண்மை இல்லை என்று, சம்பவத்தை நேரடியாகப் பார்த்த கடற்படை அதிகாரி தெரிவித்



எம்.வி. ஐரிஸ் மோனா




தார். மேலும், ஆகாயப்படை விமானங்கள், முல்லைத்தீவுக் கடற்கரையில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் ஏவு கணை மேடைகளைத் தாக்கி அழித்ததாக, விமான ஓட்டிகள் கூறியதையும் மறுத்த அவ் அதிகாரி, “அவை விமான ஓட் டிகளால் மட்டும் சொல்லப்பட்டு உறுதிப்படுத்தப்படாதவை” என்று கூறினார். விடுதலைப் புலிகள், ஏவுகணைகளைப் பாவிப் பதை உண்மையென்று எடுத்துக் கொண்டாலும், ஏவுகணை மேடைகளில் வைத்து ஏவப்படும் பெரிய ஏவுகணைகளை வைத்திருப்பர் என்று கருத முடியாது. அநேகமாக தோள்களில் வைத்து ஏவப்படும், ரஷ்ய SAM ஏவுகணையாகவோ அல்லது அமெரிக்க Stinger ஏவுகணையாகவோதான் இருக்கும். இரண்டு “டோரா”ப் படகுகள் மூழ்கடிக்கப்பட்ட பிறகு “ஐரிஸ் மோனா” வின் நிலையை ஆராய்வதற்காக, அதற்குக் கிட்ட நெருங்க வேறு கடற்படைப் படகுகள் துணிய வில்லை. ஆகாயப் படை விமானங்களும், “ஐரிஸ் மோனா” வின் மீதோ அதனை அண்டிய பகுதிகளிலோ பறந்து, அதன் நிலையைக் கண் காணிக்க முயலவில்லை. தமிழப் பயணிகள் அனைவரும் தரையிறக்கப்பட்டனர். பயணிகள் அனைவரும் முல்லைத்தீவி லிருந்து கிளாலி நீர்ப்பரப்பினூடாக யாழ்ப்பாணம் கொண்டுவரப் பட்டு “ஜோன் பொஸ்கோ” பாடசாலையில் தங்க விடப்பட்டனர். பயணிகளின் பூரண பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தருவதாக விடுதலைப் புலிகள் அறிவித்தனர். பயணிகள் அனைவரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதியினால் பார்வையிடப்பட்டு, அவர்கள் பற்றிய விபரங்கள் பெறப்பட்டு அவரவர் தங்கள் தங்கள் இடங்களுக்குச் செல்வதற்கான ஒழுங்குகளை செஞ்சிலுவைச் சங்கம் செய்து வந்தது. இதற்கிடையில், கப்பல் பயணிகள், யாழ். நகரைச் சுற்றிப் பார்த்து, அங்கு நடைபெற்று வருகின்ற சமூக, பொருளாதார, அரசியல், படைத்துறை மாற்றங்களைக் கண்டு பிரமித்து நின்றனர். அரசாங்கக் கட்டுப்பாட்டில் இருந்தும், போதிய உணவு, மருந்து விநியோகங்கள் இன்றிச் சீரழிய விடப்பட்டுள்ள தீவுப் பகுதிகளின் கேவல நிலையுடன், பொருளாதாரத் தடையை எதிர்த்து நிமிர்ந்து நிற்கின்ற யாழ். குடாநாட்டு நிலையை ஒப்பிட்டு நோக்கி நம்பிக்கை வாய்க்கப் பெற்றனர்.

கப்பல் அதிகாரிகளும், மாலுமிகளுமான 8 பேரில் நால்வர் சிறீலங்கா கடற்படையிலிருந்து, “ஐரிஸ் மோனா” கப்பலில் கடமை புரிய அனுப்பப்பட்டவர்கள். கப்பல் கப்டன், பிரதான அதிகாரி, பிரதான பொறியியலாளர், அறைப் பொறுப்பாளர் ஆகி யோர் கடற்படையில் அதிகாரியாகச் செயல்பட்டவர்கள். சிறீ லங்கா கடற்படை பிடித்து வைத்துள்ள இரண்டு பெண் கடற் புலிகளை விடுதலை செய்தால் தாங்கள் தடுத்து வைத்துள்ள 8 கப்பல் மாலுமிகளையும், இரண்டு ஈ.பி.டி.பி. உறுப்பினர் களையும் விடுவிப்பதாக விடுதலைப் புலிகள் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளனர். இச் செய்திகள் பரிவர்த்தனைக்கான பேச்சு



மேஜர்களான நகுலனும் கண்ணாளனும் கடலினில் ஓடும் இடியனில் அமர்ந்திருக்கின்றனர்

வார்த்தைகளை, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நடுவில் நின்று நடத்தி வந்தது. அரசாங்கமோ, கைது செய்யப்பட்ட இரண்டு பெண் கடற்புலிகளும், விடுதலைப் புலிகளிடம் திரும்பு வதற்கு மறுப்பதாகப் பிரச்சாரம் செய்து வந்தது. இவ்வாறு வாக்கு மூலம் செய்ததாக, அரச “ரூபவாஹினி” கூட்டுத்தாபன தொலைக்காட்சியிலும் காட்டியது. கொலை மிரட்டல், சித்திர வதை போன்ற அழுத்தங்களின் பேரில், பெண் கடற் புலிகள் இருவரும், ஆயுதப்படையினரால் இவ்வாறு சொல்ல வைக்கப் பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்தனர். கொழும்பில், சித்திரவதை செய்யப்பட்ட தமிழர்களின் உடல்கள் வாவிகள், குளங்கள், வீதிகளில் கிடக்கும் சம்பவங்கள், அது தொடர்பான அரச விசாரணையின் பின்னரும் தொடர்வதை, நாம் கருத்தில் கொண்டால், காயமுற்றுப் பிடிபட்ட இவ்விரண்டு போராளிகளும் ஆயுதப்படையினரின் கைகளில் எத்தகைய நரக வேதனையை அனுபவித்திருப்பர் என்பதை உணர்ந்து கொள்ள முடியும். உலக வரலாற்றிலும், சமகால அரசியல் நிகழ்வுகளிலும், இத் தகைய சம்பவங்களுக்குக் குறைவில்லை. அண்மையில், இந்தோனேசிய இராணுவம், கிழக்கு தீமோர் கெரில்லாத் தலைவரான குஸ்மாஓ சானானாவை (Gusmao Xanana) அவரது மறைவிடத்தில் கைதுசெய்தது. கிழக்கு தீமோருக்கான சுதந்திரப் போராட்டத்தைக் கைவிட்டு, மாநில சுயாட்சி ஏற்பாட் டைக் கிழக்கு தீமோர் மக்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று சானானா அறிக்கை விட்டதாக பத்திரிகை, வானொலி, தொலைக்கட்சி என்ற சகல செய்தி ஊடகங்கள் மூலமும் இந்தோ னேசிய அரசாங்கம் அறிவித்தது. பின்னர், சிறையிலிருந்து, இரகசியமாகக் கடத்திக் கொண்டுவரப்பட்ட சானானாவின் அறிக்கை, அதனை முற்றாக மறுத்ததோடு, கிழக்கு தீமோர் மக்கள், தங்கள் நாட்டின் பூரண சுதந்திரத்திற்காகத் தொடர்ந்து போராட வேண்டும் என்ற எழுச்சி கரமான உருக்கமான வேண்டுகோளையும் விடுத்திருந்தது. குஸ்மாஓ சானானா தொடர்ந்து சிறைப்பறவையாக இருந்து வருந்தார்.

“ஐரிஸ் மோனா” க் கப்பல் தொடல்ந்து, முல்லைத்தீவுக் கடலில் அலையுற்று நின்று, பின்னர் வடமராட்சிக் கடலுக்கு கடற் புலிகளால் நகர்த்தப்பட்டது. அக் கப்பலில் வெடிமருந்து பொருத் தப்பட்டுள்ளதோ என்று பயந்த கடற்படைக் கப்பல்கள் அதனை நெருங்க அஞ்சின. திருகோணமலையிலிருந்து புறப்பட்ட, தூர இருந்தவாறு “ஐரிஸ் மோனா” வை நோட்டம் இடும் செயல் பாட்டை கடற்படைக் கப்பல்கள் செய்து வந்தன. இதனை அவ தானித்த கடற்புலிகள், அத்தகைய டோராப் படகு மீது தாக்குதல் நடத்த முடிவு செய்தனர். செப்டொம்பர் மாதம், 3ம் திகதி ஞாயிற் றுக்கிழமை இரவு 9:30 மணிக்கு மூன்றாவது டோராப்படகு தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது. ஒரு வாரத்துள் 3 டோராப் படகுகள் மூழ்கடிப்பட்டதானது, சிறீலங்கா அரசாங்கத்திற்கு பாரிய இழப்பாகவும், விடுதலைப் புலிகளுக்குப் பெரும் சாதனை யாகவும் அமைந்தது. வெடிமருந்து ஏற்றப்பட்ட கடற்புலிப் படகு டோராவுடன் மோதி அதனைச் சிதறடிக்கச் செய்தது. கடற்கரும் புலிகள், காரைநகரைச் சேர்ந்த மேஜர் நகுலன் கந்தையா கிருஷ்ணதாஸும், மட்டக்களப்பைச் சேர்ந்த மேஜர் கண் ணாளன் விநாயகன் இளையதம்பியும் தாயகக் கடலுள் உயிர்



ஜோன் பொஸ்கோ பாடசாலையில் தங்க வைக்கப்பட்டிருந்த எம்.வி. ஐரிஸ் மோனாவில் பயணம் செய்த பயணிகள்

விதைகளாய்ச் சங்கமமாயினர். கடற்படை அதிகரியும் 10 கடற்படையினரும் இத்தாக்குதலில் கொல்லப்பட்டனர். கரும்புலி மேஜர் நகுலன் கந்தையா கிருஷ்ணதாஸ், "உயிர்ப்பூ" எனும் வீடியே திரைப்படத்தில் கதாநாயகனாக நடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அப்படத்தில் தமிழ் மீனவர்களைக் கொன்றொழித்துக் கொடூரம் புரியும் கடற்படைப் படகொன்றை, கரும்புலித்தாக்குதலில், மூழ்கடித்து தானும் இறக்கும் பாத்திரத்தைச் சிறப்பாகச் செய்தவர். திருமலைத் துறைமுகத்துக்கு அண்மையில், டோராப்படகுகள் நடமாடி "ஜரிஸ் மோனா" வை தூரத்திலிருந்து காண்காணிப்பதை அறிந்து, விரைவாகத் திட்டமிட்டு, வெற்றிகரமாகத் தாக்குதல் நடத்தியமைக்கு கடற்புலித் தளபதி சூசையின் மதிநுட்பமும் காரணமாய் இருந்திருக்க வேண்டும். இத் தாக்குதல், திருமலைக்கு வடக்கே சிறிது தொலைவிலுள்ள, புல்மோட்டையிலிருந்து புறப்பட்ட கரும்புலிகளின் படகினாலேயே நடத்தப்பட்டுள்ளது.



தாக்கியழிக்கப்பட்ட டோராவை விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் கட்டியிழுத்துச் செல்கிறார்கள்



மேஜர்களான நகுலனும் கண்ணாளனும் கரையிலுள்ள இடியனில் அமர்ந்திருக்கின்றனர்

மூன்று டோராக்கள் மீதான தாக்குதலின்போது, மூன்று அதிகாரிகள் உட்பட 30க்கு மேற்பட்ட கடற்படையில் கொல்லப்பட்டனர். அப்படகுகளில் இருந்து, 20 - மி.மீ பிரங்கிகள் - 4, 50 கலிபர் துப்பாக்கிகள் - 4, இலகு இயந்திரத் துப்பாக்கிகள் - 2, தானியங்கித் துப்பாக்கிகள் - 10, ராடார் கருவி, மிக நுட்பமான ரேடியோக் கருவி என்பன கைப்பற்றப்பட்டன.

"ஜரிஸ் மோனா" வின் கதை இன்னும் முடியவில்லை, பயணிகளை ஏற்றிச் செல்வதான காரணத்தைக் கூறிக்கொண்டு, சிறீலங்கா அரசாங்கம் தொடர்ந்தும், வடபகுதியில், விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குள் சிக்கியுள்ள இராணுவத்திற்கு உணவு, தளபாட விநியோகங்களைச் செய்து கொண்டே இருக்கும். இத்தகைய அரசாங்கத்தின் தந்திர உத்திகளைக் கண்டுபிடித்து, அதனை வெற்றிகரமான தாக்குதல் மூலம் வெளிஉலகுக்கு அம்பலப்படுத்தும் விடுதலைப் புலிகளின் செயல்பாடு தொடர்ந்து கொண்டே இருக்கும்.

-வளவன்













# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# பிரமந்தனாற்றுப் படுகொலை 02. அக்டோபர் 1985

02.10.1985 அன்று அதிகாலை வேளை பொழுது புலர்ந்தும் புலராத நிலமை. அதிகாலை வானில் ஓர் உலங்கவானூர்தி முதலில் சுற்றி வட்டமிட்டு சுட்டுக்கொண்டே இருந்தது. அதனைத் தொடர்ந்து மூன்று குண்டுவீச்சு விமானங்கள் வானில் வட்டமிட்டுக்கொண்டிருந்தன. அவை குண்டுகளை வீசவில்லை. இவை மூன்றும் இத்தாலியத் தயாரிப்பான சிறியராக சியாமா செட்டி விமானங்களாகும்.

இந்த வேளையிற் பிரமந்தனாற்றுக் கிராமத்தின் தெற்கு எல்லை ஓரமாகவுள்ள காட்டுப்பகுதிக்குள் சிறீலங்கா இராணுவ அணிகள் உலங்குவானூர்தி மூலமாகத் தரையிறக்கப்பட்டன. தரையிறக்கப்பட்ட படைகள் படிப்படியாக முன்னேறி கிராமத்தினைச் சுற்றிவளைத்து கொண்டன. வீட்டுக்கு வெளியே வந்து என்ன நடைபெறுகின்றது எனப் பார்த்துக்கொண்டு நின்ற பொதுமக்களுக்கு அந்த ஊரைச்சேர்ந்த மயிலர் கந்தசாமி என்பவர் ஒழுங்கைகளுக்கூடாக காட்டுக்குள்ளால் ஆமி வருகிறான் என்று சத்தம் போட்டுச் சொல்லிக்கொண்டே ஓடி வந்தார். அவர் கூறுவதைக்கேட்டு அக்கிராம மக்கள் விழிப்படைந்தார்கள்.

அந்தச்சம்பவத்தினை நேரில் பார்த்த திருமதி உமாமகேஸ்வரன் கமலாம்பிகை (வயது 45) அன்றையநாள் நடந்த அனர்த்தம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

காட்டுக்குள்ளால் ஆமி நடந்து வருகிறான் என்று மயிலர் கந்தசாமி சொல்லக் கேட்டவுடனேயே நான் எனது ஆறு பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு காட்டக்குள் ஓடிவிட்டேன். எனது கடைசிக் குழந்தை தீபன் அப்போது ஆறுமாதக் குழந்தை. அன்றைய நாள் முழுவதும் எனது பிள்ளைகள் பசியோடும் பட்டினியோடும்தான் இருந்தார்கள். எந்த உணவும் கிடைக்கவில்லை. முழுநாளும் பட்டினிதான். தாகம் எடுத்தபோது குளம் குட்டைகளில் தங்கி நின்ற தண்ணீரைத்தான் எடுத்துக் குடித்தோம்.

மேற்படி நாளன்று இக்கிராமத்திலிருந்த சிவபாதம் என்பவருடைய கடை கொள்ளையடிக்கப்பட்டது. அந்தக்கடையிலிருந்த நகை, பணம். என்பன கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மேற்குறித்த சிவபாதத்தின் கடையைக் கொள்ளையடித்த சிறீலங்கா இராணுவத்தினர் அவருக்குப் புலியெனச்சாயம் பூசிக்கைது செய்து விசாரணைக்குக் கொண்டு போனார்கள். போகும் போது ஓலை வீடுகளுக்குத் தீவைத்துவிட்டுச் சென்றார்கள். பல வீடுகள், பொதுமக்களுடைய உடைமைகள், பாடசாலைப் பிள்ளைகளின் பாடப்புத்தகங்கள் தீ மூட்டி எரிக்கப்பட்டன. அன்றையநாள் ஐந்து உலங்குவானூர்திகள் மூலம் தரையிறக்கப்பட்ட சிங்களச் சிப்பாய்கள் செய்த அடாவடித்தனங்களால் இக் கிராமத்தினைச்சேர்ந்த பலர் புகலிடம் ஏதுமற்ற ஏதிலிகளாக்கப்பட்டனர்.

**இப்படுகொலை பற்றிய மேலும் சில விபரங்கள்**

மேற்படி சிறீலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலையின் போது பதின்நான்கு அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பலர் சுட்டும் வெட்டியும் படுகாயப் படுத்தப்பட்டார்கள். பல அப்பாவிப் பொதுமக்கள் ஏறக்குறைய இருபத்திரண்டிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கிட்டிணர் சிவபாதசுந்தரம் என்பவரினது கடையில் நீண்ட நைலோன் கயிற்றால் கைகள் பின்பக்கமாகப் பிணைத்துக் கட்டப்பட்ட நிலையில் படுகொலை செய்வதற்கு ஆயத்த நிலையில் வைக்கப்பட்டிருந்தார்கள். இவர்களை நைலோன் கயிற்றினால் கட்டி வைத்த சிங்களப் படைகள் போதையேறிய நிலையில் காணப்பட்டார்கள். இவர்களைப் பின்னர் வந்து கவனித்துக்கொள்வதாகக் கூறிவிட்டு மனிதவேட்டைக்குச் சென்று விட்டார்கள். நல்லவேளையாக ஒரு சிறுவன் கத்தியைக் கொண்டுபோய் அவர்களது கைகள் கட்டப்பட்டிருந்த நைலோன் கயிற்றை வெட்டிவிட்டுச் சென்றமையால் அவர்கள் யாவரும் காப்பாற்றப் பட்டார்கள்.

**உடன் பிறந்த தம்பியைப் பறிகொடுத்த அக்காவின் துயரம்**

மேற்படி 02.10.1985 அன்று இடம் பெற்ற படுகொலைச் சம்பவத்தின் போது தனது உடன்பிறந்த சகோதரனான வாரித்தம்பி பாக்கியநாதன் என்பவரைப் பேரினவாதக் கொடுமைகளுக்குப் பறிகொடுத்த அவரது சகோதரியான திருமதி துரைராசா சாரதாதேவி (வயது 45) என்பவர் இப்படுகொலைப் பற்றிப் பின்வருமாறு விபரிக்கின்றார்.

சம்பவநாள் காலை வேளை தரையிறக்கப்பட்ட சிறீலங்காப் படையினர் எனது வீட்டைச் சுற்றி வளைத்தார்கள். எனது கணவர் அப்போது அங்கே இருக்க வில்லை. எனது தம்பியார் தான் அங்கே இருந்தார். அவருக்கு அப்போது இருபத்தொரு வயதுதான் இருக்கும். எமது வீட்டைச் சுற்றி வளைத்த சிங்கள இராணுவத்தினர் முதலில் எங்கள் எல்லோரையும் முட்டுக்காலில் நிற்கும்படி பணித்தார்கள். அவ்வாறே நாங்கள் நின்றோம். எங்கள் வீட்டக்குள் தாங்கள் தேடுதல் மேற்கொள்ளப்போகின்றோம் என்றார்கள். அவ்வாறு சொல்லியவாறே எங்கள் வீட்டக்குள் அடாவடித்தனமாக நுழைந்தார்கள். எனது தம்பியின் இரு கைகளையும் பின்னால் பிணைத்துக் கட்டினார்கள். வீட்டுக்குள் வந்தவர்களிற் சிலர் நான்றாகத் தமிழிற் கதைத்தார்கள். இவர்களுள் ஒரு வெள்ளைத் தோலுடைய நன்கு உயரமான தோற்றமுடைய ஒருவரும் காணப்பட்டார். அவர் ஒன்றுமே பேசவில்லை. எல்லாவற்றையும் கூர்மையாக இவதானித்தபடி இருந்தார். அன்றைய நாள் அவரை வேறு பல தமிழ் மக்களும் கண்டிருக்கிறார்கள். அவரைப் பொதுமக்கள் மொசாட் என்று அழைத்தார்கள். மொசாட் என்றால் என்னவென்று எனக்கு முதலில் விளங்கவில்லை. பின்னர்தான் மொசாட் என்பவர்கள் வெளிநாட்ட வெள்ளைக்காரர்கள் என்று தெரிந்துகொண்டேன்.

**சிறிலங்காப் படையினர் செய்த கொடுமைகள்**

**மேற்குறித்த திருமதி துரைராசா சாரதாதேவி (வயது 45) தொடர்ந்து கூறுகையில்,**

மேலும் சிறீலங்கா இராணுவத்தினர் எனது தம்பியிடம் துவக்கைக் கொடுத்துப் படமெடுத்தார்கள். வேறு சில சிறீலங்கா இராணுவத்தினர் உலங்குவானூர்திக்கு முன்னால் எனது தம்பியை நிறுத்தி வீடியோப் படம் எடுத்தார்கள். எனது தம்பிக்குக் காலால் உதைத்தார்கள், அடித்தார்கள். எனது தம்பிக்கு அடிக்கவேண்டாம் என்று நான் கதறி அழுதேன். அவரை எல்.ரி.ரி.இ என்று சொல்லி அடித்தார்கள். நான் இல்லை அவருக்கும் இயக்கத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று சொல்லி அழுதேன். அவர்கள் என்னிடம் எனது தம்பியை எல்.ரி.ரி.இ என்று சொன்னால் விட்டு விடுவதாகச் சொன்னர்கள். நான் அவர்களிடம் இல்லாத ஒன்றைச் சொல்லமாட்டேன் என்றேன். அவர்கள் எனது தம்பியை உதைத்துக் கொண்டும், அடித்த படியும் கூட்டிக்கொண்டு போனார்கள். நான் பின்னால் அழுதுகொண்டு போனேன். சிறீலங்காப்படையினர் என்னை வழிமறித்த அடித்து உதைத்துத் தள்ளி விழுத்திவிட்டார்கள். என்னால் தொடர்ந்து செல்ல முடியவில்லை. இந்தவேளை எனது கணவர் எனது வீட்டில் இருக்கவில்லை. அவர் புளியம்பொக்கணைக்குச்சென்றுவிட்டார். சிங்கள இராணுவத்தினர் எனது வீட்டைத் தீமூட்டி எரித்தார்கள். இவற்றைக் கேள்விப்பட்ட கணவர் ஊருக்கு வந்தார். அக்கால கட்டத்தில் முல்லைத்தீவு நகரில் முகாமமைத்திருந்த சிங்கள இராணுவச் சிப்பாயகள் தான் எங்கள் வீட்டைக் கொளுத்தினார்கள் என்பதைக் கேள்விப்பட்டதோடு, எனது தம்பியையும் அவர்கள் இழுத்துச் சென்றமையால் அங்கு போய் எனது தம்பியைப் பற்றி விசாரித்தேன். அதற்கு அவர்கள் தாம் எங்களுடைய ஊருக்கு வரவில்லை என்றும் இதுபற்றித் தமக்கு எதுவும் தெரியாது என்றும் மறுத்து விட்டார்கள். இதன் பின்னர் நான் சிறீலங்காச் சிப்பாய்கள் எனது தம்பியைக் கொன்றிருப்பார்கள் என்று எண்ணிக் காட்டுப் பக்கங்களில் அவரைத்தேடினேன். இச்சம்பவம் இடம்பெற்று ஆறாம் நாள் தான் எனது தம்பியின் இறந்த உடலைக் காட்டுப்பக்கம் கண்டேன். அவரது உடலில் பலத்த கத்திக்குத்துக் காயங்கள் காணப்பட்டன. கைகள் பின்னுக்குக் கட்டப்பட்டிருந்தன. இறந்த அவரது உடல் நன்றாகப் பழுதாகிப் போயிருந்தது. அதனால் அதனை அந்த இடத்தியேயே எரித்துவிட்டோம். எனது தம்பியைப் பலவந்தமாக உலங்குவானூர்தியில் ஏற்றிய சிங்களப் சிப்பாய்கள் உலங்குவானூர்தி மேலே எழும்பியபோது அதிலிருந்து தள்ளிவிட்டதாகப் பார்த்தவர்கள் சொன்னார்கள். இப்போது நான் கூலிவேலை செய்து எனது குடும்பத்தைக் காப்பாற்றி வருகின்றேன்.

**இச்சம்பவத்தை நேரில் பார்த்த இன்னொரு பெண்ணின் சாட்சியம் "இந்தப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற நாள் அன்று பிரமந்தனாற்றுக் கிராமத்தில் வாழ்ந்த திருமதி குலஅரியேஸ்வரி (வயது 46) இப்படுகொலைப் பற்றிப் பின்வருமாறு விபரிக்கின்றார்.**

"இப்படுகொலைத் நாள் அன்று ஐந்து உலங்குவானூார்திகள் வானத்தில் வட்டமிட்டதைப் பார்த்தேன். விமானங்களும் வானத்தில் சுற்றிச் சுழன்றடித்து வட்டமிட்டுக் கொண்டன. சிறீலங்கா இராணுவச் சிப்பாய்கள் உலங்குவானூர்தி மூலம் தரையிறக்கப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். நாங்கள் எல்லோருமாகக் காட்டுக்குள் ஓடிவிட்டோம். காட்டுக்குள் தரையிறக்கப்பட்ட இராணுவம் வீடுகளை எரித்துக் கொண்டே வந்தது. தமிழ்மக்கள் பாதுகாப்புப் பேரவையைச் சேர்ந்த டிஸ்கோ என்பவர் முகத்தில் பெயின்ரைப் பூசிக் கொண்டு உருமறைப்புச் செய்யப்பட்ட ஆடைகளை அணிந்து கொண்டு சிங்கள இராணுவத்திற்கு வழிகாட்டிக்கொண்டு சென்றதைக் கண்டேன். டிஸ்கோவால் காட்டிக் கொடுக்கப்பட்ட தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவையைச் சேர்ந்த செல்வநாயகம் என்பவர் பிடிபட்டார். ஆனால் இவர் தந்திரோபாயமாக தப்பிக்கொண்டார். இவர் இராணுவப்பயிற்சி பெற்றிருந்த ஒருவரென்பதை நான் அறிவேன். எனது வீட்டுக்கு அருகில் சிறீலங்கா சிப்பாய்கள் அப்பன் என்பரையும், ஆனந்தராசா என்பவரையும் வாழை மரத்தோடு கட்டிவைத்து அவர்களது நெற்றியில் சுட்டப் படுகொலை செய்தார்கள்."

மேலே கூறப்பட்ட 02.10.1985 அன்று பிரமந்தனாற்றுப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரும் சிறீலங்கா விமானப் படையினரும் நடத்திய தாக்குதலில் உறிரிழந்த அனைவரும் இருபதிற்கும முப்பத்தைந்து வயதிற்கும் இடைப்பட்டவர்களாவர்.

**மேலதிகத் தகவல்கள்**

பிரித்தானிய கே.எம்.எஸ் (கினிமின இராணுவப் பிரிவைச் சேர்ந்த Tim Smith என்பவர் சிறீலங்கா இராணுவத்திற்கு சிறீலங்காவில் தங்கியிருந்து கே. எம். எஸ் (கினிமினி சேவிஸ்) இராணுவ பிரிவின் சார்பாகப் பயிற்சி கொடுத்தார். பயிற்சி கொடுத்ததோடு, அவர்களோடு இணைந்து பல சந்தர்ப்பங்களில் விமானத்தாக்குதல்களுக்கு விமானியாகவும், Tim Smith கடமையாற்றியுள்ளார். இலங்கையில் கடமையாற்றிய பின் தனது சொந்த நாடான பிரித்தானியாவுக்குச் சென்ற இவர் சிறீலங்காவில் தனது பணிகள் பற்றி ஒரு நூலை எழுதியுள்ளார். "The Reluctant Meunary" (The Recollection of a British Ex Army Helicopter Pilot in the anti Terrorist War in Sri lanka) என்ற அந்த நூலில் அறுபத்தோராம் பக்கத்தில் புதுக்குடியிருப்பு புறச்சூழலில் (பிரமந்தனாறு) சிறீலங்காப் படைகளைத் தான் தரையிறக்கும் போது தனது அனுபவத்தினை எழுதியுள்ளார். இலங்கையின் தரைப்படையும், விமானப்படையும் கூட்டாகத் தரையிறக்கப்பட்ட படை நடவடிக்கைக்கு Flight Lieutant (முதலாவது லெப் றொகான் குணதிலகா தலைமை தாங்கியதாகவும், அவர் எவ்வேளையிலும் எத்தகைய முடிவையும் எடுக்க முடியாமல் தடுமாறியதாகவும் (He is always undecided) குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த நூலில் சிறீலங்காப் படைகளைப் பற்றி விபரிக்கும் போது "சிறீலங்கா இராணுவம் ஒழுக்கம் கெட்ட இராணுவமாகவே இருந்தது என்றும் இவர்களைக் களத்தில் இறக்கிவிட்டால் அவர்கள் கொலைப்பொறி போல (Killing Machinery) செயல்படுவர்"என்றும் கூறியுள்ளார்.

**றொகான் குணத்திலக**

சிறீலங்கா விமானப்படையின் முன்னாள் தளபதி ஏயா மார்சல் ரி. குணதிலகாவின் மகன் தான் இந்த றொகான் குணதிலக (Flight Lieutant) ஆவார். இவர் தனது தந்தையாரின் செல்வாக்கால் விமானப் படையினுள் நுழைந்து மிகக் குறுகிய காலத்தில் ஒரு இடைநிலை அதிகாரியானார். இவரே பிரமந்தனாற்றுப் படுகொலைக்குப் பொறுப்பாக அன்றைய நாள் இருந்தார்.

**02.10.1985 அன்று பிரமந்தனாற்றுப் படுகொலைச் சம்பவத்தில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. ஸ்லீபன்ராஜாஸ் சத்தியசீலன் (26)
2. நாகப்பன் சத்தியலிங்கம் (21)
3. கந்தசாமி தர்மசிங்கம் (23)
4. கிட்டிணர் சிவபாதசுந்தரம் (33)
5. கறுப்பையா தர்மலிங்கம் (23)
6. கறுப்பையா செல்வராசா (24)
7. பொன்னுத்துரை பாக்கியநாதன் (21)
8. சுப்பையா அருணாச்சலம் (29)
9. சின்னையா சவுந்தரராசன் (24)
10. வன்சநாதகே பியதிலகே காமினி (26)
11. வல்லிபுரம் கணேசமூர்த்தி (30)



குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# அடம்பன் படுகொலை 12.10.1986

திருமலை மூதூரில் 18.07.1986 அன்று அதிகாலை 3:00 மணியளவில் மணற்சேனை, பெருவெளி எனும் கிராமங்களை சுற்றிவளைத்த சிறீலங்கா இராணுவத்தினர் இங்கு நாற்பத்து நான்கு பொதுமக்களைக் கைது செய்து கொண்டுசென்று சுட்டுப் படுகொலை செய்தனர். இதில் அனை வரும் உயிரிழந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் மேன்காமம், கங்குவெளி, மல்லிகைத்தீவு ஆகிய கிராமங்களிலிருந்து சிங்கள இராணுவத்தின் அச்சுறுத்தல், படுகொலை சம்பவம் அதிகரித்ததன் காரணமாக பாதுகாப்புத் தேடி அகதிகளாக வந்தவர்களாவர்.

மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்குப் பிரதேசசெயலர் பிரிவில் அடம்பன் கிராமம் அமைந்துள்ள விவசாயக் கிராமமாகும். கிராமத்தில் வசித்து வருகின்ற மக்கள் கடந்த இருபது ஆண்டகளுக்கு மேலாக கிராமத்திற்கு அருகேயமைந்துள்ள தள்ளாடி சிங்கள இராணுவ முகாமினால் பலசொல்லொணாத் துன்ப துயரங்களை அனுபவித்த வருகின் றனர்.

12.10.1986 அன்று அதிகாலை 4:00 மணிக்கு தள்ளாடி சிங்கள இராணுவ முகாமிலிருந்து பறப்பட்ட இராணுவத்தினர் மாளிகைத்திடல் கிராமத்தினூடாக வந்து அடம்பன் கிராமத்ததைச் சுற்றிவளைத்தனர். பின்னர் அடம்பன் கிராமத்தில் வீடுகளில் உறங்கிகொண்டிருந்த மக்களைச் சுட்டப் படுகொலை செய்ததுடன், அடம்பன் சந்தியிலுள்ள கடைகளையும் எரித்தனர். அதிகாலை 5:00 மணிக்கு கிராமத்தினுள் நுழைந்த இராணுவத்தினர் மு.ப. 11 மணிவரை அடம்பன் கிராமத்தில் தாக்குதலை நடாத்திவிட்டு இறந்தவர்களின் சடலங்களை வீதிகளிலும் வயல்களிலும் வீசிவிட்டு இராணுவ வாகனங்களில் தள்ளாடி இராணுவ முகாமிற்குச் சென்றனர். இச்சம்பவத்தில் இருபதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்ததுடன், பல வியாபார நிலையங்கள், கடைகள் என்பனவும் எரிக்கப்பட்டன.

**கதிரன் சௌந்தரராஜன்**

“1986 ஆம் ஆண்டு தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து வெளிக்கிட்டு வந்த இராணுவத்தினர் திருக்கேதீசுவரம் வந்து அதன் வழியாக மாளிகைத்திடல் வந்து அதனூடாக தாமரைக்குளம் வரை வந்து தியாகு மற்றும் கோபாலு என்று குடும்பஸ்தர்கள் இருவரையும் சுட்டுக் கிணற்றுக்குள் போட்டனர். பின்னர் அங்கிருந்து அடம்பன் வந்த இராணுவத்தினர் அக்கிராமத்தைச் சேர்ந்த நோபோட் என்ற பத்தொன்பது வயதுடைய ஒருவரையும் சீலன் என்ற பதினாறு வயது இளைஞனையும் பசுமை என்பவரையும் சுட்டக் கொன்றார்கள். அந்தவேளை அடம்பன் கடை வீதிவழியால் வந்த இராணுவத்தினர் முத்துவேல் என்ற இளைஞனையும் அந்தோனிச்சாமி என்ற இளம் குடும்பஸ்தரையும் சிறி என்றழைக்கப்படும் யாழ்ப்பாணம் வாழ் நெல் வியாபாரியையும் பிடித்தச் சென்று நெடுங்கண்டல் கோயிலடியில் சுட்டுப் போட்டனர். அதன் பின்னர் அவ் வீதி வழியால் வந்த இராணுவத்தினர் 22 வயதுடைய மனோகரன் என்பவரையும் பத்தென்பது வயது ஜெகதீஸ்வரன் என்பவரையும் மாந்தையைச் சேர்ந்த நெல்லுக்கடை உரிமையாளரான உதயன் என்பவரையும் உலக்கையால் அடித்து சாகாத நிலையில் அடம்பன் கடற்கரையிற் போட்டுச் சுட்டிருந்தார்கள். இவ்வாறு சுடப்பட்ட அனைவரினதும் கழுத்துகளில் நஞ்சைக் கட்டி உழவு இயந்திரத்தில் ஏற்றி உள்ளித் தாழ்வுப் பகுதியால் தள்ளாடி



முகாமிற்கு ஏற்றிச் சென்றார்கள். பின்னர் சடலங்கள் அனைத்தும் அடையாளங்காண முடியாத நிலையில் இருந்ததால் யாரும் சடலங்களை கையேற்க முன்வராத நிலையில் இராணுவத்தினரே ரயர்களைப் போட்டு எரித்தார்கள். இந்தச் சம்பவத்தில் பதினாறு பேர் வரை இறந்திருந்தார்கள். இச்சம்பவத்தின்போது எந்தவித வயது வேறுபாடின்றி ஆறுபது வயது முதியவர்களிலிருந்து இருபது வயது இளைஞர்கள் வரை சுட்டுக் கொல்லப்பட்டார்கள். தள்ளாடியிலும், உயிலங்குளத்திலும் இராணுவ முகாம்கள் இருப்பதால், இராணுவத்தினரின் தாக்குதல் நேரங்களில் வேறு பகுதிகளிற்குப் போகமுடியாத நிலை ஏற்படும். அப்படி வெளியேறினால் காயப்படவோ அல்லது இறக்கவோ நேரிடும். இதேபோன்று தான் ஆண்டான்குள மக்களுக்கும் பாதிப்புக்கள் இருக்கிறது. இந்தத் தள்ளாடி இராணுவ முகாமால் பாதிக்கப்படுவது பெரும்பாலும் தள்ளாடி முகாமிலிருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்திலிருக்கின்ற நாங்களாகத்தான் இருக்கிறது. பெரும்பாலும் எறிகணைத் தாக்குதலையும் உலங்குவானூர்த்தித் தாக்குதலையும் இம்முகாம் இராணுவத்தினர் மேற்கொள்வார்கள்.”

**12.10.1986 அடம்பன் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. யூலியன் யெஜசீலன் (22)
2. கிறிஸ்தோடு யோவான் (65)
3. ஐயம்பிள்ளை நாகமுத்து (84)
4. தங்கவேல் ராமன் (-)
5. மாமுண்டி செல்வராஸ் (14)
6. அந்தோனி செல்வராஸ் (63)

# பெரியபண்டிவிரிச்சான் படுகொலை 15.10.1986

மன்னார் மாவட்டத்தில் மடுப் பிரதேசசெயலர் பிரிவில் பெரியபண்டிவிரிச்சான் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தைச் சேர்ந்த இராசநாயகம் என்பவர் வழமை போல 15.10.1986 அன்று தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். பாடசாலை சென்று திரும்பிய அவரது இரு பெண் பிள்ளைகளும் மதிய உணவை முடித்துக் கொண்டு தோட்டத்தில் நின்ற தந்தைக்கு உணவு கொண்டு வந்தார்கள். தந்தையும் அயற்தோட்டத்தில் காவல்காக்கும் எழுபத்திரண்டு வயதான ஜோசப் பிரான்சிஸ் உட்பட நான்கு பேரும் தோட்டக்குடிசையில் அமர்ந்திருந்தார்கள்.

இந்த வேளையில் பெரியபண்டிவிரிச்சான் காட்டுப்பகுதியால் வந்த சிறீலங்கா இராணுவத்தினர் தோட்டப்பகுதியை நோக்கிச் சுட்டார்கள். பின்னர் தோட்டக் குடிசைப்பகுதிக்கு வந்த இராணுவத்தினர் இராசநாயகத்தைப் பலமாகத் தாக்கினர். பின்னர் இராசநாயகத்தின் மகளான சிறுமியின் பெண்ணுடல், மார்பு என்பவற்றை வெட்டிச் சித்திரவதை செய்ததுடன், ஜோசப் பிரான்சிஸ் அவர்களையும் துண்டுதுண்டாக வெட்டிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டனர்.

இதில் இராசநாயகமும் ஒரு பெண் பிள்ளையும் காயங்களுடன் தப்பி விட்டனர். இராசநாயகத்தின் படு கோரமாக சித்திரவதை செய்யப்பட்ட மகள் மடு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தார். ஜோசப் பிரான்சிஸ் அதே இடத்தில் உயிரிழந்தார். சிறுமியின் உடல் மடு சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது. ஜோசப் பிரான்சிஸின் உடல் சம்பவ இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

**15.10.1986 அன்று பெரிய பண்டிவிரிச்சான் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இராசநாயகம் மரிய எனஸ்ரின் (11)
2. ஜோசப் பிரான்சிஸ் (72)

**15.10.1986 அன்று பெரிய பண்டிவிரிச்சானில் காயமடைந்தவர்களின் விபரம்**

1. இராசநாயகம் (-)
2. இராசநாயகம் மரியராணி



**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும்.**
**நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில்**
**உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு**
**தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**



# புதுக்காட்டுச்சந்திப்படுகொலை 11.10.1987

கிளிநொச்சி மாவட்டத்தின் வட பகுதியில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் ஏ-9 நெடுஞ் சாலையில் சோரன்பற்று புதுக்காடச் சந்தி அமைந்துள்ளது. இச்சந்தியானது மருதங்கேணி, பளை, கிளிநொச்சி என்பவற்றை இணைக்கும் முச்சந்தியாக உள்ளது. இச்சந்தியைச் சுற்றி சோரன்பற்று, கரந்தாய் போன்ற கிராமங்கள் அமைந்துள்ளன. மேலும் தாளையடி, மருதங்கேணிப் பகுதிக்கான பிரதான வீதி இச்சதந்தியிலிருந்து ஆரம்பிப்பதால் இச்சந்தியில் போக்குவரத்துக்காகப் பொதுமக்கள் அதிகளவில் கூடுகினற இடமாகும்.

11.10.1987 அன்று ஞாயிற்றுக் கிழமை 3:30 மணியளவில் ஆனையிறவு இந்திய இராணுவ முகாமிலிருந்து யாழ். நோக்கி வாகனத்தொடரணி, கவசவாகனங்கள் சகிதம் வந்த இந்தியப் படையினர் புதுக்காட்டுச் சந்திப் பகுதியில் திடீரென வாகனங்களிலிருந்து இறங்கி அப்பகுதியில் கடைகளில் பொருட்களை வாங்குவதற்காகவும், பிரயாணத்திற்காகவும் நின்ற பொதுமக்கள் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டில் எட்டுப் போர் உயிரிழந்ததுடன், நான்கு பேர் படுகாயமடைந்தார்கள்.

**இந்தச் சம்பவத்தின் போது தன்னுடைய இரண்டு பிள்ளைகளை இழந்தவரும் சந்தியில் கடை வைத்திருந்தவருமான இளையதம்பி பேரம்பலம் பின்வருமாறு கூறினார்.**

“வாகனங்களில் வந்த இந்திய அரச படையினர் திடீரென இறங்கி பஸ்தரிப்பு நிலையத்திற் காத்து நின்ற மக்கள்மீதும் கடைகளில் நின்றவர்கள் மீதும் துபபாக்கிப் பிரயோகத்தை நடத்தினார்கள். அன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை ஆகையால் கடையில் எனது மூத்த மகனும் இளையமகளும் நின்றனர். அத்துட்ன ஊழியர் ஒருவரும் நின்றார். இவர்கள் மூவரையும் இராணுவம் கடையுடன் சேர்த்து எரித்தது. இவர்களின் உடல்கள் எரிந்த நிலையில் பின்னர் என்னால் மீட்கப்பட்டது. இந்தச் சந்தியிலிருந்த நான்கு கடைகளும் டாங்கிகளால் இடிக்கப்பட்டன. அத்துடன் சந்தியில் நின்ற காரும் எரிக்கப்பட்டது.” என தன்னுடைய சோகக்கதையைக் கூறினார்.

**11.10.1987 அன்று புதுக்காட்டுச் சந்திப்படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. கனகரத்தினம் (35)
2. குழந்தைவேலு செல்வராசா (22)
3. பொன்னையா நவரத்தினம் (34)
4. பொன்னையா சுப்ரமணியம் (40)
5. பேரம்பலம் மகேஸ்வரன் (10)
6. பேரம்பலம் கோகிலா தேவி (14)
7. வேலாயுதம் செந்தில் நாதன் (14)
8. சின்னத்தம்பி பசுபதிப் பிள்ளை (41)

**காயமடைந்தவர்களின் விபரம்**

1. கணபதிப்பிள்ளை கேதீஸ்வரன் (14)
2. சுப்பிரமணியம் ஏகாம்பரம் (45)
3. சின்னக்குட்டி சிவரூபன் (16)
4. ஆறுமுகம் பாலசிங்கம் (30)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# கொக்குவில், பிரம்படி, பொற்பதி வீதிப் படுகொலை 10.10.1987

கொக்குவிற் கிராமம் யாழ் மாவட்டத்தில் நல்லூர்ப் பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ளது. பல்கலைக் கழகத்தின் மருத்துவபீடம் அமைந்துள்ள இடத்திலிருந்து மேற்குப் புறமாக ஏறக்குறைய ஐநூறு யார் தூரத்தில் கொக்குவில் பிரம்படி வீதி உள்ளது.



இந்திய இராணுவத்தினர் 1987ஆம் ஆண்டு பத்தாம் மாதம் பன்னிரண்டாம் திகதி பலாலியிலிருந்து யாழ் நகரை நோக்கிய தொடருந்து நிலைய வீதியூடாகக் கனரக வாகனங்கள் மூலம் முன்னேறி கொக்குவில் பிரம்படிப் பகுதியினைச் சுற்றிவளைதத்து. பொதுமக்களின் வீடுகளுக்குச் சென்று அங்கிருந்த பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள், இளைஞர்கள் என யாவரையும் வீதிகளுக்கு அழைத்து வந்து சுட்டதில் நாற்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தார்கள். அன்றையதினம் வேறு ஒரு பகுதியூடாக வந்த இந்திய இராணுவத்தின் மற்றுமொரு அணியினர், கொக்குவில் பொற்பதிப் பகுதியைச் சுற்றிவளைத்து மக்களைக் கைதுசெய்து கொக்குவில் பிள்ளையார் ஆலயத்துக்கு வடக்காக நானூறு யார் தூரத்தில் அமைந்துள்ள சனசமூக நிலையத்தின் அருகே வீதியோரத்தில் அனைவரையும் உயிருடன் நிலத்தில் படுக்க வைத்து இராணுவத்தின் கவச வாகனங்கள், டாங்கிகளை அவர்கள் மீது ஏற்றிப் படுகொலை செய்தனர். இதில் அறுபத்துநான்கு பொதுமக்கள் உயிரிழந்தார்கள். 1987 ஒக்டோபர் பன்னிரண்டாம் திகதி பிரம்படிப் பகுதி, கொக்குவில் பொற்பதிப் பகுதி ஆகிய இடங்களில் நடந்த சம்பவத்தில் நூறிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தார்கள்.

பொற்பதி வீதியைச் சேர்ந்த 87 வயதான தட்சணாமூர்த்தி சிவராஜலிங்கம் தன்னுடைய வாக்குமூலத்தில் பின்வருமாறு கூறுகின்றார்,

“சுகாதாரப் பரிசோதகரான என்னுடைய சகோதரன் தட்சனாமூர்த்தி தவராஜலிங்கம், வயது 44, அவருடைய மனைவி தவராஜலிங்கம் கனகமலர், வயது 38, பிள்ளைகளான தவராஜலிங்கம் கரன், வயது 10, தவராஜலிங்கம் கஜேந்திரன், வயது 6, 18 மாதங்களே நிரம்பிய தவராஜலிங்கம் தர்மிகா ஆகியோர் கொக்குவில் பிரம்படி வீதியிலுள்ள இல 24 வீட்டில் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். என்னுடைய இன்னெரு மருமகனான 11 வயதான ஹர்சனும் அவர்களுடன்தான் இருந்தார். அன்றைய தினம் என்னுடைய சகோதரனின் வீட்டுப் பகுதியில் கடுமையான துப்பாக்கிச் சத்தம் கேட்டது. அடுத்தநாள் காலை 7 மணிக்குத்தான் அவ்வீட்டுக்கு என்னால் போக முடிந்தது. அங்கே, என்னுடைய சகோதரன், அவரின் மனைவி, பஞ்சிளம் பெண் குழந்தை ஆகியோரின் சடலங்கள் வீட்டிற்குள் இருந்தன. வேறு இரு சடலங்களும் அவ்வளாகத்தில் காணப்பட்டன.

கரன், கஜேந்திரன், ஹர்சன் ஆகிய மூன்று பையன்பளும் இன்னொரு அறையிலிருந்த கட்டிலின் கீழ் ஒளிந்திருந்ததைக் கண்டேன். கஜேந்திரனும் ஹர்சனும் காயமடைந்திருந்ததுடன் குருதி வடிந்து கொண்டும் இருந்தது.”

7 ஆம் வட்டாரம் நைநாதீவைச் சேர்ந்த 47 வயதான நாகலிங்கம் நாகேஸ்வரி தன் வாக்குமூலத்தில்,

“நான் என்னுடைய அண்ணா நாகலிங்கம் ஜீவரட்ணத்தின் குடும்பத்துடன் இல 24, பிரம்படி வீதி, கொக்குவிலில் வாழ்ந்துகொண்டிருந்தேன். சில வருடங்களுக்கு முன்னர்தான் என் பெற்றோர் மரணமடைந்திருந்தார்கள். அவ் வீட்டில், அண்ணாவும், பிள்ளைகளான கோகிலாவும் மனோகரனும், என்னுடைய சகோதரிகளான ஆனந்தகௌரி, சாரதா தேவியும் ஒன்றாக வசித்தோம். அன்றைய தினம் காலை ஒரு மணியிலிருந்து, துப்பாக்கிச்சூட்டுச் சத்தத்தால் எமது உறக்கம் கலைந்துபோயிருந்தது. காலை 5.30 அளவில், இந்தியப் படையினர் எமது வீட்டு வளவுக்குள் நுழைந்து எம்மை வெளியில் வருமாறு சொன்னார்கள். படைவீரர்கள் எமது வீட்டு வளாகத்தில் நின்றுகொண்டிருந்த நேரத்தில் எறிகணைகள் அருகில் விழுந்து வெடித்தது. பின்னர், குண்டுப் பயத்தினால் பயமடைந்தோ என்னமோ, அவர்கள் தங்கள் சுடுகலன்களை எம்மை நோக்கித் திருப்பினார்கள். என்னுடைய அண்ணாவும் ஆறே வயது நிரம்பிய அவரது மகன் மனோகரனும் அவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். என்னுடைய இரு சகோதரிகளும், ஏழு வயதான மருமகள் கௌசலாவும் அவர்களின் துப்பாக்சிச் சன்னங்களுக்கு இலக்காகிக் காயமடைந்தார்கள். பின்னர் அவர்கள் யாழ்ப்பாண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள்.”



# ஏறாவூர்படுகொலை 10.10.1990

தங்கராசு அய்யநார் சொல்கிறார்:

“கைதாகி காரத்தீவு சண்முகா பாடசாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எனது மகனை பார்ப்பதற்கு. 10ம் தேதி அக்டோார் மாதம், 1990ல் சுமார் 10 மணிக்கு மருத் துவர் சண்முகநாதன், அவருடைய மனைவி ராணி ஆகியோரை அழைத்து சென்றேன். நகரில் நின்றோரை எல்லாம் தடுத்து நிறுத்தி விட்டு சென்றார்கள். சிறது நேரத்தில் திரும்ப வந்து இஸ்லாமியர்களையும், தமிழர்களையும் தனித் தனியே பிரிந்திருக்க சொன்னார்கள். பின்னர் இஸ்லாமியர்களை எல்லாம் அங்கிருந்து சென்று விட்டனர்.

ஆண்களை ஒரு பக்கத்துக்கு அழைத்தார்கள். என்ன நடக்கப் போகிறது என்று எல்லோரும் எண்ணிக்கொண்டு இருந்தோம். அங்கு உள்ள ஒரு அறையினுள் எங்களை செல்லச் சொன்னார்கள். எங்களுக்கு பயமாக இருந்தது. இப்போது மருத்துவரின் மனைவி அந்த அறையினுள் சென்று, மருத்துவரை ஒன்று துன்புறுத்த வேண்டாம் என இராணுவத்தினரைப் பார்த்து கெஞ்சினார். ஆனால், இராணுவத்தினர் மருத்துவரின் மனைவியை தூரே இழுத்துச் சென்று வெளியே வீசி விட்டு வந்தனர். அப்பொழுது அங்கு ஒரு மனிதர் கத்தியை பிடித்து கொண்டு நின்றிருக்கிறார். இது எனக்கு அப்பொழுது தெரியாது. தீடீரென என்னுடைய தலையில் உள்ள மயிரை பிடித்தார். எனது தலையில் எண்ணெய் தடவியிருந்ததால், அவரின் பிடி நழுவியது. என்னுடைய தலையை வெட்டிவிட ஓங்கிய கத்தி, எண்ணெய் வழுக்கி கை நழுவியதால் எனது கழுத்தில் விழுந்தது. நான் தரையில் விழுந்தேன். நான் படுகாயமுற்றதால் இறந்து விடுவென் என நினைத்தேன்.

மருத்துவர் சண்முகநாதனும், சிலரும் தலைவெட்டப்பட்டு கொல்லப்பட்டிருந்தனர். நான் கீழே விழுத்திருந்த நேரத்தில். கொல்லப்பட்டவர்களின் அலறல் ஒலி கேட்க முடிந்தது. அந்த சப்தத்தை யாராலும் பொறுத்துக் கொள்ள முடியாது. ஆனால், எனக்கு வேறு வழி தெரியவில்லை. சிறிது நேரம் கழித்து பெரிதாய் சத்தமிட்டுக் கொண்டிருந்த இளம்பெண் ஒருவர் இழுத்து வரப்பட்டார். அவரின் மேலிருக்கும் சேலையை களையப்பட்டிருந்தது. சிங்கள இராணுவ சிப்பாய் ஒருவன் அப்பெண்ணை வேறு அறைக்கு இழுத்துச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினான். தன்னை விடச் சொல்லியும் அங்கு நடப்பதை யாரிடமும் சொல்ல மாட்டேன் என்றும் அப் பெண் கெஞ்சினார். ஆனால், மற்றொரு இராணுவ சிப்பாய் அப் பெண்ணின் தலையை வெட்டச் சொல்லி கட்டளையிட்டான். பின்னர் என் நிகழ்ந்திருக்கும் என எனக்கு தெரியவில்லை. ஆனால், கூச்சல் அடங்கி அமைதியானது. இராணுவத்தினர் அங்கிருந்து அகன்று சென்று விட்டனர்.

என்னால் அந்த இடத்தில் இருக்க முடியவில்லை. மனித வதைக்குள்ளான மக்களின் ஓலம் கேட்டுக் கொண்டே இருந்தது. என்ன செய்வது என்று நான் யோசனையில் இருந்தேன். அப்பொழுது இராணுவத்தினர் திரும்பவும் வந்து. ஓலமிடுவோரையும், மூச்சு விட்டுக் கொண்டிருந்தோரையும் தேடி, கத்தியால் குத்தி எந்தவொரு சப்தம் வராதவாறு பார்த்து கொண்டனர்.

பின்னர், அவர்கள் எண்ணெயோ அல்லது மண்ணெண்ணெயையோ அங்கு கிடந்தவர்கள் மீது ஊற்றி எரியூட்னர். தீ என்னுடைய கால்களுக்கும் பாய்ந்தது. நான் அணைக்க முற்பட்டேன். ஆனால், முடியவில்லை. என்னால் எழுந்து நிற்கவோ, என்னுடைய கால்களை தூக்கவோ முடியவில்லை. என்னுடைய கைகளினால் என் தலையை உயர்த்தி பின்னர் தவழ்ந்து கொண்டே, அந்த பெண்ணை கொண்டு சென்ற அறைக்குள் தவழ்ந்து சென்றேன்.

எழுந்து அமர்ந்து சிறிது நேரம் சிந்தித்தேன். விமானச் சத்தங்கள் இப்பொழுது கேட்க முடிந்தது. பெண்ணின் சேலை தரையில் கிடந்ததைப் பார்த்தேன். அதையெடுத்து இரண்டாய் கிழித்தேன். என்னுடைய தலையிலும், கழுத்திலும், முகத்தையும் மறைத்துக் கொண்டபடி இறுக கட்டிக் கொண்டேன். வெளியே என் தலைக்கு மேலே தீ எரிந்து கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும், கைகள், கால்கள் மற்றும் தலைகளாய் கிடந்தன. அவைகளைத் தாண்டி நகர்ந்து ஊர்ந்து வெளியே வந்து சேர்ந்தேன்”.

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# குமரபுரம் குண்டுவீச்சு 10.10.2008

குமரபுரம் கிளிநொச்சி நகர மையத்திலிருந்து ஏழு கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இதன்மீது 10 அக்டோபர் 2008 அன்று நிகழ்த்தப்பட்ட வான்குண்டு வீச்சு, சன அடர்த்தி மிக்க கிளிநொச்சி நகரமையம், மற்றும் அதனையண்டிய பகுதிகளில் நீண்ட நாட்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட வான்குண்டு வீச்சுக்களில் ஒன்றாகும். இக் காலம், இடம்பெயர்ந்த மக்களும், உள்ளூர்வாசிகளும், இக் குண்டு வீச்சுக்கள் காரணமாக மிகப்பெரிய அளவில் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிக் கொண்டிருந்த காலமாகும். மேற்குறிப்பிட்ட குண்டு வீச்சில் ஒரு பாடசாலை ஆசிரியை, அவரது பத்துவயது மகள், மேலுமோர் பெண் ஆகியோர் கொல்லப் பட்டனர். ஆசிரியையின் கணவன், அவரது மகன், மேலும் பல பொது மக்கள் படுகாயம் அடைந்தனர். காயமடைந்த கணவன் இத் துயர சம்பவத்தின் பின்னர் பின்வருமாறு கூறினார்:

”நான் பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவில், உள்ளூராட்சி அமைப்பு ஊழியன். எமக்கு மூன்று பிள்ளைகள் உண்டு. நாம் எமது சொந்த ஊராகிய பச்சிலைப்பள்ளியிலிருந்து ஆகஸ்ட் 2006 இல் இடம் பெயர்ந்தோம். அப்போதிருந்து கிளிநொச்சி குமரபுரத்தில் ஒரு மண்வீட்டைக் கட்டி வாழ்ந்திருந்தோம். அந்த துர்ப்பாக்கிய நாளில் நானும் மனைவியும், அன்று வேலைக்குச் செல்லும் முன்பதாக காலை 6.25 மணியளவில் அன்றைய சமையலில் ஈடுபட்டிருந்தோம். அந்நேரம் குண்டுவீச்சு விமானங்களின் இரைச்சல் கேட்டது. நாம் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு பதுங்கு குழிக்கு ஓடினோம். எமது வீட்டைச் சுற்றி மூன்று குண்டுகள் வீழ்ந்தன. அவற்றில் ஒன்று எமது பதுங்கு குழிக்கு மிகவும் அண்மையில் விழுந்தது. எனது மனைவி தலத்திலேயே இறந்துவிட்டார். மகள் மூர்ச்சையாகிப் பின்னர் வைத்தியசாலையில் இறந்தாள். நானும் எனது மகனும் காயமடைந்ததுடன், குண்டு வெடித்தவுடன் மூச்சு விட சிரமப்பட்டோம். வெடிச்சத்தத்தினாலும், அதிர்ச்சியினாலும் எனது செவிப்புலன் பாதிக்கப்பட்டுள்ளது. நாம் மீண்டும் இடம் பெயர்ந்து இப்போது எனது உறவினருடன் வாழ்கின்றோம். இங்குதான் நாம் எனது மனைவி, மகள் இருவரினதும் ஈமச்சடங்கினை நிறை



வேற்றினோம்”.
















JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# நாகபர்வத மலை எனும் பம்பரகஸதலாவ மலையில் நாகர் பற்றிய கல்வெட்டுகள்!

## இலங்கை பிராமிக் கல்வெட்டுகளில் நாகர்!


அம்பாறை மாவட்டத்தின் தெற்குப் பகுதியில் உள்ள உகந்தை மலையின் தென்மேற்கு பக்கத்தில் சுமார் 8 கிலோமீட்டர் தூரத்தில் நாகபர்வத மலை அமைந்துள்ளது. இலங்கையில் இரண்டு பெரிய வன விலங்குகள் சரணாலயங்கள் உள்ளன. இவற்றில் ஒன்று தீவின் வடமேற்கில் உள்ள வில்பத்து எனும் வனமாகும். அடுத்தது தென்கிழக்கில் உள்ள யால எனும் வனமாகும். யால வனத்தின் கிழக்குப் பகுதி குமண என அழைக்கப்படுகிறது. இப்பகுதியில் உள்ள அடர்ந்த காட்டின் மத்தியில் நாகபர்வத மலை அமைந்துள்ளது.

நாகபர்வத மலைக்குச் செல்வதற்கு சீரான பாதைகள் எதுவும் கிடையாது. உகந்தையில் இருந்து குமண பறவைகள் சரணாலய நுழைவாயில் ஊடாக தெற்கு நோக்கிச் செல்லும் கிறவல் பாதையில் 4 கி.மீ தூரத்தில் உள்ள இராட்சத கல் அடுப்பைக் கடந்து, மேலும் 2 கி.மீ தூரம் வரை சென்றதும் காணப்படும் கிரிகள களப்புச் சந்தியில் இருந்து மேற்கு நோக்கிப் பிரிந்து செல்லும் ஒரு சீரற்ற, கரடுமுரடான பாதை வழியாக மேலும் 14 கி.மீ தூரம் பயணம் செய்தால் நாகபர்வத மலையை அடையலாம். இம்மலைப் பகுதிக்குச் செல்லும்போது அடர்ந்த காட்டின் மத்தியில் ஓடும் சிற்றாறுகளைக் கடந்தே செல்ல வேண்டும். அதுவும் குறிப்பிட்ட சில காலங்களில் மட்டுமே இப்பகுதிக்குச் செல்ல முடியும்.



நாகபர்வத மலையின் தோற்றம்

### நாகத்தின் தலை போன்ற அமைப்புடன் கானும் நாகபர்வத மலை



அடர்ந்த காட்டின் மத்தியில் நாகபர்வத மலைப்பகுதி

நாகபர்வத மலை மிகவும் வித்தியாசமான முறையில் காணப்படுகிறது. ஓர் இராட்சத நாக பாம்பு படமெடுத்த வண்ணம் இருப்பது போன்ற வடிவத்தில் இம்மலை அமைந்துள்ளது. இம்மலை உச்சியில் இருந்து பார்க்கும் போது கிழக்கில் உகந்த மலைக் கோயிலும், வடக்கில் குடும்பி மலையும், இவைகளுக்கு இடையில் சலவைக் களப்பும், அதை அடுத்து வங்கக் கடலும் அழகிய காட்சிகளாகத் தெரியும். இங்கு மேலும் சில சிறிய மலைக் குன்றுகளும் அமைந்துள்ளன. முட்டை வடிவில் ஒரு மலைக் குன்றும் இங்கு காணப்படுகிறது.

இம்மலைப் பகுதியில் பம்பர என்றழைக்கப்படும் பெரிய குளவிகள் அதிகளவில் மரங்களில் காணப்படுவதால் தற்போது இப்பகுதி பம்பரகஸ்தலாவ என அழைக்கப்படுகிறது. இங்குள்ள பிராமிக் கல்வெட்டு ஒன்றில் இதன் பெயர் 'நாக பவத்த' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாக பவத்த என்பது நாக பர்வதம் எனும் சொல்லின் சுருக்கமாகும். இதன் காரணமாகவே இம்மலை நாகபர்வத மலை என பண்டைய காலத்தில் பெயர் பெற்று விளங்கியது.

நாகபர்வத மலைப்பகுதி ஜன சஞ்சாரமே இல்லாத அடர்ந்த காட்டுப் பகுதியாகும். இங்கு மலைகளும், பாறைகளும் நிறைந்து காணப்படுகின்றன. இம்மலைகளிலும், பாறைகளிலும் இயற்கையாகவே அமைந்துள்ள நூற்றுக்கணக்கான கற்குகைகள் காணப்படுகின்றன. இவற்றில் கற்புருவங்கள் வெட்டப்பட்டு, அவற்றின் கீழே கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கற்குகைகள் கரடிகள் வாழும் உறைவிடங்களாக விளங்குகின்றன. மனித நடமாட்டம் இல்லாத இக்குகைகள் கரடிகள் மற்றும் சிறுத்தைகள் வாழ்வதற்கு உகந்த இடங்களாகக் காணப்படுகின்றன. இக் குகைகளுக்குச் செல்லும் போது மிகவும் அவதானமாகச் செல்ல வேண்டியுள்ளது.

### நாகபர்வத மலையில் இராவணன் பற்றிய கல்வெட்டு




இராவணனின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டின் பிரதி

நாகபர்வத மலைப்பகுதி இராவணனின் உப இராஜதானிகளில் ஒன்றாக இருந்திருக்க வேண்டும். இராவண இராச்சியத்தின் உப நகராக உகந்தை, குடும்பிமலை ஆகிய இடங்கள் அமைந்திருந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. மட்டக்களப்பு மான்மியமும் இவ்விரு இடங்களுக்கும் இராவணனுக்கும் உள்ள தொடர்புகள் பற்றி விபரிக்கிறது. இதன்படி இவ்விரு இடங்களுக்கு மிகவும் அருகில் உள்ள நாகபர்வத மலையும் இராவணனுடன் நெருங்கிய தொடர்புடைய இடங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

நாகபர்வத மலையில் காணப்படும் பிராமிக் கல்வெட்டொன்றில் இராவணன் தொடர்பான செய்தி பொறிக்கப்பட்டுள்ளமையை இக்கூற்றுக்கு ஆதாரமாகக் குறிப்பிடலாம். இக்கல்வெட்டில் "பெருமகன் இராவணனின் மகள் சொஹிலியின் குகை" என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளதாக அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பேராசிரியர் எஸ். பரணவிதான அவர்களால் 1970 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'Inscription of Ceylon - Vol.1 - Early Brahmi Inscriptions' எனும் கல்வெட்டுகளின் தொகுப்பு நூலில் 515 ஆவது கல்வெட்டாக இது பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நூலில் இக்கல்வெட்டு "பருமக வணிஜ திசஹ லேனே சகச" - "Parumaka vanijha Tisaha lene sagasa" எனவும், ஆங்கில மொழிபெயர்ப்பில் "The cave of the chief Tissa, the merchant [is given] to the Sangha" எனவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு உட்பட 16 கல்வெட்டுகளின் விபரங்கள் பிழையாக இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கலாநிதி சூரிய குணசேகர தான் எழுதிய சேத்திகாசிக்க ராவண எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். "ராவண ஜித சோஹிலி" (இராவணனின் மகள் சோஹிலி) என கல்வெட்டில் உள்ளதாகவும், அதை மாற்றி "வணிஜ திசஹ" (வணிகன் தீசன்) என பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதே விடயத்தை கலாநிதி மிரிண்டோ ஒபேசேகர, ஜயரத்ன பதிர ஆரச்சி, தனேஷ் கொடிப்பிலி ஆரச்சி, கே.டி.எஸ். சுதுசிங்க ஆகிய அறிஞர்களும் தங்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். இக்கல்வெட்டு மூலம் இராவணன் நாகபர்வத மலையுடன் தொடர்புபட்டிருந்தமை தெளிவாகத் தெரிகிறது. மேலும் கொழும்பு நகரின் அருகில் உள்ள பன்னிபிட்டிய என்னுமிடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ தெவ்ரம் விகாரை வளாகத்தில் உள்ள 'ஸ்ரீ ராவண மந்திரய' எனும் பெயரில் அழைக்கப்பட்டு வரும் இராவணன் கோயிலின் முன்பாக இக்கல்வெட்டின் பிரதி ஒன்று நிறுவப்பட்டு, அதில் "பருமக ராவண ஜிதி சோஹிலி லேனே சகச" என எழுதப்பட்டுள்ளமை இங்கே சிறப்பாக உற்று நோக்கத்தக்கது.



மலைக்குன்றுகள் நிறைந்த நாகபர்வத மலைப்பகுதி



நாகபர்வத மலையின் அண்மித்த தோற்றம்



நாகபர்வத மலையும், முட்டை வடிவில் உள்ள மலைக் குன்றும்

### இராவணனின் மகள் வாழ்ந்த குகை

இராவணனின் பெயர் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டில் இராவணனின் மகள் 'சோஹிலி' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் இராவணனின் ஆட்சி நிலவியமையும், அவனது பரம்பரையினர் வாழ்ந்திருந்தமையும் உறுதியாகிறது.





கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள கற்குகைகளின் தோற்றம்





இராமாயணம் என்பது ஓர் காவியம் எனவும், கற்பனைக் கதை எனவும், இதற்கு சரித்திரப் பிண்ணனி கிடையாது எனவும், இதன் கதாபாத்திரங்கள் கவிஞர்களினால் படைக்கப்பட்டவை என்பதும் பலரின் கருத்தாக உள்ளது. ஆனால் இராமாயணத்தின் முக்கிய கதாபாத்திரங்களான இராவணன், இந்திரஜித், விபீஷனன், கும்பகர்ணன், குபேரன், கைகேசி, விஸ்ரவசு, புலஸ்தியர் ஆகியோரின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் பல இலங்கை முழுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் இராவணன் இலங்கை வேந்தன் என்பதும், இராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இராவணனின் நெருங்கிய உறவினர்கள் பற்றிய விடயங்கள் உண்மையானவை என்பதும் உறுதியாகிறது.

பிராமிக் கல்வெட்டுகளின் காலத்திற்கும் இராவணனின் காலத்திற்கும் குறைந்தபட்சம் 1500 ஆண்டுகால வேறுபாடு உள்ளது. இராவணன் மற்றும் அவனது நெருங்கிய உறவினர்கள் பயன்படுத்திய கற்குகைகளை இராவணன் இறந்த பின்பு அவனது பரம்பரையினர் அல்லது அரசப் பிரதானிகள், அல்லது விசுவாசிகள் பேணிப் பாதுகாத்து வந்திருக்க வேண்டும். அல்லது இக்குகைகளில் இராவணன் மற்றும் அவனது நெருங்கிய உறவினர்களை தெய்வங்களாகப் போற்றி பரம்பரை பரம்பரையாக வழிபட்டு வந்திருக்க வேண்டும். அல்லது இராவணன் மற்றும் அவனது நெருங்கிய உறவினர்களின் பெயர்களை அவனின் பரம்பரையினர், அரச பிரதானிகள், விசுவாசிகள் போன்றோர் தங்களுக்கு சூடிக் கொண்டிருக்க வேண்டும்.

இப்படியான மூன்று தரப்பினரின் பரம்பரையினர் இராவணன் மற்றும் அவனது நெருங்கிய உறவினர்கள் பயன்படுத்திய கற்குகைகளில், கல்வெட்டுகள் பொறிக்கப்பட்ட காலத்தில் இவர்களின் பெயர்களை எழுதியிருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஓர் குகையில் பொறிக்கப்பட்ட கல்வெட்டே நாகபர்வத மலையில் காணப்படுகிறது.

## கதிர்காம பாண்டிய சத்திரிய மன்னர்களின் ஆட்சி நிலவிய இடம்

பொ.ஆ.மு 3 ஆம், 4 ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் கதிர்காம பாண்டிய சத்திரியர்களின் இளைய சகோதரனாகிய மகா நாகனின் ஆட்சி அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் பரந்திருந்தது. இக் காலப் பகுதியின் பின்பு பௌத்த மதம் இங்கு அறிமுகமாகியிருந்த போதும் கதிர்காமத்தை ஆட்சி செய்த இந்துக்களாகிய கதிர்காம சத்திரியர்களின் பரம்பரையில் சிலர் நாக வழிபாட்டைப் பேணி வந்துள்ளனர். கதிர்காமம், திஸ்ஸ மகராமை ஆகிய பகுதிகளில் நாகவழிபாடு தொடர்ந்தும் பேணப்பட்டு வந்தமை பற்றி தொலமியின் குறிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு கிறிஸ்துவுக்கு பிற்பட்ட காலத்தில் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுகளும் இதை உறுதிப்படுத்துகின்றன. எனவே இக் காலப்பகுதியில் நாக வணக்கத்தைப் பேணி வந்த கதிர்காம பாண்டிய சத்திரிய மன்னர்களால் நாகபர்வத மலைப் பகுதியிலும் நாகவழிபாடு பேணப்பட்டிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. யால வனப்பகுதியில் உள்ள கொட்டதாமுஹெல மலை, போவத்தகல மலை ஆகிய இடங்களில் காணப்படும் பிராமிக் கல்வெட்டுகள் இப்பகுதியில் இவர்களின் ஆட்சியை உறுதி செய்கின்றன.

## உன்னரசுகிரி இராஜதானியின் முக்கிய பகுதி

அம்பாறை மாவட்டத்தில் புராதன காலத்தில் அமைந்திருந்த உன்னரசுகிரி இராஜதானி பற்றி மட்டக்களப்பு மான்மியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் தலைநகரம் சன்னாசி மலையே என வி.சி. கந்தையாவும், குடும்பிமலையே என சி. கணபதிப்பிள்ளையும் குறிப்பிட்டுள்ளனர். ஆய்வாளர்களின் குறிப்புக்களின்படி பானமைக்கும், மாணிக்க கங்கைக்கும் இடையிலுள்ள ஓர் மலையே உன்னரசுகிரி இராஜதானி எனத் தெரிய வருகிறது பொ.ஆ. 1 ஆம் நூற்றாண்டு முதல் 3 ஆம் நூற்றாண்டு வரை இவ்வாட்சிப் பிரிவு இப்பகுதியில் இருந்துள்ளது.

பானமைக்கும், மாணிக்க கங்கைக்கும் இடையில் மொத்தமாக 18 மலைகள் புராதன வரலாற்றுடன் தொடர்புபட்டுக் காணப்படுகின்றன. இவற்றில் ஓர் இராஜதானிக்குரிய புராதன இடிபாடுகளையும், அதிகமான கல்வெட்டாதாரங்களையும் கொண்ட 05 மலைகள் உள்ளன. ஒன்று குடும்பி மலை ஏனையவை நாகபர்வத மலை, போவத்தகல மலை, கொட்ட தாமுஹெல மலை, சித்துள்பவ்வ எனும் சித்தர் மலை ஆகியவையாகும். இவற்றில் குடும்பிமலை பற்றி சி. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். அதேவேளை நாகபர்வத மலை, போவத்தகல மலை, கொட்ட தாமுஹெல மலை, சித்தர் மலை ஆகிய மலைகளுடன் உன்னரசுகிரி இராஜதானிக்கு இருக்கும் தொடர்பை யாரும் குறிப்பிடவில்லை. ஓர் இராஜதானிக்குரிய அமைப்புடன் காணப்படும் நாகபர்வத மலை, உன்னரசுகிரி ஆட்சிப் பிரிவின் ஓர் முக்கிய பகுதியாக விளங்கியிருக்க வேண்டும் என்பது மட்டும் உறுதியாகத் தெரிகிறது.

## பண்டைய நாகர் குடியிருப்பு

நாகபர்வத மலைப் பகுதியில் சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் அடர்ந்த காட்டின் நடுவில் புராதன கட்டிட இடிபாடுகள் காணப்படுகின்றன. மலை மீதும், அடிவாரத்திலும், மலையைச் சுற்றிய பகுதிகளிலும் இவை காணப்படுகின்றன. கற்தூண்களும், புராதன செங்கற்களும் ஆங்காங்கே தெரிகின்றன. மலை அடிவாரத்திலிருந்து உச்சிக்கு செல்வதற்கான இரண்டு பக்கங்களில் கற்படிகள் செதுக்கப்பட்டுள்ளன. இவை இடையிடையே மறைந்தும், சிதைந்தும் உள்ளன. மலையடிவாரத்தில் கற்தூண்களை மட்டும் கொண்ட கட்டிட அத்திவாரங்கள் சிலவும் காணப்படுகின்றன. இவற்றிடையே லிங்கக் கல்லைப் பொருத்தக் கூடிய வட்டமான குழியுடன் வட்ட வடிவில் ஆவுடையார் போன்ற கற்கள் சிலவும் காணப்படுகின்றன. இவை இங்கு காணப்பட்ட லிங்க வழிபாட்டுச் சின்னங்களின் சிதைவுகளாக இருக்கலாம்.

இப்பகுதியில் மலையாறு எனும் சிற்றாறு ஒன்றுக்கு குறுக்கே கட்டப்பட்ட புராதன அணைக்கட்டின் சிதைவுகளும் காணப்படுகின்றன. இவை யாவும் பண்டைய காலத்தில் இங்கு செல்வாக்குப் பெற்றிருந்த நாகர் குடியிருப்பின் அடையாளங்களாகும்.

## நாகபர்வத மலையின் குகைகளும் இடிபாடுகளும்

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களில் இப்பகுதியில் வாழ்ந்த ஆதிக்குடிகளான நாகர்களால் இங்கு நாகவழிபாட்டுத் தலம் அமைக்கப்பட்டு வழிபடப்பட்டிருக்க வேண்டும். நாக மலையிலிருந்து சுமார் 500 யார் தூரத்தில் அமைந்துள்ள சிறிய பாறைத் தொடரின் மத்தியில் வடக்குத் தெற்காக ஒரு குகை அமைந்துள்ளது. சுமார் 225 அடி சுற்றளவைக் கொண்ட இக்குகையில் ஆதிகால மக்கள் வாழ்ந்தமைக்கான தடயங்கள் காணப்படுகின்றன. இவர்கள் வரைந்த ஓவியங்கள் சிலவும் இங்கு காணப்படுகின்றன. குகையின் மூன்று பக்கங்களிலும் சுவர்கள் இருந்ததற்கான அடையாளங்கள் உள்ளன. செங்கட்டிகளைக் கொண்டு இச்சுவர்கள் அமைக்கப்பட்டிருந்தன. சுவர்களின் பின்னால் செங்கற்களைக் கொண்டு அன்னப் பறவை சிற்பங்கள் அழகாக அமைக்கப்பட்டுள்ளன. குகையின் முன்பக்கம் சுமார் 15 அடி அகலமும், 50 அடி நீளமும் கொண்ட மண்டபம் ஒன்றிருந்ததற்கான அடித்தளமும் காணப்படுகின்றது.

கற்தூண்கள் சிலவும், வாசற் படிக்கல்லும் இம்மண்டபத்தில் உள்ளன. மண்டபத்தின் வடக்குப் புறத்தில் தாழ்வாரம் இருந்ததற்கான அடையாளமும் உள்ளது. கிழக்கு நோக்கிய வாசலை



தலை உடைக்கப்பட்டு, வயிற்றுப்பகுதி சிதைக்கப்பட்டுள்ள புத்தரின் புராதன சிலை




யுடைய இக்குகை மண்டபமே புராதன நாக வழிபாட்டுத் தலமாக இருந்திருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. கிழக்கு நோக்கிய பிரதான வாசலும், மண்டபத்தின் வடக்கில் தாழ் வாரத்தின் பக்கம் இன்னுமொரு வாசலும் அமைக்கப் பட்டுள்ளது.

### பெருந்தொகையான பிராமிக் கல்வெட்டுகள்

அம்பாறை மாவட்டத்தில் அதிகப்படியான பிராமிக் கல்வெட் டுகளை உடைய இடம் ரஜகல எனும் இராச மலையாகும். இங்கு 48 கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதற்கு அடுத்தபடியாக அதிக பிராமிக் கல்வெட்டுகளைக் கொண்ட இட மாக நாகபர்வத மலை காணப்படுகிறது. இங்கு மொத்தமாக 38 பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் 21 கல் வெட்டுக்கள் 1970 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டன. மிகுதி 17 கல்வெட்டுகள் அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டவை யாகும்.


நாகபர்வத மலை பற்றியும், இங்குள்ள பிராமிக் கல்வெட்டுகள் பற்றியும் முதன் முதலாக சி.டபிள்யூ. நிக்கலஸ் எனும் ஆங் கிலேய அறிஞர் ஆராய்ந்து குறிப்புகளை வெளியிட்டார். 1963 ஆம் ஆண்டு ரோயல் ஆசியக் கழக அறிக்கையில் இவை தொடர்பான விபரங்கள் வெளிவந்தன. பொ.ஆ.மு 2 ஆம் நூற் றாண்டு காலப்பகுதியில் ரோகண இராச்சியத்தை ஆட்சி செய்து வந்த கோதாபயன் என்பவனால் இங்கு நாகபப்பத்த விகாரை அமைக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இங்குள்ள பெரிய கற்குகையில் 26 அடி நீளமான படுத்த நிலை யில் உள்ள புத்தர் சிலை ஒன்று காணப்படுகிறது. புதையல் பிரியர்களால் இதன் தலை உடைக்கப்பட்டு, வயிற்றுப்பகுதி சிதைக்கப்பட்டுள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. சிவன், நாகர் பற்றிய கல்வெட்டுகள் இங்கு காணப்படும் கல் வெட்டுகளில் நாகர் பற்றிய 3 கல்வெட்டுகளும், சிவன் பற்றிய 3 கல்வெட்டுகளும், சுதர்சன எனும் சொல் பொறிக்கப்பட்ட 3 கல் வெட்டுகளும் காணப்படுகின்றன. இவற்றைத் தவிர தமிழ் பிரா மிக்கே உரிய 'பருமகன்' எனும் சொல் பொறிக்கப்பட்ட நான்கு கல்வெட்டுகள் நாகபர்வத மலையில் காணப்படுகின்றன. அத் துடன் இராவணனின் பெயர் பொறிக்கப்பட்ட ஓர் கல்வெட்டும் இங்கே உள்ளது. இக்கல்வெட்டுகளில் பெரும்பாலானவை இங் குள்ள 200 அடி நீளமான ஓர் மலைக்குகையில் பொறிக்கப்பட் டுள்ளன. இக்கல்வெட்டுகளில் பெரும்பாலானவை பொ.ஆ.மு. 3 ஆம், 2 ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்டவையாகும். இவற்றில் சில பொ.ஆ. 7 ஆம் நூற்றாண்டுக்குரியவை எனவும் கண்டறியப்பட்டுள்ளது. பெருமகன் எனும் பட்டத்தையுடைய நாகர் தலைவன் இங்குள்ள குகைகளுக்குச் சொந்தக்காரனாக இருந்தமையும் சில கல்வெட்டுகள் மூலம் தெரிய வருகிறது.


இக்கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள 'சுதர்சன' என்பது மகா விஷ்ணுவின் சக்கரத்தின் பெயராகும். இலங்கையில் சுதர்சன சக்கரத்தை மூலமூர்த்தியாகக் கொண்ட இரு கோயில்கள் பற் றிய வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றில் ஒன்று யாழ். மாவட்டத்தில் உள்ள வல்லிபுரம் என்னுமிடத்தில் உள்ளது. இரண்டாவது ஆலயம் களுத்துறை மாவட்டத்தில் உள்ள பாணந்துறையில் அமைந்திருந்தது. இவை போன்ற சுதர்சனச் சக்கர வழிபாடு நாகமலையிலும் நிலவியிருக்க வேண்டும் என்பது இக்கல்வெட்டுகள் மூலம் தெரிகிறது.

### நாகர் குலம் பற்றிக் கூறும் கல்வெட்டு

இங்கு காணப்படும் நாகர் பற்றிய மூன்று கல்வெட்டுகளில் ஒன் றிலே தான் 'நாகபர்வதம்' எனும் சொல் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகள் மூலம் பம்பரகஸ்தலாவ மலைப்பகுதியில் நாக வழிபாடு, சிவ வழிபாடு மற்றும் விஷ்ணுவின் சுதர்சனச் சக்கர வழிபாடு போன்றவை காணப்பட்டுள்ளன என்பதை உறுதியாகக் கூறலாம்.




கிராமத் தலைவன் நாகன் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டின் பிரதி




நாக குலம் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டின் பிரதி

இங்கு பொறிக்கப்பட்டுள்ள நாகர் பற்றிய மூன்று கல்வெட் டுகளில் முதலாவது கல்வெட்டு நாகரின் குலம் பற்றிக் கூறு கிறது. இதன் விபரங்கள் பின்வருமாறு:

"பருமக படகரக நாக குலஹக கோதி மதஹக லேனே"

இது தமிழில் "அரச சமையல் கூடத்தின் தலைமை அதிகாரி யான பெரு மகன் நாகனின் குலத்தவரினதும், கோதி மாதாவினதும் குகை" எனப் பொருள்படும். ஆங்கிலத்தில் இதன் பொருள், "The cave of the family of the chief Naga, the Superintendent [of the] royal kitchen, and of Goti mata" என்பதாகும்.

இக்கல்வெட்டு நாகரைப் பற்றிய மிக முக்கியமான குறிப்பாகும். இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள குலம் எனும் பதத்தை பேராசிரியர் பரணவிதான குடும்பம் என குறிப்பிட்டுள்ளார். இதனால் இது நாக வம்சத்தைக் குறிப்பதற்குப் பதிலாக நாக வழி பாட்டைத் தமது குல வழிபாடாகக் கொண்டிருந்த குடும்பத் தையே குறிப்பிடுகிறது என பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இதன்படி நாகபர்வத மலைப்பகுதியில் நாக வழிபாடு நிலவியமை உறுதியாகிறது.

### கிராமத் தலைவன் நாகன் பற்றிய கல்வெட்டு

நாகர் பற்றிய இரண்டாவது கல்வெட்டில் பின்வரும் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன:

"கமிக நாக புத யச தேரச லேனே சுதசன ஜசட்டுஸ திச சகச தினே"

இதன் பொருள், "கிராமத் தலைவன் நாகனின் மகனான யச எனும் தேரரின் சுதஸ்சன எனும் பெயருடைய கற்குகை நாலா திசைகளிலும் இருந்து வரும் சங்கத்தாருக்கு வழங்கப்பட்டது" என்பதாகும். ஆங்கில மொழியில் இது "The cave [named] Sudassana, of the elder Yasa, son of the village councillor Naga, is given to the sangha, of the four quarters" எனப் பொருள் படுகிறது.



ஆவுடையார் போன்ற கற்கள்


### நாகபர்வத மலை பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு

இங்கு காணப்படும் நாகர் பற்றிய மூன்றாவது கல்வெட்டு இப் பகுதியில் முக்கிய கல்வெட்டாகும். இக்கல்வெட்டின் விபரங்கள் பின்வருமாறு:

"படத மிதென மபிட நாக பவத செனசனே"

இதன் பொருள், "மரியாதைக்குரிய மித்தவினால் நாக பர்வதத் தில் கட்டப்பட்ட குடியிருப்பு" என்பதாகும். ஆங்கிலத்தில் இது "The residence at Nagapabbata, caused to be built by the Venerable Mitta" எனப் பொருள் கொள்ளப்படுகிறது. இங்குள்ள மலையின் பெயர் நாகபர்வதம் என்பது இக்கல்வெட்டின் மூலமே எமக்குத் தெரியவருகிறது.

நன்றி: என். கே. எஸ். திருச்செல்வம் – எழுநா முகநூல்



நாகபர்வத மலைப்பகுதியின் இன்னுமோர் தோற்றம்

# விடுதலைப் போராட்டத்தில்

## எதிரிகளும் – நண்பர்களும் – துரோகிகளும்

ஒரு விடுதலைப் போராட்டம் சரியான திசைவழியில் தனது இறுதி இலக்கை நோக்கி வெற்றி நடை போடுவதற்கு, முதலில் எதிரிகள் யார்? நண்பர்கள் யார்? என்பதை தீர்மானிப்பது அடிப்படையானதும் மிக முக்கியமானதுமான ஒரு விடயமாகும்.

பல விடுதலைப் போராட்டங்கள் அடக்கு முறையாளர்களால் முறியடிக்கப்பட்டதற்கும், அவை தமது இலட்சியத்தின் இறுதி இலக்கை அடைய முடியாமல், எதிரிகளிடம் சலுகைகளுக்காக மண்டியிட்டு, சரணாகதியடைந்ததற்கும் இந்த முரண்பாட்டை சரியான முறையில் கணிப்பிடத் தவறியதே அடிப்படைக் காரணமாகும்.

நாங்கள் யாருக்கு எதிராகப் போராடுகின்றோமோ? அவர்கள் எல்லோரும் எதிரிகள். இந்தப் போராட்டத்தில் எமக்கு உதவுபவர்கள் எல்லோரும் நண்பர்கள். இது சிறு பிள்ளைகளுக்கும் தெரிந்த சாதாரணவிடையம் என்று பலர் நினைக்கலாம்.

உண்மையில் இப்படிப் பொதுப்படையாக நுனிப்புல் மேய்வது போல இந்த விடயத்தைப் பார்க்கக்கூடாது.

நாம் வாழுகின்ற இந்த உலகம் முரண்பாடுகளால் கட்டமைக்கப்பட்டது. தனி மனிதர்களுக்கிடையே முரண்பாடு, குழுக்களுக்கிடையே முரண்பாடு, சமூகங்களுக்கிடையே முரண்பாடு, இனங்களுக்கிடையே முரண்பாடு, நாடுகளுக்கிடையே முரணபாடு என்று முரண்பாடு என்பது எங்கும் எதிலும் நிறைந்திருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால் இந்த உலகத்தில் வாழுகின்ற ஒவ்வொரு தனி மனிதர்களினதும், சமூகங்களினதும், இனங்களினதும் இருப்பு என்பதும் முரண்பாடுகளினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. இந்த முரண்பாட்டை, அடிப்படை முரண்பாடு, பிரதான முரண்பாடு, என்றும் பின்னர் அதையும் பகை முரண்பாடு, நட்பு முரண்பாடு என்ற வகைப்படுத்திக் கொண்டு போகலாம்.

உதாரணமாக எமது ஈழவிடுதலைப் போராட்டத்தை எடுத்துக் கொண்டால் தமிழ்த் தேசியத்துக்கும், சிங்களத் தேசியத்துக்கும் இடையிலான முரண்பாடு அடிப்படை முரண்பாடாகவும், அதே நேரத்தில் சிங்களத் தேசியத்தின் பிரதிநிதிகளாக இருந்து தமிழ் மக்கள் மீது அடைக்குமுறையை திணிக்கும் சிறீலங்கா அரசாங்கத்துக்கும் எமக்கும் இடையிலான முரண்பாடு பிரதான முரண்பாடாகவும் இருக்கிறது.

சிங்களத் தேசியத்துக்கும் தமிழத்தேசியத்துக்கும் இடையிலான முரண்பாடு அடிப்படை முரண்பாடு என்கிற போது எந்தவொரு சந்தார்ப்பத்திலும் இந்த இரண்டு தேசிய இனங்களும் தங்கள் சுயத்தை இழந்து ஒன்றாகக் கலந்து இலங்கைத் தேசியம் என்ற ஒரு கூட்டுக்குள் வரமுடியாது. அப்படி வருவதென்பது தமிழ்த் தேசியத்தை சிங்களத் தேசியம் விழுங்கி ஏப்பமிடுவதற்கான சாத்தியப்பாட்டை கொண்டது என்கின்ற தளத்தில் நின்றே பார்க்கப்படுகிறது.

கடந்த நூறு வருடகாலத்துக்கும் மேலாக சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களின் வாழ்வுரிமை, நிலவுரிமை, சொத்துரிமை, அரசியல் உரிமை உள்ளடங்கலான அனைத்து அடிப்படை உரிமைகளையும் பறித்த ஒரு வரலாற்றுத் தொடர்ச்சியின் அனுபவப் பாடங்களின் அடிப்படையில் இது ஒரு அடிப்படை முரண்பாடாக நிறுவப்பட்டுவிட்டது.

பிரித்தானிய காலனி ஆட்சிக்காலத்திலேயே இந்த இன முரண்பாடு அடிப்படை முரண்பாடாக இருந்த போதிலும் அப்போது அதிகாரம் பிரித்தானியர்கள் கையில் இருந்ததால், இது பிரதான முரண்பாடாக ஆகவில்லை. ஆனால் 1948 ப்பெரவரி மாதம் 4ஆம் திகதி அதிகாரம் சிங்களப் பெரும் தேசியவாதிகளிடம் கைமாறிய பின்பு தமிழ் தேசிய இனம் தன்னுடைய இருப்பை அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டுமானால் சிங்கள தேசியத்துடன் போராடித்தான் ஆகவேண்டும் என்ற நிலை தோன்றியதுடன் இந்த முரண்பாடு பிரதான முரண்பாடாகவும் கூர்மையடைந்தது. அதேவேளை 1980களின் பின்னர் தமிழ் மக்கள் மீது சிங்கள அரசு பிரகடனப்படுத்திய யுத்தத்தை திணித்த பின்பு இது இன்னும் கூர்மையடைந்து அடிப்படை முரண்பாடு பிரதான முரண்பாடு பகை முரண்பாடு என்று மூன்று பரிமாணங்களையும் எடுத்தது.

இது தான் நாம் எமது போராட்டத்தில் எதிரிகள் யார், நண்பர்கள் யார் என்பதை கோட்பாட்டு ரீதியாக நிறுவுவதற்கான சரியான தளமாகும்.

தமிழர்களான எம்மைப் பொறுத்தவரை சிறீலங்கா அரசம் அதை தாங்கிநிற்கின்ற அதிகார வர்க்கமும் அந்த அரசின் ஆயுதப்படைகளும் அந்த அரசுக்கு துணை போகின்ற கண்ணுக்குத் தெரிந்த அல்லது தெரியாத அனைத்து ஆதிக்க சக்திகளும் நமது எதிரிகள் என்ற வரையறுத்துக் கொள்ளலாம். தமிழ் மக்களின் நலனில் உண்மையான அக்கறையுள்ள, சிங்களப் பேரினவாதிகளிடம் அடிமைப்பட்டுள்ள நமது தாயகத்தை மீட்க வேண்டும் என்பதில் உறுதியுடன் இருக்கும் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

அடுத்து எதிரிகள் யார் என்பதை நாங்கள் இனம்காணும் போது எதிரிக்கு எதிராக போராடுபவர்கள் எதிரியின் எதிரிகள் எல்லோரும் நமது நண்பர்கள் என்று சிலர் சாதாரணமாக முடிவு கட்டி விடுகின்றார்கள். இது ஒரு தவறான பார்வையாகும். பல விடுதலைப் போராட்டங்கள் முறியடிக்கப்பட்டதற்கும் தோல்வியில் முடிந்ததற்கும்இந்த தெளிவற்ற பார்வைதான் காரணமாக அமைந்திருக்கிறது.

ஏனென்றால் எதிரியை நாங்கள் சுலபமாக இனங்காண முடியும். அவன் என்னதான் வேஷங்கள் போட்டாலும் அவனது ஒவ்வொரு நகர்வையும் தன்னை மையப்படுத்தி அமைக்கின்ற வியூகங்களையும் வைத்து நாங்கள் சுலபமாக அவனை இனங்கண்டுவிடலாம்.

ஆனால் நண்பர்கள் இனங்காண்பதென்பது அவ்வளவு சுலபமான ஒன்றல்ல. ஏனென்றால் நண்பர்களுக்குள் எப்போதும் எதிரிகள் ஒழித்திருப்பார்கள். அதைவிட எதிரியை விட ஆபத்தான துரோகிகள் மறைந்திருப்பார்கள்.

நண்பர்கள் என்று சொல்கின்ற போது அவர்களுக்கும் எங்களுக்கும் உள்ள உறவு என்ன? அவர்களுக்கு இருக்கக் கூடிய முரண்பாட்டின் தன்மை என்ன? அவர்களுக்கும் எங்களுக்கும் இடையில் இருக்கக் கூடிய முரண்பாட்டின் தன்மை என்ன என்பதை எல்லாம் நாங்கள் சரியான முறையில் கணக்கில் எடுத்துப் பார்க்க வேண்டும்.

தமிழ் மக்களான எங்களைப் பொறுத்தவரை, நாங்கள் எங்கள் பிரதான எதிரியான சிறீலங்கா அரசிடமிருந்து விடுதலை பெறுவதற்காகப் போராடுகின்றோம். எங்களுடைய போராட்டத்தை ஆதரிக்கின்ற எங்களுடைய போராட்டத்துக்கு உதவுகின்ற எல்லோருமே எங்களது நண்பர்கள் என்று நாங்கள் சொல்வதானால், முதலில் அந்த நண்பர்கள் நம்மை ஆதரிப்பதற்குரிய நமக்கு உதவிசெய்வதற்குரிய நோக்கம் என்ன என்பதை நாம் ஆராய வேண்டும்.

உதாரணமாக சிங்கள மக்கள் மத்தியில் இருந்து அல்லது சிங்களக் கட்சிகளிலிருந்து சிலர் எங்களுக்கு உதவமுன்வருகின்றார்கள் என்றால் எந்த அடிப்படையில் அவர்கள் எங்களுக்கு உதவ முன்வருகின்றார்கள், எங்களுடைய பிரதான எதிரியான சிறீலங்கா அரசுக்கும் அவர்களுக்கும் இடையிலான முரண்பாடு என்ன?

இந்த முரண்பாட்டை கையாள்வதன் மூலம் நமக்குக் கிடைக்கக் கூடிய இலாபம் என்ன? என்பதையெல்லாம் கணக்குப் போட்டுப் பார்த்துத்தான் அவர்களை நாங்கள் எமது நண்பர்களாக்கிக் கொள்ள முடியும். அதுவும் எதிரியின் எதிகள் எமக்கு நண்பர்கள் என்ற கோட்பாட்டின் அடிப்படையில்தான் அதை செய்யமுடியும். இந்த எதிரியின் எதிரிகள் நாளைக்கு எதிரியின் நண்பர்களாகி விட்டால் எங்களின் எதிரிகள் ஆகிவிடுவார்கள் என்பதையும் இந்த விடயத்தில் நாங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து எங்களுக்குள் இருக்கும் நண்பர்களை எப்படி இனங்காண்பது என்பது ஒரு முக்கியான பிரச்சினை எங்களுக்குள் இருந்தும் நிறையப்பேர் “நாங்கள் மக்களின் விடுதலைக்காகப் போராடுகின்றோம், உரிமைக்காக போராடுகின்றோம்” என்று சொல்லிக் கொண்டு வருவார்கள்.

இதிலே உண்மையாக மக்களின் விடுதலைக்குப் போராடுபவர்கள் யார்?

போராட்டத்தை வைத்து பிழைப்பு நடத்துபவர்கள் யார்? என்பதை நாம் சரியாக இனங்காண வேண்டும்.



ஏனென்றால் போராளிகளைவிட பிழைப்பு வாதிகள் தாங்கள் அதிகளவுக்கு மக்களின் நலனில் அக்கறை உள்ளவர்களாகவும், மக்களுக்கு பலனை எதிர்பார்க்காமல் சேவை புரிபவர்களாகவும் தங்களை சுயவிளம்பரப்படுத்திக் கொண்டு வருவார்கள்.

பட்டம், பதவி, வேலைவாய்ப்பு, பெற்றுத்தருபதாகவும் கோவில், குளங்களை புனரமைத்து திருப்பணி செய்து தருவதாகவும் சொல்லி மக்களை உரிமைப் போராட்டத்தில் இருந்து திசை திருப்புவதற்கு இவர்கள் எப்பொதும் முயன்று கொண்டிருப்பார்கள்.

எதிரிக்கும் இவர்களுக்கும் உள்ள உறவு என்பது நட்பு ரீதியானது. எங்களுக்குள் இருந்து கொண்டு தங்களுடைய பிழைப்புக்காக எதிரிக்கு துணைபோகும் இவர்கள் எப்போதுமே ஆபத்தானவர்கள்.

உதாரணமாக 1980 காலப்பகுதியிலே தமிழ் மக்களின் விடுதலைக்காக என்று சொல்லிக் கொண்டு பல இயக்கங்கள் மக்கள் மத்தியில் உலா வந்தன. சிங்கள சாவோனிஸ்ட் அரசு, சிங்கள பௌத்த இனவாத அரசு, ஆயுதப் புரட்சி, மக்கள் விடுதலை, சோசலிசத் தமிழீழம் என்றெல்லாம் அரசியல் வார்த்தை அலங்காரங்களை அள்ளி வீசிக் கொண்ட உலா வந்த இந்த இயக்கங்கள் இப்போது எங்கே என்று பார்த்தால் அன்று அவர்கள் விமர்சித்த அதே சாவோனிஸ்ட் (பேரினவாதம்) அரசின் காலடியை நக்கிக் கொண்டிருக்கின்றன.

விடுதலை சாத்தியம் இல்லை, ஆயுதப் போராட்டம் சாத்தியமில்லை, உரிமைகளை போராடிப் பெற முடியாது, யாசித்துத் தான் பெறவேண்டும். பாராளுமன்ற வழிமுறைகள் உன்னதமானவை என்றெல்லாம் இந்த முன்னாள் ஆயுதக் குழுத் தலைவர்களில் பலர் இப்போது பொன் மொழிகளை உதிர்த்துக் கொண்டிருப்பதை நீங்கள் அவதானித்திருக்கலாம்.
1984-85களில் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் சென்னைத் தெருக்களில் தாலிக் கொடிகளை சங்கிலிகளை அறுத்த, ஆட்களை கடத்தி காசு பறித்து கொலை செய்த இவர்கள், இன்று பெரும் கோடீஸ்வரர்கள். பெரிய ஜனநாகயகவாதிகள் மந்திரிகள். இயற்கை கடன் கழிப்பதற்கும் ஐந்து நட்சத்திர ஹோட்டல் கழிப்பறை இல்லாவிட்டால் இவர்களுக்கு சரிப்பட்டு வராது.

இந்தப் பணமும் பகட்டும் எங்கிருந்து வந்தது?

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை காட்டிக் கொடுப்பதற்கும், போராளிகளின் தியாகத்தை கொச்சைப் படுத்துவதற்கும் கிடைக்கின்ற சன்மானம்தான் இவையாகும்.

தமிழ் மக்களின் விடிவுக்காக விடுதலைக்காக தொடக்கிய ஆயுதப் போராட்டத்தை பணத்துக்காகவும், பதவிக்காகவும் விலைபேசி விற்ற இன்றும் விற்றுக் கொண்டிருக்கும் இவர்களை, எங்களது நண்பர்கள் என்றோ – இவர்களுக்கும் எங்களுக்கும் உள்ள முரண்பாடென்பது நட்பு முரண்பாடென்றோ எப்படிச் சொல்ல முடியும்?

# விடுதலைப் போராட்டத்தில்

## எதிரிகளும் – நண்பர்களும் – துரோகிகளும்

தமிழ் மக்களைப் பொறுத்த வரை 1833ம் ஆண்டும் 1972 ஆண்டும் மிக முக்கியமானவை.

1833ம் ஆண்டு பிரித்தானிய காலனிய ஆட்சியாளர்கள் தமிழர் தாயகத்தை அதன் இறைமையை இலங்கை பாராளுமன்ற அமைப்புமுறை என்ற ஒற்றையாட்சிச் சிறைக்குள் அடைத்த ஆண்டாகும்.

1972ம் ஆண்டு சிங்கள தேசியம் பிரித்தானிய சார்புப் பாராளு மன்ற ஆட்சி முறைக்கு முடிவுகட்டி "சிறீலங்கா" ஜனநாயக சோச லிசக் குடியரசு" என்ற தனது நலனுக்கான ஆட்சிமுறையை உருவாக்கி தமிழர் தாயகத்தை மறுபடி சிறீலங்கா என்ற சிறைக் குள் அடைத்த ஆண்டாகும்.

பிரித்தானிய மொழியில் சிந்தித்து, பிரித்தானியப் பார்வை பார்த்து, பிரித்தானிய பாராளுமனற் ஆட்சிமுறையை தூக்கி வைத்துக் கொண்டாடிய முன்னாள் தமிழ்த்தலைமைகள், முரண்பாட்டை சரியாகக் கவனிக்கத் தவறியதன் விளைவுதான் இன்று தமிழினம் சந்தித்த இழப்புகளுக்கெல்லாம் அடிப் படையாகும்.

1833ம் ஆண்டு பிரித்தானிய காலனிய ஆட்சியின் அரசியல் சட்டத்தால் கட்டுப்படுத்தப்பட்ட எமது தாயகத்தின் மீதான ஆளுமை, 1972ல் சிங்கள தேசம் பிரித்தானிய அரசியல் யாப்பை தூக்கி எறிந்துவிட்டு தனக்கென புதிய குடியரசு அரசியல் யாப்பை உருவாக்கியபோது விடுபட்டுப் போனது. அதாவது தமிழர் சேதம் அரசியல் சட்ட ரீதியாக மற்றவர்களால் ஆளுமை செய்யப்பட முடியாத ஒரு தேசமாக மாறியது.

ஆனால் சிறீலங்கா ஜனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தில், 6 மாதகாலத்துக்குள் வந்த அந்த அரசியல் அமைப் புக்கும், அந்த நாட்டுக்கும், அந்த நாட்டின் கொடிக்கும் விசுவாச மாக இருப்போம் என்று உறுதி மொழி எடுத்துக்கொள்ளா விட்டால் பாராளுமன்றப் பதவிகள் பறிபோய்விடும் என்று அறி விப்பு வந்தபோது அப்போதைய தமிழ்த்தலைவர்கள் ஓடோடிச் சென்று உறுதிமொழி எடுத்து எங்கள் தேசத்தை மறுபடியும் சிறீலங்காவுக்கு அடிமையாக்கிய வரலாறு மறக்க முடியாதது.

அதுவும் பாராளுமன்றத்துக்குச் செல்லாவிட்டால் தமிழ் மக் களது உரிமைகளை வென்றெடுக்க முடியாது என்று அதற்கு நியாயம் கற்பித்தது மன்னிக்க முடியாத ஒன்று.

சிங்கள தேசத்துக்கும், தமிழத் தேசத்துக்கும் இடையிலான முரண்பாட்டை நட்பு முரண்பாடாகக் கருதி, பாராளுமன்றத்தில் அரசியல் சாசன விதிகளுக்கூடாக இந்த முரண்பாட்டைத் தீர்த்து தமிழ் மக்களின் உரிமைகளை வென்று விடலாம் என்று எண் ணிய அவர்களது முட்டாள் தனம் தான் 1958, 1961, 1977, 1983 இனக் கலவரங்களாக வெடித்து தமிழ் மக்களின் உயிர் களையும் உடமைகளையும் காவுகொண்டது.

அதேபோல ஆயுதக்குழுக்களாக இருந்து இன்று அடிவருடிக் குழுக் களாக மாறியிருக்கும் துரோகிகள்தான் கொக்கட்டிச் சோலை, மயிலந்தனை, சென்ரல்காம்ப், வல்வை படுகொலைக ளுக்கும், செம்மணி போன்ற புதைகுழிகளுக்கும் காரண மானவர்கள் என்பதை மறுக்க முடியாது.

எனவே எப்படி சிங்கள பேரினவாத அரசுக்கும் எமக்கும் உள்ள முரண்பாடு அடிப்படை முரண்பாடாகவும், பிரதான முரண் பாடாகவும், பகை முரண்பாடாகவும் இருக்கிறதோ. அப்படித் தான் அந்த சிங்கள பேரினவாத அரசின் நோக்கங்களை நிறை வேற்றுவதற்கு துணை போகும் துரோகிகளுக்கும், துரோகச் குழுக்களுக்கும், எமக்குமுள்ள முரண்பாடும் பிரதான முரண் பாடாகவும், பகை முரண்பாடாகவும் இருக்கிறது.

ஒரு விடுதலைப் போராட்டத்தில் எப்படி எதிரியின் விடயத்தில் நெகிழ்வுப் போக்கை கடைப்பிடிக்க முடியாதோ அப்படித்தான் துரோகிகள் விடயத்திலும் என்பது உண்மையாகும்.

எதிரிகளை விட ஆபத்தான துரோகிகள் விடயத்தில் ஜன நாயகம், பன்முகத் தன்மை எல்லாம் பார்க்க முடியாது. ஏனென் றால் எதிரியிடம் மண்டியிட்ட இனமும், துரோகிகளை வாழ விட்ட இனமும் வாழ்ந்ததாக வரலாறு இல்லை. இது உலக விடுதலை இயக்கங்களின் வரலாறுகள் நமக்கு உணர்த்தி நிற்கும் பாடமாகும்.

- திறலோன்



# தமிழ் மக்கள் தங்களைத் திரட்டாமல் உலக சமூகத்தைத் திரட்ட முடியாது!

20.09.2024



பொது வேட்பாளர் என்ற கருத்துருவத்தை முதலில் முன்வைத்த மு.திருநாவுக்கரசு தமிழகத்தில் தங்கியிருப்பதனால், அவர் இந்தியாவின் ஆள் என்ற சந்தேகம். அதனால், பொது வேட்பாளரை இந்தியாவின் ப்ரொஜக்ட் என்று சந்தேகித்தார்கள். அவருக்கு நெருக்கமாக இருந்தவர்கள் பொது வேட்பாளர் என்ற கருத்துருவத்தை தொடர்ந்து வளர்த்துச் சென்றபடியால் அதுவும் இந்தியாவின் வேலையாக இருக்கலாம் என்ற சந்தேகம். இம்முறை தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்னரே சுரேஷ் பிரேமச்சந்திரன் அந்த விடயத்தை கையில் எடுத்தார். அதனால் அது இந்தியாவினுடைய வேலையாகத்தான் இருக்கலாம் என்ற சந்தேகத்தை முன்வைத்தவர்கள் மேலும் உஷாரானார்கள். அதன்பின் யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஒரு காணொளி ஊடகத்தின் அனுசரணையோடு இயங்கிய ஒரு குடிமக்கள் சமூகம் பொது வேட்பாளர் தொடர்பாக கருத்தரங்குகளை நடத்தியது. அக்குடிமக்கள் சமூகத்தின் பிரதானியாக இருப்பவர் 13ஆவது திருத்தத்தை தொடர்ச்சியாக ஆதரித்து வருபவர். அவர் அதை வெளிப்படையாகத்தான் செய்கிறார். எனவே அந்தச்சிவில் சமூகம் இந்த விடயத்தைக் கையில் எடுத்த காரணத்தால் அது இந்தியாவினுடைய வேலையாகத்தான் இருக்க வேண்டும் என்ற சந்தேகம் மேலும் அதிகரித்தது. முடிவில் பொது வேட்பாளரை முன்னிறுத்துவதற்கு ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கிய பொழுது, அதில் உள்வாங்கப்பட்ட பெரும்பாலான கட்சிகள் இந்தியாவுக்குக் கடிதம் எழுதியவை. அதனால் சந்தேகம் மேலும் கூடியது.

மேற்சொன்ன சந்தேகங்கள் அவ்வளவும் போதும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு. எதுக்கெடுத்தாலும் இந்தியாவின் சதி என்று குற்றஞ்சாட்டும் அக்கட்சியானது, பொது வேட்பாளர் என்ற விடயம் இந்தியாவின் அனுசரணையோடு மேடையேற்றப்படும் நாடகம் என்று கூறிவருகிறது.

அதேசமயம் பொது வேட்பாளரைக் கண்டு பயப்படும் தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணியானது அதனை வேறுவிதமாக அணுகியது. சுமந்திரன் இந்தியத் தூதுவரை சந்தித்து பொது வேட்பாளர் தொடர்பாகவும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவும் அவர் தெரிவித்த கருத்துக்களை தனக்கு விசுவாசமான பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வெளியே கொண்டு வந்தார். அந்தச் செய்திகள் யாவும் இந்தியா பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை தென்னிலங்கையில் உள்ள யாரோ ஒரு வேட்பாளரோடு பேச்சுவார்த்தைக்கு போகுமாறு கேட்கிறது என்பதைச் சாராம்சமாகக் கொண்டிருந்தன.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் இலங்கைக்கு வந்த எந்த ஒரு இந்திய பிரதானியும் இதுவரை பொது வேட்பாளருக்கு ஆதரவாக கருத்து தெரிவிக்கவில்லை என்பதே தொகுக்கப்பட்ட அவதானிப்பு ஆகும்.

தமிழரசு கட்சிக்குள் சிறீதரன் அணி பொது வேட்பாளரை வலிமையாக ஆதரிக்கிறது. சுமந்திரனுக்கும் சிறீதரனுக்கும் இடையிலான மோதலுக்குள் பொது வேட்பாளர் எப்பொழுதோ சிக்கிவிட்டார். இந்நிலையில் சிறீதரனை பலவீனப்படுத்துவதற்காகவும் பொது வேட்பாளரைப் பலவீனப்படுத்துவதற்காகவும் இந்தியா பொதுவேட்பாளர் என்ற தெரிவைக் குறித்து மகிழ்ச்சியாக இல்லை என்ற செய்தியை சுமந்திரனுக்கு நெருக்கமான பத்திரிகைகள் அடிக்கடி பிரசுரித்தன. அதன்மூலம் சிறீதரன் இந்தியாவுக்கு விருப்பமில்லாத ஒரு விடயத்தை செய்கிறார் என்பதை அவருக்கு குறிப்பாலுணர்த்த முற்பட்டன.

ஆனால் இந்த இடத்தில் அப்பாவித்தனமான ஒரு கேள்வி எழும். பொது வேட்பாளர் இந்தியாவின் ப்ரொஜக்ட் என்றால் பிறகு ஏன் இந்திய இராஜதந்திரிகளும் பிரதானிகளும் அவ்வாறு கருத்து தெரிவிக்கின்றார்கள்?

கடந்த வாரத்துக்கு முதல் வாரம் இந்திய பாதுகாப்புத் துறை ஆலோசகர் அஜித்குமார் டோவால் கொழும்புக்கு வந்திருந்தார். அவர் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்திருந்தார். அச்சந்திப்பின்போது அவர் பொது வேட்பாளருக்கு எதிராகக் கருத்து தெரிவித்ததாக செய்திகள் வெளிவந்தன. சந்திப்பில் தமிழ்த் தேசியப் பொதுக்கூட்டமைப்பு அதாவது பொது வேட்பாளரை முன்னிறுத்தும் பொதுக் கட்டமைப்புக்குள் அங்கும் வகிக்கும் கட்சிகளும் கலந்து கொண்டன. எனவே அக்கட்சிகளுக்கும் அவர் சொன்ன செய்தி அதுதான். இந்தியா பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை என்பதனை அவர்கள் மறைமுகமாக உணர்த்த முற்படுகின்றார்கள். இந்தியாவின் பாதுகாப்புத்துறை ஆலோசகர் அவ்வாறு கூறிய பின்னரும் அது இந்தியாவின் ப்ரொஜக்ட்தான் என்று நம்புகிறவர்கள் இப்பொழுதும் நாட்டில் உண்டு.

இந்த விடயத்தோடு தொடர்புடைய மற்றொரு சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தின் அதிகாரிகள் கிளிநொச்சிக்குச் சென்றார்கள். அங்கு அவர்கள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராகிய சமத்துவ கட்சியின் தலைவர் சந்திரகுமாரை சந்தித்திருக்கிறார்கள். அதன்பின் ஒரு தொகுதி ஊடகவியலாளர்களையும் சந்தித்திருக்கிறார்கள். மேற்படி சந்திப்பானது சிறீதரனுக்கு சில செய்திகளை உணர்த்தும் நோக்கிலானது என்று அரசியல் வட்டாரங்களில் ஊகிக்கப்படுகின்றது. சிறீதரனுடைய பலமான கோட்டையான கிளிநொச்சியில் அவருடைய அரசியல் எதிரியான சந்திரக்குமாரை அவருடைய அலுவலகத்திலேயே இந்தியத் துணைத் தூதுவர் தேடிச்சென்று சந்தித்து அவருக்கு ஒரு அந்தஸ்தை கொடுத்தமை என்பதும், சந்திப்பின்போது சஜித் பிரேமதாசாவை ஆதரிக்குமாறு சூசகமாக வலியுறுத்தியமை என்பதும் சிறீதரனுக்கு சில விடயங்களை உணர்த்தும் நோக்கிலானவை. அதாவது பொது வேட்பாளரின் விடயத்தில் இந்தியா ஆதரவாக இல்லை. எனவே பொது வேட்பாளருக்கு எதிராக சஜித்தை ஆதரிக்கும் சந்திரகுமாரை தேடிச் சென்று சந்தித்ததன் மூலம் இந்தியா சிறீதரனுக்கு மறைமுகமாக அழுத்தம் கொடுக்க முற்படுகின்றதா?

எனினும் அச்செய்தி வெளிவந்த பின்னர்தான் சிறீதரன் கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சியில் ஒரு கூட்டத்தைக் கூட்டினார். அவருடைய கட்சி செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்ட அந்த கூட்டத்தில் மாவட்டத்தில் எவ்வாறு பொது வேட்பாளருக்கு ஆதரவான பணிகளை திட்டமிட்டுப் பரவலாக்கலாம் என்பது தொடர்பாக ஆராயப்பட்டது. அதாவது சிறீதரன் பொது வேட்பாளரின் விடயத்தில் தொடர்ந்து உறுதியாக நிற்கிறார் என்ற செய்தி அந்த கூட்டத்தில் உண்டு.

மேலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் சிறீதரனுக்கு அடுத்தடுத்த நிலையில் உள்ள முன்னாள் பிரதேச சபைத் தவிசாளர் வேழமாலிகிதன் கலந்து கொண்டார். அக்கூட்டத்தில் அவர் உரையாற்றினார். அதுவும் பொது வேட்பாளர் தொடர்பில் சிறீதரன் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை என்பதனை வெளிப்படுத்தியது.

இந்த விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு இப்பொழுது ஓரளவுக்கு வெளிப்படையாகத் தெரியத்தொடங்கிவிட்டது. இந்திய வெளியுறவு அமைச்சர், இந்தியாவின் பாதுகாப்புத் துறை ஆலோசகர், கொழும்பில் உள்ள இந்தியத் தூதர், யாழ்ப்பாணத்தில் உள்ள உபதூதுவர் போன்றவர்கள் தென்னிலங்கையில் உள்ள யாராவது ஒரு வேட்பாளரை ஆதரிக்குமாறு கூறிவரும் ஒரு பின்னணியில், பொது வேட்பாளர் இந்தியாவின் ப்ரொஜக்ட் என்று கூறுவது எந்த வகை அறிவியல்?

அவ்வாறு சந்தேகிப்பவர்கள் மேலும் ஒரு தர்க்கத்தை முன்வைக்கின்றார்கள். பொது வேட்பாளர் சஜித்தின் வாக்குகளைக் கவர்ந்தால் ரணில் வெல்வார். எனவே ரணிலை வெல்லவைக்க வேண்டும் என்ற இந்தியாவின் விருப்பத்தை பொது வேட்பாளர் நிறைவேற்றுகிறார் என்று ஒரு வியாக்கியானம். முதலாவதாக ரணில் ஆட்சிக்கு வருவதை இந்தியா விரும்புகின்றது என்பது சரியா? ரணில் விக்கிரமசிங்க புத்திசாலிதந்திரசாலிமுதிர்ச்சியானவர். அவர் எல்லாப் பேரரசுகளையும் சம தூரத்தில் வைத்துச் சமாளிக்கக் கூடியவர் என்பது ஒரு பொதுவான அவதானிப்பு ஆகம். அவ்வாறு எல்லா நாடுகளையும் சம தூரத்தில் வைத்துக் கையாளக்கூடிய ஒரு தலைவர் தெரிவு செய்யப்படுவதை இந்தியா விரும்பவில்லை என்பது ஏற்கனவே நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்வதற்கான தேர்தல் நடந்த பொழுது தெரிய வந்தது. அதில் இந்தியா ரணிலுக்கு எதிராக நின்ற டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்குமாறு தமிழ் கட்சித் தலைவர்களை கேட்டிருந்தது.

கடந்த சில வார கால நகர்வுகளைத் தொகுத்துப் பார்த்தால் இந்தியா வெளிப்படையாகவே சஜித்தை ஆதரிக்குமாறு கேட்கிறது என்று தெரிகிறது. அப்படியென்றால் இந்தியா பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை என்று பொருள். இந்தியா பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை என்று தெரிந்த பின்னரும் பொது வேட்பாளரை முன்னிறுத்தும் அணியை இந்தியா இயக்குகிறது என்று கூறுவது எந்த வகை அறிவியல் ?

ரணிலை வெல்ல வைப்பதற்கான இந்தியாவின் நிகழ்ச்சிநிரலைத்தான் பொது வேட்பாளர் முன்னெடுக்கிறார் என்ற சூழ்ச்சிக்கு கோட்பபாடு சரியென்றால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தீவிரமான நிலைப்பாடுகள் தென்னிலங்கையில் யுத்த வெற்றிவாதத்தை தக்க வைக்க உதவும். அதன்படி மஹிந்த ராஜபக்சவை பலமாக வைத்திருப்பதுதான் முன்னணியின் மறைமுக நிகழ்ச்சிநிரல் என்ற சூழ்ச்சிக் கோட்பாடும் சரியா? அல்லது பகிஷ்கரிப்பானது தென்னிலங்கை வேட்பாளர்கள் யாரோ ஒருவருக்கு சாதகமானது என்று வியாக்கியானப்படுத்தலாமா? ஏனெனில் ஜனாதிபதித் தேர்தலில் விழும் மொத்த வாக்குகளில் ஐம்பது விகிதத்துக்கு மேல் எடுப்பவர்தான் ஜனாதிபதியாக வரலாம். ஆனால் தமிழ் மக்கள் வாக்களிக்காவிட்டால் விழும் வாக்குகளின் எண்ணிக்கை குறையும். அதனால் விழுந்த வாக்குகளில் 50 விகிதம் என்பது ஒப்பீட்டளவில் குறையும். அது தென்னிலங்கை வேட்பாளர்களுக்குச் சாதகமானது. எனவே பாகிஸ்தரிப்பானது தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு சாதகமானது என்று ஒரு வியாக்கியானத்தைச் செய்தால் அதற்கு என்ன பதில்?

அதைவிட மேலும் ஒரு ஆழமான கேள்வியை இங்கு கேட்கலாம். உலகில் உள்ள எந்த ஒரு பேரரசும் அயலில் உள்ள சிறிய இனத்தை அல்லது நாட்டை ஒற்றுமைப்படுத்த விரும்புமா? அல்லது “டிவைட் அண்ட் ரூல்” என்று ஆங்கிலத்தில் கூறப்படுவதுபோல பிரித்துக் கையாள முயற்சிக்குமா? இந்தப் பூமிப் பந்தில் சிதறிப் போய் இருக்கும் ஒரு சிறிய மக்கள் கூட்டத்தை ஒன்றாகத் திரட்ட வேண்டுமா இல்லையா? தமிழ் மக்கள் மத்தியில் கூட்டுணர்வை, தேசிய உணர்வை பலப்படுத்த வேண்டுமா இல்லையா? அவ்வாறு தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவதுதானே தேசியவாத அரசியல்?

ஒரு மக்கள் கூட்டத்தை அவ்வாறு ஒற்றுமைப்படுத்தும் முயற்சிகளை ஒரு பக்கத்துப் பேரரசின் சதிவேலை என்று சந்தேகிக்கும் அறிவாளிகள் தங்களுடைய இனத்தை அவமதிக்கிறார்கள் தாங்கள் படித்த பல்கலைக்கழகங்களை அவமதிக்கிறார்கள். முற்கற்பிதங்களும் சந்தேகங்களும் ஊகங்களும் அவர்களுடைய அறிவை மழுங்கடித்துவிட்டன. அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ தமது சொந்த மக்களைச் சிதறடிக்கும் சக்திகளுக்குச் சேவகஞ் செய்து கொண்டிருக்கிறார்கள்.

எல்லாத் தேசிய இனப்பிரச்சினைகளும் சாராம்சத்தில் அனைத்துலகப் பிரச்சினைகளே. எனவே அவற்றுக்கு உள்நாட்டுத் தீர்வு கிடையாது. அனைத்துலகத் தீர்வுதான் உண்டு. அப்படிப் பார்த்தால் அனைத்துலகத்தில் ஆதரவு அணியைத் திரட்டாமல் தீர்வு கிடைக்காது. அனைத்துலகத்தைத் திரட்டுவதென்றால் முதலில் ஈழத் தமிழர்கள் தங்களைத் தாங்களே திரட்டிக் கொள்ள வேண்டும். தமிழர்கள் தங்களைத் திரட்டாமல் அனைத்துலக சமூகத்தை எப்படித் திரட்டலாம் என்று யாராவது கூறுவீர்களா?

நன்றி: நிலாந்தன்

# இசைப்பிரியா - மன்னம்பெரி: அநுரவின் புதிய அரசு நீதி வழங்குமா?

– நவீனன் –

25.09.2024

(தற்போது ஆட்சி பீடம் ஏறியுள்ள இடதுசாரி முலாம் பூசப்பட்ட அநுரவின் புதிய அரசு நீதியை வழங்குமா என்பது கேள்விக் குறியே? மன்னம்பெரிக்கு ஓர் நீதியும், இசைபிரியாவுக்கு நீதியே இல்லையா என்பது இனவாதத்தின் அடிப்படைக் காரணங்களாகவே அமைகின்றன)





நீண்டகால விசாரணைகளின் பின்னர் கதிர்காமத்தில் கொல்லப்பட்ட அழகுராணி மன்னம்பெரிக்கு நீதி வழங்கப்பட்டது. அவரைக் கொன்ற படையினர் விசாரிக்கப்பட்டு தண்டனையும் வழங்கப்பட்டது. ஆனால் இளம் தமிழ் ஊடகர் இசைப்பிரியாவை கொன்றவர்கள் ஒருபோதும் விசாரிக்கப்படவும் இல்லை. தண்டிக்கப்படவும் இல்லை. எதிர் காலத்தில் தண்டிக்கப்படவும் சாத்தியமில்லை என்றே பதவிக்கு வந்த புதிய ஜனாதிபதி அநுர திசநாயக்கா திட்டவட்டமாக தேர்தலுக்கு முன்பாக தெரிவித்து விட்டார்.

### போர்க்குற்றங்கள் விசாரிக்கப்படாது ?

இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் விசாரிக்கப்படாது என்று தெளிவாகவே அவர் தேர்தலுக்கு முன்பாக தெரிவித்து விட்டார்.

ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் கொல்லப்பட்ட இசைப்பிரியாவுக்கு இன்னும் நீதி வழங்கப்படவில்லை. இலங்கை அரசு ஒருபோதும் நீதி வழங்கப்போவதும் இல்லை என்பது தமிழர்க்கு மட்டுமின்றி சர்வதேசத்திற்கும் தெரியும்.

இசைப்பிரியா தமிழ் இனத்தைச் சேர்ந்த இளம் ஊடகர். மற்றயவர் சிங்கள இனத்தைச் சேர்ந்த அழகுராணியான மன்னம்பெரி. இருவரும் கொல்லப்படும் போது இளம் பெண்கள். இருவரும் இலங்கை தீவில் உள்ள தமிழ் ஈழத்திலும் - சிறீலங்காவிலும் பிறந்தவர்கள்.

கதிர்காமத்தின் அழகி பிரேமாவதி மன்னம்பெரி என்ற பெண்ணை இலங்கை இராணுவம் நிர்வாணம் ஆக்கி வீதி வழியே இழுத்து வந்து ஏப்ரல் 16, 1971 அன்று தெருவில் வைத்து துப்பாக்கியினால் சுட்டு கொலை செய்தது.

இசைப்பிரியா ஈழப்போராட்டத்தில் இளம் ஊடகராக பணியாற்றியவர்.

மௌனிக்கப்பட்ட ஈழப்போரின் இறுதியில் 2009 மேயில் சரணடைந்த பின்பு அரச படையால் கொடூரமாக கொல்லப்பட்டார்.

நிராயுதபாணியாக இருந்த பல பெண்களை பயங்கரவாதிகள் என்றும் அவர்களை கொல்வது நியாயமே என்று சிங்கள அரசு இன்றும் வாதிடுகிறது. ஆயினும் பாலியல் வல்லுறவு செய்து கொன்ற, கொடுஞ் செயலை கட்டுப்பாடற்ற சிங்கள படையினரின், அநாகரிக செயலை சர்வதேசத்திற்கு தெளிவாக வெளிக்காட்டியது.

மன்னம்பெரி - இசைப்பிரியா இருவரும் அரச படைகளால் பாலியல் வல்லறவு செய்யப்பட்டே கொல்லப்பட்டனர். இரு பெண்களும் பயங்கரவாதிகள் என கூறப்பட்டே கொல்லப்பட்டனர். ஆயினும் சர்வதேச அழுத்தங்களால் போர்க்குற்றங்களுக்கு விசாரித்து தண்டனை வழங்குவோம் என்றார்கள். இதுவரை எத்தகைய நீதியும் வழங்கப்படவில்லை என்பது சர்வதேசத்திற்கே தெரியும்.

### மன்னம்பெரியின் கொடூர கொலை!

1971 ஏப்ரலில் தென்னிலங்கையில் இடம்பெற்ற ஜேவிபி (JVP) கிளர்ச்சியின் போது, கதிர்காமம் முக்கிய நகரமாக செயற்பட்டது. மன்னம்பெரி மக்கள் விடுதலை முன்னணியில் இணைந்து, அவ்வியக்கத்திற்கு சீருடைகள் தைத்துக் கொடுத்து உதவி செய்து வந்தார்.

ஏப்ரல் 16 இல் இலங்கை அரச படை இக்கிளர்ச்சியை அடக்கி, நகரை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. சிங்கள இளைஞர்கள் பலர் காட்டினுள் தப்பி ஓடினர். மன்னம்பெரி உட்பட சில பெண்கள் போராளிகளுக்கு உதவி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

சிங்கள இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அவர் இரவு முழுவதும் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டு சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டார். பின்னர் அவரை நிர்வாணமாக்கிய இரா



ணுவத்தினர் கதிர்காமம் புனித நகரின் வீதிகளில் நிர்வாணமாக இழுத்து வந்து, பொது மக்கள் முன்னிலையில் துன்புறுத்தப்பட்டு, அஞ்சலகம் ஒன்றின் முன்னால் அவரை சுட்டு தீ வைத்து விட்டு அகன்றனர். பின்னர் மீண்டும் திரும்பி வந்து சுட்டுக் கொன்றனர். மன்னம்பேரி இறுதியில் தலையில் சூட்டுக் காயம்பட்டு இறந்தார்.

மன்னம்பெரியைக் கொலை செய்த குற்றத்திற்காக லெப்டினண்ட் ஏ. விஜயசூரிய, அமரதாச இரத்திநாயக்கா இருவரும் நீதிமன்றில் நிறுத்தப்பட்டு குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். இருவருக்கும் 16 ஆண்டுகள் கடுமியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 1988 ஆம் ஆண்டில் லெப்டினண்ட் விஜய சூரியா மாத்தறையில் வைத்து மக்கள் விடுதலை முன்னணியினரால் கொல்லப்பட்டார்.

கதிர்காம வீதியில் குற்றுருயிராக துடித்த மன்னம்பெரியை எரியூட்டிக் கொலை செய்தமைக்கு, சிங்கள அரசை சொந்த மக்களே குற்றஞ்சாட்டினர்.

சிங்கள் மக்கள் ஏன் முழு இலங்கை மக்கள் மனதில் இன்று வரை இலங்கை ஆளும் வர்க்க இராணுவத்தின் இந்த மிலேச்சத்தனமான எரியூட்டல் கொலை வரலாற்று அவலமாக பதிந்து அழிந்து போகாமல் இருக்கின்றது.



### நீதி மறுக்கப்பட்ட தமிழ்ப்பெண்கள்:

ஈழப்போரில் முள்ளிவாய்கால் இறுதி யுத்தத்தில் இசைப்பிரியா போன்ற பெண்களின் உடைகள் களையப்பட்டு மானபங்கப் படுத்தப்பட்ட நிலையில் கொலை செய்யப்பட்ட போது அந்த கொலைஞர்கள் கூட்டத்தில் இருந்த ஒரு மனிதாபிமானத்தின் கமரா மாத்திரம் அதனை புகைப்படம் எடுத்து அந்த அவலத்தை உலகத்தின் கண்களுக்கு கொண்டு சென்றது.

கொடூரமான இந்த கொலைகள் அவமானங்கள் துயில் உரிதல்கள் நடைபெற்ற போது, அங்கும் சுற்றி நின்ற இராணுவத்தினர் தங்களின் சக பிறப்புக்களான தாயும் சகோதரியும் பிள்ளைகளும் என்றோ இவர்களும் பெண்கள் என்று இதனைப் பார்க்காது, மனித குலம் வெட்கித் தலை குனியும் செயற்பாடுகளையே செய்தனர்.

இதன் மூலம் அந்த மனிதாபிமானமற்ற சிங்கள அரசின் கொலைகள் உலகிற்கு அம்மணமாக்கப்பட்டது. ஆனால் அந்தப் புகைப்பட ஆவணம்தான் இலங்கை இராணுவம் மிகக் கீழ் தரமான இராணுவம் என்று மீண்டும் உலகிற்கு அடையாளப் படுத்தப்பட்டது.



இது போன்ற மனித அரக்க குணங்கள் சிங்கள நாட்டின் தேசியத்தின் பெயரால், மதத்தின் பெயரால், நாட்டுப் பற்றாளர் என்ற பெயரால் அவ்வப் போது தமக்கு வசதியான விடயங்களை முன்னிறுத்தி நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது.

உலகின் பல மூலைகளிலும் மனித குலமும் இதனைத் தடுத்து நிறுவதற்கான போராட்டங்களை நடாத்திக் கொண்டுதான் இருக்கின்றது. சர்வதேசம் கண்ணை மூடிக் கொண்டிருந்தாலும் முள்ளிவாய்க்காலில் நடந்தது வெறும் போர்க்குற்றம் இல்லை. அது பாரிய இனப்படுகொலையே.

இந்த உண்மையை ஏன் உலகம் இன்னமும் புரிந்துகொள்ள முடியாமல் உள்ளது? தமிழ்ப் பெண்களுக்கு நீதி கிடைக்க சர்வதேச ரீதியில் குரல் கொடுக்கப்பட வேண்டும். தற்போது ஆட்சி பீடம் ஏறியுள்ள இடதுசாரி முலாம் பூசப்பட்ட அநுரவின் புதிய அரசு நீதியை வழங்குமா என்பது கேள்விக்குறியே?

மன்னம்பெரிக்கு ஓர் நீதியும், இசைபிரியாவுக்கு நீதியே இல்லையா என்பது இனவாதத்தின் அடிப்படைக் காரணங்களாகவே அமைகின்றன.

# விடுதலையின் வழிகாட்டி

எம் தாயகம் பெற்றெடுத்த எங்கள் தேசியத்தலைவர் அவர்களது காலத்தில் வாழும் பெருமையுடன் பணி தொடர்கின்றோம். தலைவரது ஐம்பதாவது பிறந்த நாளுக்கு ஆக்கம் ஒன்று தாருங்கள் என்று கேட்டபோது முதலில் ஏற்பட்ட உணர்வு தலைவரைப் பற்றி நான் எழுதுவதா? என்பது தான்.

தேசியத்தினதும் மற்றும் அக்கறையுடைய அனைவரினதும் பார்வையும் அவர் மீது உன்னிப்பாகப் பதியும் இவ்வேளையில், அவரது பண்புகளைப் பகிர்ந்து கொள்வது தலைவரது விடுதலைக்கான விழுமியங்களை முழுதாய் அறியாதோருக்கு எடுத்துச் சொல்லும் பணியாகவே அமையுமென்ற கருத்து வலுப்பட்டது. அந்தக்கருத்தின் வலுவால் தலைவரைப்பற்றிய பெருமித உணர்வுடன் எழுதுகின்றேன்.

தலைவரைப்பற்றிய பெருமைகளை ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்திற் பார்ப்பர். எந்தவொரு பின்புலமுமில்லாத சாதாரண குடும்பத்திற்பிறந்து, சுயமான அரசியல் தெளிவுடன் விடுதலைக்கான அத்திவாரத்தை அமைத்து, களத்தில் முன்னின்ற போராளியாயும் தளபதியாயும் சமகாலத்திற் செயற்பட்டு, அணிதிரட்டல் செய்து, விடுதலை இயக்கத்தை உருவாக்கிக் கொண்டது வரையான அவரது செயற்பாடுகள் அவரது வரலாற்றின் ஆரம்பச்சாதனைகள்.

விடுதலைப் போராட்டத்தின் பின்னே முழு மக்களையும் அணிதிரளக்கூடியபடி களச்செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தியமை அவரது அடுத்த சாதனைக்கான வளர்ச்சிக்கட்டம். சந்தித்த ஒவ்வொரு நெருக்கடிகளிலும் விடுதலைப் போராட்டம் ஓய்ந்து விடாதபடி முன்னெடுப்பதன் பின்னே உள்ளமை அவரது ஆற்றலின் வெளிப்பாடு. உலகினது வல்லாதிக்கங்களின் அபிலாசைகளுக்கும் நெருக்குதல்களுக்கும் எமது விடுதலைப்போர் விலையாகிப்போய்விடாதபடியான வழிகாட்டுதலே எமது விடுதலைக்கான அவரது தலைமைத்துவத்தின் மகுடம். ஒடுக்கப்பட்டு நசிவுறும் எமது இனத்தின் விடுதலைக்கான வழி 'சுயமாகப் போராடி, சுயமாக வலுவாகிக்கொள்ளுதல்' என்ற தத்துவத்தை உலகின் முன் நிறுவிக்காட்டிய பெருமையினாலேயே எங்கள் தலைவர் உச்சமான பெருமையைப் பெறுகின்றாரென நான் கருதுகின்றேன். எம் தலைவரது குணாம்சங்களே அவரது உயர் நிலைக்குக் காரணம் என்பது வெளிப்படை. அவரிடம் இயல்பாக அமைந்திருந்த நற்பண்புகளும் அவர் தனக்குத்தானே உருவகித்து வளர்த்துக்கொண்ட தலைமைத்துவப் பண்புகளும் இணைந்தே மிகச் சிறந்த அரசியல், இராணுவ ஆற்றலைக்கொண்ட தேசிய நிர்மாணியாக உலகின் முன் அவரை வெளிப்படுத்தியுள்ளது.

தன்னை ஒரு தலைவனாக உருவகித்துக்கொள்ளாமல் ஒரு போராளியாகவே அவர் தனது பொதுவாழ்வை ஆரம்பித்தார். இன்னும் சொல்வதானால் தனது செயலார்வத்திற்கு ஒரு வழிகாட்டியைத் தேடி அலையும் இளம் போராளியாக அவர் நீண்ட காலத்தைச் செலவு செய்தார். அக்காலப்பகுதியில் அவர் பெற்ற பக்குவமும் பட்டறிவுமே அவரை இன்றைய உயர்ந்த தலைமை நிலைக்கு உயர்த்தியுள்ளது எனலாம்.

அக்காலத்தைய தலைமை நிலையில் உள்ளவர்களிடம் முறையான செயற்திட்டம் இல்லாமையை அவதானித்தார். அத்துடன் அவர்களிடம் அர்ப்பணிப்புணர்வு இல்லாதிருப்பதையும் அடையாளம் கண்டுகொண்டார். அவை அவருக்குப் பல பாடங்களைக் கற்பித்தன. அந்தப் பாடங்களினாலேயே அவரது தலைமை உருவானது. தலைமை உருவானது என்பதைவிட வரலாற்றின் வாசலின் ஊடாகத் தலைமை நிலைக்கு அவர் அழைத்துவரப்பட்டார். ஆம். தனக்குத் தலைவர்களாகக் கருதிச் செயற்பட்ட அக்காலத்தைய மாணவர்பேரவை, இளைஞர் பேரவைத் தலைவர்கள் பேச்சளவிலேயே தலைவர்களாக இருந்தமையைக் கண்டுகொண்டார். எதிரியின் முறியடிப்பு முயற்சிக்கு நெஞ்சுரத்துடன் முகம்கொடுக்கத்தவறிய அவர்களது பொறுப்பின்மை அவரை வருத்தியது. அக்காலத்தைய போராட்ட அமைப்பையே சிதறடிக்கும் வகையாக சின்னத்தனத்துடன் அவர்கள் நடந்துகொண்டபோது தனியானதொரு அமைப்பை உருவாக்கும் நிலைக்கு உள்ளானார்.

விடுதலை அமைப்பொன்றை உருவாக்கிச் செயற்படுத்திய போதும் தான் தலைவராகும் எண்ணமின்றி இன்னொருவரைத் தலைவராக்கி தன்னைச் செயற்பாட்டாளராக வைத்துக் கொண்டார். ஒரு விடுதலைப்போராட்டத் தலைமை இயற்கையாக உருவாகவேண்டும் என்பதை அந்தச் செயற்கைத் தலைமை நிரூபித்தது. அவர்களது தனிப் பலவீனங்களுக்காக ஒரு விடுதலை இயக்க மாண்பு குலைக்கப்பட்டு, நெறிமுறைகள் சிதறடிக்கப்பட்டபோது செயற்கைத் தலைமைகள் அடையாளம் காணப்பட்டமையும் அகற்றப்பட்டமையும் நடந்தேறின. அந்த வேளையில் அவர் விடுதலைக்கு வழிகாட்ட முன்வந்தார்.



அதனால் அவர் தலைமை நிலைக்கு அழைத்துவரப்பட்டார். தலைமைக்குத் தேவையான தீர்க்கதரிசனப் பார்வைக்கு உதாரணமாக கொள்ளத்தக்கவர் எமது தலைவர் என்பதை நாம் பெருமையுடன் இங்கு கூறிக்கொள்ளலாம். இந்திய அரச பிரதிநிதிகளால் எமது தமிழீழ விடுதலைப் போராட்டப் போராளிகளுக்கான ஆயுதப்பயிற்சி வழங்கப்பட்ட நேரம் அது.

1983ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இந்தியாவின் வடமாநில மலைகளாற் சூழப்பட்ட பிரதேசத்தில் நாம் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தோம். அங்கு பயிற்சி ஆசிரியராக இருந்த இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் எமது பயிற்சி விடயங்களிலும் எமக்குப் பழக்கப்படாத உறைபனி நிலையை எதிர்கொள்வதற்கான தனிப்பட்ட கவனிப்பிலும் அதீத அக்கறை எடுத்துச் செயற்பட்டிருந்தார். பயிற்சி பெறும் அனைவருக்கும் பொறுப்பாக இருந்த பொன்னம்மானுக்கு அடுத்த நிலையில் இருந்த கிட்டண்ணை உட்பட எம்மிற் பலருடன் நெருக்கமான உணர்வு உறவினை குறித்த அதிகாரி ஏற்படுத்தி விட்டிருந்தார்.

தலைவர் அவர்கள் எமது பயிற்சி முகாமிற்கு வருகைதந்து பயிற்சிகளைப் பார்வையிட்டார். அவ்வேளையில் எம்மிற் பலர், குறித்த அதிகாரி பற்றியும் அவர் எம்மீது கொண்ட கரிசனை பற்றியும் சொன்னதை தலைவர் அமைதியாக கேட்டபடி இருந்தார். அன்றிரவு தெரிவு செய்யப்பட்ட பொறுப்பாளர்களுடன் தலைவரின் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. அப்போது அவர் கூறிய கருத்துக்கள் இன்னும் எனக்குப் பசுமையாக நினைவில் உள்ளது. அதாவது 'இந்தியா தனது சுயநல நோக்கிலேயே செயற்படுகின்றது – உண்மையில் எமது விடுதலைக்காக நாமே சொந்தமாகப் போரிட வேண்டும்.

போராளிகளாகிய நாம் எமது விடுதலையை இந்தியா பெற்றுத் தரும் என்ற எண்ணத்துடன் இருப்பது எமது விடுதலைப் போரைப் பலவீனப்படுத்திவிடும். எனவே இந்தியாவை நம்பியிருக்காது எமது விடுதலைக்காகப் போராடும் மனஉறுதியைப் போராளிகளிடையே ஏற்படுத்துங்கள்' என்பதாகத் தலைவரின் கருத்து அமைந்திருந்தது. இந்தியா எமது விடுதலையைப் பெற்றுத்தரப்போவதில்லை. எமது விடுதலைக்காக நாமே போரிட வேண்டியிருக்கும் என்று அன்றே கூறிய அவரது தீர்க்கதரிசனமான சிந்தனையே எமது விடுதலைப் போராட்டம் சொந்தக்

காலில் நிற்பதற்கும் நெருக்கடியின்போது அழிந்துவிடாமல் நிலைத்து நிற்பதற்கும் அடிப்படை ஆதாரமாக அமைந்ததெனலாம்.

எமது விடுதலைப் போராட்டம் சார்ந்த இந்தியாவின் நிலை சார்ந்து மட்டுமல்லாமல் எமது விடுதலைப் போராட்டத்தின் போக்கு, எமது விடுதலைப் போராட்டத்தின் மீதான சிங்கள அரசியல்வாதிகளின் அணுகுமுறை மற்றும் எமது விடுதலைப் போராட்டத்திற்காக மக்களை எவ்வாறு அணிதிரட்டுவது என அனைத்து நிலைகள் பற்றியும் தெளிவாகச் சிந்தித்து வடிவம் ஒன்றை வகுத்திருந்தார். எதிர்காலக் கட்டமைப்புகள் எவ்வாறு அமையவேண்டும் என்பதனையும் கற்பனையாகத் தன் மனதில் உருப்போட்டு வைத்திருந்தார்.

எம் தலைவர் அவர்கள் அரசியல் ஞானம்மிக்க இராசதந்திரி என்பதில் சந்தேகமே இல்லை. தலைவர் இராணுவ விடயங்களில் விற்பன்னராக உள்ளதைச் சந்தேகத்திற்கிடமின்றி ஏற்றுக்கொள்ளும் சிலர், அரசியல் விடயத்தில் தலைவர் அவர்கள் தேர்ச்சி பெறாதவர் என்ற வகையில் கருதுவதுமுண்டு. அக்கருத்து மிகவும் தவறு. இன்று வன்னியில் ஒரு அரசுக்குரிய கம்பீரத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் எமது விடுதலை இயக்க நிர்வாக அலகுகளுடனும் ஆட்களுடனும் தொடர்புபட உலகின் பிரதிநிதிகள் வந்து போகும் சூழல் ஏற்பட்டது - ஏற்படுத்தப்பட்டது. இது ஒரு அரசியல் வெற்றி. யாழ்ப்பாணத்தில் இருந்து எமது இயக்கம் பின்வாங்கவேண்டி ஏற்பட்ட அந்த இராணுவ நெருக்கடியின் சூடு தணிவதற்கிடையில் நீண்ட நெடிய ஜெயசிக்குறு ஆக்கிரமிப்புப்போரை எதிரி தொடர்ந்தான். கடந்த 90களின் பிற்பகுதியில் எமது இயக்கம் சந்தித்த இராணுவப் பின்னடைவு நிலைமையை மாற்றி வெற்றி கொள்ள வைத்தது தலைவர் அவர்களது இராணுவ வெற்றி.

அந்த இராணுவ வெற்றியை மேற்சொன்ன அரசியல் வெற்றியாக ஆக்கி எமது விடுதலைப்போரின் மீதான பார்வையைச் சர்வதேச நிலைக்கு நகர்த்தி எடுத்துள்ளமை எமது தலைவரது இராசதந்திர நகர்வின் பெறுபேறே. எம்மினத்தின் நூற்றாண்டுகால அரசியல் வரலாற்றைத் தெளிவுறப்புரிந்து வைத்திருப்பதிலும் உலகில் நடந்த, நடைபெறுகின்ற விடுதலைப் போராட்டங்கள் அனைத்தினது வரலாறுகளையும் அறிந்து வைத்திருப்பதிலும் நாடுகள், இயக்கங்கள் என்பவற்றின் வாழ்வையும் வளர்ச்சிப்போக்கையும் தீர்மானிக்கும் பேச்சுவார்த்தைகள் பற்றிய அறிவைக் கொண்டிருப்பதிலும் கூர்ந்து அவதானித்து வருவதிலும் தலைவர் அவர்களது அறிவு மிகமிக அதிகம்.




இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களது காலத்தில் எமது விடுதலைப்போரைத் தமக்குச் சாதகமாகக் கையாண்டு கொள்வதில் இந்தியா கொடுத்த அரசியல் நெருக்குவாரங்கள் மிக அதிகம். இன்றும் இந்தியாவின் அதிகார நாற்காலிகளை அலங்கரித்து வீற்றிருக்கும் மூத்த அரசியல் தலைவர்களும் ராஜீவ்காந்தி அவர்களும் எமது விடுதலைப் போராட்டத்தையும் தலைமையையும் 'சின்னப்பெடியளின் குழப்படியாக' சித்திரித்து கையாள முற்பட்டனர்.

அந்த அரசியல் நெருக்கு வாரங்களில் எமது விடுதலைப் போராட்டம் மூழ்கண்டு போகாதவாறு எதிர்நீச்சலிட்டுத் தக்க வைத்த அரசியல் மேதமையுடன் விடுதலைப்போரை வழி நடத்தினார். விடுதலைப் போராட்டம் அரசியல் நெருக்குவாரங்களையும் இராணுவ நெருக்கடிகளையும் சந்திக்கும் வேளைகளிற் கூட விட்டுக்கொடுக்க முன்வராத தலைவரின் பண்பையே சிலர் அரசியல் ஞானமின்மையாகச் சிந்திக்கத் தலைப்படுகின்றனர். மறுவளமாகக் கூறுவதானால் தலைவர் அவர்கள் கொண்டுள்ள தேர்ந்த அரசியல் ஞானத்தெளிவின் அடிப்படையிலேயே குறித்த விட்டுக்கொடுப்புகளுக்கு முன் வருவதில்லை.

இராசதந்திரம், கொள்கைப்பற்றுறுதி, சரணாகதி போன்ற பதங்களை அதனதன் சரியான அர்த்தப் பரிமாணங்களுடன் புரிந்து கொள்வார் எமது தலைவர். கொள்கைப்பற்றுறுதி இல்லாது எதிரியிடம் மண்டியிடுபவர்கள் அல்லது இனத்தினது உரிமைகளை விலைபேசிச் சலுகைகளைப் பெற முனையும் சுயவர்கள் தம்செயலை நியாயப்படுத்த இராசதந்திரம் என்ற பதத்தின் பின்னே மறைந்து கொள்வதைக் கோபமாகவும் கேலியாகவும் சுட்டிக்காட்டுவார்.

எமது இனத்தினுடைய நலன்களை விட்டுக்கொடுக்க மறுக்கும் தலைவர் அவர்களது கொள்கைப்பற்றுறுதியானது அவரது அரசியல் தெளிவினால் விளைந்த பயனே. காலத்திற்குக்காலம் எம்மினத்தினிடையே தோன்றிய தலைமைகள் இன விடுதலை சார்ந்த தீர்க்கமான பார்வையைத் தம்மிடையே கொண்டிருக்கவில்லை. அவ்வக்காலத்தைய மக்களினது மன உணர்வுகளைப் பிரதிபலித்தும் மக்களது மன எழுச்சியை ஒருமுகப் படுத்தியும் அத்தலைவர்கள் விளங்கினர் என்பது ஓரளவு உண்மைதான். ஆனாலுங்கூட உண்மையான விடுதலை நோக்கிய பயணத்திற்காக மக்களைத் தயார்படுத்தும் தீர்க்க தரிசனமோ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் அர்ப்பணிப்புணர்வோ இல்லாதிருந்தனர்.

மாறாக எம்மை அடிமைப்படுத்தி வைத்துள்ளவர்களுடன் ஒத்துப்போவதாகவே இருந்தது அவர்களது அரசியல். எமது இனத்தினது விடுதலை உணர்வுகள் பொங்கிப் பிரவாகிக்கும் வேளைகளில் தலைவர்களாக இருந்த மனிதர்களுடன் தனிப்பட்ட முறையிற் சமரசம் செய்து கொள்வதையே ஆக்கிரமிப்பாளர்கள் செய்து கொண்டிருந்தனர். ஆக்கிரமிப்பாளர்களது தந்திரோபாயத்திற்குப் பலியாகி இன விடுதலையைக் காவு கொடுக்கும் கயமைக்குப் பெயர் இராசதந்திரம் என்றால் அந்த இராசதந்திரம் எமது தலைவருக்குத் தெரியாதுதான்.

குமுறிக் கொண்டிருக்கும் எமது மக்களது விடுதலை உணர்வுகளை மழுங்கடிக்க ஏதாவது ஒரு பெயரிலான அற்ப தீர்வுக்கான பேச்சுவார்த்தையிலோ தேர்தலிலோ பங்குகொண்டு எதிரிக்குத் துணைபோதலுக்குப் பெயர் இராசதந்திரம் என்றால் அந்த இராசதந்திரம் எமது தலைவருக்குத் தெரியாதுதான். விடுதலைக்கான கொள்கைப்பற்றுறுதியை முதன்மைச் சிந்தனையாக்கி, அந்த இலட்சியத்திற்குப் பங்கமின்றிச் செயற்பட நண்பர்களை நாடுவதன் பெயர் இராசதந்திரம் என்றால் அந்த இராசதந்திரத்தில் எமது தலைவர் வல்லவர்.

விடுதலைப் போரியலுக்கும் அதனிடையேயான போரோய்ந்த அரசியல் நகர்வுகளுக்கும் கருத்துலகு பற்றிய பார்வையுடன், காலச் சூழல் பற்றிய கணிப்பீடும் அவசியம். இவ்வுணர்வலை வரிசைகளை உய்த்தறிவதும் கணிப்பிட்டுக் கையாள்வதும் இராசதந்திரம் என்றால் அந்த இராசதந்திரத்தில் எமது தலைவர் ஒருவித்தகர். இந்தியாவில் அமைந்த எமதியக்க ஆரம்பகாலப் பயிற்சித் தளங்கள், தமிழ் நாட்டு முதலமைச்சர் எம.ஜி.ஆர் அவர்களுடனான நட்புறவு, இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு காலத்திற் சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா அவர்களுடனான பேச்சுவார்த்தை என்பன தலைவரது இராசதந்திர நகர்வின் சில வெளிப்பாடுகள். அந்த இராசதந்திர நகர்வில் விளைந்த நட்புறவுகள் எமது இனத்தின் உரிமைகளை விலையாகக் கேட்க அனுமதிக்காத அவரது ஆளுமையே இங்கு முதன்மையானது. கொள்கைப்பற்றுறுதிக்கும் இராசதந்திர நகர்விற்கும் இடையே



தலைவர் அவர்கள் சுயமாக வகுத்து வைத்திருந்த எல்லைக் கோட்டினைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். தனக்குத் தனிப்பட்ட முறையில் ஒவ்வாத தன்மைகொண்ட பலருடனுங் கூட அவர் நட்புறவுடன் பழகுவதைக் கண்டிருக்கின்றேன். தனிப்பட்ட நலன் சார்ந்து அமைவதாக அவர்கள் எண்ணிவிட இடம் கொடாமல் நிகழும் மேற்கண்ட பழக்கங்கள்கூட அவரது இராசதந்திர ஆளுமையின் இன்னுமொரு பக்கம். இனத்தின் விடுதலை மீது அவர் கொண்ட கொள்கைப்பற்றுறுதியே அவரது அந்த ஆளுமையின் இரகசியம். போராட்டப்போக்குகளிற் கடும் நெருக்கடிகள் காலத்திற்குக்காலம் ஏற்படுவதுண்டு. அப்படியான நெருக்கடிகளிலும் அந்த நெருக்கடிகளை எதிர்கொள்வதற்காகவேனும் செய்யப்படும் எந்தப் பணியிலும் நேர்மை தவறுவதை அல்லது வஞ்சகமான செயற்பாடுகளை தலைவர் அவர்கள் அனுமதிப்பதில்லை. மில்லர் கரும்புலியாகக் களம் செல்வதற்கு முந்திய நிலைமை அது.

சிறிய முகாமினைக்கூட இயக்கம் தாக்கியழிக்க ஆரம்பிக்காத 1985 ஆண்டு முற்பகுதியாக இருக்க வேண்டும். அவ்வேளையில் இராணுவ முகாம் ஒன்றைத் தாக்குவதென்பது எமதியக்கத்திற்கு மிகப்பெரிய வெற்றியாக அமைந்திருக்கும். களத்தில் நின்ற பொறுப்பாளர்களால் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டிருந்தது. அதாவது, தனியார் வாகனங்கள் சிறு பரிசோதனையுடன் செல்லும் வீதியின் ஓரமாக அமைந்திருந்தது அந்த இராணுவ முகாம். அவ்விராணுவ முகாம் ஊடாக வழமையாகச் சென்று வரும் பொது ஆள் ஒருவருடைய வாகனமும் பொதுநபரான சாரதியும் வழமையாகச் சோதனை செய்யும் இராணுவத்திற்குப் பழக்கமாய் போய்விட்டதால் சோதனை இல்லாமலே போய்வரக் கூடியதாக அமைந்திருந்தது.

அதனை அவதானித்த எம்மவர்கள் வாகனச் சாரதிக்குத் தெரியாமல் வாகனத்தில் வெடிகுண்டை பொருத்திவிட்டு, 'வாகனம் இராணுவ முகாமின் மத்தியிற் செல்லும்போது, தூரக்கட்டுப்பாட்டுக்கருவி மூலமாக' (றிமோட்) குண்டை வெடிக்க வைத்து, முகாமிற்கு பேரிழப்பை ஏற்படுத்திவிட்டு, மேலதிக அணியை உள்ளனுப்பி, முகாமைக் கைப்பற்றுவதாகத் திட்டம் அமைந்திருந்தது. திட்டம்பற்றி அறிந்தவுடன் தலைவர் அவர்கள் கடும் சினமுற்று திட்டத்தை நிறுத்திவிட்டார்.

சாரதிக்கே தெரியாமற் குண்டைப் பொருத்தும் யோசனையைக் கடுமையாகக் கண்டித்ததுடன், 'உங்களுக்குள் ஒரு துணிவுள்ளவன் இருந்தால் தன்னை அழிக்கும் மனநிலையுடன் வெடிகுண்டை எடுத்துச் சென்று வெடிக்க வைக்கலாமே தவிர, இவ்வாறு வஞ்சகம் புரிவது கடும் தவறென்று' கண்டித்தார். அதன் பின்னர் கொஞ்சக் காலமாக இத்திட்டத்தின் தவறுபற்றி அடிக்கடி பொறுப்பாளர்களுக்கு எடுத்துச் சொல்லி சுலபமாக வெற்றிகள் பெறுவதற்காக நியாயமில்லாத திட்டங்கள் வகுக்கக்கூடாதென கருத்தேற்றம் செய்தவண்ணமே இருந்தார்.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்பின் போதான நெருக்கடியான காலமது. அர்த்தமற்ற அரைகுறைத் தீர்வுகளைக் கடைபரப்பிய இந்திய வஞ்சகத்தை நன்கு தெரிந்தும் தெரியாததுபோல் துணை நின்றனர் துரோகிகள். 'ஆண்டவன்தான் இனித் தமிழினத்தைக் காப்பாற்ற வேண்டும்' என்றுரைத்த தந்தை செல்வாவின் வழிவந்தவர்களாகத் தம்மைக் கூறிக்கொண்டவர்கள் அவர்கள். தமிழினத்தின் விடுதலைக்காகக் குருதி

சிந்திப் போராடும் இளைய சந்ததிக்குப் பக்கத்துணையாக இருக்கவும் துணியவில்லை.

ஆண்டவன் காப்பாற்றட்டும் என்று ஒதுங்கியிருக்கவும் விரும்ப வில்லை. மாறாக ஆக்கிரமிப்பாளர்களுக்குத் துணையிருக்கத் துணிந்தனர். பதவி மோகத்தில் விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கத் துணிந்த துரோகிகளை அகற்றுவது தவிர்க் கமுடியாததானது. துரோகிகளை அழித்துவிட வேண்டும் என் பதை மட்டுமே சிந்தனையில் இருத்திய நடவடிக்கையாளர்கள் நெறிதவறிவிட்டனர். நடவடிக்கைக்கு பொருத்தமான வாய்ப்புக் கிடைக்காததால் சந்திப்பு ஒன்றை ஒழுங்கு செய்து அங்கேயே தாக்குதலைச் செய்துவிட்டனர்.

தாக்குதல் செய்யப்பட்ட சம்பவத்தைக் கேள்விப்பட்ட தலைவர் அவர்கள் பேரதிர்ச்சியும் துயருமுற்றார். நேர்மையான வீரத் துடன் நடவடிக்கை செய்யப்பட்டிருக்க வேண்டும். மாறாகக் கலந்துரையாடலுக்கான சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டதும் அந்தச் சந்திப்பு தாக்குதலுக்குத் தெரிவு செய்யப்பட்டதும் மிகவும் தவறான அணுகுமுறை. இந்த அணுகுமுறை எமது இயக்கத் திற்குக் களங்கத்தை ஏற்படுத்தி விட்டது. 'எமது போராளிகள் பின்பற்ற வேண்டிய வீரமான அணுகுமுறையாக இது அமைய வில்லை.


இந்த அணுகுமுறை அனுமதிக்கப்பட்டிருக்கவே கூடாது. எமது விடுதலை இயக்க அறநெறிக்கு மாறாக இவை நடந்துவிட்டன' என்றெல்லாம் திரும்பத் திரும்பச் சொல்லிக் குமுறித் தீர்த்தார். வீரம், சுத்தமான வீரம் என்பனபற்றிக் கனல்தெறிக்கும் வார்த் தைகளாலும் உணர்வுகளாலும் அவர் கொடுத்த விளக்கத்தைக் கேட்ட எந்த ஒரு போராளியும் இதுமாதிரியான ஓர் திட்டத்தை தம்மனதால் கூட நினைக்கத்துணியமாட்டார். நிகழ்வுகள் நடந் துமுடிந்து பல்லாண்டுகள் கடந்துவிட்டன. இன்னும் வேறேதா வது புதிய தாக்குதல்கள் பற்றியதான உரையாடல்களில் மேற்படி தவறான அணுகுமுறை பற்றிய விடயத்தைச் சுட்டிக்காட்டுவார்.

நெறிமுறை மீறிய அந்த அணுகுமுறைக்கான அவரது வேதனையுடன் எமது இயக்கம் எப்படியிருக்க வேண்டும் என்ற அவரது எதிர்பார்ப்பும் அவ்வேளையில் வெளிப்படும். தலைவர் அவர்களது இந்த நேர்மைப் பண்பே எமது இயக்கத்தின் வளர்ச் சிக்கான ஆத்ம பலத்தைக் கொடுத்து நிற்கின்றது எனலாம். வேறொரு விதத்திற் சொல்வதானால், தனது மனச்சாட்சியை சிறிதளவேனும் களங்கப்படுத்திக்கொள்ள அனுமதிக்காத அவரது நேர்மையே எமதினத்தின் தலைமைத்துவத்திற்கான ஆளுமையாக வடிவம் பெறுகிறது எனலாம்.

காலத்திற்குகாலம் விடுதலைப் போராட்டத்தின் தேவைகருதி அறிமுகம் செய்யப்படும் கட்டுப்பாடுகளைத் தானே கடைப்பிடிப் பதில் தலைவர் முன்னிற்பவர். குறிப்பாகத் தன்னைச்சொல்லி எவரும் சலுகைகளைப் பெற்றுவிடாதபடி அவர் எடுக்கும் கவன மானது, குறித்த கட்டுப்பாடுகளை செயற்படுத்துவோரிற்கு மனவுந்துதலைப் பெரிதும் தரும். தலைவர் அவர்கள் மனம் கலங்கியதை நான் பார்த்த மிக அரிதான சந்தர்ப்பங்களில் ஒன்று நினைவிற்கு வருகின்றது. இது சுமார் பத்து வருடங் களுக்கு முன்னைய சந்தர்ப்பம். எமது இயக்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வெளியே பயணம் செய்வதற்கான அனுமதிப் பத்திரம் பெறுவதில் தோல்வியடைந்த ஒருவர், தலைவர் அவர் களுக்கு நெருக்கமான ஒருவர் மூலமாக குறுக்குவழி முயற்சி ஒன்றினைச் செய்திருந்தார். ஒரு சலுகைமுறைச் சிபாரிசிற் காகக் குறித்த விண்ணப்பம் மிக நெருக்கமான ஆடாகத் தன் கவனத்திற்கு தரப்பட்டபோதும், தலைவர் அதற்காக சிபாரிசு செய்ய மறுத்துவிட்டார். அந்த மறுப்பை பெற்றுக்கொண்டவரது கோபம் அல்லது மனக்கவலையானது தலைவர் அவர்களிற் குங்கூட தனிப்பட்ட முறையில் மனக்கலக்கம் தருவதாய் அமைந்தபோதிலும் அந்த விண்ணப்பத்திற்காகச் சிபாரிசு ஒன்றைச் செய்வதற்கு அவர் சம்மதிக்கவேயில்லை.

பயண அனுமதிக்காகத் தன்னை அணுகுபவர்களின் போராட் டப் பங்களிப்பின் காரணமாகவோ தனது பொதுவான சமுதாயப் பார்வை காரணமாகவோ ஏராளமான சிபாரிசுகளையும் சிலவேளைகளில் அவசரமான கட்டளைகளையும் தலைவர் எமக்குத் தருவதுண்டு. ஆனாலும் மேற்குறிப்பிட்ட விடயத்திற் பயண அனுமதிக்கான வேண்டுகோளுக்குரியவர் அதற்குப் பொருத்தமான தன்மையைக் கொண்டிராத காரணத்தால் அந்த விண்ணப்பத்திற்கு தனது சிபாரிசைச் செய்யத் தலைவர் உறுதி யாகவே மறுத்துவிட்டார்.





இதுபோன்ற இறுக்கமான தன்மையைப் பலவேளைகளிலும் கடைப்பிடிப்பதால் தனிப்பட்ட நண்பர்கள் பலருடனும் உறவுகள் இல்லாதுபோகும் சூழலும் தலைவர் அவர்களுக்கு ஏற்பட்டே வந்துள்ளது. இலட்சியத் தெளிவு மற்றும் தனிப்பட்ட நேர்மை யால் விளைந்த பக்கம் சாராத்தன்மை என்பவற்றையே தனது பலமாகக் கருதுபவர். அதனால் இந்த நட்பிழப்புகளுக்காக வருந் தாமல் தனது நேர்மைக்காகவே பெருமைப்பட்டுக் கொள்வார். தாயக விடுதலைக்காகப் போராட அல்லது போராட்டத்திற்கு பங்களிக்க முன்வரும் ஒவ்வொருவரையும் தனது உறவுகளாக ஏற்றுப்போற்றும் பண்பினைத் தனதியல்பாகவே வளர்த்துக் கொண்டுள்ளார்.

இன்னும் சொல்வதானால் தனிப்பட்ட நட்பு, உறவு எனும் வட்டத் திற்குள் சிக்கிக்கொள்ளாத தன்மையே, ஒரு இனத்தையே, அவர் பின்னால் அணிதிரள வைத்துள்ளது எனலாம். பூமி எங் கும் சூரியனின் ஒளியிற் குளிக்கும். அதே சூரியனை நெருங்கிச் செல்லும்போது ஒளியை மட்டுமின்றி வெம்மையாலும் சுடும். அதேபோல் எங்கள் தலைவரை நெருங்கியிருப்போரும் அவரது குளிர்மையான ஒளியை பெறுவதுடன் மட்டுமல்லாது, வெம்மையான கண்டனத்தை அல்லது கோபத்தைப் பெறவும் தவறுவதில்லை.

குறிப்பாக அதிகாரத்தைத் தம்வசம் வைத்திருந்து அதனை நியாயமின்றிப் பிரயோகிப்போர்மீது அவருக்கு வரும் கோபத்தை மாற்றவோ, மறக்கவோ முடியாது. அதிகாரத்தைத் தம்வசம் வைத்திருப்போர் அதனைத் தவறாகப் பயன்படுத் துவதே அநேக பிரச்சனைகளுக்குக் காரணமென்பதும் அணுகு முறைகளைச் சீராக்கினால் அவற்றுக்குரிய தீர்வுகள் கிடைக்கு மென்பதும் தலைவர் தொடர்ந்து வலியுறுத்தும் விடயம். பொது மக்களை அதிகாரத் தொனியுடன் அணுகும் புலனாய்வுத் துறையினர் பற்றிய முறைப்பாடுகளைப் பெறும்வேளையில் தலைவர் அவர்களது கோபத்தைப் பலதடவைகளில் சந்தித் துள்ளேன்.

அப்படியான உணர்வு வெளிப்பாட்டுச் சந்தர்ப்பத்தில்தான், அதிகாரத்தாலும் பணபலத்தாலும் உருவாக்கப்படும் புலனாய் வுக் கட்டமைப்பு காலத்தால் அழிந்துவிடும். அன்பான அணுகு முறையாலும் விடுதலை உணர்வை தட்டி எழுப்புவதாலும் உருவாக்கப்படும் கட்டமைப்பே காலம் கடந்தும் நிலைத்து நிற்கும் எனும் வழிகாட்டும் கருத்து வடிவத்தை முன்வைத்தார். எமது தலைவர் அவர்களது அவ்வாறான கோபத்தின் வெளிப் பாடுகளை நாம் விடுதலைக்கான அவரது கோட்பாடுகளின் வெளிப்பாடுகளாக பார்க்கலாம்.

எமது இனத்தின் விடுதலை பற்றியே சிந்தித்துக்கொண்டிருக்கும் அல்லது எமதினத்தின் விடுதலைக்கான பணிதவிர வேறொன் றையும் சிந்திக்க மறுக்கும் அவரது எண்ண வெளிப்பாடுகளே எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வெளிப்படும். வார்த்தைகளினால் மட்டுமல்லாது வாழ்க்கையினால் வழிகாட்டியாக செயற்படும் எமது தலைவரின் காலத்தில் அவரின் பின்னே அணிதிரள் வோம். எம்தலைவரது வழிகாட்டுகையில் விடுதலை மீதான உறுதிப்பாட்டின் வழித்தடத்தில் அணிதிரள்வதே தமிழ்த்தேசிய உணர்வுடையோரின் கடமையாகும்.

அவரது வழிநடத்தலின்கீழ் இணைந்துள்ள ஒவ்வொருவரும் அவரது எண்ணங்களையும் கருத்துக்களையும் சரிவரப்புரிந்து விடுதலையை விரைவுபடுத்த உழைப்பது பொறுப்பாகும். விடுதலையின் வழிகாட்டியாகத் தன்வாழ்வை அமைத்துக் கொண்ட எங்கள் தலைவரினது ஐம்பதாவது அகவையின் நாளில் பெருமிதத்துடனும், நம்பிக்கையுடனும் வாழ்த்துக் கூறும் தமிழ்த் தேசியத்தின் குரலுடன் நானும் இணைவதிற் பெருமை கொள்கின்றேன்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

ச.பொட்டு
புலனாய்வுத்துறை பொறுப்பாளர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.


e Wallet
Google Play
App Store
Reward Points
Gift Card
EVRP
REWARDING YOUR EVERYDAY
MyEverydayShopping is a one-stop-shopping-platform for your everyday essential needs. It is integrated with an efficacious platform to create a better economy with a profitable Points Program that benefits all of our shoppers and merchants.
JOIN, SHOP, & COLLECT EVR POINTS WHILE SHOPPING WITH OUR MERCHANTS & GIFT CARDS
Merchant Benefits
Website Template: Modern design for improved user experience.
Personalized Marketing Tools: Push notifications, personalized gift cards, and electronic flyers.
Convenient Payment Options: EV gift wallet for seamless transactions.
Comprehensive Analytics: Access full reporting and tracking online.
Customer Engagement: Loyalty programs and "Find Me" feature to attract and retain customers.
Financial Security: Build income for future sale or retirement.
One-time Registration Fee: $199 to unlock these benefits.
And more...
Member User Benefits
Point Accumulation: Earn 4% to 60% on purchases.
Diverse Product Range: Access everyday essentials and a wide variety of products and services.
Shopping Flexibility: Enjoy convenience with both local and online shopping options.
Gift Card Rewards: Benefit from gift cards and an EV gift wallet.
Simple Tracking: Easily monitor progress with our user-friendly tracking system.
Networking Opportunities: Build your own shopping network effortlessly.
Exclusive Privileges: Gain mining rights worth $60.
And more...
Register Now
40
80
20
160
10
320
WWW.MYEVERYDAYSHOPPING.COM

# நன்னம்பிக்கை முனையாய் நின்ற
# பன்னிரு வேங்கைகள்










தமிழீழ மக்களின் அரசியல், பொருளாதார, சமூக வாழ்விற்கோர் தலைவிதி வரைய முற்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையும்; அதன் தார தம்மியத்தையும் ஆற அமர எடைபோட முற்படுவோர்க்கெல்லாம் தற்போது 37 ஆண்டு கால அவகாசம் வந்து வாய்த்திருக்கிறது. மேற்படி ஒப்பந்தத்தில் சிறீலங்கா அரசு இதயசுத்தியுடன் கையொப்பமிட்டிருக்குமானால் இப்பொழுது எதற்காக ஓர் புதிய தீர்வுத்திட்டத்தை முன்வைக்க வேண்டும் என்ற கேள்வி கேட்பாரின்றியே காற்றில கிடக்கிறது. இத்தகைய கேள்விகளையும்; அதற்கான பதிலையும் தம் ஈகத்தால் எழுதிவைத்தவர் பலர். அவர்களில் மிக முக்கிய மானவர்கள் தளபதிகள் குமரப்பா, புலோந்திரனுடன் பன்னிரு வேங்கைகளுமாவர். தமிழீழப் போர் என்பது சிறீலங்கா, தமிழீழம் என்ற இரு பக்கங்களை மட்டும் கொண்டதல்ல; அது சிறீலங்கா, இந்தியா, தமிழீழம் என்ற முக்கோண அச்சைக் கொண்டதென்ற உண்மையை உலகின் முன் அரங்கப்படுத்த தீருவில் வெளியில் தீயானவர்களும் இவர் களே.


இலங்கைத்தீவின் சுதந்திரம் வெளிப்படையானதல்ல; சுதந்திர சாசனத்தில் கையொப்பமிடும்போதே அதில் பல தவறுகள் திட்டமிட்டபடி நிகழ்த்தப்பட்டிருந்தன. அந்தத்தவறுகளின் மீது மோதிய எதிர்விசையே தமிழீழப் போர். இந்தப்போர்ப் பயணத்தில் பன்னிரு வேங்கைகளின் தியாகமே சடுதியான மாற்றத்தை ஏற்படுத்திய புள்ளியாகும்.


15ம் நூற்றாண்டில் ஆபிரிக்கக் கடல் வழியாக இந்தியாவிற்கு வழிதேடிய ஐரோப்பிய மாலுமிகள் தென்னாபிரிக்க முனையைக் கடக்க முயன்றபோது கடும் புயலினால் தாக்குண்டதும், அதற்கு “புயல் முனை” யெனப் பெயர் சூட்டினர். இதை மறுதலித்து புயலைக் கடப்போரோ சீரான வழியைக் காண்போரெனக்கூறி, அதற்கு மறுபடியும் “நன்னம் பிக்கை” முனை என்று பெயரிட்டு, இந்தியாவைக் கண்டுபிடிக்கவழிசமைத்தவன் ஸ்பானிய












அரசனான 3ம் ஜோன். இந்தப் புயல் கடந்த பயணமே இன்றைய விஞ்ஞான உலகின் வரவிற்கு வழிசமைத்தது என்பது அனைவரும் அறிந்த வரலாறு. இதுபோலலே தமிழீழப் போர்ப் பாதையிலும் முதலில் புயல் முனையாகவும் பின் நன்னம்பிக்கை முனை யாகவும் வழிகாட்டியவர்கள் பன்னிரு வேங்கைகளாவர். இவர்களின் தியாகத்தின்பின் இந்தியப் படைகளுடன் ஏற்பட்ட பயங்கர மோதலை; கடக்கமுடியாத புயலென


தானது. புலிகள் அணி இனிவரும் எத்தடைகளையும் தாண்டவல்லது என்ற உண்மையை நிரூபிப்பதாயிருந்தது. அந்தப் பெருமைக்குள் மறைந்து நிற்கும் நாயகர்களே பன்னிரு வேங்கைகள்.

தமிழரின் தாயக பூமியான வடக்கையும், கிழக்கையும் இணைப்பதை இன்றும் கூட அரச தரப்பினர் ஒப்புக்

தாயிருந்தது. தமிழர்களின் ஒன்றிணைந்த தாயகக் கோட்பாட்டை வெளிப்படுத்த மனித சக்தியில் இதற்கு மேல் ஓர் உயர்ந்த எல்லையை தேடிவிட முடியாது. ஏனெனில் மரண மடையும் போது தளபதி குமரப்பா திருமணமாகி ஒருமாத காலமே ஆகியிருந்தது. தோளில் போட்ட மாலைகூட வாடிப் போகத வேளையில் அவர் அந்த எட்ட முடியாத தியாகத்தைப் புரிந்திருந்தார். அவரைப் போலவே தளபதி புலேந்திரனும்









வர்ணித்தவர் பலர். ஆனால் தமிழீழத்திலிருந்து இந்தியப்படை அகன்ற பின்னர், அந்தப் போர் கடந்தது புயல் முனையல்ல பல வெற்றிகளுக்கு ஆதாரமாக அமையப்போகும் நன்னம்பிக்கை முனையேன எல்லோராலுமே ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் படியே தமிழீழப் போரும் நம்பமுடியாத வெற்றிகளையெல்லாம் நிகழ்த்திய வண்ணம் சென்றது. அத்தகைய சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலுமே தமிழீழம் தன் தொப்பியைக் கழற்றி மரியாதை செலுத்தக் கடப்பாடுடையோராக உயர்வு பெற்று நின்றவர்கள் பன்னிரு வேங்கைகளுமாவர். ஏனெனில், போராட்டக் களத்தில் இந்தியப்படைகளுடனான மோதலைத்தாண்டிய


கொண்டதாகவில்லை. இந்திய - இலங்கை ஒப்பந்தம் வடக்குக்கிழக்கு இணைவற்ற ஓர் தீர்வைத் திணித்தபோது, குமரப்பாவும், புலேந்திரனும் ஓர் எழுதப்படாத ஒப்பந்தத்தின் மூலம் அதை நிராகரித் திருந்தனர். இந்த மகத்தான உண்மையை இன்றும் கூட பலர் உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லை. மரணமடைந்த போது குமரப்பா யாழ் மாவட்டத் தளபதியாகவும், புலேந்திரன் திருமலை மாவட்டத் தளபதியாகவும் இருந்தனர். இவர்கள் இருவரும் ஒன்றாக இணைந்து நிகழ்த்திய மரணத்தின் பொருள், வடக்கும் கிழக்கும் மரணத்திலும் பிரிக்க முடியாது கைகோர்த்து நிற்பதையே உணர்த்துவ

மணமுடித்து இரண்டு மாதகாலமே நிறைவு பெற்ற மணமகன் தான். இத்தகைய இக்கட்டான சூழலில் மானிடத்தின் மீது சவால் விடும் பின்னணியில் நின்று இவ்விரு இளைய உள்ளங்களும் புரிந்த தியாகமும்; வடக்கையும் கிழக்கையும் இணைத்துக் காட்டிய விதமும் சாதாரண தியாகங்களல்ல. மணமாலை புறநானூற்றுக்காலப் பூதப்பாண்டியன் புகழை சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் காத்திருந்து தகர்த்து விட்ட வரலாற்றின் குறியீடுகள் இவர்கள்.

தளபதிகள் குமரப்பா, புலேந்திரனும் பதினைந்து போராளி





களும் 03.10.1987 அன்று கடலில் கைதானார்கள். ஒப்பந்தத்திற்கு முரணாக கொழும்பிற்கு எடுத்துச்செல்லப்படவிருந்த வேளையில் 05.10.1987அன்று சயனைட் அருந்தி பன்னிரு வேங்கைகள் மரணமடைந்தார்கள்.

கைது செய்யப்பட்டபோது அவர்கள் தப்பிச்செல்லவேண்டிய தேவை இருந்திருக்கவில்லை. காரணம் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் அவர்கள் பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட போராளிகளே. எனினும் அவர்கள் கைதின் பின்னர், தலைவர் பிரபாகரன் அவர்கள், “தமிழீழ மக்களின் பிரதிநிதிகளாக இந்தியா எம்மை அங்கீகரித்தது. ஆகவே சிறீலங்கா அரசு எம்மைக் கைதுசெய்யும் பட்சத்தில் இந்தியாவே எம்மைப் பாதுகாக்கவேண்டிய கடமைப்பாட்டிற்குரியது” என்று சுட்டிக்காட்டி இருந்தார். ஆனால் அவ்வேண்டுகோள் இந்திய - இலங்கை அரசுகளால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அவர்கள் தொடர்ந்தும் இறுக்கமான நிலையையே கடைப்பிடித்தனர். எனினும் கடலில் ஏற்பட்ட இந்த அனுபவமும்; உரிமை நிராகரிப்பும் கூட ஓர் புதிய வரலாற்றுத் தேவையை ஏற்படுத்திவைத்தன. அதன் பொருட்டு உருவாக்கப்பட்டதே கடற்புலிகள் அணியாகும். அன்று அவர்களுக்கு வழங்க மறுக்கப்பட்ட கடற் பாதுகாப்பை ஓர் குறுங் காலத்திலேயே புலிகள் ஏற்படுத்திக்கொண்டனர். இன்று கடற்புலிகள் பெற்றுள்ள அபார வளர்ச்சி, சோழ சாம்ராஜ்யத்திற்குப் பின்னர், தமிழன் பெற்ற பேரேழுச்சியாகும். இந்த வளர்ச்சிக்குப் பின்னாலும் நிழல் போலத்தெரிவது பன்னிரு வேங்கைகளினதும் தியாக முகங்களே.

மேலும், தமிழீழ அரசு பற்றி அங்கீகாரமும் இக்காலத்தில்தான் தெளிவாக வரையறை செய்யப்படுகிறது. அரசு என்றால் என்ன என் பதற்கு நீண்டகாலமாக எண்ணற்ற அறிஞர்கள் தோன்றி தமது வரைவிலக்கணங்களைக் கூறிக்கொண்டார்கள். அதுபோல தமிழீழ அரசுக்கும் ஓர் எல்லை வகுத்துத்தந்தவை இந்திய இலங்கை அரசுகளே. உண்மை யாகவே இலங்கை ஒற்றைத் தேசியமுள்ள நாடாக இருந்தால் இந்தியா இராணுவம் தீவு முழுவதும் நிறுத்தப்பட்டிருக்க வேண்டியது அவசியம். ஆனால் அவர்கள் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிராந்தியங்களிலேயே முகாமிட்டிருந்தார்கள். அவர்களது பணி மலையகம் தவிர்ந்த தமிழீழத் தேசியம் நிலவும் பகுதிகளுக்குள்ளேயே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இதன்மூலம் இலங்கை பல்லினத் தேசியமுள்ள நாடென்பதை அவர்கள் தெளிவாகவே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். விடுதலைப் புலிகளுடனான போரில் இந்திய இராணுவம் நகர்வதற்கு நிறம் தீட்டினால், அதுவும்; இனறைய தமிழீழத் தேசத்திற்குரிய வரைபடமும் ஒன்றாக இருக்கும் அதிசயத்தைக் காணமுடியும். ஆகவே தான் போருக்காக அணிவகுத்து நின்ற இந்திய இராணுவம் தன்னை அறியாமலே தமிழீழத்திற்குரிய வரைபடத்தையும் வரைந்து சென்றுள்ளதெனலாம்.

மேலும் சோவியத் யூனியனின் குலைவுடன் ஒற்றைத் தேசியக் கோட்பாடும் உலகளாவிய ரீதியில் சுரத்திழந்துவிட்டது. அல்லாமலும் தமக்குள் இணையும் நாடுகளின் ஒன்றியங்களை அங்கீகரித்த பின்பே இணைவுபடுகின்றன. இலங்கைத்தீவில் இவ்வளவு இழப்புக்களும், பொருளாதாரப் பின்னடைவுகளும், நெடிய போரும் நிவும் சூழலில் இரட்டைத் தேசியம் கூட ஏற்கப்படாதிருப்பது கூர்ந்து நோக்கற்குரியது.

இருந்தபோதும் தம்மீது நிகழ்த்தப்பட்ட ஒவ்வொரு சிதைவுகளின் போதும் ஈழத் தமிழ் மக்கள் ஓர் இலட்சியத்திற்காகவே உறுதியுடன் அணிதிரள்கின்றனர். வடமராட்சி மீதான தாக்குதல் நடைபெற, கரும்புலிகள் தாக்குதல் அறிமுகமாக வேண்டியிருந்தது. ஐந்தம்சக் கோரிக்கைக்காக திலீபன் ஈகம் புரிய வேண்டியிருந்தது. அதிகாரமற்ற இடைக்கால அரசுக்கான பேரம்பேசலில் பன்னிரு வேங்கைகளின் தியாகம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து அமைதி ஒப்பந்தம் முறிவடைய போர் தொடங்கியது. முதற் பெண்புலி 02வது லெப்படினன்ட் மாலதியின் தியாகம் நடைபெற அதன்வழி எண்ணற்ற நட்சத்திரங்களாலும், இடி முழக்கங்களாலும் தமிழீழப் போர்வானம் நிறைந்துபோய் பத்தாண்டுகள் கடந்துவிட்டன. மாவீர நட்சத்திரங்கள் நிறைந்து போயுள்ள வானத்தின் கீழ் நின்று, சகல சோகங்களை சுமந்தபடி தமிழீழ மக்கள் களைப்பின்றிக் காத்திருப்பதும் மாவீரர் நேசித்த சுதந்திரத்திற்காகத்தான். “மனிதன் மனிதன்தான் அதற்கு மேல் எவ்வளவு நாள் நீடிக்கும் அவனது வேட்டை!” என்பது பிரான்சிய நாட்டின் தேசிய கீதத்தின் சில வரிகள். இதுவே மனிதனால் மேற்கொள்ளக்கூடிய ஆக்கிரமிப்பு எல்லைக்கோடாகும். பன்னிரு வேங்கைகளின் பின் முடிந்துவிட்ட பத்தாண்டுகளை எடைபோட்டால், குண்டு வீச்சு, உணவுத்தடை, உலகால் துண்டிக்கப்பட்ட தனிமை யாவுமே தமிழீழ மக்கள் இனிமேல் சந்திப்பதற்கு பெரிதாக எதுவுமில்லை என்ற நிலையை உருவாக்கிவிட்டது. எனினும், அவர்கள் கடந்து கொண்டிருப்பது புயல் முனையை அல்ல நன்னம்பிக்கை முனையையே என்பதை வரலாறு நிச்சயமாக எழுத வேண்டி இருக்கும். ஏனெனில், குமரப்பா புலேந்திரனுடன் பன்னிரு வேங்கைகளின் காலத்திலேயே அவர்கள் புயலைக் கடந்து போகப் பயிற்சி பெற்ற இனமாகி விட்டனர்.

- ஒக்டோபர் 1997 - எரிமலை





# பிரசவம்

- புதியவன்

மூடுபனிப் புகாருக்குள் அமிழ்ந்து அமைதியாக இருந்தது அந்தப் பிரதான வீதி. ஜீவநடமாட்டம் எதுமின்றி மௌனத்தின் போர்வைக்குள் அடங்கிப் பனியில் குளித்து வெறித்துக் கிடக்கும் அந்தப் பிரதான வீதியில் இலும்பம் பூக்கள் சொரிந்தது போல, வெள்ளைப் பாவாடை விரித்து இருந்த பனிப்படலத்தின் மேல் கோடு கீறிச் செல்கிறது முரளியின் மோட்டார் வாகனம். மேல் மாடியில் நிற்கும் சுந்தரி ஜன்னலினூடாக வாகனம் போன திசையை லயித்துப் பார்த்துக்கொண்டு நிற்கிறாள். இரவு முழு வதும் சுறுசுறுப்பாகவும், அட்டகாசமாகவும் இருந்த அந்தப் பிர தான வீதி இன்று வழமைக்குச் சற்று முன்னதாக அமைதியாகி விட்டது. காரணம் இன்று விடுமுறைநாள்.

ஊரே விழித்துக்கொள்ளச் சற்றுத் தாமதமாகும். எங்கள் தமிழ்ச் சனங்கள் படுக்கையை விட்டு எழும்புவது என்றால் குறைந்தது பத்து மணியாகும். அதற்குள் போனால்தான் அவர்களை நித் திரைப்பாயில் பிடிக்கலாம். அதனால்தான் முரளி சாந்தியண் ணையை விடியப்பறம் ஐந்து மணிக்கு வரச்சொல்லி அவசரம் அவசரமாக வெளிக்கிட்டுப் போகிறான். எப்படியும் அவசரகால நிதிக்குக் குறிப்பிட்ட தொகை சேர்க்க வேண்டும். இருநூற் றைம்பது கிலோமீற்றர் தூரம் போகவேண்டும். அவர்கள் முன்சனைப் (Munchen) போய்ச் சேர குறைந்தது இரண்டரை அல்லது மூன்றது மணித்தியாலங்கள் பிடிக்கும். வீதி ஒரே வழுக்கலாக இருக்கும். கவனமாக ஓடுவார்களா, சீச்சீ... சாந்தியண்ணை, அவரின் கார்தான் பெரியதே தவிர அவரின் ஓட்டம் நிதானம். எண்பதுக்கு மேலே மிதிக்கமாட்டார். முத்து என்றால் தான் பயம். ஒரே பகிடியும் தமாசும். கதையென்றால் கையிலுள்ள கக்கானையும் மறந்து பின் ஆசனத்துக்கே வந் திடுவான். இதுவரை யன்னலினூடாக கார் போன பாதையைப் பார்த்து தனக்குள் ஆழ்ந்துபோன சுந்தரி அதிலிருந்து விடுபட்டு பக்கத்திலுள்ள சோபாவில் அமர்ந்தாள். அவளால் நீண்ட நேரம் நிற்கவோ, புரண்டு படுக்கவோ முடியாது. அந்த அளவுக்கு வயிற் றின் பெரும்பமும், அதற்குள் இருக்கும் குழந்தையின் பாரமும் அவளைத் திணற வைக்கிறது.

ஆம்! அவள் நிறைமாதக் கர்ப்பிணி. நன்கு கனிந்த பழம். இன்றோ நாளையோ குழந்தை பிறக்கலாமென டாக்டர் கூறி யுள்ளார். அதிலும் அவளுக்குத் தலைப்பிரசவம். முதல் அனு பவம். ஒவ்வொரு தமிழ்ப்பெண்ணுக்கும் தலைப்பிரசவம் என் கிறபோது உயிரையே பணயம் வைப்பது போன்ற ஒரு சோதனை. ஒரு மனப்பீதி. தன் பெற்றோருக்கு ஒரேயோரு பெண்பிள்ளை. அதிலும் செல்லப்பிள்ளை. அதனால் அவளுக்கு அந்தப்பயம் அதிகம் வருவதில் தப்பில்லை. அவள் இரவில் அனுங்கும் போதெல்லாம் முரளி சொல்வான், “சந்தரி, நீ செல்லப்பிள்ளையாக இருந்து வளர்ந்தவள். இப்போ நாட்டில் இருந்திருந்தால் அம்மா, அப்பா, மாமா, மாமி என்று எத்தனை பேர் உதவிக்கு வருவார்கள். ஆனால் இங்கு சொந்தம் என்று சொல்லிக் கொளள் யாரும் இல்லை. கணவன் என்று சொல்லிக் கொள்ள மட்டும்தான் என்னால் முடியும். என்னைக் காதலித் துக் கலியாணம் செய்தாய். எந்தச் சுகத்தையும் நான் தர வில்லை. நான் எனது மண், அந்த மண்ணின் விடுதலை, எமது இயக்கம் என்று விடுமுறை நாட்களிலும் வீட்டில் இருக் காமல் வெளிக்கிட்டுத் திரிகிறேன். இங்கு வாழும் தமிழ்ப் பெண்கள் மாதிரி உனக்கும் நகை நட்டோ, உடுப்போ வாங்கித் தரவில்லை. உன்னை ஊர் சுற்றிக் காட்டவில்லை. மாதம் ஒரு முறை இங்கு நடக்கும் தமிழ்ச்சினிமாவுக்கே கூட்டிப்போக வில்லை. நடுச் சாமத்தில் வந்து படுக்கிறன். விடியுமுன்னே வெளிக்கிட்டுப் போகிறன். என்ன செய்வது? என்னால் இங் குள்ள சாதாரண தமிழ் மகன் மாதிரி வாழ முடியவில்லை. அப்படி வாழ எண்ணினாலும் தமிழீழத்தில் நடக்கும் ஒவ்வொர நிகழ்வையும் வாசிக்கும் பொழுதும்; செய்திகளைக் கேட்கும் பொழுதும் எனது நரம்புகள் விறுவிறுக்கிறது. யாராவது விடுதலை பெற்றுத் தருவார்கள்; நாம் போய்ச் சொகுசாக வாழலாம் என்று என்னால் ஒதுங்கியிருக்க முடியாது. நாம் பிறந்த மண்ணின் விடுதலைக்கு நான் என்ன செய்கிறேன் என்ற கேள்வி என்னை உறுத்துகிறது. ஏதோ ஒரு காரணத் தினால் வெளிநாடு வந்தவர்கள்தான் நாங்கள். நான் ஏன் வெளிநாடு வந்தேன் என்று உனக்குத் தெரியும்.”



“சுந்தரி, மணியங்காட்டுப் பள்ளிக்கூடத்திலை நானும் நீயும் ஒன்றாகப் படித்தோம்; காதலித்தோம். எமது குடும்பங்களிலை இருந்த வர்க்க வேறுபாடுகள்தான் எமது காதலுக்குத் தடையாக இருந்தது. என்னைப் பொறுத்த மட்டில் அன்று எனக்கு இருந்த ஒரேயொரு இலட்சியம் எமத காதல். உன்னை நான் அடைய வேண்டுமென்ற அவா. அதற்காகத்தான் நான் வெளிநாடு வந்தேன். நான் வரும்போது எனக்கு எனது மண்ணின் மகிமை தெரியவில்லை. எம்மீது இருந்த இன ஒடுக்கு முறைகளை உடைக்க வழி தெரியவில்லை. எங்கள் வாக்குச் சீட்டின் மூலம் பதவிக்கு வந்த தலைமைகள், எம்மிடமிருந்த இன உணர்வை வளர்க்கவில்லை; வழிநடத்தவில்லை. அதனால்தான் வெளிநாடு வந்தேன். நான் வந்த பின்தான் எமது இனத்தின் விடுதலைப் புரட்சி வெடித்தது. இதுவரை தலைமறைவாக இருந்த விடுதலைப் புலிகளின் கெரில்லாப் போராட்டம் வெகுஜனப் போராட்டமாக உருவாகியது. ஏன் இனத்திற்கே தேசியத் தலைவன் உருவாகினான். ஒரு சரியான தலைமை; அதன் வழிநடத்தல் கிடைத்தது. நான் வெளிநாடு வரும் முன்பே இந்நிலைமை உருவாகியிருந்தால் எனது உணர்வுகள், சிந்தனைகள் சரியாக வழிநடத்தப்பட்டிருக்கும். ஒரு இயக்கக் கிளையின் மாநிலப் பிரதிநிதி; அதன் பகுதிப் பொறுப்பாளர் என்ற வகையில் என்னால் ஓய்ந்திருக முடியாது. செயற்பாடு இல்லையென குறைகள் வந்தாலும்கூட மேலும் மேலும் செயற்பட்டுக்கொண்டே விடை கூறவேண்டியவன். சுந்தரி, உனது பிரசவம், அதன் வேதனை, அதில் எனக்கும் பங்குண்டு.”

“இந்த வேதனை உனக்கு மட்டும் உரித்தானது அல்ல. மனித இனத்திற்கே சொந்தமான ஒரு இயற்கை நிகழ்ச்சி. வெளி நாட்டில் தனிமையாக வாழும் உனக்கு அதில் முன் அனுபவம் இல்லாத உனக்கு அது சற்று கஷ்டமானதுதான். ஆனால் என் மீது சுமத்தப்பட்டிருக்கும் இந்த அவசரகால யுத்தநிதி சேர்க்கும் பொறுப்பு, அது இதைவிடப் பெரியது. எமது மண்மீட்புப் போராட் டத்தை அடுத்த தலைமுறைக்கென எமது குழந்தையின் தலையிலும் போடாது, அந்தச் சுமையை நாமே சுமக்க வேண் டுமானால், உனது பிரசவ வேதனையைவிட அவசரகால யுத்தநிதி சேகரிப்பது எனக்கு முக்கியமானது. இந்த வளர்ச் சியடைந்த நாட்டில் நீ தொலைபேசியைச் சுழட்டினால் அவசர உதவிக்கு வர எத்தனையோ அம்புலன்ஸ், அவசர உதவிகள் நிறைய உண்டு. ஆனால், நாம் பிறந்த மண்ணை மீட்க நிதி




வேண்டும் என தொலைபேசி மூலம் கேட்டால், வீடுதேடிக் கொண்டுவந்து தரும் அளவிற்கு இங்குள்ள எமது தமிழர்கள் இன்னும் விழித்துக்கொள்ள வில்லை.”

சுந்தரி தனது பிரசவ வேதனை ஏற்படும் போதெல்லாம் முரளி கதைத்த கருத்துக்களை நினைத்துப் பார்ப்பாள். அவன் இயக் கத்தில் வைத்திருக்கும் நம்பிக்கை, தலைமையில் வைத்திருக் கும் விசுவாசம், இன விடுதலைக்காக உழைக்கும் உணர் வுகள், இவை அத்தனையும் அவளது பிரசவ வேதனையின் ஒத்தனங்கள். அவள் தனக்குள்ளேயே சிந்தித்தாள். எனது முரளி எவ்வளவு மாறிவிட்டான். அன்று எனக்கு அவனிடம் பிடித்தது அவனது குறும்புத்தனம், முரட்டுக்கோபம், எடுப்பான் தோற்றம், குழைந்து குழைந்து பார்க்கும் குறும்பார்வை. அன்றைய எனது இளமைக்கு அவனது இந்த இயல்புகள் இரைபோடுவதாக இருந்தது.

அன்று எமக்கென்று பெரிதாக ஒரு இலட்சியமோ, கருத்து ஆழமோ காணப்படவில்லை. ஆனால் இன்று, எனது முரளியிடம் உள்ள விடுதலை இலட்சியம், அதன் கருத்து ஆழம், இனப்பற்று இவற்றை எண்ணும் பொழுது இன்றுதான் எமது காதலுக்கு, கணவன் மனைவி வாழக்கைக்கு ஒரு அர்த்தம் தெரிகிறது. வெளிநாடுகளில் அகதி என்ற பெயரில் அர்த்தம் தெரியாமல் அலையும் எத்தனையோ பெண்களின் கணவன் மார்களுடன் ஒப்பிடும்பொழுது, எனது முரளியின் இயக்கச் செயல்ப்பாடுகள் எனது மனதிற்கு ஒரு திருப்தியைத் தருகிறது. உண்மையிலேயே இன்றுதான் அவன் எனது இலட்சியக் காதலன். கருத்து ஒருமித்த கணவன். ஈழத்தின் நிலங்களில் வேண்டுமானால் மேடுபள்ளம் இருக்கலாம். ஆனால், மலர்ந்து வரும் தமிழீழத்தில் வர்க்க வேறுபாடுகள் இருக்காது. அவை பதுங்கு குழிக்குள் வற்றியே போய்விட்டன.

கிறிங்... கிறிங்...

தொலைபேசி ஒலித்தது, சுந்தரியின் பிரசவ வேதனைக்கு ஒத்தனமான அந்தச் சிந்தனைகள் கலைகின்றன. அவள் தனது இடது கையை ஊன்றி வலது கையை நாரிக்கு முண்டுகொடுத்து பக்குவமாக எழுந்து நடக்கிறாள்.

“கலே...!”

“நான் முத்து...”

என்றைக்குமே ஏதாவது பகிடி விட்டபடி சிரித்துக் கொண்டு கதைக்கும் முத்து இன்று தொலைபேசியை எடுத்தவுடனேயே பொரிந்தகொட்டினான்.

“என்ன சுந்தரியக்கா, முரளி எங்கே போட்டான்? இங்கை பக்கத்து நகரத்திலை பிரதிநிதி கனடாவுக்கு போய்விட்டானாம். அதால சனங்களுக்குப் பேப்பர், புத்தகம் ஒழுங்காகக் கொடுக்கவில்லையாம். சனம் கத்துதுகள். ஒரு ஒழுங்கான பிரதிநிதியை வைக்கத்தெரியாதோ... இவன் முரளி இதுகளைக் கவனிக்காமல்... எங்க போட்டான்...!”

“முத்தண்ணா... ஏன் கொதிக்கிறியள்? பிரதிநிதி என்கிறது யார்? விடுதலப் புலிகள் எந்தப் பிரதிநிதியையும் வானத்திலிருந்து பூப்போட்டு இறக்கவில்லை. ஏதோ பங்களிப்புச் செய்சிறவர்களிலை முன்வந்து செயற்படும் ஒருத்தனைத்தான் பிரதிநிதியாக்குகிறது. அதற்கு இயக்கத்தைக் குறை சொல்கிறதே. தலைமையும், செயலகமும் சரியாகத்தான் நடக்குது. ஒரு பிரதிநிதியிடம் கொடுத்த பொறுப்பை அவர் நடைமுறைப் படுத்திற முறையிலை சிலவேளை அவர் தவறலாம், இதற்காக அவரைத் தவறு செய்யச்சொல்லி தலைமை அவரை அனுப்பவில்லை.”

“சனத்தின்ரை கதைகளைக் கேட்க எரிச்சல் எல்லே வருகுது. முந்தியும் அவசரகாலநிதி வாங்கின நீங்கள் பிறகு இப்பவும் வாறியள் என்று அலுக்கினம்...”

“எரிச்சல் வருகிது என்பதற்காக நாங்கள் அவர்களிற்கு பதில் சொல்லாமல் போகமுடியுமே. சனம் என்றால் நாலுகேள்வி கேட்கத்தான் செய்வினம்.” “போனமுறை எல்லோரும் ஒருமித்து பங்களித்திருந்தால் இந்தமுறை சேர்க்கவேண்டிய நிலை வந்திருக்காது என்று சொல்லுறதுதானே.”

சுந்தரி...

எவ்வளவு பொறுமையான பதில், ஆழமான கருத்து, அமைதியான பேச்சு. அவ இவ்வளவு பொறுமைசாலியாக இருப்பதால்தான் முரளியின் கோபத்தைச் சமாளிக்க முடிகிறது. அவனுக்கு கோபம் மூக்கு நுனியில் வந்துவிடும். ஒருமுறை முத்து பக்கத்தில் இருப்பதையும் பொருட்படுத்தாது சுந்தரியிடம் சீறிக் குதித்தான். “எங்க சுந்தரி நான் அடுக்கிவைத்த “எரிமலை”ப் புத்தகங்கள். அவை எனக்கு உடனடியாக இப்ப தேவை...!”

ஒரு பூகம்பமே வந்ததுபோல் வந்த அவனின் அலறல், சுந்தரி மெதுமையான ஒரு புன்சிரிப்புடன் அவற்றை எடுத்து வந்தாள்.

“நீங்கதானே ராத்திரி படுக்கையிலை வைச்சு வாசித்தனீங்கள். இந்தாங்கோ...”

முரளியின் மூஞ்சையில் அசடு வடிந்தது. “சுந்தரி என்றால் சுந்தரிதான்...” அவன் அவளைச் சமாளித்தான்.

“வழியாதையுங்கோ”

“எனக்கு உங்களிடம் பித்ததே இந்த கோபம்தான்.” அவள் அவனது ஒவ்வொர அசைவையும் ரசித்தாள்.

கிறங்... கிறிங்...

மீண்டும் அந்த தொலைபேசி ஒலித்தது.

இம்முறை சுந்தரியால் அந்தத் தொலைபேசியை போய் எடுக்கவே முடியவில்லை. அந்தளவிற்கு அவளுக்கு இடுப்புவலி சற்று அதிகமாகிவிட்டது.

“கலோ...” சற்று அனுக்கம் கலந்த குரல்.

“நான் கலா பேசுறன். இவர், முரளியோட முன்சனுக்குப் போறன் என்றவர், இன்னும் காணவில்லை. அதுதான் உங்கள வந்து கதைத்துக்கொண்டு நிற்கிறாரோ என்று எடுத்தனான்.”

“இல்லையுங்கோ... இன்னும் அவர்கள் வரவில்லை.”

“ஏன் சுந்தரி அனுங்கிறியள்?”

மூச்சுவாங்குது எனக்கு.”

பெண்களுக்கே உரித்தான அநத பிரசவவலி, அதன் தாக்கத்தை அவள் விளங்கிக் கொண்டாள்.

“ஓ... அப்படியென்றால் சுந்தரி உடனடியாக ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டும. வெளிக்கிடுங்கோ. நான் வேணுமானால் அம்புலன்சுக்கு அடிச்சுச் சொல்லுறன்.”

அனுபவத்துடன் கூடிய அந்த வார்த்தைகள்...

அம்புலன்ஸ் தனக்கே உரித்தான அந்த மின்னி மின்னி விளக்குடன் எல்லோரும் வழி விலத்தும் வண்ணம் ஒலி எழுப்பிக்கொண்டு, வேகத்தோடு விரைந்து விருகிறது.

அந்த எட்டுமாடிக் கட்டிடத்தின் 2ம் இலக்க அறையில், சில மணித்தியாலங்களாக நடந்த போராட்டத்தின் பின் சுந்தரி இப்போதுதான் கண் திறக்கிறாள்.

“திருமதி முரளி!” தாதி அவளை அழைத்தாள்.

“உங்களுக்கு இரட்டை ஆண் குழந்தைகள்.”

அந்த மகிழ்ச்சியில் பிரசவத்தின் வேதனை மறந்துவிடுகிறது...

இதுவரை முரளிக்கு மட்டும் சொந்தமான அந்த அன்பில் பங்குகொள்ள இரண்டு ஜீவன்கள்.

டொக்...! டொக்.....!

கதவு தட்டும் சத்தம்.

தாதி உள்ளே வர அனுமதி கொடுத்தாள்.

ஆ... முரளியேதான். அவன் கால்களில் ஒருவித அவதி. பிரசவத்தின்போது நிற்கவில்லையே என மனதில் ஒரு ஏக்கம்! அவன் கண்களில் நீர் பனிக்கிறது. “சந்தரி சுகமா?” அன்பு தழுவிய குரல்.

அவள் அருகே இரண்டு குழந்தைகள். அவன் விழிகளில் இரந்து விழுந்த சில முத்துக்கள். உடம்பினுள் அளவிடமுடியாத மகிழ்வுணர்வின் ஓட்டம். சுந்தரியின் கரங்களை அவன் அறுகத் தழுவினான்.

“சுந்தரி, பிரசவத்தின்போது நான் உன்கூட நிற்கவில்லையே, அதற்கு நான்...”

அவன் வாய கைகளால் பொத்தினாள் சுந்தரி.

“முரளி. . .

இயக்கப் பிரதிநிதிகளுக்கும் குடும்பங்கள் உண்டு.

அவர்களுக்கும் ஆசாபாசங்கள் உண்டு. அதையும் கடந்துதான் அவர்கள் தாய்மண்ணுக்கெனவும் உழைக்க வேண்டுமென முன் வருகிறார்கள் என்பதை இந்த மக்கள் புரிந்தால் அதுவே எனக்குப் போதும்.”

**1993 ஐப்பசி – எரிமலை**



2025ஆம் ஆண்டின்

# உலக வணிகம்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அலலது
செலவோ அல்ல,அது ஓர் முதலீடு.

விளம்பரத்திற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம்
வீண் விரயமன்று அது உங்கள்
வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு.

உங்கள் வணிகம் பெருகவும்
முன்னேற்றமடையவும் இன்றியமையாதது.

விளம்பரம் இன்றேல்
வியாபாரம் இல்லை



விளம்பரத் தொடர்புகளுக்கு

**437 345 4203**

www.ulagavanikam.ca
thamilarvanikam@gmail.com

# விடுதலைப்போரும் பெண் விடுதலையும்

–கலாநிதி க. சோமாஸ்கந்தன்



பெண் விடுதலை தேசிய விடுதலையின் முக்கிய அங்கமாக அமைகின்றது. தேசிய விடுலைப்போர் தன்பால் பெண் விடு தலையையும் உள்ளடக்கிச் செல்கின்றது. தேசிய விடுதலைப் போரின்போது பெண் விடுதலை விரிவடைந்து வலுப்பெறு கின்றது. ஆணுக்குச் சரிநிகராகப் பெண் பங்களிப்புச் செய்யும் போது போராட்டம் முழுவடிவம் பெறுகின்றது.

போர்ச்சூழலில் வாழ்ந்து கொண்டு போர் முனையில் இருந்து விடுபட்டுத் தனித்து நிற்க முடியாது. பெண்ணினத்தால் விலகி நிற்க இயலாது. எதிரி பெண்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்துகிறான். ஒரு இனத்தின் தேசிய விடுதலைப்போரை அவ் வினப் பெண்ணின் வாழ்வுரிமைப் போராகப் பார்க்க முடியும்.

எமது தேசிய விடுதலைப்போர் முனைப்புப் பெறமுன்பே புரட்சி கரமான சமூகப் பணிகளில் தமிழீழப் பெண்கள் முன்னின்று உழைத்துள்ளனர். மக்கள் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் இலட்சிய தாகத்துடன் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். தீண்டாமை ஒழிப்பு, ஆலயப் பிரவேசம் போன்ற போராட்டங்களில் பெண் களின் ஈடுபாடு ஆண்களுக்கு நிகரானது. பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பிரவேசத்தின் போது சிறீலங்காப் பொலிசாரின் கெடுபிடிகளை மீறி எமது பெண்கள் முன்னேறியுள்ளனர். தமிழீ ழப் பெண்களின் போராட்ட வரலாறு நெடிய பாரம்பரியத்தைக் கொண்டது.

தேசிய விடுதலைப் போருடன் ஒத்துப்போகாத மரபுகள், பழக்க வழக்கங்கள், வரன்முறைகள் போரின் காலத்திலும் அதற்குப் பின்பும் வழக்கொழிந்து போகின்றன. பெண்கள் கடலில் இறங் கித் தொழிலோ, நீச்சலோ செய்யக் கூடாது என்ற கட்டுப்பாடு தமிழீழத்தின் கரையோரப் பகுதிகளில் முன்னொரு நாள் இருந் தது. இன்று பெண் கடற்புலிகள் கடலிற் காவியம் படைக் கின்றனர்.



மொசாம்பிக் நாட்டின் பான்ரு (BANTU) இன மக்கள் மத்தியில் பெண்கள் ஆயுதம் தரிக்கக்கூடாது என்ற இறுக்கமான கட்டுப் பாடு இருந்தது. இந்த மக்களின் விடுதலைப்போர் தீவிரமடைந்த போது இக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது. போர்த்துக்கல் நாட்டின் காலனித்துவ நாடாக ஆபிரிக்காவின் தென் கிழக்கு மொசாம்பிக் 470 (1498-1975) வருடகாலம் இருந்தது.

பிறிலிமோ (FRELIMO) எனப்படும் மொசாம்பிக் தேசிய விடுதலை முன்னணி சமோராமசல் (SAMORA MACHAL) என்பவரின் தலைமையில் விடுதலைப் போரை முன் னெடுத்தது. சமோரா மசலின் மனைவி கிராசா மசல் கணவ னோடு இணைந்து போரை வழிநடத்தினார். 1968-1969 காலப்பகுதியில் மொசாம்பிக் நாட்டில் பெரும்பான்மையினராக வாழ்ந்த பான்ரு இனப் பெண்களை போராளிகளாக இணைக் கும் தீர்மானத்தை பிறிலிமோ எடுத்தது. இத்தீர்மானம் முழு ஆபிரிக்காவுக்கும் முன்மாதிரியாக அமைந்தது.

இதற்கான காரணத்தை நியூஸ்வீக் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் கிராசா மசல் பின்வருமாறு விளக்கிக் கூறினார்.

"ஆணும் சரி, பெண்ணும் சரி ஒவ்வொருவரும் தனது விடுதலையைத் தானே போரீட்டு நிலைநிறுத்த வேண்டும். ஒருவர் விடுதலையை இன்னுமொருவர் பெற்றுக் கொடுக்க முடியாது." நியூஸ்வீக் - ஜுன் 30.1997.

இதுவொரு காத்திரமான தத்துவ விளக்கமாக ஏற்றுக்கொள்ளப் படுகின்றது. கொழும்பு வாழ் பெண்ணியத்தலைவிகள் இதை நிராகரிக்கின்றனர். அத்துடன் பெண் புலிகள் மீது கடும் விமர் சனக் கணைகளையும் தொடுக்கின்றனர்.

விமர்சனங்கள் பொதுவாக முத்திறத்தன. ஒரு அமைப்பின் அங்கத்தவர் அதன் வளர்ச்சிக்கு உதவும் வகையில் செய்யும் ஆக்கபூர்வமான விமர்சனம் முதல்வகை. அமைப்புடன் நெருங்கிப் பழகிய காரணத்தால் அவதானிப்பு அடிப்படையில் திறனாய்வு நோக்குடன் செய்யும் விமர்சனம் இரண்டாம் வகை. தூர இருந்தவாறு முன்கூட்டிய தெரிவு செய்யப்பட்ட இலக்கை நிறைவு செய்யும் நோக்குடன் செய்யப்படும் விமர்சனம் மூன் றாம் வகை - இது பெரும்பாலும் ஆதாரமற்ற உண்மைக்குப் புறம்பான கண்டனமாக அமைவதுண்டு.

விடுதலை அடைந்த மொசாம்பிக்கின் முதலாவது கல்வி அமைச் சராகப் பதவி வகித்தவர் கிராசா மசல். தீவிர அரசியலிலிருந்து விலகியபின் அவர் ஐ.நா. பணியாளராக நியமனம் பெற்றார். சிறுவர் நலன், பெண்கள் நலன் போன்ற விவகாரங்களில் ஐ.நா. ஊடாகக் கவனம் செலுத்தினார். சிறுவர் மீதான போரின் பாதிப்பு என்ற தலைப்பில் அவர் எழுதிய ஆய்வறிக்கை ஒலாரா ஒற்றுனு போன்ற பிற்கால சிறுவர் நல ஆர்வலர்களுக்கு வழி காட்டியாக அமைந்தது. விமான விபத்தில் சமோரா இறந்தபின் நெல்சன் மண்டேலாவை இரண்டாம் தாரமாக கிரசா திரு மணம் செய்துள்ளார்.

கொழும்பின் பிரபல பெண்ணிய ஆர்வலர் டாக்டர் நெலூபர் சென்ற வருடம் (2001) வெளியிட்ட நூல் மூலம் பல மாறுபட்ட கருத்துக்களை முன்வைக்கிறார். தமிழீழத் தேசிய விடுதலைப் போர் தமிழ்ப் பெண்களின் சமூக விடுதலையைப் பெற்றுக் கொடுக்கவில்லை என்பது அவருடைய குற்றச்சாட்டு. எல்.ரி. ரி.ஈ. தலைமையில் நடக்கும் தேசிய விடுதலைப்போர் பெண் விடுதலையையும் முன்னெடுக்கின்றதாக அடேல் பாலசிங்கம் கூறுவதை ஏற்க நெலூபர் மறுக்கிறார்.

ஆண் போராளிகளின் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காகவே பெண் போராளிகள் போராட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர் என்பது நெலூபரின் வாதம். போராட்டம் நடக்கும் வரை பெண் போராளிகளுக்கு வெளிப்படையான அந்தஸ்து வழங்கப் படுகின்றது. போர் முடிவுற்றபின் அவர்கள் மீண்டும் தமது முன்னைய குறுகிய வட்டத்திற்குள் தள்ளப்படுவார்கள் என்று அவர் ஆருடம் கூறுகிறார். தேசத்தின் தாய் என்று அவர்களைப் போற்றிப் புகழ்வதை நம்ப முடியாது என்று டாக்டர் நெலூபர் பொரிந்து தள்ளுகிறார்.

"தேசத்தின் வரலாறும் பெண்களும்" இருபதாம் நூற்றாண்டில் தேசியமும் பெண்களும் என்பதே நெலூபரின் நூல் தலைப்பு. பிரசுரித்தோர் கொழும்பு சமூக விஞ்ஞானக் கழகம், 2002. – WOMEN AND THE NATION'S NARRATIVE; GENDER AND NATIONALISM IN THE TWENTHIETH CENTURY. BY DR. NELOVFER DEMEL. SOCIAL SCIENTISTS ASSOCIATION, 2001

மனித உரிமைகளை மனிதனே ஆக்கினான். மனிதத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது உரிமைகள் பற்றிய குரலை மனி தன் எழுப்பினான். உயிருக்கு உத்தரவாதம், இதுதான் மனித உரிமைகள் யாவற்றிற்கும் அடிப்படை. பெண்ணியத்தின் ஆன்மா பெண்ணின் உயிர்வாழும் உரிமை. உயிர்வாழும் உரிமை மறுக்கப்படும்போது பெண் ஆயுதம் ஏந்துகிறாள். இதற்குப் பிறர் தூண்டுதல் தேவையில்லை. பெண்ணில் உயிர் வாழும் உரிமைபற்றிப் பேசாத பெண்ணியம் அர்த்தமற்றது. தமது வாழ்வுரிமைக்காகப் போரிடும் பெண்ணைத் தரக் குறைவாக விமர்சிக்கும் ணெ்ணியம் போலியானது.

சிறீலங்கா ஆயுதப் படைகள் தமிழீழப் பெண்கள் மீது தொடர்ச் சியாக நடத்தும் வன்முறைகளைக் கண்டித்து டாக்டர் நெலூபர் தமெல் போன்ற பெண்ணியவாதிகள் கண்டனக் குரல் எழுப்பிய துண்டா? எம்மை விமர்சிக்க இவர்களுக்கு என்ன யோக் கியதை இருக்கிறது?

**போர்ச்சூழலில் வாழ்ந்துகொண்டு போர்முனையில் இருந்து விடுபட்டுத் தனித்து நிற்க மடியாது. பெண்ணினத்தால் விலகி நிற்க இயலாது. எதிரி பெண்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்துகிறான். ஒரு இனத்தின் தேசிய விடுதலைப் போரை அவ்வினப் பெண்ணின் வாழ்வுரிமைப் போராகப் பார்க்க முடியும்.**



தனது நச்சுக் கருத்துக்களை டாக்டர் நெலூபர் பல வருடங்களாகத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறார். சுய விருப்புடன் போராடுகிறார்களா? அல்லது பலிக்கடாவாக ஆக்கப்படுகிறார்களா? ஆயுதம் தரித்த சிறீலங்காப் பெண்ணின் இடைக்காலம் என்ற தலைப்பில் அவர் 1998 இல் ஒரு ஆய்வு நூலைப் பதிப்பித்தார். - AGENCY OR VICTIM? THE SRI LANKA WOMEN MILITANT IN THE INTERREGNUM. வேலிக்கு ஓணான் சாட்சி என்பதுபோல் இந்த நூல் சம்பந்தமான திறனாய்வுக் கட்டுரையை செல்வி. ராதிகா குமாசுவாமி 1998 யூலை 17ஆம் திகதி டெயிலி நியூஸ் பத்திரிகையில் பிரசுரித்தார்.

இந்த நூலும் அதன் திறனாய்வும் அடேல் பாலசிங்கத்தை மறுத்துரைப்பதையே தமது முழுமுதற் குறிக்கோளாக கொண்டுள்ளன. போராட்டத்தில் இணைவது சுயவிருப்பில் அல்ல. நிர்ப்பந்தம் காரணமாகவே என்ற நிலைப்பாட்டை முன்கூட்டியே எடுத்துக் கொண்டு, அதற்கமைவாக இந்த நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. எமது தேசியப் போரை கொச்சைப் படுத்த வேண்டும் என்ற அவருடைய அடிப்படை நோக்கம் தெற்றெனத் தெரிகின்றது. போரியல் துறையில் பெண்கள் பங்களிப்பு என்ற பரந்த கற்கையை டாக்டர் நெலூபர் அர்த்தமற்றதாக்குவதோடு வரலாற்றையும் இருட்டடிப்புச் செய்துள்ளார்.

மூன்றாம் உலக நாடுகளில் நடைபெறும் தேசிய விடுதலைப் போராட்டங்கள் வாயிலாகப் பெண்விடுதலை முன்னெடுக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளும் நூலை குமாரி ஜெயவர்த்தனா பிரசுரித்துள்ளார். கொழும்பின் பெண்ணிய வாதிகளில் இவர் வித்தியாசமானவராகத் தோற்றமளிக்கிறார். இனவாதத்திற்கு அப்பால் நின்று பெண்ணியம் பேசும் திறன் கொழும்புவாழ் பெண்ணியவாதிகளுக்கு இன்னும் கைவரவில்லை. இனவாதத்தின் இன்னுமொரு வெளிப்பாடாகவே டாக்டர் நெலூபர் போன்றோரின் எழுத்துக்களைப் பார்க்கமுடிகின்றது.

சென்ற நூற்றாண்டின் தொண்ணூறு நடுப்பகுதியில் எமது விடுதலைப் போர் கூர்மையடைந்த போது சிறீலங்கா அரசு ஒரு பன்முகப் படுதப்பட்ட பிரச்சாரப்போரை எம்மீது தொடுத்தது. பிரச்சாரத்தின் தலைமைகளாகச் செல்வி. ராதிகா குமாரசுவாமி என்ற ஐ.நா. அதிகாரி இடம்பெற்றார். ஐ.நா. சாசனத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மனித உரிமை ஆணையகம் தனது செயற்பாடுகளை விரிவாக்குவதற்காகப் பதினைந்திற்கும் மேற்பட்ட அதிகாரிகளை நியமித்துள்ளது. இவ்வதிகாதிகள் "றப்பொத்துவாக்கள்" RAPPORTEUR என்று அழைக்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு றப் பொத்துவாவுக்கும் ஒவ்வொரு துறை ஒதுக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு எதிரான வன்முறை என்ற விசேட துறை ராதிகா குமாரசுவாமிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. சித்திரவதை, சிறுவர்களுக்கு எதிரான வன்முறை, பெண்வர்த்தகம் போன்ற துறைகள் வேறு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. துறைகள் வித்தியாசப்பட்டாலும் கடமைகள் யாவும் ஒரே மாதிரியானவை. இவர்கள் "உண்மையை அறியும் நிபுணர்கள், குறிப்பிட்ட நாடுகளின் மனித உரிமை நிலவரத்தை அறிந்து மனித உரிமை ஆணையத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கும் கடப்பாடுடையவர்கள்". என்று மனித உரிமை ஆணையகம் கூறுகின்றது.

அமெரிக்க நிதி உதவியோடு இயங்கும் கொழும்பின் அனைத்துலக இனவிவகாரக் கற்கைகள் மையத்தின் (INTERNATIONAL CENTRE FOR ETHNIC STUDIES) இயக்குநராகவும் ராதிகா கடமை யாற்றுகிறார்.

பெண் புலிப்போராளிகளுக்கு எதிரான முதல் பிரச்சாரத் தாக்குதலை 1995 இல் ராதிகா தொடக்கி வைத்தார். அதன் எதிரொலி தமிழ்கூறும் நல்லுலகின் எல்லா மட்டங்களிலும் ஒலித்தது. அவர் ஆரம்பித்து வைத்த இப்பணி இடையறாது தொடர்கின்றது. மிக அண்மையில் "பூனைக் கண்ணன்" என்ற புனைபெயரில் எழுதும் ஐலண்ட் பத்திரிகையின் பத்தி எழுத்தாளன் தமிழ்ப் பெண்களின் எதிர்காலம் பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார்.

பாவம் தமிழீழப் பெண்கள்! புலிகளின் இடைக்கால நிர்வாகத்தில் அவர்கள் பல துன்பங்களை அனுபவிக்கப் போகிறார்கள். சேலை ஒன்றைவிட மனதுக்குப்பிடித்த வேறு ஆடைகளை அணியமுடியாது. புலிகள் ஆட்சியில் பெண்கள் மிதிவண்டிகளைப் பயன்படுத்த முடியாது. அவர்களுடைய பேச்சுச் சுதந்திரம் பறிக்கப்பட்டுவிடும். ஆணாதிக்கம் பரவலாகக் காணப்படும். இவ்வாறு பூனைக்கண்ணன் தமிழீழப் பெண்களுக்காகக் கண்ணீர் சிந்துகிறார்.

தமிழர்கள் ஒரு போர்க் குணமுள்ள இனம் (MARTIAL RACE) என்பதை உலகம் அறியும். ஏதோ இன்று நேற்றுப் போரிடத் தொடங்கியவர்கள் அல்ல. கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் அகநானூறுப் பாடலில் ஒரு தமிழிச்சி, "சோழர்களின் வல்லம் கோட்டைக்கு முன்னால் சிதறடிக்கப்பட்ட ஆரியப்படைகள் போல் என் கைவளையல்கள் நொருங் கட்டும்" என்றாள். துருவக்கரடியின் தூக்க நிலைக்குச் சென்றிருந்த எமது வீரப்பாரம்பரியத்தை மீளக்கட்டியெழுப்பிய பெருமை புலிகள் அமைப்பைச் சாரும்.

பயனற்ற பழக்க வழக்கங்களைச் சுமப்பத்தில் அர்த்தமில்லை. முதலாம் உலக நாடான ஜப்பானில் சாக்கி மது வடிசாலைகளில் பெண்கள் சம்பந்தமான ஒரு பாரம்பரியம் உண்டு. சாக்கி ஜப்பானின் தேசிய மதுபானம். இது அரிசியிலிருந்து தயாரிக்கப்படுகின்றது. 1800 வரையிலான ஜப்பானியக் குடும்பங்கள் கடந்த 800 வருடங்களாக இப்பாரம்பரியத் தொழிலில் ஈடுபடுகின்றன. சாக்கி வடிசாலைக்குள் பெண்கள் பிரவேசிக்கக்கூடாது என்ற இறுக்கமான கட்டுப்பாடு ஜப்பானில் உண்டு. ஜப்பானிய மொழியில் இத்தடையை "நியோனின் கின்செல்" என்று அழைக்கிறார்கள். பெண்களின் உட்பிரவேசம் தெய்வ நிந்தனை என்பது பொருள். அப்படி யாரேலும் நுழைந்துவிட்டால் நுழைந்த பெண்ணின் மீது, நுழைவாசல் மீதும் கறியுப்பைத் தூவி வடிசாலைக்கு ஏற்பட்ட களங்கத்தைப் போக்குவார்கள்.

1950இல் சீன ஆட்சி திபெத்தில் நிறுவப்பட்டவின் மூன்று புரட்சிகர மாற்றங்கள் கொண்டவரப்பட்டன. நிலமானிய சமுதாயத்திற்கும், நிலப்பிரபுத்துவ ஆட்சிக்கும் முடிவு கட்டப்பட்டது. பன்னெடுங்காலமாக நிலவிய பெண் அடிமைவழக்கு நிறுத்தப்பட்டது. லாமாக்களின் மத அடிப்படையிலான அரசியல் நீக்கப்பட்டது.

படுமோசமான, பெண்ணுக்கு எதிரான பாரம்பரியங்கள் நிலவிய நாடாகத் திபெத்து முன்பு விளங்கியது. ஆணை இறைவனும், பெண்ணைப் பிசாசும் படைத்தனர் என்பது திபெத்திய நம்பிக்கை. அடுத்த பிறவியிலாவது ஆணாகப் பிறப்பதற்கு இறைவனை வேண்டிக்கொள் என்று லாமாக்கள் போதனை செய்வார்கள். இன்று சீனத் தலையீட்டில் பெண்கள் நிலை மாறிவிட்டது.

சீனாவைப் பிரச்சார ரீதியாகத் தாக்க விளையும் மேற்கு நாடுகள். திபெத்திய கலாச்சாரத்திற்கு ஆபத்து என்று குரல் கொடுக்கின்றன. கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றைத் தூக்கிப் பிடிக்கும் செயற்பாடுகளில் நேர்மையில்லை. தமிழ்ப் பெண்களின் பாரம்பரியம் பற்றிப்பேசும் ராதிகா குமாரசுவாமியும் அவருடைய தோழிகளும் செய்யும் பிரச்சாரத்தில் அரசியல் வாடை வீசுகின்றது.

சிறீலங்காவின் முப்படைகளிலும் பெண்கள் சீருடையணிந்து பணி செய்கின்றனர். "அன்டி ரோஜினி" (ANDROGYNY) என்ற குற்றச்சாட்டை தமிழ்ப்பெண் போராளிகள் மீது சுமத்தும் விமர்சகர்கள் அதே குற்றச் சாட்டை முப்படையிலும் இணைந்துள்ள சிங்களப் பெண்கள் மீது சுமத்துவதற்குத் தயங்குவது ஏன்? ஆண் செய்யும் பணியைப் பெண் செய்வதை "அன்டி ரோஜினி" என்பார்கள்.



உலகின் முன்னணி இராணுவங்கள் யாவற்றிலும் பெண்கள் பணியாற்றுகின்றனர். இந்திய இராணுவம் பெண் விண்ணப்பதாரிகளை வரவேற்கின்றது. மேட்டுக்குடி அண்கள் இராணுவத்தில் சேரப் பின்னடிப்பதாகவும், மேட்டுக் குடிப்பெண்கள் இந்திய இராணுவத்தில் இணைய ஆர்வம் காட்டுவதாகவும் இந்தியா ருடே சஞ்சிகை தெரிவிக்கின்றது. பெண் விடுதலை உணர்விற்கு இராணுவ சேவைக்களம் அமைப்பதாக இந்திய இராணுவப் பெண்கள் கூறுவதாக அதே சஞ்சிகை கூறுகின்றது. நாளொன்றுக்கு 2.4 கி.மீ தூரம் ஓடும் பயிற்சி இந்திய இராணுவப் பெண்களுக்கு வழங்கப் படுகின்றது. ஆயுதப் பயிற்சியும் பெறுகின்றனர். மருத்துவம், சமிஞ்ஞை வழங்கல் ஆகிய முக்கிய பிரிவுகளில் கூடுதலான இந்தியப் பெண்கள் அதிகாரி நிலையில் உள்ளனர். அதி உயர் கட்டளைப்பிரிவில் நுழையும் அளவிற்கு அவர்கள் இன்னும் உயரவில்லை. ஆனால் சாத்தியம் எதிர்காலத்தில் உண்டு.

அமெரிக்க இராணுவத்தில் அட்மிரல் தர கடற்படை அதிகாரிகளாகவும், அதிநவீன குண்டுவீச்சு விமானம் ஓட்டபவர்களாகவும் பெண்கள் பதவி வகிக்கின்றனர். ஆனால், அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றும் பெண்கள் பாலியல் துன்புறுத்தல் பிரச்சினையை பெருமளவில் எதிர்கொள்கின்றனர். அமெரிக்க இராணுவ மேஜர் தரப் பெண் லில்லியன் ஏ. புளுக் (MAJ. LILIAN A. PFLUKE) நவம்பர் 25, 1996 நியூஸ்வீக் சஞ்சிகைக்கு வழங்கிய தனது கட்டுரையில் மானத்தைக் காப்பாற்ற "ஒவ்வொரு நாளும் சண்டை" என்ற தலைப்பைக் - EVERY DAY IS A FIGHT - கொடுத்துள்ளார். பாலியல் வல்லுறவுதான் அமெரிக்க இராணுவ எதிர்நோக்கும் மிகப்பெரிய பிரச்சினை என்கிறார் லில்லியன்.

பாலியல் துன்புறுத்தல்கள் சம்பந்தமான பின்வரும் தரவுகளை அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களம் வழங்கியுள்ளது. இவை 1995ஆம் வருடத்திற்குரியவை. மேற்கூறிய சஞ்சிகையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

- நிறைவேறிய அல்லது முயற்சி செய்யப்பட்ட பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் - 04%
- பாலியல் வல்லுறவுக்குச் சம்மதிக்கும்படி துன்புறுத்தல்கள் - 11%
- தொடுதல், வழிமறித்தல் - 29%
- கெட்டபார்வை மற்றும் சைகைகள் - 37%
- கடிதங்கள், தொலைபேசி மூலம் அழைப்பு - 12%
- வெளியே சுற்றித்திரிய வரும்படி அழைப்பு - 22%
- பாலியல் பகிடிகள் - 44%
- விசிலடித்தல், பூனைக்குரல் கொடுத்தல் - 23%

தமிழீழப் புலிகள், உயிரினும் மேலாக ஒழுக்கத்தை மதிக்கின்றனர். திருமணத்தில் முடியும் காதலை வரவேற்கின்றனர். திருமணம் செய்து வைப்பதற்கும், போராளிகளின் சிசுக்களைப் பராமரிப்பதற்கும் நிறுவன மயமாக்கப்பட்ட ஒழுங்கைப் புலிகள் இயக்கம் கொண்டுள்ளது. சமூக சீரழிவுக்கு வழிகோலும் தங்கு தடையற்ற உறவுகளுக்கு புலிகள் அமைப்பில் இடமில்லை. இது தமிழ்ப் பண்பின் வெளிப்பாடு என்று விளங்கிக்கொள்ள வேண்டும்.

-விடுதலைப்புலிகள் (புரட்டாதி ஐப்பசி, 2002)

# காந்தி: பொபி சான்ட்ஷ்: திலீபன்: சுதந்திர விடியலுக்கான அகிம்சை வேள்வி!

– நவீனன்

18.09.2024

திலீபன் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு இருந்த போது, அன்றைய இந்தியத் தூதுவர் தீக்சித் இடம் திலீபனின் உண்ணாவிரதம் பற்றி பத்திரிகை யாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தார்கள். அதற்குப் பதிலளித்த தீக்சித், திலீபன் என்ன மகாத்மா காந்தியா? என்று இறுமாப் புடன் தெரிவித்திருந்தார்.

காந்தியை விட திலீபன் மேலானவன் – வை.கோ:

இந்தியத் தூதுவர் தீக்சித்தின் இந்தக் கூற்று பற்றி பின்னர் கருத் துத் தெரிவித்திருந்த வை.கோபால்சாமி அவர்கள், திலீபன் மகாத்மா காந்தியைவிட சிறந்தவன் என்று அடித்துக் கூறி யிருந்தார்.

திரு. வைக்கோ, தனது இந்த வாதத்திற்காக மகாத்மா காந் தியின் சுயசரிதையான சத்திய சோதனையில் இருந்து ஒரு சம்ப வத்தையும் எடுத்துக் காண்பித்திருந்தார். மகாத்மா காந்தியின் இளமைப்பருவத்தின்போது அவரது தந்தை காலமாகிவிட்டார்.

தந்தையின் பூதவுடல் அஞ்சலிக்காக வீட்டின் கூடத்தில் கிடத்தி இருக்கையில், தனது இளமையின் பாலியல் உணர்ச்சிகளை காந்தியால் கட்டுப்படுத்தமுடியாமல் மறைவில் சென்று அதனை தீர்த்துக்கொண்டதாக சத்திய சோதனையில் காந்தி தெரிவித் திருந்தார்.

இளவயதின் உணர்ச்சிகளை மகாத்மாவினாலேயே அடக்க முடியாது இருந்துள்ளது. ஒரு சோகமான நேரத்தில்கூட மகாத் மாவினால் தனது பாலியல் உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாமல் அதற்கு வடிகால் தேடிச் சென்றுள்ளார்.

ஆனால் திலீபனோ தனது இள வயதில், அந்த வயதிற்கான அனைத்து உணர்ச்சிகளையும் உதறித்தள்ளிவிட்டு, தனது கொள்கைக்காக தன்னுயிரை தியாகம் செய்ய முன்வந்திருந் தான். இதனாலேயே மகாத்மா காந்தியை விட திலீபன் மேலா னவன் என வை.கோபால்சாமி தெரிவித்திருந்தார்.

அகிம்சை ஒரு நெடிய போராட்டம். போராடிக் கொண்டே இருக் கலாம். முடிவு போராட்டத்தின் கையில் இல்லை. எதிராளியின் வலிமையை பொறுத்தே உள்ளது.

காந்தியால் இந்திய நாட்டுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை என்று தமிழ்நாடு ஆளுநர் ஆர் என் ரவி சொல்லி இருப்பதை பலரும் விமர்சித்துள்ளனர். ஆயினும் அகிம்சையின் உச்சம் தொட்ட திலீபனின் தியாகத்தை உலகம் என்றும் உணரும்.

மகாத்மா காந்தி குறித்து ஆளுநர் சொல்லியிருப்பது வன்மம் கலந்த நோக்கமே என்றும் தமிழக முதல்வர் ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், முதல்வர் இதனை கடுமை யாக சாடியுள்ளார்.

கடந்த வருடம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாளை யொட்டி, சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் ரவி பங்கேற்று பேசினார். அப்போது, மகாத்மா காந்தி குறித்து ஆளுநர் பேசிய கருத்துக்கள் விமர்சனத்திற்குள்ளானது.

எனினும் காந்தியின் அகிம்சை அவர் பற்றியும், காந்தி பெற்றுத் தந்த இந்திய சுதந்திரம் பற்றியும் பல்வேறு கருத்துக்கள் உள் ளன. ஏன், மகாத்மா காந்தியை விட திலீபனின் தியாகத்தால் சிறந்தவன் என இந்திய அரசியல் தலைவர்களே கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஆயினும் காந்தி தேசத்தின் தமிழின விரோத நிலைப்பாட்டின் அழியா சாட்சியாக விளங்குவதே தியாக தீபம் திலீபனின் உயிர்க் கொடையாகும். திலீபனின் போராட்டம் மற்றொரு முறை அகிம்சை என்ற உளுத்துப் போன தத்துவத்தின் உண்மை நிலையை பிரதிபலிப்பதாகவே உள்ளது.

### ஐரிஷ் எழுச்சிக்கு அகிம்சை குரல்:


சுதந்திர விடியலுக்கான அகிம்சை வேள்வியின் இன்னோர் அடையாளமே பொபி சான்ட்ஷ். ஐரிஷ் குடியரசு இராணுவத் தினரை அரசியல் கைதிகளாக அங்கீகரிக்கக்கோரி இவர்கள் தமது உண்ணாநோன்பு இருந்தவர். இவர் உண்ணாநோன பிருந்த காலத்தில் சிறையில் இருந்தவாறே ஐக்கிய இராச்சியத் தின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1981 சிறைச்சாலையில் பிரித்தானிய அரசுக்கெதிராக உண்ணா நோன்பிருந்த கைதிகளுக்குத் தலைமை வகித்தவர் பொபி சான்ட்ஸ் (Robert Gerard Sands, 'பொபி சான்ட்ஸ்' (Bobby Sands, மார்ச் 9, 1954 – மே 5, 1981). அந்த இளம் போராளி யாருமல்ல. அவரே பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போராடிய பொபி சான்ட்ஸ்.

வட அயர்லாந்தில் லிஸ்பேர்ன் நகரில் உள்ள சிறையில் உண்ணா நோன்பிருந்து இறந்த அந்த இளம் போராளிக்கு அப்போது வயது 27.


அந்த இளம் போராளியுடன் சேர்ந்து பத்து பேர் இந்த உண்ணா நோன்பில் இணைந்து இறந்தனர். இவரின் இறப்பு ஐ.ஆர்.ஏ






அமைப்புக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுத்தது. இதன் பின் பலர் இந்த அமைப்பில் இணைந்து கொண்டனர்.

பொபி சான்ட்சுக்கு ஆதரவாக சர்வதேச ரீதியில் ஆதரவாக பலத்த குரலெழுப்பப்பட்டன. இப் போராட்டம் 66 நாட்களில் முடிவுக்கு வந்தது, ஆம் 1981 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம்திகதி சுயநினைவற்ற நிலையிலேயே அப்போராளியின் உயிர் பிரிந்தது.




### உண்ணாவிரத போரில் பொபி சான்ட்ஸ்:

பிரிட்டன் வட அயர்லாந்து என்ற பகுதியை காலனிப் படுத்தி வைத் திருப்பதையும், IRA யின் போராட்டம் பிரிட்டிஷ் அரசுக்கு சவாலாக வளர்ந்து விட்டதையும் வட அயர்லாந்து பிரச்சினை யில், அப்போதய பிரதமர் மார்க்கரெட் தாட்சர் ஆக்கிரமிப்பாளர் களான ஆங்கிலேய குடியேறிகளை ஆதரித்தார். விடுதலைக் காக போராடிய ஐரிஷ் மக்களை அடக்குவதில் குறியாக இருந்தார்.

விடுதலைக்காக போராடும் ஐரிஷ் சிறுபான்மை இனத்தை ஒடுக் கும், பிரிட்டிஷ் கொடுங்கோன்மையை உலகம் அறியச் செய்த போராட்டம் அது. இந்த உண்ணாவிரத போராட்டம் நாளுக்கு நாள் நாடு தழுவிய எழுச்சியை ஏற்படுத்தியது. உலக நாடுகள் மத்தியில் பேச்சு பொருளானது, இந்த நேரத்தில் 1981இல் ஐக் கிய இராச்சியத்தில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் சிறையில் உண்ணாவிரதம் இருந்த நிலையிலேயே ஐரீஸ் குடியரசு இயக்கம் (Irish Republican Movement) சார்பில் நின்று தேர் தலில் வெற்றிபெற்று பாராளுமன்ற உறுப்பினரானார்.

உண்ணாவிரதமிருந்து மரணத்தை தழுவிக் கொண்ட பொபி சாண்ட்சின் மரண ஊர்வலத்தில், பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இந்த செய்தி சர்வதேச ஊடகங் களின் கவனத்தை ஈர்த்து, உலகம் முழுவதும் பேசப் பட்டது. அது தாட்சர் அரசுக்கு, சர்வதேச மட்டத்தில் தலைக்குனிவை ஏற்படுத்தியது.

அதே போன்று பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கெதிரான பொபி சான்ட்ஸின் போராட்டம், தேசிய இனங்களை அடிமைப்படுத்தி அவர்களின் நிலங்களை ஆக்கிரமித்த ஏகாதிபத்தியங்கள் அம் மக்களின் அகிம்சா வழி போராட்டங்களை எப்போதுமே கண்டு கொள்ளாது என்பது தான் உலக விதியும் வரலாறாகவும் பதிவு செய்யப்பட்டது.

### ஒப்பிலா அறவழிப் போராளி திலீபன்:



நான் மனரீதியாக ஆத்மார்த்தமாக எமது மக்கள் விடுதலை அடைவார்கள் என உணர்கிறேன். மகிழ்ச்சியுடனும் பூரண திருப்தியுடனும் உங்களிடமிருந்து இறுதி விடைபெறுகிறேன் என தன்னுடலுக்கு துரோகமும் தன்னினத்திற்கு தன்னையும் தந்த ஒப்பிலா அறவழிப் போராளி திலீபனின் இறுதி வார்த் தைகளே இவையாகும்.

தமிழீழம் என்பது சகல அடக்குமுறைகளையும் உடைத் தெறிந்த ஒரு சமதர்ம சோசலிச தமிழீழமாகத் தான் மலரும் என்ற விடுதலைக் கனலை விழியிலேந்திய பார்த்திபன் இராசையா என்னும் இயற்பெயர்கொண்டவர் திலீபன்.

காந்தியின் அகிம்சை வழியில் தன் விடுதலையை பெற்றெடுத் ததாக கூறும் இந்தியா, உலகெங்கிலும் அகிம்சை குறித்து அறி வுரை கூறிக் கொண்டிருக்கும் இந்தியா, அகிம்சை போராட் டத்தை கையிலெடுத்த திலீபனுக்கு அளித்த பரிசு இது தான்.

உண்மையில் அகிம்சை மூலமாக இந்தியா விடுதலைப் பெற்றது என்பதே இந்திய விடுதலையை ஒட்டி எழுப்பபட்ட மிகைப்படுத்தப்பட்ட பிம்பம் தானே தவிர அகிம்சை மட்டுமே இந்தியாவின் விடுதலைக்கு காரணமாக அமைந்து விட வில்லை. இந்திய விடுதலை அகிம்சையினால் நிகழ்ந்தது என்றால் அதனைவிட ஆயுதமேந்தி போராடிய இந்திய வீரர்களை மறந்துவிட முடியாது.

தமிழ் நாடு ஆளுநரின் கருத்துக்கு கண்டனங்கள் எழுந்தாலும், காந்தியின் அகிம்சையும் திலீபனின் உயிர்க்கொடையையும் ஒரே தட்டில் ஒப்பிட முடியாது. திலீபனுக்கும், காந்திக்கும் நிறைய வேறுபாடு உள்ளது. திலீபன் காந்தீய வழியில் தன் போராட்டத்தை முயன்றார். ஆனால் காந்தி போல உயிர் வாழ முயலவில்லை. திலீபன் தன் உயிரை ஒரு பொருட்டாக கருதவில்லை. தியாகத்தின் உச்சத்திற்கே திலீபன் சென்றார்.













# தீயினில் எரியாத தீபங்களே!

காற்றும் ஒருகணம் வீச மறந்தது
கடலும் ஒருநொடி அமைதியாய் கிடந்தது
தேற்றுவார் இன்றியெம் தேசம் அழுதது
தீருவில் வெளியிலும் தேகங்கள் எரிந்தது

தீயினில் எரியாத தீபங்களே –எம்
தேசத்தில் நிலையான வேதங்களே
மண்ணினில் விதையான முத்துக்களே –நாம்
மாதவம் செய்து பெற்ற சொத்துக்களே

நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள் –புலி
நிச்சயம் வெல்லுமென்று கூறுங்கள்

கடலினில் கடல்புறா பயணங்கள் போனது
சிறிலங்கா இராணுவம் பொறிவைக்க லானது
குமரப்பா புலேந்திரன் உடன் பத்து வேங்கைகள்
கொள்கையின்படி நஞ்சை குடித்தபின் சாய்ந்தனர்

இளமையில் சருகாகிக் போனவரே –எம்
இதயத்தில் உருவான கோவில்களே

அப்துல்லா ரகு நளன் ஆனந்தகுமார் மிரேஸ்
அன்பழகன் றெஜினோல்ட் பழனி கரனுடன் தவக்குமார்
ஆகிய வேங்கைள் அனலிடை போயினர்
காவிய நாயகர் களப்பலி ஆகினர்
மக்களுக்காக கடல் சென்றீரே –மண
மாலைகள் வாட முன்னர் போனீரே

எங்களின் கடலிலே எவனெம்மை பிடிப்பது
எங்களின் படகினை எவனிங்கு தடுப்பது
இந்திய அரசது ஏன்துணை போனது
இடியுடன் பெருமழை ஏன் உருவானது
கண்களில் நீர் சுமந்து நிற்கின்றோம் –நீர்
காட்டிய பாதையிலே செல்கின்றோம்

# அனுர செய்யக்கூடிய மாற்றம்?

28.09.2024



இரண்டு தடவைகள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு நசுக்கப்பட்ட ஓரமைப்பு, இரண்டு தடவைகள் தடை செய்யப்பட்ட ஓரமைப்பு, அதன் தலைவர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் இன்றி என்கவுண்டரில் கொல்லப்பட்டவர். அப்படிப்பட்ட ஓரமைப்பின் தலைவர் இப்பொழுது நாட்டின் அரசுத் தலைவராக வந்திருக்கிறார். ஆயுதப் போராட்டத்தில் தொடங்கி அரசுத் தலைவர் பதவி வரையிலுமான இந்த வளர்ச்சியை ஏற்கனவே ஓர் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களாகிய தமிழ் மக்கள் ஆர்வத்தோடு பார்க்க வேண்டும். அதன் பொருள் அனுரவின் மாற்றம் என்ற கோஷத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதோ, அல்லது இனப்பிரச்சினைக்கான அவருடைய தீர்வை நம்ப வேண்டும் என்பதோ அல்ல.

ஆயுதப் போராட்டத்தில் தொடங்கி அரசுத் தலைவர் வரையிலுமான ஜேவிபியின் வெற்றிக்குள் இருந்து தமிழ் மக்கள் கற்றுக் கொள்ள பல விடயங்கள் உண்டு. குறிப்பாக தேசிய மக்கள் சக்தி என்று அழைக்கப்படுகின்ற புதிய கூட்டை தமிழ் மக்கள் விருப்பு வெறுப்பு இன்றிக் கற்க வேண்டும். அரசியல் செயற்பாட்டாளர்களும் புத்திஜீவிகளும் இணைந்து உருவாக்கிய ஒரு கட்டமைப்பு அது. ஆயுதப் போராட்ட மரபில் வந்த ஓர் அமைப்பும் புத்திஜீவிகளும் இணைந்து அப்படி ஒரு கட்டமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள். அக்கூட்டின் மையக் கட்டமைப்புக்குள் 73 உறுப்பினர்கள் உண்டு. அதில் இருவர் மட்டுமே தமிழர்கள். அங்கு இன விகிதாசாரம் பேணப்படவில்லை.

ஆனால் யாழ்ப்பாணத்தில் ஜேவிபியை ஆதரிக்கும் சில படித்தவர்கள் இம்முறை தேர்தலில் இனவாதம் பின்வாங்கி விட்டது என்று புளகாங்கிதம் அடைகிறார்கள். தமிழ் பொது வேட்பாளர் இனவாதத்தை முன் வைத்ததாகவும் விமர்சிக்கின்றார்கள். ஆனால் "அரகலிய" போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு தமிழ்ச் செயற்பாட்டாளர் முகநூலில் எழுதியது போல, தேர்தல் பிரச்சாரங்களில் இனவாதம் பெரிய அளவில் கதைக்கப்படவில்லை என்பதை வைத்து இனவாதம் இல்லை என்ற முடிவுக்கு வரக் கூடாது.

அனுர கூறும் மாற்றம் எனப்படுவது இனவாதம் இல்லாத ஓர் இலங்கை தீவா?

இது தேர்தல் காலம் மட்டுமல்ல, ஐநா மனித உரிமைகள் சபையின் பொறுப்புக் கூறலுக்கான விவாதங்கள் நடக்கும் ஒரு காலகட்டமும் ஆகும். வரும் ஏழாம் திகதி வரையிலும் ஐநா மனித உரிமைகள் கூட்டத் தொடர் நடைபெறும். இதில் பொறுப்புக் கூறல் தொடர்பில் அனுரவின் நிலைப்பாடு என்ன?

அசோசியேட்டட் பிரஸ் என்ற ஊடகத்துக்கு அவர் வழங்கிய செவ்வியை இங்கு பார்க்கலாம் "பொறுப்புக் கூறல் தொடர்பான கேள்வியைப் பொறுத்தவரை அது பழிவாங்குதலுக்கான ஒரு வழியாக அமையக்கூடாது. யாரையாவது குற்றச்சாட்டுவதாகவும் அமையக்கூடாது. மாறாக உண்மையைக் கண்டுபிடிப்பதாக மட்டும் அமைய வேண்டும்... பாதிக்கப்பட்ட மக்கள் கூட யாராவது தண்டிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. அவர்கள் என்ன நடந்தது என்பதனை அறிவதற்கு மட்டும்தான் விரும்புகிறார்கள்" என்று அனுர கூறுகிறார்.

அதாவது அவர் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்குத் தயாரில்லை. குற்றங்களை விசாரிப்பது உண்மையைக் கண்டுபிடிப்பதற்கு என்று கூறுகிறார். ஆயின் யார் குற்றவாளி என்ற உண்மையை கண்டுபிடித்த பின் அவரை தண்டிக்காமல் விட வேண்டும் என்று அவர் கூற வருகிறாரா? பாதிக்கப்பட்ட மக்களும் அதைத்தான் விரும்புகிறார்கள் என்று அவருக்கு யார் சொன்னது? அதாவது அனுர பொறுப்புக் கூறுவதற்குத் தயார் இல்லை. குற்றவாளிகளைப் பாதுகாப்பது என்பதே இன வாதம்தான்.

நாட்டின் இனவாதச் சூழலை அனுர மாற்றுவார் என்று தமிழ் மக்களை நம்ப வைப்பதாக இருந்தால் அவர், கடந்த காலங்களில் அவருடைய கட்சி குறிப்பாக அவர் தமிழ் மக்களுக்கு எதிராக எடுத்த இரண்டு பிரதான நிலைப்பாடுகளுக்கு பொறுப்புக் கூறுவாரா? மன்னிப்புக் கேட்பாரா?

தமிழ் மக்களின் தாயகத்தை அதாவது வடக்கையும் கிழக்கையும் சட்ட ரீதியாகப் பிரித்தது ஜேவிபி ன். இது முதலாவது. இரண்டாவது. சுனாமிக்குப் பின்னரான சுனாமிப் பொதுக் கட்டமைப்பை எதிர்த்து அனுர தனது அமைச்சுப் பதவியைத் துறந்தார். சுனாமிப் பொதுக்கட்டமைப்பு எனப்படுவது மனிதாபிமான நோக்கங்களுக்கானது. இயற்கைப் பேரழிவு ஒன்றுக்குப் பின் உருவாக்கப்பட இருந்த மனிதாபிமானக் கட்டமைப்பு அது. அதைக் கூட எதிர்த்த ஒருவர் இப்பொழுது அதற்கு பொறுப்பு கூறுவாரா? தமிழ் மக்களிடம் மன்னிப்பு கேட்பாரா? அவரிடம் இனவாதம் இல்லை என்று கூறி அவருக்கு வாக்களிக்குமாறு மறைமுகமாகக் கேட்ட யாழ்ப்பாணத்தில் உள்ள படித்தவர்கள் இதற்குப் பதில் கூறுவார்களா?

அதுமட்டுமல்ல தமிழ் பொது வேட்பாளரோடு அனுர பேச முற்படவில்லை. ரணில் விக்ரமசிங்கவும் சஜித் பிரேமதாசவும் தமிழ் பொது வேட்பாளரோடு உரையாடத் தயாராக இருந்தார்கள். ஆனால் அனுர உரையாடத் தயாராக இருக்கவில்லை. யாழ்ப்பாணம் வணிகர் கழகத்திடம் ஜேவிபி அதுதொடர்பான கோரிக்கைகளை முன்வைத்ததாகத் தெரிகிறது. எனினும் தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்திய தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பிடம் அவர் உத்தியோகபூர்வமான கோரிக்கைகள் எவற்றையும் முன் வைத்திருக்கவில்லை. தமிழ்ப் பொது வேட்பாளரை அவர் பொருட்படுத்தவில்லை. அதாவது தமிழ் வாக்குகளை அவர் பொருட்படுத்தவில்லை ?



அவர் பதவியேற்றபோது தேசிய கீதம் இசைக்கப்படுகையில் ஒரு பகுதி பிக்குகள் எழுந்து நின்றமையை சில தமிழர்கள் பெரிய மாற்றமாகச் சித்திருக்கிறார்கள். ஆனால் பதவியேற்ற போது பௌத்தப்பிக்குகளின் முன் அவர் மண்டியிட்டு அமர்ந்து ஆசீர்வாதம் பெறுவதை அவர்கள் பார்க்கவில்லையா? அவர் இடது சாரி மரபில் வந்த ஒரு தலைவர் என்று கூறப்படுகிறது. ஆனால் அவரால் சிங்கள பௌத்த அரசு கட்டமைப்பின் வழமைகளை மீறிச் செயல்பட முடியவில்லை என்பதைத்தான் அந்த ஆசீர்வாதம் பெறும் நிகழ்ச்சி நமக்கு உணர்த்தியது. அந்த மத ரீதியான சிஸ்டத்தை அவரால் மாற்ற முடியவில்லை. அவரும் அந்த சிஸ்டத்தின் கைதிதான்.

அதனால்தான் தமிழ் மக்கள் அவர் கூறும் மாற்றத்தை அதாவது சிஸ்டத்தில் மாற்றம் என்பதனை சந்தேகத்தோடு பார்க்கின்றார்கள். ஏனெனில், தமிழ் மக்கள் கேட்பது மேலோட்டமான சிஸ்டத்தில் மாற்றத்தை அல்ல. தமிழ் மக்கள் கேட்பது அதை விட ஆழமான கட்டமைப்பு மாற்றத்தை. ஒற்றையாட்சி அரசுக் கட்டமைப்பில் மாற்றம். அதைச் செய்ய அனுராவால் முடியுமா?

பதவியேற்ற பின் அவர் ஆற்றிய உரையில் இனப்பிரச் சினைக்கான தீர்வு தொடர்பில் பின்வருமாறு கூறுகிறார்... "சிங்களவராக இருந்தாலும், தமிழராக இருந்தாலும், முஸ்லிமாக இருந்தாலும், பேர்கராக இருந்தாலும், மலேயராக இருந்தாலும், இவர்கள் அனைவருக்கும் "நாம் இலங்கைப் பிரஜைகள்" என்று பெருமையுடன் வாழக்கூடிய நடைமுறைச்சாத்தியமான ஒரு நாடு உருவாகும் வரை, இந்த நாடு தோல்வியடையுமே தவிர வெற்றியடையாது. அதற்காக அரசியலமைப்பு ரீதியான, பொருளாதார. அரசியல் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள ஒரு போதும் நாம் பின்வாங்க மாட்டோம். தனது இனம், தனது மதம், தனது வர்க்கம், தனது சாதி என இந்த நாடு பிரிந்திருந்த காலத்தை முழுமையாக முடிவுக்குக் கொண்டு வந்து, பன்முகத் தன்மையை மதிக்கும் இலங்கை தேசமாக இந்நாட்டைக் கட்டியெழுப்பும் நிலையான, நிரந்தரமான வேலைத்திட்டத்தை நாம் ஆரம்பிப்போம்."


இது அரசியல் அடர்த்தி குறைந்த வார்த்தைகளால் வழங்கப்படும் கவர்ச்சியான ஆனால் மேலோட்டமான வாக்குறுதி. இப்படிப்பட்ட லிபரல் வாக்குறுதிகள் பலவற்றை தமிழ் மக்கள் ஏற்கனவே கடந்து வந்து விட்டார்கள். தமிழ் மக்கள் கேட்பது அடிப்படையான கட்டமைப்பு மாற்றத்தை. இலங்கைத் தீவின் பல்லினத் தன்மையை உறுதிப்படுத்தும் கடடமைப்பு மாற்றத்தை. இலங்கைத் தீவில் ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள், தேசங்கள் உண்டு என்பதனை ஏற்றுக்கொள்ளும் மாற்றத்தை. அந்த அடிப்படையில் வழங்கப்படும் ஒரு தீர்வை. தமிழ் மக்களை இறைமையும் சுயநிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கும் ஒரு தீர்வை. அப்படிப்பட்ட ஒரு மாற்றத்தை ஏற்படுத்த அனுரவால் முடியுமா?

நன்றி: நிலாந்தன்

# பெண்ணினத்தைப் பெருமையுறச் செய்யும் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள்!



விடுதலைக்காய் விழத்தெழுந்த பெண்ணினம்




ஒப்டோபர் 10, இந்நாள் தமிழீழப் பெண்களை தலை நிமிர்த்தச் செய்யும் ஓர் உன்னத நாளாக அமைகிறது. உலகின் நான்காவது பெரிய வல்லரசு என வர்ணிக்கப்படும் இந்திய இராணுவத்தை எதிர்த்து ஆயுதமேந்தி நின்று போராடி – தமிழீழ விடுதலைப் போராட்டத்திலே முதல் முதல் வீரச் சாவைத் தழுவிக் கொண்ட பெண் மாவீரர் 2ம் லெப். மாலதியின் நினைவு நாளான ஒக்டோபர் 10 தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது.

காலங்காலமாக நிலப்பிரபுத்தவ அமைப்பு முறையாலும் முதலாளித்துவ அமைப்ப முறையாலும் அடக்கப்பட்டும், இழிவுபடுத்தப்பட்டும் வந்த பெண்கள், உலகப் பெண்களுடன் ஒன்றினைந்து அனைத்துலகப் பெண்கள் எழுச்சி நாளாகிய மார்ச் 08, அன்றே உரிமைக்குரல் எழுப்பி நின்றார்கள்.

ஆனால் ஒப்பீட்டளவில் உலகப்பெண்கள் எவராலும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத – தியாகத்தின் உச்சமான தற்கொடைத் தியாகத்தைப் புரிந்து வரும் பெண்களைப் பெற்ற எமது தமிழினம் முதல் பெண் மாவீரர் 2ம் லெப். மாலதியின் நினைவு நாளை எழச்சி நாளாக ஏற்றுக்கொள்வதில் பெருமையடைகிறது.

படைப்பியல் ரீதியாக ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே காணப்படும் பாலியல் வேறுபாட்டை மட்டும் கருத்திற் கொண்ட பெண்ணுக்கு பாலியல் சமத்துவம் மறுக்கப்பட்டு வந்தது. பிறப்பிலிருந்தே ஆண் குழந்தைக்கும், பெண் குழந்தைக்கும் இடையே காட்டப்பட்ட பராமரிப்பு வளர்ப்பு முறைகள் பெண்கள் ஆண்களை விடவும் தாழ்ந்தவர்கள் அல்லது குறைந்தவர்கள் என்ற உணர்வினை ஊட்டின. பெண் என்பவள் ஒரு காட்சிப் பொருளாக, போதைப் பண்டமாக, இனப்பொருக்கம் செய்யும் ஓர் இயந்திரமாக மட்டுமே பார்க்கப்பட்டாள்.

மதங்கள், மூடநம்பிக்கைகள், சம்பிரதாயங்கள், இலங்கியங்கள், புராண இதிகாச கர்ணபரம்பரைக் கதைகள், திரைப்படத் தொடர்புச் சாதனங்கள் என எல்லாமே பெண்களை இழிவு படுத்தின. பெண்களிடையே தோன்றிய முன்னேற்றத்துக்கான, புரட்சிகரமான, சமூகமாற்றத்திற்கான முனைப்புகள் அனைத்தையும் கற்பு என்கின்ற பார்வை கருவறுத்தது. இன்று தமிழீழத்தைப் பொறுத்த வரை பெண்கள் தம் மீதான பல்வேற அடக்குமுறைகளைத்



2ம் லெப்.மாலதி

தகர்த்தெறிந்து புரட்சியின் உச்சத்தை தொட்டு நிற்கின்றார்கள். அதி உன்னதமான தியாகங்களைப் புரிகிறார்கள்.

புற உலகம் தமிழீழத்துப் பெண்களை வியப்புடன், விழிகளை விரித்துப் பார்க்கின்றது. இந்தப் பெருமை மிகு நிலையை தமிழீழப் பெண்ணினத்திற்கு உண்டாக்கியவர் எங்கள் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தான். அவரது வழிகாட்டலில் தான் தமிழினம் குறிப்பாக தமிழீழத்துப் பெண்கள் தலை நிமிர்த்தி நிற்கின்றார்கள். தலைவன் ஊட்டும் துணிவில், தன்னம்பிக்கையில் எத்தனையோ சாதனைகள் இம்மண்ணில் பிறப்பெடுக்கின்றன!

பெண்கள் அதீத திறமைகளையும், ஆளு மைகளையும் தம்முள்ளே தேக்கி வைத்திருந்த போதும் சீதனம் என்ற அம்சம் பெண்களை இம்சித்து வந்தது. ஆணை ஒத்த அறிவும் அந்தஸ்தும் கொண்டிருந்த போதும் சீதனம் பெண்ணை குறைந்தவளாகவே கணித்தது. ஆனால் இன்று பெண்ணை இழிவுபடுத்தி வந்த சீதனத்தை இல்லா தொழிக்க சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

தமிழீழத்தில் பெண்கள் தலைமைத்துவப் பண்பு மிக்கவர்களாகத் திகழ்கின்றார்கள். உலக சமுதாயம் உதாரணம் காட்டுமளவுக்கு பெண் இங்கே விழிப்புணர்வு பெற்றிருக்கின்றாள். பூரணமான வழிப்புணர்வு எனச் சொல்லமுடியா விட்டாலும் பல்வேறு விடயங்களில் பெண்ணின் விழிப்பு நிலை குறிப்பிடத்தக்கதாகவே அமைகின்றது.

பெண்ணின் விடுதலை என்பது ஆணாதிக்கக் கருத்தாதிக்கத்திலிருந்தும் ஏனைய அடக்கு ஒடுக்கு முறைகளில் இருந்தும் விடுபடுவதாகும். முதலில் பெண்கள் அக விடுதலை பெற்று புரட்சிக்குத் தயாரான தற்துணிவைப் பெற்றக் கொள்ள வேண்டும். ஆணும் பெண்ணும் சமூக உடற்கூறின் இரு அம்சங்கள். எனவே பரஸ்பர புரிந்துணர்வோடு விடுதலை முனைப்புப் பெற வேண்டும்.

உலகில் பெண்கள் விமானிகளாக, விஞ்ஞானிகளாக, நோபல் பரிசு பெற்ற இலக்கியவாதிகளாக சாதனை படைத்துள்ளார்கள். ஆனால், உலகின் எந்தவொரு பகுதியிலும் நடந்தேறாத தியாகம் தமிழீழத்திலே நடக்கின்றது. இதற்காக தமிழீழத்துப் பெண்ணினம் பெருமையடையவேண்டும். தேசிய விடுதலைப் பணியிலே கைகோர்த்து பணிபுரிந்து, எமது தேசத்தின் விடிவை விரைவுபடுத்த வேண்டும். பல்துறை சார் கல்வியறிவிலே உயர்ந்து, பொருளாதார ரீதியில் யாரையும் சாராது சொந்தக் காலூன்ற நின்று முன்னேற வேண்டும்.

தமிழீத்துப் பெண்கள் மிகவும் கொடூரமான இராணுவ ஒடுக்குமுறைக்கு உள்ளாகி வருகின்றார்கள். எதிரியின் பாலியல் பலாத்காரம் எமது பெண்கள் மீது பிரயோகிக்கப்படுகின்றது. எதிரி எம் மீது பிரயோகிக்கும் சகல வன்முறைகளுக்கும் எதிராக உறுதியுடன் போராட வேண்டியவளாகப் பெண் திகழ்கின்றாள். போராட்டத்தின் மூலமே தன் வாழ்வை உறுதி செய்துகொள்ள வேண்டியவளாகின்றாள்.

நன்றி – சுதந்திரக்கீற்று



# தமிழீழ விடுதலை வரலாற்றில் அக்டோபர்



## பன்னிரு வேங்கைகளின் வீரகாவியம்:

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம், நிராயுத பாணிகளாக தமிழீழத்தின் வடகடற் பிராந்தியத்தில் பயணம் செய்த யாழ். மாவட்டத்த தளபதி லெப். கேணல் குமரப்பா, திருமலை மாவட்டத் தளபதி லெப். கேணல் புலநேந்திரன், மேஜர் அப்துல்லா உட்பட 12 வேங்கைகளை 03.10.1987 அன்று சிறீலங்காக் கடற்படை கோழைத்தனமான வகையில் கைது செய்தது. ஒப்பந்தத்திற்கு முரணாக சிங்கள அரசு இந்திய அரசின் ஒத்துழைப்போடு இவர்களை விசாரணை செய்ய முற்பட்ட வேளையில் 05.10.1987 அன்று சயனைட் உட்கொண்டு வீரகாவியம் படைத்தனர். இவ்வீர வேங்கைகள்.



## இந்திய இராணுவத்திற்கெதிரான புலிகளின் முதற் தாக்குதல்:



தமது ஆதிக்க நலன்களுக்காக ராஜீவ் காந்தி தலைமையிலான இந்திய அரசு சிறீலங்கா அரசுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், தமிழீழத்தினை ஆக்கிரமித்த இந்தியப்படைகளின் தமிழர் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக விடுதலைப் புலிகள் 10.10.1987 அன்று முதற் தாக்குதலைத் தொடுத்தனர்.

## கொக்குவில் பிரம்படிப் படுகொலை:



ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஆட்சிக்காலத்தில் யாழ். மாவட்டத்தில் கொக்குவில் பிரம்படிப் பகுதியில் 12.10.1987 அன்று தரை இறங்கிய இந்திய இராணுவத்தினர் அப்பகுதியில் இருந்து பொது மக்களை சுட்டும் யுத்த ராங்கியினால் ஏற்றியும் படுகொலை செய்தனர். இதில் 40 பொதுமக்கள் பலியாகினர்.

## சிங்கள இராணுவத்தின் மீதான முதற் தாக்குதல்:

15.10.1981 அன்று யாழ். காங்கேசன்துறை வீதியில் வைத்து சிறீலங்காத் தரைப்படை மீது முதல் முதலாக விடுதலைப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலின்போது இரு சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

## இணுவில் படுகொலை:



சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் யாழ். மாவட்டத்தின் இணுவில் பகுதியில் இடம்பெயர்ந்து முகாம் களில் இருந்த பொதுமக்கள் 18.10.1995 அன்று சிறீலங்கா இராணுவத்தின் விமானக் குண்டு வீச்சுக்கு அஞ்சி பதுங்கு குழியில் தஞ்சம் அடைந்திருந்த வேளை இராணுவத்தின் புக்காரா விமானம் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 09 சிறுவர்கள் உட்பட 11 பேர் பதுங்கு குழியிலேயே பலியாகினர்.

## யாழ். போதனா வைத்தியசாலைப் படுகொலை:



ஜே. ஆர். ஜெயர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையில் இருந்த வைத்தியர்கள், தாதிமார்க்ள, பணியாளர்கள் மற்றும் நோயாளர்கள் இந்திய அமைதிப் படையால் 21.10.1987 அன்று கண்மூடித்தனமாக சுடப்பட்டனர். இதில் 21 தமிழ்ப் பொதுமக்கள் பலியாகினர். 55 பேர் படுகாயம் அடைந்தனர்.

## இனவெறிப் படுகொலை:

சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் தென்னிலங்கையின் பண்டாரவளையில் அமைந்துள்ள பிந்துநுவேவ தடுப்பு முகாமினுள் 25.10.2000 அன்று கத்தி, பொல்லு, துப்பாக்கிகளுடன் நுழைந்த 1500க்கும் மேற்பட்ட சிங்களக் காடையர்கள் புனர்வாழ்வு என்ற பெயரில் முகாமினுள் தடுத்துவைக்கப் பட்டிருந்த தமிழ் இளைஞர்களை அடித்தும், வெட்டியும், துப்பாக்கிச்சூடு நடத்தியும் தாக்கினர். இதில் 29 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 40 இளைஞர்கள் படுகாயம் அடைந்தனர்.

## சாவகச்சேரி படுகொலை:

ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் யாழ் மாவட்டத்தின் சாவகச்சேரிப் பகுதியில் 28.10.1987 அன்று சிறிய பேருந்து ஒன்றில் பயணம் செய்த பொதுமக்கள் மீது இந்திய இராணுவம் கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூட்டை நடத்தியது. இதில் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் உட்பட 16 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

## அரியாலைப் படுகொலை:

சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் யாழ் மாவட்டத்தின் அரியாலைப்பகுதியில் இராணுவத்தின் தாக்குதல்களுக்கு அஞ்சி இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்த தமிழ்ப் பொதுமக்கள் மீது 26.10.1996 அன்று சிறீலங்கா விமானப்படையின் மிகை ஒலி வேக விமானங்கள் தாக்கியதில் 10 பொதுமக்கள் உயிரிழந்தனர். மேலும் அவர்களின் வீடுகள், உடமைகள் அழிக்கப்பட்டன.

## சாவகச்சேரிப் புதிய சந்தைப் படுகொலை:

ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் யாழ் மாவட்டத்தின் சாவகச்சேரிப் பகுதியில் 27.10.1987 அன்று இந்திய அமைதிப்படையால் யுத்த உலங்குவானூர்திகளில் சாவகச்சேரி புதிய சந்தைப் பகுதிக்குச் சென்று அங்கு கூடியிருந்த அப்பாவி தமிழ்மக்கள் மீது தாக்குதல் நடத்தியது. இதில் முப்பதிற்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 76ற்கு மேற்பட்டோர் படுகாய மடைந்தனர்.

## ஈழ வரலாறு காணாத யாழ் இடப்பெயர்வு:

30.10.1995 அன்று யாழ் மாவட்டத்தின் வலிகாமப் பகுதியில் இருந்து தென்மராட்சி பகுதி நோக்கி பல இலட்சக்கணக்கான மக்கள் சிறீலங்கா இராணுவ ஆக்கிரமிப்பிற்கு அஞ்சி இரவு பகலாக உணவு, நீர் எதுவுமின்றி, தமது உடமைகள் சிலவற்றுடன் இடம்பெயர்ந்தனர். இவ்விடப்பெயர்வு ஈழத்தின் வரலாறு காணாத ஒன்றாகக் கருதப்படுகிறது.



முதல் பெண் மாவீரர் 2ம் லெப். மாலதி நினைவும் 10.10.2024

# தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள்

10 அக்டோபர்





2ம் லெப். கஸ்தூரி



வீரவேங்கை ரஞ்சினி



வீரவேங்கை தயா

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

சங்கத்தமிழ்